



CPL 665152

# அகல்யா

பாலகுமாரன்

CONNEMARA PUBLIC ... 5-FE... CHENN...

விசா பப்ளிகேஷன்ஸ்
புதிய எண்: 16, பழைய எண் 55,
வெங்கட் நாராயணா சாலை,
தி.நகர், சென்னை–600 017.
☎: 24342899, 24327696
Fax: 91 - 44 - 24341559
email: enquiry@thirumagalnilayam.com
website: www.thirumagalnilayam.com

39
665152
894.8113
BAL

முதற் பதிப்பு: செப்டம்பர், 1982
இரண்டாம் பதிப்பு: ஏப்ரல், 1986
மூன்றாம் பதிப்பு: ஜூலை, 1987
நான்காம் பதிப்பு: மார்ச், 1989
ஐந்தாம் பதிப்பு: மே, 1991
ஆறாம் பதிப்பு: ஆகஸ்ட், 1992
ஏழாம் பதிப்பு: ஜூன், 1994
எட்டாம் பதிப்பு: நவம்பர், 1997
ஒன்பதாம் பதிப்பு: பிப்ரவரி, 2001
பத்தாம் பதிப்பு : ஏப்ரல், 2008
உரிமை: ஆசிரியருக்கு ©

**AGALYA**

By: **Balakumaran**

Tenth Edition: **April, 2008**

No. of Pages: 192

Paper used: 11.6 N.S. Book Print

**விலை ரூ. 60/–**

**VISA PUBLICATIONS**
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 044-24342899, 24327696
email: enquiry@thirumagalnilayam.com
website: www.thirumagalnilayam.com

Available at:
**THIRUMAGAL NILAYAM**
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 044-24342899, 24327696

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-94. Ph: 9282152070

Printed at:

CONNEMARA PUBLIC LIBRARY
5 - FEB
CHENNAI-600 008

# முன்னுரை

மறுபடியும் ஒரு புத்தக வடிவில் வாசகரைச் சந்திப்பதில் மெத்த மகிழ்ச்சி. இப்புத்தகம் தொடர்பாக மீண்டும் கடிதங்களும், கடிதங்கள் வழியாய் சந்திப்பும், சந்திப்பதின் மூலம் மேலும் அறிதலும் எனக்குக் கிடைக்கும் என்ற மகிழ்ச்சி. தொடர்பு கொள்ளுதல் பரவலாகி பலப்படும் என்கிற நம்பிக்கை.

அநேகமாய் எல்லா வாசகர் சந்திப்பும், 'இது அனுபவம் தானா?' என்ற கேள்வியோடு துவங்கும். அனுபவத்தையே கதை யாக்குகிறேன்' என்று ஒரு வாரப் பத்திரிகையில் என்னை வெளிப்படுத்திய பிறகு இந்தக் கேள்விக் கேட்காமல் நகர்ந்தவர் மிகக் குறைவு.

ஏன் எல்லோரும் இவ்விதம் கேட்கிறார்கள் என்ற ஆச்சர்யம் அடிக்கடி பரவும் என்னுள். கொலையோ, கொள்ளையோ வைத்து கதை எழுதுபவர்களையும் இப்படிக் கேட்பார்களோ என்ற வினா எழும் என்னுள். 'அப்படியென்ன அனுபவ அரிதான விஷயம் எழுதிவிட்டேன்' என்றும் தோன்றும்.

''ஒரு நாளைக்கு நூறு கொலை செய்கிறேன். எதிரே பார்ப்பவரையெல்லாம் வெட்டி வீழ்த்துகிறேன். காதலிப்பதுதான் கஷ்டமாக இருக்கிறது. இதுமாதிரி காதலிக்க முடியுமா என்பது தான் சந்தேகமாக இருக்கிறது'' என்று அகல்யாவைத் தூக்கிப் போட்டான் ஒரு ஸ்நேகிதன்.

கொஞ்சம் புரிந்தது.

''உனக்குக் காதலிப்பது சிரமமாய் இருக்கிறதா? உன்னை எவரும் காதலிப்பது சிரமம் என்கிறாயா'' என்று கேட்டபோது,

''இரண்டுமேதான்'' என்று வெறுமையுடன் பதில் வந்தது.

தொடர்ந்து யோசனை செய்தபோது மேலும் புரிந்தது.

'சோப்புக்கட்டியோடு பிளாஸ்டிக் பக்கெட் இனாம்' என்கிற மாதிரி, லாப நோக்கோடுதான் 'அன்பு' எதிர்பார்க்கப்படுகிறது; விற்கப்படுகிறது. குழந்தையைத் தூக்கும்போது கூட அதுமேலே ஒன்றுக்குப் போகாமல் முத்தம் கொடுத்தால் நல்லது என்கிற பயம் வருகிறது.

பயமும், எதிர்பார்ப்பும் எப்படி அன்பைக் கொண்டு வந்து சேர்க்கும்? எப்படி வெளிப்படுத்தும்?

மனதை மயில்தோகை மாதிரி மெல்லியதாய்ப் பிடித்து நடக்கையில் சிலிர்ப்பு நிச்சயம். 'கொடு... கொடு' என்று அதட்டுகிற போதுதான் எதிராளிக்கு பலமும், பதட்டமும், சந்தேகமும் வந்து விடுகின்றன. அன்பைத் தெளித்துவிட்டு நடக்க பெரிய பயிற்சி அவசியமில்லை. இந்த க்ஷணம் எவரும் ஆரம்பிக்கலாம்.

என் கதைகள் என் அனுபவங்கள் தான். இதற்காக இதில் வரும் ஆண்-பெண் இயற்பெயர், இன்றைய விலாசம் என்று தேட வேண்டிய அவசியமில்லை. உங்கள் வீட்டிலும் இவர்கள் இருக்கலாம். நீங்களாகவே கூட இருக்கலாம்.

பயத்தையும், எதிர்பார்ப்பையும் நகர்த்திவிட்டு மனதை விரித்துத் தோகையாய் மாற்றினால் அனுபவ சிலிர்ப்பு நிச்சயம். இது நம்மை மகத்தான இடத்திற்கு எடுத்துப் போகும். இந்த நாவல் உங்களுக்கு இதையே இன்னும் தெளிவாய் விளக்கும்.

இதைத் தொடராய் வெளியிட்ட சாவி வாரப் பத்திரிகை ஆசிரியர் திரு.சா.விசுவநாதன் அவர்களுக்கும், அவர் புதல்வர் திரு. பாச்சாவுக்கும் என் நன்றி.

14-9-82

191/A, வெங்கடாசலம் தெரு
சென்னை-600 004.

பாலகுமாரன்



5 - FEB
CHENNAI

# அகல்யா




அகல்யா...

அகல்யா...

அகல்யா...

என் இனிய அகல்யா, பிரியமனைவி தூங்கிக் கொண்டிருக்கிறாள்.

மேலே மெல்லிய துணி மட்டும் போர்த்து மயக்கத்தில் கிடக்கிறாள். மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கிறாள். மெல்ல மெல்ல என்னைவிட்டு பிரிந்து கொண்டிருக்கிறாள். மரணத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறாள். "எனக்கு நம்பிக்கையில்லை சிவசுப்பிரமணியம். எல்லாம் வல்ல ஒருவர் இருக்கிறார். நாம் பிரார்த்தனை செய்வோம்." டாக்டர் தெளிவாய் சொல்லிவிட்டார்.

இதைக் கேட்ட பிறகு நான் அகல்யாவை விட்டு நகரவில்லை. பதினான்கு மணிநேரமாய் எங்கும் எதற்கும் போகவில்லை. மூன்றடி இடைவெளி விட்டுக் காத்திருக்கிறேன். 'அகல்யா பேசமாட்டாளா' என்று காத்திருக்கிறேன். 'கண் திறந்து பார்க்கமாட்டாளா' என்று காத்திருக்கிறேன். 'வெறுமே முனகவாவது மாட்டாளா' என்று தவமிருக்கிறேன். 'விழி இமைக்குள் உருளாதா' என்று கவனித்தபடி இருக்கிறேன்.

ஒரு சின்ன அசைவில்லை. உடம்பு அவஸ்தை தெரியவே யில்லை. வேதனை வலி எதுவும் வெளியாகவே இல்லை.

''வலி தெரியாத ஸ்டேஜுக்குப் போயிட்டாங்க சிவசு. இதுதான் மோசமான ஸ்டேஜ். இப்படிப் போகக் கூடாது. ப்ரெய்ன் மொள்ள மொள்ள வேலை செய்யறதை நிறுத் திடுச்சு.'' டாக்டர் கவலையுடன் அகல்யாவைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். நான் டாக்டரின் கவலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

''ப்ரெய்ன் வேலை செய்ய மருந்தில்லைங்களா டாக்டர்?'' அகல்யாவின் அப்பா, குழந்தை மாதிரி கேட்கிறார்.

''மனசுதாங்க பெரியவரே இதற்கு மருந்து. உசிரோட இருக்கணும்னு அந்த அம்மா ஆசைப்படணும். போராட ணும், பிடிவாதமா இருக்கணும். எனக்கென்னமோ இந்த அம்மா...''

நான் முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.

ஏன் சாக ஆசைப்பட்டாய் அகல்யா? ஏன் வெறுத்துப் போனாய் இப்படி? சட்டென்று என் உறவை முடித்துக் கொண்டாயே கண்ணம்மா. என்னை ஏன் பிடிக்காமல் போயிற்று. என்னை ஏன் தண்டிக்க விரும்பினாய் இப்படி?

உனக்கு உன்மீதே கோபம் அகல்யா. உன்மீதே வெறுப்பு. உனக்கு உன்னை, உன் மனதைப் பிடிக்கவில்லை. ஆறு மாதம் உளைந்து உளைந்து மனதுக்குள்ளேயே தவித்துப் போய் புழுங்கிப் பிரிந்து விட்டாய். ச்சீ...ச்சீ என்று இழி பிறப்பாய் உன்னையே நினைத்து விட்டாய்.

இது தவறு அகல்யா. உன்னைக் காதலிக்கத் தெரியாமல் போயிற்று உனக்கு. உன்மீது உனக்குள்ள மதிப்பு மறந்து போயிற்று. 'தான்' என்பது பெரிய விஷயம் அகல்யா. தன்னை நேசிப்பவரே பிறரை நேசிக்கமுடியும். தன்னி



லிருந்துதான் காதல் ஆரம்பமாக வேண்டும். 'தான்' என்பதே சத்தியம்.

யாருக்காகவோ செத்துக் கொண்டிருக்கிறாயே கண்ணம்மா! ஊருக்குப் பயந்து போனாயே அகல்யா. உலகம் புறம் சொல்லுமென்று ஓடப் பார்க்கிறாயே பெண்ணே.

ஒரு நிமிடம் கண்ணைத் திற! என்னைக் கேள். கவனி. நான் சொல்லித் தருகிறேன். அகல்யா! சற்றுத் திரும்பி என்னைப் பாரேன். நான் சொல்வதைக் கேளேன். நான் சொல்வதை அப்படியே திருப்பிச் சொல்லேன். புரியும் உனக்கு. நீ புத்திசாலி. சட்டென்று தெரிந்துவிடும் உனக்கு. சொல்லேன். திருப்பிச் சொல்லேன். மெல்லப் புரியும்படி உச்சரிக்கிறேன். கொஞ்சம் கவனம் காட்டேன். சொல் அகல்யா. நான் சொல்வதைத் திருப்பிச் சொல். மந்திரம் மாதிரிப் பேசு.

'என்னைக் காட்டிலும் உயர்ந்த பொருள் வேறெதுவும் இல்லை. நானிருப்பதாலேயே இவ்வுலகமும் என்னெதிரே இருக்கிறது. என்னை மையமாக்கி இவ்வுலகம் இருப்பதால் நானிருக்கும் வரை உலகமும் இருக்கும்.'

சொல் அகல்யா, சொல். திருப்பிச் சொல்; திருப்பித் திருப்பிச் சொல்; மந்திரம் மாதிரிப் பேசு. நான் என்பதை வளரவிடு. தழைக்க விடு. பெரு மரமாக்கு. பரவிப் பெருகி, கிளைவிட்டு, வேர்விட்டு, விழுது விழுந்து, பரப்பெல்லாம் ஊன்றி, இலையும், பூவும், பிஞ்சும், கனியுமாய் வளரவிடு! திரும்பி வா அகல்யா. திரும்பி வா... போகாதே, வா!

நான் உற்று அவளைப் பார்த்தபடி உள்ளுக்குள் பேசிக் கொண்டிருந்தேன். அகல்யா அசைவற்று இருந்தாள். மனச் செவியை மூடிக்கொண்டு விட்டாள். தன்னுள் கரைந்து திகைத்துப் போய்விட்டாள். உள்ளுக்குள் வெகு ஆழம் இறங்கி உலகம் மறந்து விட்டாள். செய்தி பரவாத இடத்தில்

நின்றுவிட்டாள். சூட்சமமான இடத்தில் நின்றுவிட்டாள்! இனி மீள்வது அரிது. இனி அது வேறு உலகம், வேறு இடம், வேறு பிரமாணம்! இனி அவள் வெறும் ஒளிவட்டம். பரபிரும்மம். இந்த உடம்பில் அது சற்று நேரம்தான் தங்கியிருக்கும்! அதற்குள் ஏதாவது செய்தாக வேண்டும்.

என்ன செய்ய? என்ன செய்ய?

பிரார்த்தனை செய்யுங்கள் என்று சொல்லிற்று கையில் இருக்கிற புத்தகம். பிரார்த்தனை செய்கிறோம் என்று சொல்லிற்று ஒரு துண்டு காகிதம். காலையில் ஆஸ்பத்திரியில் ஒவ்வொரு படுக்கையாகக் கொண்டு வந்து, இவைகளைக் கொடுத்தார்கள். ஒன்றில் உலக மகா திருச்சபை என்று அச்சிடப்பட்டிருந்தது. இன்னொன்றில் இந்து பரிபாலன சங்கம் என்று போடப்பட்டிருந்தது.

யார் பிரார்த்தனை செய்யவேண்டும்? யாரை நோக்கி? எதற்காக? எவ்விதம்? பிரார்த்தனை செய்தால் என்ன ஆகும்?

உங்களுக்காக நாங்கள் செய்கிறோம் என்று முழங்கிற்று ஒரு அறிக்கை. என்ன வேடிக்கை இது. உங்களுக்கென்றால் இது யாருக்கு? அகல்யாவுக்கா? எனக்கா? இதைப் படிக்கிறவருக்கு என்று வைத்துக் கொள்ளலாமா? இதைப் படிக்கிற எனக்கு ஏன் பிறர் பிரார்த்தனை செய்யவேண்டும்? என் நலனில் உங்களுக்கென்ன அக்கறை? நான் நன்றாய் இருந்தால் நீங்கள் நன்றாய் இருப்பீர்கள் என்று நினைக்கிறீர்களா? என் நல்ல நிலைமை உங்களுக்கு நல்ல நிலைமை என்று சொல்கிறீர்களா? அப்படியானால் நீங்கள் உங்களுக்காகத்தானே பிரார்த்தனை செய்கிறீர்கள்! அதற்குத்தானே அழைக்கிறீர்கள். என்னையும் பிரார்த்தனை செய் என்கிறீர்கள்.

நான் அகல்யாவுக்குப் பிரார்த்தனை செய்கிறேன். எதன் பொருட்டு? அவள் நோய் நீங்கி, சுகமடைந்து, பலம் பெற்று,



மறுபடி பழைய உருவம் பெற்று, சிரிப்பும், பாட்டுமாய் வலம் வந்து சிஷ்ருஷை பண்ணி, சுகம் தந்து, எனக்கு மனைவியாய், ஒரு தகப்பனுக்குப் பெண்ணாய், நூற்று இருபது பிள்ளைகளுக்குத் தாயாய் அகல்யா மாண்டிஸோரிக்குத் தலைவியாய் நின்று, அதில் எனக்குக் கர்வம் பொங்கி, கௌரவம் வளர்ந்து அவளை முன்னிட்டு நான் மேலேறி என் பெருமிதம் என்னைக் குளிப்பாட்ட, குளிர்ந்து போய் 'ஐயோ! இது அத்தனையும் இன்னும் எனக்கு வேண்டுமே' என்று அரற்றலோடு பிரார்த்தனை பண்ணவா? இது சரிதானா?

எல்லாரும் நலமாய் இருப்பது இயல்பா? எல்லோரும் நெடுநாள் வாழ்வது சாத்தியமா? மரணம் வேண்டாம் என்பது இயற்கையா?

என்னால் பிரார்த்திக்க முடியவில்லையே, அகல்யா. நீ மரணமடைவது பற்றி வருத்தமில்லை. ஆனால் இதை இவ்வளவு விருப்பத்துடன் தழுவுகிறாயே, அதை தவறு என்கிறேன். என்னைப் பிரிகிறாயே என்று புலம்பவில்லை, உன்னை வெறுக்கிறாயே என்று கஷ்டப்படுகிறேன். தண்டித்துக் கொள்கிறாயே, இது கூடாது என்கிறேன். அதற்குக் காரணம் ஆயிரம் சொன்னாயே, அதை அபத்தம் என்கிறேன்.

'என் வேலை முடிந்தது. விடை பெறுகிறேன்' என்று படுத்து மெல்ல சிரித்தபடி உயிர்விட்ட புத்தப் பிட்சுவைப் பற்றி உனக்கு நான் சொன்னதில்லையா? உடல் சிரமப் படுகிறது என்று கருணை கொண்டு உயிரை வெளியேற்றிய பெரியவர்களைப் பற்றிப் பேசியதில்லையா?

மரணம் இயற்கை அகல்யா. வெகு எளிதான விஷயம். ராக்ஷஸன் தேவனாய் சுயரூபம் பெறுவதை சினிமாவில் பார்த்ததில்லையா? அதுமாதிரி விஷயம் ராக்ஷஸன் காணாமற் போய்விட்டார்களே என்று யாராவது அழுவார்களா?

அதுபோல இதற்கும் அழவேண்டியதில்லை. இதுதான் பெரிய தண்டனை என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயே அகல்யா. உண்மையை உணராமல் மரணத்தை வலியாய் நினைத்துக் கொண்டு, வேதனையாய் மாற்றிக் கொண்டு, 'எனக்கு இது வேண்டும், இன்னமும் வேண்டும்' என்று புலம்பிப் போகிறாயே. நிஜம் தெரியாமல் சாகிறாயே அகல்யா. நேசமற்று மாறுகிறாயே பெண்ணே.

சரி போ, போன இடத்திலாவது புரிந்துகொள். அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய், ஆனந்த பூர்த்தியாகி என்பதை உணர்ந்துகொள். போய் வா அகல்யா.

அகல்யா முனங்கினாள்.

மெல்ல உதடுகளைப் பிரித்துத் தவித்தாள். கால் விரல் களைச் சுருக்கி நிமிர்த்தி அசைத்தாள்.

''அகல்யா நான் பேசறது உனக்குக் கேட்கிறதா? என் மனம் உனக்குப் புரிகிறதா அகல்யா. உனக்கு இப்போ என்ன வேண்டும் சொல்? இங்கே இவ்வுலகத்தில் கடைசியாய் என்ன வேண்டும் கேள். குறையென்ன சொல்?''

நகத்தால் பிளந்த மாதுளம்பழக் கீற்று மாதிரி கண்கள் சிவக்கப் பிரிந்தன. வெளிறிய விழிகள் தெரிந்தன. 'இவளுக்கு இனி மரணம் நிச்சயம்' என்று அறிவித்தன. உயிர்க் கூட்டை விட்டு இற்றுவிட்டதை உணர்த்தின. இனி இது புறப்படப் போகிறது, டேக் ஆப்.

''சொல் அகல்யா, சொல். என்ன வேண்டும் சொல். நான் சிவசு. சிவசுப்பிரமணியன், உன் புருஷன் கேட்கிறேன். உன் கடைசி விருப்பமென்ன சொல்?''

''தண்ணீர்...தண்ணீர்...ர்ர்''

நான் அவள் பற்களை மெல்ல நீக்கி, சின்ன ஸ்பூனால் ஒரு மிடறு ஜலம் ஊற்றினேன். உள்ளே இறங்கிற்று.



இன்னொன்று ஊற்றினேன். உள்ளே இறங்கிற்று... மீண்டும் ஊற்றினேன். உள்ளே இறங்கிற்று.

அவள் முகத்தில் சட்டென்று ஓர் அமைதி படர்ந்தது. தொண்டைக் குழி நகர்ந்து நீரை உள்ளே வாங்கிக் கொண் டது. விழிகள் அகலமாயின. ஒளிச்சுடர் தெரிந்து நகர்ந்து இடமற்றுத் தேடி அலைந்தன. மேலும் ஜீவன் கூடிற்று. கண்கள் விட்டத்தில் கணநேரம் நின்று மெல்ல பக்கம் சரிந்து என்னைத் தடவிற்று. ஆள் அடையாளம் தெரிந்து பரபரத் தது. சோகம் காட்டிற்று. 'வெரிகுட் அகல்யா, வெரிகுட், அவ்வளவுதான்! உணர்வுடன் இரு அகல்யா. மயக்கமற்று இரு. சொல், என்ன வேண்டும் சொல்.'

உதடுகள் கூடிக்கூடி என்னவோ செய்தி சொல்லின. ''பாட்டு...பாட்டு...பாட்...''

''பாட்டு பாட வேண்டுமா? என்ன பாட்டு அகல்யா? எது பற்றி பாட வேண்டும் சொல்.''

ஏதானும் ஏதானும் என்கிற மாதிரி உதடும் தலையும் அசைந்தன. பாவம் காட்டின.

நான் அவசரமாய் இந்து பரிபாலன சங்கம் கொடுத்தப் புத்தகத்தைப் பிரித்தேன். அகல்யாவின் காதருகே நகர்ந்து முகத்தை வைத்துக் கொண்டேன்.

''அகல்யா பாடட்டுமா? கேட்கிறாயா?''

அகல்யா மிக லேசாய் தலையசைத்தாள். மெல்ல கண்கோடியில் விழிகளை நிறுத்தி என்னைப் பார்த்தாள்.

*''கைகாள் கூப்பித் தொழீர்*
*கடிமா மலர் தூவி நின்று.''*

நான் குரல் உயர்த்தினேன்.

*''பைவாய் பாம்பரை யார்த்த பரமனைக்*
*கைகாள் கூப்பித் தொழீர்.''*

அகல்யாவின் கைகள் மெல்லியவை. சிவந்தவை. நீண்ட கூர்மையான நகங்களை உடையவை.

"என்ன என் கையையே பார்த்துக்கிட்டிருக்கீங்க?"

"முதல்முதல்லே நீ என்னை கைகூப்பி நமஸ்காரம் பண்ணினப்போ ரொம்ப நேரம் இது கூப்பின விதத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன் தெரியுமோ. ரொம்ப பேருக்குக் கைகூப்பவே தெரியாது அகல்யா. மனசு வராது. விகல்பமில்லாத மனசுதான் இப்படி அகல் சுடரா கைகூப்பச் சொல்லும்."

*"மூக்கே நீ முரலாய்*
*முதுகாடுறை முக்கண்ணனை*
*வாக்கே நோக்கிய மங்கை மணாளனை*
*மூக்கே நீ முரலாய்."*

அகல்யாவின் மூக்கு மகா அழகு. புத்திசாலித்தனம் காட்டுவது. கோபம் மிக்கது. பெரிய விளிம்பும், கூர்மையும் உடையது. கொஞ்சம் அடினாயிட்ஸ் தொந்தரவு உண்டு.

*"வாயே வாழ்த்து கண்டாய்*
*மதயானை யுரிபோர்த்து."*

"கொஞ்சம் வாயை மூடிக்கிட்டு இரு அகல்யா."

"முடியாதுங்க. எதிர்த்துப் பேசறா. அவளை வீட்டுக்கு அனுப்பிச்சிடப் போறேன்." கம்பீரம் மிக்க நெளிவு. லேசாய் ஒரு கண்டிப்பு தெரியும் உதடுகள் அவை.

*"கண்காள் காண்மின்களோ*
*கடல் நஞ்சுண்ட கண்டன் தன்னை."*

"யம்மா என்ன பார்வை உன்னுது? நெஞ்சுல அப்படியே பார்வையை விட்டுட்டுப் போற அகல்யா. இப்படி நெருக்கமா இடக்கறப்ப தடுக்குனு எழுந்து என்ன பார்க்கிற? இத்தனை நாளுக்கு அப்புறமும் யார் நீன்னு எப்படிப் பார்க்க முடியுது உன்னால்! நீ நிஜந்தானான்னு உன் கண்ணு கேட்கிற



கேள்விக்கு என்ன பதில் தரமுடியும் நான். அகல்யா ப்ளீஸ், கண் வழியா பேசாதே தயவு செய்து."

*"கால்க ளாற்பயனென் கறைக்*
*கண்ட னுறைக்கோயில்*
*கோலக் கோபுரக் கோகரணஞ் சூழ்..."*

"ஏங்க சோப்பு டப்பாக் கேட்டேனே?"

"கதவுக்கு கீழ் வச்சுருக்கேன் அகல்யா"

"சொல்ல வேணாமா?"

"உன் காலையே பார்த்துக்கிட்டு இருந்தேன்."

"கடவுளே, உங்க ரசனைக்கு நேரம் காலமே கிடையாதா?"

"உண்டு அகல்யா"

"அப்படியா! உங்களுக்கு ரசனை குறைவான நேரம் எதுங்க?"

"நீ எதிரே இல்லாதபோது அகல்யா"

*நீரோடு கோலம் காணா திலைப்படியும்*
*நெளிந்தாடு சேலை இல்லாத் துணிக்கொடியும்,*
*மலரவிட்டுத் தரை உதிர்க்கும் பூச்செடியும்,*
*வாளியும் கிணற்றடியும் கைப்பிடிச் சுவரும்*
*வாளுகின்றன என்னைப் போல் அவள்*
*இல்லா வெறுமையில்.*

நேரே அவள் இல்லாதபோது எழுதின கவிதை இது. அவள் பரிசு வாங்க டெல்லிக்குப் போனதும் என் டைரியில் எழுதின வரிகள் இவை.

*நெஞ்சே நீ நினையாய்*
*நிமிர் புன்சடை நின்மலனை*

"இதோ பாருங்க என் மனசுல முழுக்க முழுக்க நீங்கதான் இருக்கீங்க. உங்களோடு வாழ்ந்த வாழ்க்கைதான் பெரிசு

எனக்கு. உங்களோடப் பேசி பேசி பெரிய மனுஷியா யிட்டேன். இத்தனைப் பாராட்டும் மாலையும் நீங்க போட்டப் பிச்சை. வெறும் பி.ஏ.பி.டி.ங்க நான். இது வெறும் சட்டம் போட்டப் பேப்பர். இந்தக் கண்ணாடிச் சட்டத்தை எதிர்க்க வச்சா என் மூஞ்சி தெரியல. நீங்கதான் தெரியறீங்க. நான் முதல்ல கல்யாணம் பண்ணிக்கிட்டது ஒரு ஆம்பிளையை. இப்ப பண்ணிக்கிட்டது ஒரு புருஷனை. புருஷன்னா யாருன்னு நீங்க சொல்லிக் கொடுத்திருக்கீங்க எனக்கு. ப்ளீஸ்... இந்த மாலையை நீங்க போட்டுக்கணும். எனக்குப் போட்டாச்சேன்னு பார்க்கிறீங்களா? நான்தான் சூடிக் கொடுத்த சுடர்கொடின்னு அன்னிக்குச் சொன்னீங்களே? என்னிக்கு விடோ ரீ மேரேஜ்க்குப் பாராட்டுப் பத்திரம் வேணாம்டீங்களோ, அன்னிக்குத் தெரிஞ்சுப் போச்சு உங்க மனசு முழுவதும். ஐயம் ப்ரௌவுட் சிவசு. ப்ரௌவுட் டூ பீ யுவர் வொய்ஃப். மாண்டிஸோரியெல்லாம் அப்புறம்தான். அஞ்சு வருஷம் முன்னாடி இப்படி ஒரு வாழ்க்கை நினைச்சுப் பார்த்திருப்பேனா?'' மாலையை என் கழுத்தில் போட்டு முத்தமழை பொழிந்தாள். தோளில் தொங்கி ஊசலாடினாள். குழைந்தாள். அழுதாள்.

நான் அகல்யாவை உற்று நோக்கினேன். கண்கள் மேலே சொருக ஆரம்பித்தன. முகத்தில் கருமை ஏறத் தொடங்கியது. உதடுகள் அமானுஷ்யமாய்த் தவித்தன. கரகரத்த சப்தம் தொண்டையில் நகர்ந்தது. தொண்டைக்குழி வளைந்து சுழிந்து அதிர்ந்தது. லேசாய் இடதுபக்கம் தலை சரிய, பிராணன் போய்விட்டது.

நான் புத்தகத்தை மூடினேன். படுக்கையில் சற்றுநேரம் முகத்தைப் புதைத்துக் கொண்டேன். மெல்ல எழுந்து அவள் விழிகளை வருடி மூடினேன். போர்வையை மேலே இழுத்து அவள் முகத்தை மூடினேன்.



'போய் வா அகல்யா. ஆல் த பெஸ்ட். வேறெங்கேனும் எப்போதேனும் சந்திக்க முடியுமா பார்ப்போம். இந்தக் கோளத்திலோ, வேறு எங்கானுமா பார்க்க முடிகிறதா என்று தவிப்போம். பார்த்தால் புரிந்து கொள்வோம்!

ஈலோக கோளத்தில் ஒரு சிரா ஸந்த்யயில் இன்னும் ஒலிக்க நாம் கண்டு முட்டி, தெரியாமல் முட்டிக் கொண்டது மாதிரிதானே சந்தித்தோம். தெரியாமல் முட்டிக் கொண்டு, சிதறின மாதிரிதானே பிரிந்தோம். மறுபடி அவ்விதமே நிகழட்டும். போய் வா அகல்யா. ஆல் த பெஸ்ட்!'

வெளியே நடந்து ஆஸ்பத்திரி வராந்தாவைத் தாண்டி படியிறங்கித் தோட்டத்துப் பக்கம் நகர்ந்து மரத்தடியில் நிற்க, ஆஸ்பத்திரி ஆள் சற்று நேரம் கழித்து அருகே வந்தான்.

''உள்ளார எடுத்துட்டுப் போய்ட்டாங்க சாமி. சட்டுன்னு வந்துடும்!''

''வரட்டும்பா. மொள்ள வரட்டும். என்ன அவசரம்.''

''பள்ளிக்கூடம் மொத்தமும் எரிஞ்சுப் போச்சுங்களா?''

''ஆமாம்பா.''

''போலீஸ் மடக்கி மடக்கிக் கேட்டதுங்க, டாக்டராண்ட தற்கொலையா, தற்கொலையான்னு. டாக்டர் ஆக்ஸிடெண்ட்டுன்னு சொல்லிட்டாருங்க!''

இது ஆக்ஸிடெண்டுதான். பள்ளிக்கூடம் பூராவும் எரிந்தது விபத்துதான். கூரை நெகிழ்ந்தது, நெருப்பு அகல்யாவை அணைத்து சுருக்கியது விபத்துதான். ஆனால் இவள் மரணம் தற்கொலையே. இவள் தன்னை கொலை செய்துகொண்டு ஆறு மாதமாகிறது.

## 2

"இரண்டரை மணி பஸ்ஸை புடிச்சிடலாங்களா சிவசு?"

"பிடிச்சிடலாம் அகல்யா."

"நேரம் போனதே தெரியலீங்க சிவசு."

"எனக்குக் கூட அகல்யா."

"உங்கம்மா பின்னிவிட்டது நறுக்குன்னு இருக்குது சிவசு தலைக்கு."

"நீ தளர பின்னிக்குவியோ? கஷ்டமா இருந்தா மறுபடி இந்த மரத்தடியில் பின்னிக்கிடலாம் அகல்யா."

"அதெல்லாம் வேணாம் சிவசு. அவங்க பின்னிவிட்டது சந்தோஷமாயிருந்துச்சுன்னு சொல்ல வரேன். தனக்கு வேணுங்கிற பெண்கிட்ட, அதுவும் தன்னைவிட வயசு அதிகமான அம்மா மாதிரி ஒருத்தர்கிட்ட தலை பின்னிக்கிறது ரொம்ப சுகம் சிவசு."

"புரியலியே?"

"புரியாதுங்க. ரொம்ப இண்டிமஸி உள்ள இடம். அது பொம்பளைங்களுக்குத்தான் புரியும்."

"தலை பின்னிக்கிட்டே எங்கம்மா நிறையப் பேசினாப்பல படுதே?"

"பேசினாங்க, நிறையப் பேசலை. இரண்டு மூணு கேள்வி கேட்டாங்க."

"என்ன அது?"

"ம்... உங்களுக்குச் சொல்ற மாதிரி விஷயமில்லை. பொதுவா கேட்டாங்க."

"அது என்ன அகல்யா, எனக்குக் கூடத் தெரியாத ரகஸ்யம்?"



"ரகஸ்யம்னு சொல்ல முடியாது. வெளியே சட்டுன்னும் சொல்ல முடியாது!"

"மென்ஸஸ் விஷயம் பத்தியா?"

"ஹய் எப்படித் தெரிஞ்சது?"

"நீ மென்னு முழுங்கிறத வச்சுத் தெரிஞ்சிக்கிட்டேன். அதென்னமோ இது பத்திப் பேச நம்ம பக்கத்துப் பெண்கள் ரொம்ப சங்கடப்படற மாதிரி தோணுது எனக்கு? ரொம்ப சாதாரண உடம்பு விஷயங்களை அலுத்துக்கிட்டு நிறையப் பேசுறவங்க, இது கேட்டா பிகு பிண்ணுவாங்க, ஏன் அகல்யா அது?"

"எனக்குத் தெரியாது."

"ஏதாவது காரணம் இருக்கும் இல்ல?"

"எனக்குத் தெரியாது. என்னத்துக்கு அதைப் பத்தி? விடுங்க?"

"நீயும் பிகு பண்றயே, அதுதான் ஆச்சர்யமா இருக்கு!"

"பிகு இல்லீங்க, அசிங்கம். எதுக்குப் புறப்படறச்சே?"

"தப்பு அகல்யா. இது ரொம்ப முக்கியமான விஷயம். எல்லா வளர்ந்த ஆணுக்கும் தெரிய வேண்டிய விஷயம் அகல்யா. இதோட வேதனை, இது கொடுக்கிற அயர்ச்சி, இந்த நாட்களிலே இருக்கிற பயம், பெண்ணோட மனநிலை நம்ம ஆண்களுக்கு நிச்சயம் தெரியணும். அடடா, அத்தினி சிரமமா உனக்கு? தெரியாமப் போச்சே! இப்பப் போய் முரட்டுத்தனமா பேசறமே. வேலை வாங்கறமே! இன்னும் நல்லா ட்ரீட் பண்ணனும்னு தெரியாம-முகத்தைச் சுழிக்க வச்சிடறீங்க.!"

"அது கொஞ்சம் அருவருப்புத்தாங்க!"

"நோ, தப்பு அகல்யா. ஐயோ பாவம்ன்னுதான் படுது எனக்கு. அழகு, அழகு, கொள்ளை அழகுன்னு பொம்ம

னாட்டியை வர்ணிக்கிறிங்களே, அவளுக்குள்ளே மாசம் தவறாமல் இப்படி ஒரு ஹிம்சை இருக்கு. அது சுருண்டுக் இட்டு சோம்பலோடு தூங்கிற நேரமும் இருக்குன்னு தெரியணும். தெரியறபோது ஒரு வாஞ்சை வரும். இன்னும் சித்த நேரம் தூங்குன்னு சொல்லத் தோணும். நம்ம ஆம்பிள்ளைகளுக்கெல்லாம் தூங்கிற பொம்மனாட்டியை எட்டி உதச்சு எழுப்பறதுதானே பழக்கம்.''

''இது தெரியாமதான் எட்டி உதைக்கிறானோ!''

''இது கூடத் தெரியாமத்தான் ஹிம்சைப்படுத்தறான்.''

''தெரிஞ்ச நீங்க என்னவா மாறிட்டிங்க?''

''இது தெரிஞ்சவுடனேயே நல்லவேளை பொம்பளை யாப் பொறக்கலையேன்னு பட்டுது! யோசனை பண்ணிப் பார்த்தபோது இது வம்ச விருத்தியோட சம்பந்தப்பட்ட விஷயம். உள்ளுக்குள்ளே ஓர் உயிரைத் தாங்கிக்கிற உடம்பு படற ஆயத்தம் அவஸ்தைன்னு நினைக்கிறப்போ ரொம்ப மென்மையாப் பெண்களை இப்போ நடத்தணும்னு தெரிஞ்சுது!''

''உங்களை நான் என்னவோன்னு நினைச்சேன். சிவசு, நிஜமாகவே நீங்க ரொம்ப கிரேட்.''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை அகல்யா.''

''நிச்சயமா. சில பொம்பளைங்களுக்குக் கூட இது என்னன்னு முழுசுமாப் புரியாது.''

''அப்படியா?''

''ஆமா சிவசு. என்னடி எழவுன்னுதான் அலுத்துக்கு வாங்க.''

''ஆனா, இன்னொரு விஷயம் அகல்யா.''

''சொல்லுங்க.''



''தன்னோட இந்த ஹிம்சை, மாசாந்திர வேதனை, அசௌகர்யம் தெரிஞ்சும் தான் ரொம்ப அழகு, தன்னோட அழகு, தன்னோட வாளிப்பு, ரொம்ப உசத்தின்னு நினைக்கிற பெண்பத்தி என்ன நினைக்கிறே?''

''ஐயோ, எல்லாப் பொம்பளைக்கும் தன்னோட லட்சணம் பத்தி நல்லாத் தெரியும்! வெளிய பகட்டுக்காக மறைச்சு ஆம்பளையை மயக்கறதுக்கு அழகாக் காட்டுதுங்க.''

''வெரிகுட். உனக்கு இது தெரிஞ்சா சரிதான்.''

''என்னத்துக்கு வெரிகுட்?''

''இது தெரிஞ்ச பிறகு, புத்தி விஷயத்துக்குச் சுலபமாய்ப் போயிடலாம். அழகைவிட மனசுதான் முக்கியம்னு மேல நடந்துடலாம். அழகு, அழகுன்னு உட்கார்ந்துட்டா சிரமம்தான்.''

''நாம புத்தி விஷயத்துக்கு நகர்ந்துட்டோமோ?''

''எனக்கு அப்படித்தான் படுது.''

''எதை வச்சு சொல்றீங்க?''

''இது பத்தி வெட்கமில்லாமப் பேசிக்கிட்டு வந்தியே இது போதாதா?''

''ஆனா நான் ஆரம்பத்திலே கொஞ்சம் பிகு பண்ணினேன், இல்லையா?''

''அது பழக்க தோஷம்- அப்புறம் சாதாரணமா யிட்டியே!''

''சாதாரணமானதும் பழக்கதோஷம்தான்.''

''என்னது?''

''உங்களோட பழகின தோஷம்.''

''அடி சக்கை, மயக்க ஆரம்பிச்சிட்டா போல இருக்கு.''

"நானா? உங்களையா? மயக்கறதா? தேவையே இல்லை சிவசு. அழகாலோ, வார்த்தையாலோ ஆம்பளையை மயக்க வேண்டாம்கிற இடம். யம்மா ரொம்ப நிம்மதி, பெரிய விடுதலை, பொண்ணுக்கு. ஆனா எல்லாப் பொண்ணுக்கும் இது கிடைக்காதுங்க."

"பஸ்ஸ்டாண்ட் வந்துட்டோம்."

"ஆமா."

"பகல் முழுக்கப் போனதே தெரியலை."

"ஆமா!"

"வீட்டுக்குப் போய் உட்கார்ந்தா ஹோன்னு இருக்கும் எனக்கு!"

"எனக்கும்தான் சிவசு."

"மணியை மணியை பார்த்துக்கிட்டு இருப்பேன்! பஸ்ஸு இப்ப ஏரியைத் தாண்டிட்டிருக்கும். இப்ப தாம்பரம் கிட்டே போயிருக்கும். அகல்யா, இன்னொரு பஸ்ஸு புடிச்சு வீட்டுக்குள்ளே நுழையும். அப்பாகூடப் பேசிக்கிட்டு இருக்கும். தட்டு வச்சி சாப்பாடு சாப்பிடும். மோட்டு வளையைப் பார்த்து என்னை நினைச்சுக்கும். பாதி சோத்துல கையலம்பும். படுக்கையில் சாஞ்சுக்கிட்டு மொத்த நாளையும் யோசிக்கும். இப்ப மணி பதினொண்ணா, நல்லா தூங்கிக்கிட்டிருக்குன்னு நினைச்சுக்குவேன். தூக்கம் வராம சுத்தி சுத்தி வருவேன்."

"போறும் சிவசு. இப்படியெல்லாம் பேசினீங்க, எனக்கு போறதுக்கேப் பிடிக்காது. அப்புறம் கிளம்புறச்சே பொசுக்குன்னு அழுதுடுவேன்! அப்புறம்- வேண்டாம் ரெண்டு பேரும் கஷ்டப்படுவோம்."

இருவரும் மௌனமாய்த் தரையை வெறித்துக் கொண்டு இருந்தார்கள். இலக்கின்றி எதிர் எதிர் திசையைப் பார்த்துக்



கொண்டிருந்தார்கள். பிரியப் போகும் கவலையை சுமந்து, முகங்கனக்க நின்றிருந்தார்கள்.

"மூணரை மணிக்கு இன்னொரு பஸ் இருக்கு அகல்யா."

"லேட்டாயிருங்க. அப்பா கவலைப்படுவாரு."

"சரி அகல்யா."

"கோவங்களா?"

"கோவம் என்ன இதிலே!"

"கோச்சுக்கங்களேன்."

"முடியாது அகல்யா! ரொம்பக் கஷ்டம்."

"ஏங்க?"

"மனுசாளைப் பிடிச்சுப் போச்சுன்னா அப்புறம் எனக்குக் கோவமே வராது."

"என்ன பண்ணினாலும்?"

"என்ன பண்ணினாலும்."

"வெடுக்குன்னு கிள்ளினா?"

"துடைச்சிட்டு நகர்ந்திடுவேன்."

"எவ்வளவு தூரம்?"

"ஓர் இரண்டடி தூரம்."

"அவ்வளவுதானா?"

"பின்னே என்னா, கிள்ளினதுக்கு கண் காணாமயா ஓடிடுவாங்க?"

"ஓடித்தான் பாருங்களேன். துரத்திட்டு வருவேன்!"

"துரத்திட்டு வந்து?"

"மறுபடி கிள்ளுவேன்!"

"ராட்சஸி."

"ம்ம்ம்... இப்ப அகல்யா... யாருன்னு புரியுதா?"

"ரொம்ப ரொமான்டிக்காப் போயிக்கிட்டிருக்கோம்."

"எனக்கும் அப்படித்தாங்க படுது."

"ஆனா நல்லா இருக்கு இல்ல அகல்யா?"

"ரொம்ப... பதினொரு மணிக்கு அகல்யா தூங்கிடும்னு நினைச்சுக்குவீங்க. நான் எங்கத் தூங்கப் போறேன். கொட்டக் கொட்ட முழிச்சிக்கிட்டு இந்த ஆள் நிம்மதியா தூங்கணுமேன்னு நினைச்சுட்டிருப்பேன்."

"முழிச்சிட்டு இருந்தா ரேடியோ கேள், அகல்யா."

"என்னாங்க?"

"இன்னிக்கு நேயர் விருப்பம்."

"நீங்கக் கேட்பீங்களா?"

"வழக்கமா கேக்கறது இல்லை. இன்னிக்கு என்னவோ கேட்கணும்னு தோணுது!"

"கேட்கலாங்களா?"

"முதல் பாட்டு என்ன வரும் சொல்லு?"

"எம்.ஜி.ஆர்."

"இல்ல சிவாஜி."

"பெட்!

"எவ்வளவு?"

"நீயே சொல்லு."

"நீங்கத் தோத்துட்ட பிறகு சொல்றேன்."

"அகல்யா, பஸ்...பஸ்..."

"ஏறட்டுங்களா?"

"ஏறு சீக்கிரம். கூட்டம் நிறைய நிக்குது, ஏறிடு."

முண்டி மோதிக் கொண்டு கூட்டத்தில் நுழைந்து பஸ்ஸில் அகல்யா ஏறினாள். டிரைவருக்குப் பின்ஸீட்டில் ஜன்ன



லோர விளிம்பில் இடம் பிடித்தாள். உட்கார்ந்து கொண்டு முகத்தைத் தலைப்பால் துடைத்தபடி வெளியே தேடினாள்.

"இங்க இருக்கேன் அகல்யா." அவன் பஸ்ஸைச் சுற்றி வந்து இவள் அமர்ந்த ஜன்னல் பக்கம் நின்றிருந்தான். தொலைவில் நின்றிருந்த ஒரு பையனிடம் கைகாட்ட, அந்தப் பையன் இரண்டுத் துணிப்பைகளைக் கடையிலிருந்து எடுத்துக்கொண்டு ஓடிவந்தான்.

"இந்தா, அகல்யா, வாங்கிக்க."

"என்னது இது?"

"உளுத்தம் பருப்பு. இதுல கொஞ்சம் காய்கறி."

"எதுக்கு, இவ்வளவோ பருப்பு, காய்கறி?"

"நம்ம நிலம், தோட்டம்."

"குத்தகைக்கு விட்டிருக்கிறதா சொன்னீங்க?"

"ஆமா! அதனால என்ன, நம்ம நிலம்தானே!"

"எதுக்கு சிவசு, இதெல்லாம்?"

"நான் செங்கல்பட்டுக்காரன்! உன்ன மாதிரி புஸ்தகமா தரமுடியும்! இல்ல ரிப்பன், சீப்பு வாங்கறதா? இங்கே கிடைக்கிறதுதானே கொடுக்கனும்."

"அப்ப மூணு புஸ்தகத்துக்கு ரெண்டு படி பருப்பு, மூணு கிலோ காய்கறியா?"

"ஏன் கணக்கு சரியா வரலையா?"

"ரொம்ப கனமாக் கனக்குதுங்க!"

"எது?"

"பை, மனசு , இரண்டும்தான்."

அவன் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டான். தன் மூக்கை நிமிண்டி அழுத்தித் தேய்த்துக்கொண்டு உறிஞ்சினான். கீழுதடைக் கடித்தபடி தலையைக் குனிந்து

கொண்டான். அவள் வெளியே கைநீட்டி அவன் தலையைத் தலைத்தாள். முகத்தை ஜன்னலோரம் பொருத்திக் கொண்டு அவனைப் பார்த்தாள்.

''போயிட்டு வரட்டுங்களா?''

''சரி.''

''உங்களப் பார்த்தா அழுற மூஞ்சியா தெரியுது.''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே!''

''நெஜம்மாவா?''

''...''

''சிவசு?''

''ம்ம்ம்.''

''போய்ட்டு வரேன்!''

''சரி!''

''பதினைஞ்சு நாள் பொறுத்து மெட்ராஸ் வாங்க.''

''அடுத்த வாரம் வரட்டுமா?''

''வேணாம்.''

''ஏன் அகல்யா?''

''நாம வழியிலப் பேசின விஷயம். ஹோட்டல் சாப்பாடு தான் கிடைக்கும். அங்க வந்து ஹோட்டல் சாப்பாடு சாப்பிடுவானேன்?''

''சரி.''

''எல்லாத்துக்கும் ஒரு சரி. பிடிவாதம் பிடிங்களேன் வருவேன்னு.''

''அங்க வந்து நான் ஹோட்டல்ல சாப்பிட்டா உன் மனசு கஷ்டப்படும் அகல்யா, நம்மால் எதுக்கு ஒருத்தருக்கும் கஷ்டம்.''



''என் ஐயனே!'' அகல்யா அவன் விரல்களைப் பிடித்துக் கொண்டாள்.''

''கையை விடு அகல்யா! பஸ் கிளம்பப் போவுது. போய் லெட்டர் போடு.''

''எப்பப் போட?''

''தினம் போடேன்.''

''நீங்களும் போட்டீங்களா தினம் ஒரு லெட்டர்? பதில் வருதோ வரலையோ, நான் தினம் காத்தால எழுதுறேன்! சரியா? நீங்களும் போடுங்க.''

''சரி அகல்யா.''

பஸ் குலுங்கிற்று. அவன் நகர்ந்து கொண்டான். மெல்ல உறுமிற்று. வலப்புறம் நகர்ந்தது. அவன் பின்னடைந்தான். கைகளை ஆட்டினான்.

அகல்யாவும் கையசைத்தாள். அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனைக் கடந்து பஸ் நகர்ந்தது. ஒரு மாட்டு வண்டியின் பின்புறம் மெல்ல ஊர்ந்தது. இவன் அவளையேப் பார்த்துக் கொண்டிருந்தான். சட்டைப் பையை சட்டென்று தடவி 'காசு இருக்கிறதா?' என்று பார்த்துக் கொண்டான். ஓடத்தொடங்கிவிட்ட பஸ்ஸைத் தொடர்ந்து பின்புற படியில் தாவி ஏறிக் கொண்டான்!

பஸ் மாட்டு வண்டியைத் தாண்டி வேகமடைந்தது! சிறிப் பறந்தது. சற்றுத் தலையைச் சாய்த்து பின்பக்கம் நின்றபடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

*''நேற்றைய பொழுது கண்ணோடு*
*இன்றைய பொழுது கையோடு*
*நாளைய பொழுது உன்னோடே*
*நிழலாய் நடப்பேன் பின்னோடே!''*

உரக்க மனசு பாடிற்று. கண்ணில் காற்றுத் தூசித் தாக்க, ஈரம் கசிந்தது. அடுத்த ஸ்டாப்பில் பஸ் நின்ற போது இறங்கி ஊரைப் பார்த்து நடந்தான். 'என் இனிய அகல்யா, நீ நலமாய் ஊர் சேர்ந்திருப்பாய் என்று நினைக்கிறேன்.' மனசு கடிதம் எழுதத் துவங்கிற்று. சட்டென்று மனசுள் எழுதின கடிதத்தை கசக்கிக் கிழித்துப் போட்டான். 'அவளே முதலில் எழுதட்டும்' என்று நினைத்தான். 'என்ன எழுதுவாள்' என்று யோசித்தான். மறுநாளுக்கு மறுநாள் மாலைக் கடிதம் வந்தது. 'சிவசு சிவசு சிவசு சிவசு சிவசு சிவசு சிவசு' என்று ஒருபக்கம் முழுதும் எழுதி, 'நலமாய் ஊர் வந்தேன். அன்புடன் அகல்யா.' என்று முடித்திருந்தது.

'நிஜமாகவே இவள் ராட்ஸஸிதான்' என்று சிவசு நினைத்துக் கொண்டான்.

## 3

"தம்பி உங்ககிட்ட கெட்டப் பழக்கம் ஏதாவது உண்டா?"

அகல்யாவின் வீட்டுக்குள் நுழைந்த ஏழாவது நிமிடம் அவளுடைய அப்பா கேட்ட கேள்வி இது.

சிகப்புத் தளம் போட்ட பெரிய ஹால். பச்சை டிஸ்டம்பர் சுவர்கள்! பெரிய பாரதியார் படம்! எதிர் பக்கத்தில் 'அறஞ்செய விரும்பு' என்று எழுதப்பட்ட கண்ணாடிச் சட்டம். மூன்றாம் சுவரில் பரந்த தட்டையான அருவி வழியும்- ஓவியம். நான்காவது பக்கம் திறந்தவெளி முற்றம். தரையில் பட்டு ஹாலுக்குள் பரவும் வெளிச்சம். பேடஸ்டல் பேன். பழுத்துப் பளபளத்து கண்ணோரங்களில்



சுருக்கம் மிகுந்து, சதா சிரிக்கும் புருவமும், விழிகளும், மீசையும், நரைத்த தாடியுமாய் அகல்யாவின் அப்பா.

"தம்பி, உங்ககிட்ட கெட்ட பழக்கம் ஏதாவது உண்டா?"

குரலில் எந்த உணர்வும் காட்டாமல் 'நேற்று ராத்திரி நல்லா சாப்டீங்களா?' என்ற சாதாரண தொனியில், 'சாதாரணமாய் பதில் சொல்லு- பயப்படாதே' என்கிற பாவனையில் சிவசுவின் எதிரே விழுந்த கேள்வி இது.

சிவசு யோசித்தான். புதிதாய் அவனுக்குள்ளேயே அவனே கேட்டுக் கொள்வது போல், இந்தக் கேள்வி அவனிடமே பிறந்து அவனுக்கு அவனே விடைத் தேடிக் கொள்வது போல் யோசித்தான்.

'நான் குடிப்பேன் எப்போதாவது, வருடத்திற்கு ஒரு முறை, இரண்டு முறை நண்பர்கள் வற்புறுத்தினால். நான் சீட்டு ஆடுவேன், கல்யாணக் கூட்டங்களில் கைகுறைந்தால். குதிரை ரேஸுக்குப் போனேன் ஒரே ஒரு முறை. இத்தனைக் கும்பல் போகுதே என்னதான்னு பார்க்கலாம்னு என்று. செங்கல்பட்டுக் கங்கம்மாவிடம் போனேன் மூன்று தடவை. முதல் முறை போனபோது எதையோ குடித்துவிட்டு 'எல்லோரும் என்னைக் கெடுத்துட்டாங்க துரை' என்று காசை வாங்கிக் கொண்டு அழுதாள். விட்டால் போதும் என்று வியர்த்துப் போய் வந்துவிட்டேன். கங்கம்மா அதற்கு மன்னிப்புக் கேட்ட போது, மறுபடி ஆவலோடு போனேன். மூன்றாம் முறை ஆவல் உந்த நாளாய்த் தேடிப் போன போது, 'சீக்கிரம் முடி. பேசிகினே இருந்தா' என்று அவள் அதட்ட, அந்த மாதிரி இடத்தின் அசிங்கம் புரிந்து போயிற்று எனக்கு. அதற்குப் பிறகு யார் அழைத்தாலும் நகர்ந்துவிட முடிந்தது சுலபமாய்.

இவை தவிர, வேறென்ன கெட்ட பழக்கம் உண்டு எனக்கு! சிகரெட் கிடையாது. வெற்றிலைப் புகையிலை, பிடிக்காது. பொடிகிட்டே கூடப் போனது கிடையாது.

இதைத் தவிர கெட்டதாய் பழக்கங்கள் என்னென்ன உலகத்தில்?'

"என்ன தம்பி யோசிக்கிறீங்க? என்னடா இப்ப வந்ததும் வராததுமாக கேட்கறான்னு யோசிக்கிறீங்களா?"

"அப்படி இல்லீங்க. கெட்டதா இரண்டு மூன்று காரிய செய்திருக்கிறேன். ஆனா எதுவும் பழக்கமா இல்லீங்க."

"சபாஷ்" -அகல்யாவின் அப்பா வாய்விட்டுச் சிரித்தா

"நல்ல பதில் தம்பி! ரொம்ப நல்லா சொன்னீங்க கெட்டது மட்டுமில்லை தம்பி, நல்லது கூட வெறும் ப தேய்க்கிற பழக்கமாயிடக் கூடாது. எழுந்து உடனே ஈறு பல்பொடிக் காரம் படணும்னு பழகின காரியமா ஆயிட்ட சுத்தமா விலக்க முடியாது. பழக்கத்துக்கு மாட்டிக்கா இருக்கிறதுதான் உசத்தி, உத்தமம்."

"அகல்யா காஃபி கொண்டாம்மா... தம்பி காஃபி சாப்பிடுவீங்க இல்லே... பழக்கமுண்டா?"

சிவசு சிரித்தான்.

"எனக்கு இது கெட்டப் பழக்கம் தம்பி! ஆறு ஏழு காஃபி சாப்பிட்டுடுவேன். விட முடியலை! இந்த வறுத்தக் கசப்புக் நாக்கு ஏங்கதான் செய்யுது."

'இந்தக் கிழவர் சூட்சமமான ஆள்! தன் சின்னக் கெட்ட பழக்கங்களை பெரிதாய் விவரித்து எனக்குள் ஏதும் பெரி கெட்ட பழக்கம் உண்டா என்று தேடுகிற ஆள்.'

"இதெல்லாம் என்னங்க கெட்ட பழக்கமா- ஒவ்வொரு தன் விஸ்கி, பிராந்தி குடிக்கிறான் நாள் தவறாம."

"தம்பி குடிப்பீங்களோ?"

இப்படியே வசனங்கள் வளர்த்திப் பேச வைத்து, பேச பேச உள்ளே கணக்குப் போட்டு கறுப்புப் புள்ளிகளை கணக்கிட்டு, 'ச்சீப்போ' என்று துரத்தி விடுகிற ஆள்.



இவ்வளவு பெரிய வலை எனக்குத் தேவையில்லை பெரியவரே. எனக்கு உள்ளே மிருகமில்லை. ஏன் இவ்வளவு சூட்சமப் பேச்சு என்னிடம்? ஒரு வேளை இது பெண்ணைப் பெற்ற கவலையோ? அவள் நலனில் அக்கறைப்பட்டு வரும் சூட்சமமோ? இப்படி மெதுவாய்ப் பேசி எடை போடுவது தான் வழக்கமா? சரிப் போட்டுக் கொள்ளுங்கள்."

"தம்பி, அகல்யாவைப் பிடிச்சிருக்குங்களா?"

"பிடிச்சுருக்குங்க."

"விவரம் மொத்தமும் சொல்லிச்சா. உங்க வீட்ல எல்லாத்தையும் சொல்லிட்டீங்களா! அம்மா சரின்னாங்களா?"

"அம்மா சரின்னு சொல்லிட்டாங்க. உசந்த இடத்துப் பொண்ணுப்பா! கண் கலங்காம வச்சுக்க! மனசு நோகாம நடந்துக்கன்னு அம்மா சொன்னாங்க. நீங்க விருப்பப்படற தேதியிலேயே கல்யாணம் நடத்தச் சொன்னாங்க. தேதிப் பார்க்கிற அளவுக்கு எங்க வீட்ல யாரும் இல்லே!"

"நல்ல மனசு... நல்ல மனசு. நேரா நா வந்து கேட்கலையேன்னு வருத்தமிருக்கும். எனக்கு இடது கால் கிடையாது. சர்க்கரைக் கட்டி வந்து எடுத்துட்டான் துண்டமா, இரண்டு வருஷம் முன்னாடி. நொண்டிக்கிட்டு வரலாம். அதுவே பெரிய குறையா, அச்சான்யமா பட்டுடலாம். நான் தேடி அலைஞ்சுப் பார்த்ததுதான் பாழாப் போச்சே! இந்தத் தடவை நீயே போய்ப் பார்த்துட்டு வாம்மான்னு அகல்யாவை அனுப்பிச்சேன். ரொம்ப நல்லபடியாப் புரிஞ்சிக்கிட்டுப் பேசுனீங்கன்னு சொல்லிச்சு."

"அகல்யாவே வந்துப் பேசினதுதாங்க எனக்குப் பிடிச்சுப் போச்சு. நீங்கதான் விதவைப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள விரும்பும் சிவசுப்ரமணியமா? நான் அகல்யா. விதவை. அவங்க யுத்தத்துல இறந்துட்டாங்க. எங்க அப்பாவுக்கு முடியாது. வேற யார் துணையும் இல்லை.

அதனால் நானா வந்தேன். கூப்பின கை இறக்காமப் பேசிச்சுங்க. ஹான்னு திகைச்சுப் போயிட்டேன்.''

''கூச்சமில்லாமப் பேசுதேன்னு கொஞ்சம் மனசுல பட்டிருக்கும். ரொம்ப சங்கோஜியான பெண்தான் தம்பி இது. அதன் தலையெழுந்து தானே போய் பேச வேண்டிய தாய்ப் போயிடுச்சு.''

''நான் தப்பா ஒண்ணும் நினைச்சுடலீங்க.''

''நம்பறேன் தம்பி! அகல்யா முகத்தைப் பார்த்தா யாருக்கும் தப்பா தோணாது. ஆனா என் பெண்ணைப் பத்தி நான் கொஞ்சம் சொல்லணுமில்லையா? கால்தான் ஒடைஞ்சுப் போச்சே தவிர, வாய் இருக்கே, அது வாழணும்னு என் மனசுல நினைப்பிருக்கே.''

''சொல்லுங்க கேட்கிறேன்...'' சிவசு அவர் பக்கமாய் குனிந்தான். அகல்யாவின் அப்பா அவனை ஊடுருவிப் பார்த்துவிட்டுத் தோளில் கை வைத்தார்.

''புரியுதுங்க தம்பி. நான் கல்யாணம் பண்ணிக்கத் தீர்மானம் செஞ்சுட்டேன். நீங்க சொல்லவேண்டியதை சொல்லிக்கலாம்கிற தொனி நல்லா தெரியுது.''

''நான் அப்படி...''

''கொஞ்சம் பொறுங்க... நான் பேசத்தான் போறேன். என் மாப்பிள்ளை யுத்தத்தில் செத்துப்போன பிறகு கொஞ்சம் காசு வந்தது தம்பி! கவர்மென்ட் உதவி, பிராவிடெண்ட் ஃபண்ட் பணம், இன்சூரன்ஸ் காசு நிறையவே வந்தது. மாப்பிள்ளையும் ஆடி ஓடி காசு சேர்த்து வச்சிருந்தான். இத்தினி காசோட, இளமையோட, இது பத்திரமா இருக்கணுமேன்னு கவலை வந்துவிட்டது தம்பி! நான் சர்க்கரை வியாதிக்காரன். எப்போவேணா பயணப்பட்டுருவேன். இரண்டு பிடி சர்க்கரை ஏறிச்சுன்னா பரலோகம் தான். இந்தப் பொண்ணை தனியா விட மனசில்லை தம்பி!



இது காசுக்கு இரண்டு பேர் ஆசைப்பட்டு ஏமாத்திடலாம். நான் கண் மூடுறதுக்கு முன்னே நல்ல ஆளாப் பார்த்து ஒப்படைக்கணும்னு நினைச்சேன். இரண்டாம் தாரம், நாலு பசங்களுக்கு சித்தி உத்தியோகம், இப்படியெல்லாம் வேணாம். அதுக்கு சிநேகிதமா ஒரு ஆள் வேணும்னு தோணிச்சு. அது வெறும் பத்து தேய்க்கிற பொண்ணு இல்லை தம்பி, வேற லட்சியம் இருக்கு அதுக்கு. இப்படிக் காயப்பட்ட பொண்ணு கொஞ்சம் நல்ல லட்சியத்தோட இருந்தா நல்லது! அது காயம் ஆறும்! ஒரு பிடிப்பு வரும்! மறுபடி பத்துத் தேய்க்கிற பொண்டாட்டியா போனா வெறுப்பு வந்துடலாம்! அப்போ பித்தளை பாத்திரம் தேச்சோம், இப்ப எவர்சில்வர் தேய்க்கிறோம், அவ்வளவு தானேன்னு ஒரு வலி வந்துடலாம். உங்க விளம்பரம் ரொம்ப சிநேகிதமாப் பட்டுச்சு! அதான் போய்ப் பார்த்துட்டு வாம்மான்னு நானே அனுப்பிச்சேன்.

''இப்படியே இருந்திடறேனேப்பான்னு திருப்பி திருப்பிச் சொல்லிச்சு. நாற்பது வயது பெண்ணாயிருந்தா சரின்னுடுவேன். இருபத்தெட்டு வயசுங்க அதுக்கு! எனக்குக் காலை வெட்டிப் போட்டாப்போல அது மனசை வெட்டிக்கிட்டு இருக்கணுமா? நான்தான் யாரோடயானா சேர்ந்து இரும்மான்னு புரியவெச்சேன். நல்ல ஆளா கிடைச்சா நான் நிம்மதியா கண்ணை மூடலாமில்லையா? தைரியமா சாவலாமில்லையா? அழுது அலைமாஞ்சு போகாம- அப்பாடான்னு பயணப்படலாமில்லையா? அதுக்கோசரம் தான்.''

சிவசு கரையோரக் கல்லென உள்ளே குளிர்ந்திருந்தான்.

'இதுவா சூட்சமப் பேச்சு? எடைபோடும் சாதனம்! எப்பேர்ப்பட்ட மனசு! எப்பேர்ப்பட்ட தகப்பன்? எவ்வளவு தெளிவு! ஒருவகையில் இது சூட்சமம்தான்! உலக அனுபவம் புரிந்து ஆளை ஆழம் பார்க்கும் சூட்சமம்.'

''முதல்முதலா உங்களைப் பார்த்துட்டு வீட்டுக்குள்ளார மலர அது வந்தப்பவே எனக்கு மனசுலப் பட்டுச்சு, இந்த இடம் முடிஞ்சிடும்னு. இப்ப செத்த நாழி முன்னே அப்பா அவரு வந்திருக்காருன்னு சொன்னவுடனே, 'யாரு? மாப்பிள்ளையா'னுட்டேன்! மனசு தம்பி, உள் மனசு! நம்ம உள் மனசுக்கு நல்லது கெட்டது டக்குனு தெரிஞ்சிடும். இது சரி வரும், இல்லலன்னு அழகாக் காட்டிக் கொடுத்திடும். உங்களுக்கு அகல்யாவை கல்யாணம் பண்ணிக்க சம்மதம் தானே தம்பி?''

சம்மதம் என்று ஒரு வார்த்தையில் சொல்ல தயங்கினான். சிவசுக்கு வெறும் கேள்விக்கு உண்டான பதிலாய் தலை யசைக்க விருப்பம் வரவில்லை. ஒன்று, இரண்டு, மூன்று... ஆறு சந்திப்பில் இந்தப் பெண்ணிடம் கிறங்கிப்போய் இவள் கிடைத்ததற்கு கிளர்ந்து, இவளை மறுபடி பார்க்க மாட்டோமா என்று அலைபாய்ந்து, ஒரு காதலும், ஸ்நேகமும் மனசு முழுவதும் பொங்கி 'அகல்யா, அகல்யா' என்று மனசுக்குள் எப்போதும் அவள் பெயர் உச்சரிக்கும் நிலை அவனுக்கு வந்துவிட்டதை வெறும் கல்யாணம் சம்மதம் என்று சொல்லக் கூச்சப்பட்டான். மனசு அத்தனையும் வார்த்தையாக்கினால் பெரியவரிடம் உளறலாய் முடியுமோ என்ற பயமும் வந்தது.

மெல்ல நாற்காலியை விட்டு எழுந்தான்! நாற்காலியின் பின்னால் நகர்ந்து நின்றுகொண்டான். அகல்யா ஹால் விளிம்போரம் கைகட்டி, கதவில் சாய்ந்து, நின்று கொண் டிருந்தாள். அவளை நோக்கி மெல்ல சிரித்தான். 'வா' என்ற குரல் எழுப்பாமல் தலையசைத்து அழைத்தான். அகல்யா புரிந்துகொண்டாள். சிவசு இடப்பக்கம் நகர்ந்து நிற்க, அவன் வலப்புறம் அகல்யா வந்து நின்றாள். பெரியவர் கண்களில் பரவசம் படர்ந்தது. உதடுகள் துடித்தன. கண்கள் கருங்கி



கனிந்து நீர் கட்டத் துவங்கியது. சிவசும் அகல்யாவும் அவரை நமஸ்கரித்தனர்.

''தென்னாடுடைய சிவனே போற்றி'' கிழவர் பெருங்குரலில் பிளிறினார்.

''என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி'' குரல் உடைய கதறினார்!

''போற்றி எல்லா உயிர்க்கும்
போகமாம் உன் பொற்பாதம்
போற்றியான் உய்ய
ஆட்கொண்ட புண்டரீகம்''

''என் சிவனே, என் சிவனே'' என்று நெடுநேரம் தோள் குலுங்க அழுதார். அகல்யாவின் கண்களிலிருந்து நீர் வழிந்து முகவாய் ஓரம் முத்தாய் நின்றது.

சிவசு, தன் வாழ்க்கை மெல்ல வேறு திசை நோக்கி திரும்புவதை உணர்ந்தான். புதிய திசை, புதிய நம்பிக்கை, புதிய மனிதர்கள், இன்சொல்லும், தெளிவும் உடைய உறவுகள். இனி நான் இவர்கள் மனிதன்! இவர்கள் என் மனிதர்கள். இத்தனை நாட்கள் நான் இவர்களைத்தான் தேடிக்கொண்டிருந்தேனோ? இவர்களும் என்னைத் தேடி இங்கு கண்டுகொண்டார்களோ? தன் ரசனைக்கு ஏற்ற மனிதர்களைத் தேடிக் கண்டுகொள்வதுதான் வாழ்க்கையா? அதன் பொருட்டுத்தான் இந்தப் பயணமா? எல்லா மனிதரும் தேடி அலைவது இதுதானா? கிடைத்த போது உறவாடிக் கொண்டு, கிடைக்காதபோது கடவுள் என்று கற்பனை செய்து தலைவணங்கினோமோ! இப்படி மனிதர்கள் கிடைப்பதே அரிதா? அரிதாவதால்தான் கடவுள் அவசிய மாகிறதா? நான் இந்த க்ஷணம் ஒரு நிம்மதியில், சந்தோ ஷத்தில் ஆழ ஆழ அமிழ்கிறேனே, இதற்கு யார் காரணம்? அகல்யாவா? அவளைப் பெற்றவரா? இப்படி உறவை இணைத்து வைத்த கடவுளா... யாருக்கு நான் நன்றி சொல்ல

வேண்டும்! சிவனுக்கு... விஷ்ணுவுக்கு... உருவமற்ற பிரகாசமான வெளிச்சத்திற்கு...?

நீட்ஷே சொன்னது அவன் நினைவில் ஓடிற்று.

'மனிதர்களால் ஏற்படும் சுகத்தை அனுபவித்துக் கொண்டு, கடவுள் என்பவருக்கு நன்றி சொல்வதா? மனிதனை நேசி, மனிதனைப் பாடு, மனிதனை வளர்.'

சிவசு கைக்கூப்பி தன்னைத் தொழுதான்.

அகல்யா காபியைக் கொண்டுவந்து அவன் எதிரில் வைத்தாள்.

''எனக்கு சர்க்கரை போட்டிருக்கியேமா.''

''வேணும்னுதாம்பா போட்டேன். நீங்க ஸ்வீட் சாப்பிட முடியாதே.''

''சரிம்மா!''

''வீடு சுத்திப் பார்க்கிறீர்களா?''

''போய் பார்த்துட்டு வாங்க தம்பி!''

பின் அறை, பிறகு அகலமான சமையற்கட்டு, வாழையும் குளஞ்சியும் முளைத்த கொல்லைப்புறம், பின் மாடிப்படி வழியே திறந்தவெளி, வெளிதாண்டி முன்பக்கம் பெரிய அறை, அறை வழியே தெரியும் வாசல் தார்சாலை, சின்ன பால்கனி, பால்கனி வழியே முன்பக்க மாடிப்படி.

மாடிப்படி வளைவில் அந்தப் பகல் வேளையிலும் படர்ந்த குளிர் இருட்டு. இருட்டு வளைவில் கைப்பிடிக்கு தடவ, அகல்யா அவனைத் தொட்டாள்.

''என்ன அகல்யா?''

''எங்கப்பாவைப் பிடிச்சிருக்கா?''

சிவசு சிரித்தான்.

''என்ன சிரிப்பு?''



''என்னைப் பிடிச்சுருக்கான்னு எங்கிட்ட இதுவரைக்கும் யாருமே சொல்லல, என்னை மட்டும் கேள்வி கேட்க றாங்க?''

''நான் சொல்லட்டுமா?''

''சொல்லேன்.''

''ஐ லவ் யூ சிவசு!''

''ஐ லவ் யூ போத் அகல்யா.''

''இப்பவே ஊருக்குப் போப்போறீங்களா?''

''மணியாச்சே அகல்யா!''

''நாளைக்குப் போகலாமே.''

''வாணாம், தப்பு!''

''என்ன தப்பு!''

''இப்படி இருட்டுல ஐ லவ் யூபோத்ன்னு சொன்னது கூட தப்பு!''

''சரி, சாப்பிட்டுட்டுப் போங்க ஊருக்கு.''

''வேணாம்! சாப்பிடற நேரத்துல பஸ்ஸ்டாண்ட் வரைக்கும் போயிடலாம். நீயும் வரையா பஸ்ஸ்டாண் டுக்கு?''

''நான் வரலைங்க.''


''ஏன்?''

''ஸ்டேஷன்ல - பஸ்ஸ்டாண்ட்ல பிரியறது ரொம்பக் கஷ்டமான விஷயம் சிவசு. வீடுன்னா உள்ளே வந்து சுருண்டு படுத்துக்கலாம். பிரிஞ்சவங்க நினைப்பாவே உருகி உட்காரலாம். பஸ்ஸ்டாண்ட்ல இது முடியாதே, ரெண்டு காலும் துவண்டுபோய் நடக்கறது வேதனை சிவசு.''

சிவசு சிரிப்புடன் அகல்யாவை ஊடுருவினான். ''நிஜம்மாவா?'' என்று அவள் விரல்களைத் தொட்டான்.

அகல்யாவுக்கு கால்கள் துவண்டன.

சிவசு தன் இரண்டு கைகளாலும் அகல்யாவைப் பிடித்து அவள் கண்களில் மெல்ல முத்தமிட்டான்.




**அ**கல்யா பஸ்ஸை விட்டுக் கீழே இறங்கினாள்.

எதிரே பசேல் என்று வயல் பரந்து கிடந்தது. தெருவுக்கும் வயலுக்கும் நடுவே ஓடை ஓடிற்று. ஓடை திருப்பத்தில் நீலமாய் ஆம்பல் படர்ந்திருந்தது. நாணல் மாதிரி நீண்ட புற்கள் வளர்ந்திருந்தன. வயலுக்கு நடுவே ஆட்கள் நகர்ந்து கொண்டிருந்தார்கள். பின்னால் பஸ்ஸிலிருந்து யூரியா இறங்க 'தொம் தொம்' என்று பஸ் பின்னால் எவனோ தட்டினான். பஸ் கர்ர் என்று உறுமிவிட்டு சோம்பலுடன் நகர்ந்தது.

''எங்க தொழுதூர் எப்படிப் போவணும்?''

''தொழுதூரா, அடுத்த ஸ்டாப்பு இல்லே. இங்கே இறங்கிப் போட்டீங்களே?''

''வரப்ப பார்த்தேனே, போர்டு போட்டிருந்ததே!''

''போர் பலகையா? ஊருக்கு முக்கா மைலுக்கு முன்னாடியா போட்டுட்டான். ஊரு எல்லைங்க அது. ஊரு உள்ளார இருக்குது.''

''அச்சா?''

''என்னாங்க?''

''ஒண்ணுமில்லே. சரின்னு சொன்னேன்!''

''தொழுதூர் போவணுங்களா?''



''ஆமாப்பா!''

''ஊசி போடறவங்களா?''

''இல்லப்பா.''

''சேப்பு முக்கோணமுங்களா?''

''சிவப்பு முக்கோணம், பாமிலி ப்ளானிங், பெண்கள் கூட பிரசாரம் செய்ய வருகிறார்களா என்ன?''

''ஆமாங்க.''

''இல்லேப்பா, பாரதி சைக்கிள் மார்ட் சிவசுப்ரமணியனைப் பார்க்கணும்.''

''அட, சிவசு தம்பிங்களா! வாங்க, நான் கூட்டிட்டுப் போறேன்.''

''இன்னொரு பஸ் வருமா?''

''வேணாம்! நடந்துடலாம்.''

''முக்கா மைல் சொன்னீங்களே!''

''அது ரோட்டுப் பாதை. வரப்போட போனா மூன்று நிமிஷம்! பின்னாடியே வாங்க.''

இரண்டு உர மூட்டையையும் தம்கட்டி தலையில் ஏற்றிக் கொண்டு அவன் ஓடையில் இறங்கினான். முழங்கால் ஆழத்தில் நின்றான். 'உப்' என்று மூச்சுப் பிடித்து மூட்டையுடன் கரையேறினான்.

அகல்யா அங்கேயே நின்றிருந்தாள். நீரின் ஆழம் தெரிந்த பிறகும் இறங்கப் பயமாய் இருந்தது. கரையேறியவன் மூட்டையை வரப்பில் வைத்துவிட்டு, ''வாங்கம்மா! இது தாண்டிட்டா பரபரன்னு பூடலாம். நேரா தென்னந்த தோப்பு தெரியுதே, அதான் தொழுதூரு'' தலைப்பாகையை அவிழ்த்து மறுபடி சரிவில் இறங்கி ஒரு முனையை அவளிடம் நீட்டி, ''ஏறிடலாம் வாங்க'' என்றான்.

''வாணாங்க, சுத்திக்கிட்டே வந்திடறேன்.''

''தம்பி கோச்சுக்கிடும். அம்மாவை வுட்டுட்டு வந்தி யாடான்னு சத்தம் போடும், வாங்க.''

அகல்யா செருப்பை எடுத்துப் பையில் வெளிப்புறம் வைத்துக்கொண்டாள். புடவையை இழுத்துச் சொருகிக் கொண்டாள். சரிவில் மெல்ல இறங்கி ஓடை நீரில் கால் வைத்தாள். சில்லென்று குளிர்ச்சி அடிவயிற்றைத் தாக்கிற்று. விரல்களை மடக்கி நெரித்து 'இடம் தெரியாமல் அவசரப் படாதே, சும்மா இரு' என்று உடம்பை அதட்ட வேண்டி யிருந்தது. மெல்ல காலை நீருள் நகர்த்த, வழவழப்பான களிமண் நெகிழ்ந்தது! மேலும் நகரப் பயமாய் இருந்தது. உர மூட்டைக்காரன் சரிவில் இறங்கி தண்ணீர் விளிம்பில் நின்று ஒரு முனையை கைநீட்டி அகல்யாவிடம் கொடுத்துவிட்டு மறுமுனையுடன் மறுபடியும் சுலபமாய் மேடேறினான். சட்டென்று இழுத்தான்.

அகல்யா இரண்டே எட்டில் மேடேறி அவன் மீது மோதி நின்றாள். நின்ற வேகத்தில் திசை தெரியாமல் அவன் காலை மிதித்தாள்.

''மாப்கரோஜி'' என்றாள்.

''துலுக்கருங்களா?''

''இல்லேப்பா! ஏன்?''

''உருது பேசறீங்களே?''

''உருது இல்லைப்பா... இது ஹிந்தி.''

''வாங்க போகலாம்.'' அவன் உர மூட்டைகளை மறுபடி தலையில் தூக்கிக்கொண்டான். அகல்யா திரும்பி ஓடை நீரைப் பார்த்தாள். இறங்க வேண்டும் போலிருந்தது. இறங்கி மறுகரை போய் மறுபடி இறங்கி தானே மேலே ஏற வேண்டும் போலிருந்தது. சற்று தூரம் ஓடை நீரோடு கூடவே நடக்க வேண்டும்போல தோன்றிற்று. எவ்வளவு



சிறிய ஓடை.... எதற்கு இவ்வளவு பயந்தேன் என்று கேள்வி வந்தது. 'வாணாம்பா! நான் சுத்து வழியிலே வரேன்!' மறுபடி ஓடையில் இறங்கி எதிர்கரை போய்விடலாமா? அவன் சரி என்று நகர்ந்தால் மறுபடி ஓடையில் இறங்கி அதோ அந்தத் தென்னந்தோப்பு ஊருக்கு வரப்போடு நடந்துபோய் விடலாமா? வேண்டாம், வழியில் இன்னொரு ஓடை யிருந்தால், அது இதைவிட ஆழமாய் இருந்தால், எத்தனை ஆழம் என்று தெரியாமல் போய்விட்டால்...

''இப்ப தண்ணீ போக்கு குறைவுங்க. கார்த்திலே மார் ஆழம் போவும். அப்போதைக்கு நாங்களெல்லாம் இங்கன இறங்கித்தான் வருவம். போவலாங்களா? காலு பார்த்து வாங்க.''

வயல்களுக்கு மத்தியில் வந்ததும் அகல்யா கன்னத்தைப் பொத்திக் கொண்டாள். கை உயர நெற்பயிர்கள் காற்றில் குழந்தைகளாய் அசைந்தன. முசுமுசுவென்று சப்தமிட்டன. காற்று வருடிப்போக குனிந்து மீண்டும் நிமிர்ந்தன. அகல்யா வின் மனசுக்கு உடனே ஒரு ப்ளாக் போர்டு தேவைப் பட்டது. 'எல்லோரும் இங்க கவனிங்க' என்று சொல்லி சாக் நுனியை உடைத்து உடனே அங்கே ஒரு பாடம் ஆரம்பிக்க வேண்டும் என்று தோன்றிற்று. அப்பா இது எவ்வளவு பெரிய வகுப்பறை? வகுப்பறையா, இல்லை ஹால் - ப்ரேயர் ஹால். அகல்யா கையசைக்க, அத்தனை குழந்தைகளும் பாடும்! கைகூப்பிக் கண்மூடிப் பாடும்.

*நீராடும் கடலுடுத்த*
*நிலமடைந்த எழில் ஒழுகும்*

அப்பா இவள்தான் நிலமடந்தையா? பசேல் என்று இருக்கும் நிலமடந்தையா. காற்றில் அசைந்து அவள் கால் விளிம்பைத் தொட்ட ஒரு வளைந்த கதிரை நிமிர்த்தி ''ஹலோ'' என்றாள். 'இது ஒரு விதைத் தாவரம். வாழையைப் போலவே இதன் சகல பாகங்களும் நமக்குப்

பயன்படுகின்றன. அரிசியை உணவாகவும் அதன்மேல் தோலான உமியை எரிபொருளாகவும், தழை போன்ற இலைப் பகுதியை கால்நடைக்குத் தீனியாகவும் பயன் படுத்துகிறோம். அரிசி இந்திய மக்களின் முக்கிய உணவுப் பொருளாய் இருக்கிறது.'

''உருவிடாதீங்க, உருவிடாதீங்க. ஆள் பார்த்திட்டே யிருக்கு.''

''இல்லப்பா, வெறுமன பார்த்தேன்.''

''அறுப்பு அறுத்தர வேண்டிதாங்க, தண்ணீ இறுக காத்திட்டிருக்குது! காஞ்சா அறுத்துப்புடுவாங்க.''

வகுப்பறை பளிச்சென்று கலைந்து போயிற்று. வெறும் பொட்டல் நிலம் மனசுள் எஞ்சியது. அகல்யா அவனுடன் நடந்தாள்.

வயலைத் தாண்டி ஊர் ஏறியதும் மறுபடி திரும்பிப் பார்த்தாள்.

நான் வர்ர வரைக்கும் யாரும் இடத்தைவிட்டு நகரக் கூடாது. வகுப்பறையிலேயே உட்கார்ந்து படிச்சிக்கிட்டு இருக்கணும்!

நெற்கதிர்கள் எப்படி நகரும்? இடம்விட்டு இடம் எங்கே ஓடும்? ஓடி ஓடி மனிதர்கள் மாதிரி ஏன் லோல்படும்? தாவரங்கள் மனிதர்களை விட மேம்பட்ட பொருளோ? அலைக்கழிய வேண்டிய அவசியமில்லையோ?

கரோல்பாக்கிலிருந்து சென்னைக்கு ஓடிவந்து, சென்னையிலிருந்து செங்கல்பட்டுக்கு பஸ் ஏறி, வரப்பு கடந்து, தோப்பு தாண்டி, மணல் அரைபட நடந்து நான் யாரைத் தேடுகிறேன்? ஏன் மறுபடி தேடுகிறேன்? நான் நானாய் தனியாய் இருந்துவிட்டுப் போகாமல் ஏன் துணைக்கு ஆள் தேடுகிறேன்? திரும்பிவிடலாமா? ஆள் இல்லை என்று அப்பாவிடம் சொல்லிவிடலாமா? அப்பா



என்ன செய்வார்? நானே போய்ப் பார்க்கிறேம்மா என்று கட்டையை இடுக்கி நொண்டி நொண்டி வண்டியேறி... இந்த வரப்பில் அப்பாவால் எப்படி நடக்க முடியும்? வேண்டாம் போய் பார்த்துவிடலாம். அப்பாவின் பிடிவாதத் திற்காகப் பார்த்துவிடலாம். நான் பார்த்து முடிந்து விடுமா இது?

''நீங்கதான் சிவசுப்பிரமணியமா?''

''நான்தான் அந்த இது. விடோ'' என்று சொன்னவுடன் ஆள் அதிரப்போகிறான். வெட்கப்பட்டு உள்ளே போய் வீட்டில் உள்ளவர்களைப் பேச அனுப்பப் போகிறான். இப்படி விளம்பரம் கொடுத்தவன் வெட்கப்படுவானா?

''மாறிவரும் சமுதாயம் பற்றி பிரக்ஞை உள்ள இளை ஞனான நான், ஒரு இளம் விதவையை முழுமனதுடன் திருமணம் செய்துகொள்ளத் தீர்மானித்திருக்கிறேன். என் உறவுகள் இதற்கு உறுதுணையாய் நிற்க வாக்களித்திருக் கின்றனர். என் வயது முப்பது. தொழில் விவசாயம். வாடகை சைக்கிள் நிலையம். படிப்பு பி.ஏ. பொருளாதாரம். மிகவும் விருப்பமுள்ள விஷயம், சமூக சேவை, கவிதை. உயரம் ஐந்தடி ஒன்பது அங்குலம். மாநிறம். தொடர்பு முகவரி சிவசுப்ரமண்யம், தொழுதூர் கிராமம், செங்கல்பட்டு மாவட்டம், அடைப்புக் குறியில் 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்று எழுதியிருந்தது! பத்து நாட்கள் முன் வந்த, காலைப் பேப்பரில் இந்த விளம்பரம் படிக்கவே அதிசயமாய் இருந்தது. ஒளிவுமறைவின்றி கையிலிருக்கிற அத்தனை சீட்டையும் எதிராளியிடம் காட்டும் வெகுளித்தனம் தெரிந்தது. லேசாய் ஒரு கவிதையின் நெளிவு மனசுக்குப் பட்டது! தன் திருமணம், தன் காரியம் என்கிற உறுதி அதில் தெளிவாயிற்று. உறவுகள், உறுதுணையாய் நிற்க வாக்களித் திருக்கின்றனர் என்கிற வரி, வில்லங்கம் ஏதுமில்லை என்று உறுதி சொல்லிற்று.

இந்த விளம்பரம் கொடுத்தவனா வெட்கப்படப் போகிறான்? நான் ஒரு விடோ என்று சொன்னால் அதிரப் போகிறான்? இல்லை... இருக்காது பார்ப்போம் -

''சிவசு தம்பியைக் கண்டீங்களா, இவக தேடிக்கிட்டு வந்திருக்காங்க. பட்டணம் போல. பஸ்ஸை புடிச்சி வரப்பாண்ட இறங்கிட்டாங்கபோல. கூட்டியாறேன்.''

''சிவசா? கோவில்ல விளக்கு போடப்போயிருக்கில்ல, தம்பி கடையில உட்கார வையி. கூட்டியாந்துடலாம்.''

''கோயில் ரொம்ப தூரமாங்க?''

''ஊரே- மொத்தம் பதினைஞ்சு ஏக்கரு. இதில தொலைவு என்னாங்க. இங்கிட்டிருந்து குரல் கொடுத்தா கோயிலு.''

''மாவிளக்கு போடறாரா?''

''இல்லிங்க! காத்து பட்டு கோயில் லைட்டு வுழுந்திடுச்சு. தம்பியே ஒயரு இழுத்து கரண்டு லைட்டு போடுது. குழந்தைங்க பாட்டு படிக்கிறது, ஊர்ப் பஞ்சாயத்து நடக்கறது எல்லாம் கோயில்லதாங்க.''

''கோவிலாண்ட போயிடலாமா?''

''அதோ கோபுரம் தெரியுதே அதான். கோவிலுக்கு நீங்க போங்க, நான் மணியக்கார் மூட்டையைப் போட்டுட்டு வரேன். திரும்பறச்சே ரோட்டு மேலேயா போய்டுங்க.'' வழிகாட்டியவன் இடப்பக்கம் பிரிந்தான்.

அகல்யா தெருவில் நடந்தாள், மென்மையான புழுதிமண் காலில் அழுந்திற்று! இரண்டு பக்கம் ஓட்டு வீடுகள். பெரிய திண்ணைகள்! மாக்கோலங்கள்! திண்ணையில் வீட்டுக்கு வீடு கிழவர்கள், முதிர்ந்த பெண்கள்.

''யார்டாது? டேய் பெரிய கருப்பா!''

''பட்ணமுங்க! சிவசு தம்பிய தேடறாங்க.''

''ஆஸ்பத்திரி ஆளா?''



''இல்லைங்க! கேட்டேன், தம்பிய நேரா பார்க்கணும்னா போல.''

தெரு முழுக்க 'சிவசு சிவசு' என்று உச்சரிப்பது அகல்யாவுக்குக் கேட்டது.

உறவுகள் இதற்கு உறுதுணையாய் நிற்க வாக்களித்திருக்கின்றனர். ஊரும் வாக்களிக்குமா? வாக்களித்திருக்கிறதா?

''சிவசு தம்பி அறுத்துப்போனவளை கட்டிக்கறாப்போல! நாளைக்குக் கல்யாணம் போல!''

''மாடும் கன்னுமா? இல்ல மாடு மட்டுமா?''

''மாடு மட்டுந்தான் போல.''

''போவட்டும் போ! ஊட்டுப் பொம்பளைய இந்தக் கல்யாணத்துக்கு கூட்டிப்போக முடியாது. நாம மட்டும் கதர் சட்டை மாட்டிக்கிட்டுப் போய்ட்டு வந்துடலாம்.''

''அது கூட வாணம்கறேன்! மஞ்சா கார்டு வாங்கி 'வாழ்க மணமக்கள்' எழுதி போட்டுருலாம்.''

''அதுவும் சரிதான்!''

எதிர் எதிர்த் திண்ணைகள் இப்படித்தான் பேசுமா? திரும்பிடலாமா?

கோவில் வாசலில் ஒரு கிழவன் வெற்றிலைப் பாக்கை கருங்கல்லால் நசுக்கிக் கொண்டிருந்தான்.

பெயரைச் சொன்னதும் எழுந்து கோவில் நடைக்குள் நுழைந்து வலப்பக்கக் கதவுக்குப்பின் பின் இருட்டாய் இருந்த இடத்தை நோக்கி ''தம்பி?'' என்று குரல் கொடுத்தான்.

''வந்திட்டேன்!''

கணீரென்று குரல் கேட்டது. குரல் இளமையாய் இருந்தது. டார்ச் விளக்கொளி அலைவது தெரிந்தது. டொப்

பென்று பெட்டி மாதிரி எதையோ அடித்து மூடுவது கேட்டது.

"பெரியவரே, விளக்கெரியுதா பார்?" மீண்டும் குரல் வந்தது.

பளீரென்று அந்தப் பகல் நேரத்தில் கோவிலைச் சுற்றி ட்யூப் லைட்டுகள் எரியத் துவங்கின.

## 5

நடைவிளக்கு நான்கு தரம் மினுக்கி மினுக்கி பளீரென்று ஒளியை உமிழ்ந்தது.

கோவில் கதவு குமிழ்களில் கால் வைத்து மணிகள் குலுங்க, ஓர் இளைஞன் இறங்கினான்.

அடர்ந்த தலைமுடி, கனமான மீசை, பெரிய கண்கள், வளைந்த கீழுதடு, வெள்ளைப் பற்கள், மாநிறம்! பெரிய தோள்கள், வெள்ளைப் பனியன், நீலமும் ப்ரெளனும் கலந்த லுங்கி, கரணைக் கால்கள்.

"கொஞ்ச நேரம் எரியட்டும். மணியக்காரர்கிட்ட காட்டிட்டு மெயினை அணைச்சிடு. ஐயராண்ட கேளு, 'மடப்பள்ளி லைட் சரியா இருக்கான்னு! நா வந்து பல்பு துடைச்சுப் போடறேன்னு சொல்லு. இதுக்குப் போய் நூறு ரூபாய் எலக்ட்ரிசியன் கேட்டாக் கொடுத்திடறதா? பத்து ரூபாய் ஒயர்ல முடிஞ்சுப் போச்சு அத்தனையும்! என்னைத் தேடிக்கிட்டா? ஆளா? யார்ப்பா அது? அம்மாவா? வாங்க, நான்தான் சிவசுப்ரமணியம். நீங்க... யாரு... நிழலா வாங்க?" கைகூப்பினான்.

அகல்யா நிழலில் ஒதுங்கினாள். கைகூப்பினாள். தயங்கினாள். தலையைக் குனிந்து கொண்டாள். இவ்வளவு



இளைஞனாக இருக்கிறானே! முப்பதா, முப்பத்தி இரண்டா?

"நான்... என்... பேர்" முடிக்கும் முன் அவளை அவன் கூர்மையாகப் பார்த்தான். "பேப்பர் விளம்பரம் பார்த்துட்டு வந்திருக்கீங்களா? வாங்க. வீட்டுக்குப் போய்ப் பேசலாம். பெரியவரே, என் சட்டையை எடுத்துக் கொடுங்க." மெல்லிய நீலச் சட்டைக்குள் நுழைந்து கொண்டான். அவளைச் சுற்றி நடந்து சுவரோரம் உள்ள செருப்புகளில் கால் நுழைத்து முன்னே நடந்தான்.

இவன் வீட்டிலும் திண்ணை இருந்தது! ஒரே ஒரு திண்ணை. இன்னொரு திண்ணை இடித்துக் கடையாக்கி 'பாரதி மிதிவண்டி நிலையம்' என்று எழுதியிருந்தது! பலகையில் மீசைக் கவிஞன் படம் எழுதியிருந்தது!

திண்ணையைத் தாண்டி நடை. நடை தாண்டி முற்றம். முற்றத்துக்கு வலப்பக்கம் பெரிய ஹால். நடுவே பெரிய மனிதர் படம். டர்பனும் கோட்டும், அங்கவஸ்திரமும். "அது எங்க அப்பா சிவநேசம்பிள்ளை, நான் அவர் மகன் சிவசுப்ரமணியம். உங்க பேர்?"

"அகல்யா."

"நீங்க"

"விடோ!"

"என்ன சாப்பிடறீங்க? மோர் கொண்டாரச் சொல்லட்டுமா?"

"வீட்டில பெரியவங்க யாரும்..."

"நான்தான். எங்கம்மா இருக்காங்க, அதிகமாகப் பேச மாட்டாங்க! அதிகம் என்ன, என்னைத் தவிர வேறு யார்கிட்டேயும் பேசறதில்லை. அப்பா போன பிறகு பேச்சுக் குறைஞ்சுப் போச்சு. உங்களுக்கு என்கூடப் பேசறது சிரமமா இருக்கும்னா அம்மாவைக் கூட்டிட்டு வர்ரேன்."

''வேணாம்! நீங்கதான் சிவசுப்ரமணியம்னா உங்களோடதான் பேசணும். எம்பேரு அகல்யா! அவரு யுத்தத்துல இறந்துட்டாரு! நாலு வருஷமாச்சு. எங்கப்பாவுக்கு நடக்க முடியாது. ஒரு கால் இல்லை. சர்க்கரைக் கட்டி, எடுத்துட்டாங்க. வேற யார் துணையும் இல்லை. அதனால நானா வந்தேன். அம்மா தப்பா நினைச்சுக்கப் போறாங்க. தனியா வந்திருக்கேனேன்னு. வேற யாரும் கிடையாது. விளம்பரம் தெளிவா இருந்துச்சு. அப்பாதான் போய்ப் பார்க்கச் சொன்னாங்க, வந்தேன். தொழுதூர் இவ்வளவு சின்னக் கிராமம்னு தெரியலை...'' அகல்யாவுக்கு மூச்சு இறைத்தது.

அவன் மெல்லச் சிரித்தான்.

''ஊர்தான் சின்னது! எல்லாருக்கும் நல்ல மனசு, பயப்பட வேண்டாம்.''

''சிவசு தம்பி தேடிக்கிட்டு வந்தாங்களே, வந்திட்டாங்களா?'' வெளியே குரல் கேட்டது.

''என்ன பெரிய கருப்பா?''

''மணியக்காரு கோவிலு லைட்டு செலவுக் கேட்டுட்டு வரச் சொன்னாரு தம்பி.''

''ஒண்ணுமில்லேன்னு சொல்லு!''

''சரி தம்பி வரட்டுங்களா!''

''ஒயருக்குப் பத்து ரூபா ஆச்சுன்னீங்களே'' அகல்யா நினைவூட்டினாள்.

''அடடே கவனிச்சீங்களா! என் செலவா இருக்கட்டும்னு தான் வேணாம்னேன்.''

''சிவன் கோவிலா?''

''ஆமாம். அது கோவில் மட்டுமில்லை; ஒரு கம்யூனிடி சென்டர் கூட. அதான் காசு வேணாம்னு சொல்லிட்டேன்.''

''ஏன் இது டொனேஷனா?''



''இதை டொனேஷன்னு சொல்லலாமா? எல்லாம் ஒரு சந்தோஷம்தான். உள்ளுக்குள்ளே நம்மைத் தட்டிக் கொடுக்கிற காரியம்தான். நம்ம சிவசு லைட் போட்டுச்சு கோவிலுக்குன்னு பேசறப்போ, மறுபடி வேற எங்க லைட்டு போவும்னு புத்தி போறது உண்டு. இதை டொனேஷன்னு எப்படி சொல்ல?''

அகல்யா குபீரென்று சிரித்தாள். விரல்களை வாயில் அழுத்தி சிரிப்பைப் பாதியில் நிறுத்தினாள்.

விழியோரம் சிரிப்பு மினுமினுக்க உட்கார்ந்த அகல்யாவை சிவசு உற்றுப் பார்த்தான். தன் பதில் தனக்கே சிரிப்பு மூட்ட அவனும் மெல்லச் சிரித்தான்.

கூடத்தின் வெளிச்சத்தை சட்டென்று ஒரு நிழல் மறைக்க, எழுந்திருந்தான். ''அம்மா வராங்க'' என்றான்.

''செத்த முன்ன சிரிச்சியா சிவசு!''

''நா இல்லமா.''

''தெரியுது. யார் அதுன்னு கேட்கறதுக்கு பதிலாதான் சிரிச்சியான்னேன்.''

''என்னைத் தேடிக்கிட்டு வந்திருக்காங்கம்மா, பேரு அகல்யா!''

''அம்மாவா?''

'இவள்தான் சிவசு அம்மாவா?'

பளீரென்று ஒரு பயம் வயிற்றில் வெட்டியது.

அந்த உயரத்திற்கு, சிவப்பிற்கு, மெலிந்து முறுகி, முதிர்ந்த திண்மைக்கு, பெரிய கண்களுக்கு, தும்பைப் பூ நரைக்கு, புடைவை சுற்றின பாந்தத்திற்கு, மெல்லிய உதடுகளுக்கு சகலமானதுக்கும் பயம் ஏற்பட்டது.

அகல்யா முழங்கால்களை ஒருமுறை சேர்த்துக் கொண்டாள்.

தூணைப் பிடித்துக்கொண்டு கிழவி அகல்யாவை வெறித்துப் பார்த்தாள். திரும்பி மகனைப் பார்த்தாள்.

''கோயில்ல விளக்கு போட்டியா?''

''ஆச்சும்மா! இவங்க அகல்யா. பட்டணத்துலேர்ந்து வராங்க. விளம்பரம் பார்த்தாங்களாம்.''

''நெத்தில என்ன சாந்துப் பொட்டா?''

அகல்யா மெலிந்த குரலில், ''ஆமாம்'' என்றாள்.

''சரி, பேசிப் பார்த்து புடிச்சிருந்தா பண்ணிக்க. தாகத்துக்குக் கொடுத்தியா?''

''மோர் குடுத்தேன்.''

''அவுங்களைப்பத்தி விவரமாச் சொல்லு'' ஹாலில் மாட்டியிருந்த பெரிய போட்டோவைக் காட்டினாள்.

''உட்காருங்க, நிக்கிறீங்களே!'' சிவசு அகல்யாவிடம் பேசினான்.

கிழவி மெல்ல முற்றம் இறங்கி சூரியனைப் பார்த்துவிட்டு நடைவழியே நகர்ந்து மறைந்தாள்.

''நான் மட்டும்தான் கேள்வி கேட்கறேன்! நீங்க ஒண்ணும் கேட்கவேயில்லையே! உங்க அப்பா பத்தி, அவர் பத்தி சொன்னீங்க, கஷ்டம்தான், சின்ன வயசுல ரெண்டு பெரிய சோதனை உங்களுக்கு. எங்க பி.டி. முடிச்சீங்க?''

''லேடி வெலிங்டன். மெட்றாஸிலதான்.''

''படிப்பு முடிஞ்சி உடனே கல்யாணமாயிடுச்சா?''

''ஒரு வருடம் டெம்பரரியா வேலை பார்த்தேன். அதுவும் மெட்றாஸிலதான்.''

''பம்பாயில் வேலை கிடைக்கலியா?''

''ட்ரை பண்ணலே. வேணாம்னுட்டாரு. வீட்டோடயே இருந்தேன்.''



''குழந்தைங்க?''

''ஒரு ஸ்டில் பார்ன் பேபி. இறந்தே பிறந்த குழந்தை.''

''அடடே!''

''அதுதான் எனக்கு ரொம்ப கஷ்டமாயிருச்சு.''

''புரியுது! நியூஸ் ரிப்போர்ட்டர்னா ரொம்பப் படிப்பு படிச்சிருப்பாரில்லையா?''

''இல்லை. எஸ்ஸெல்சிதான். ஆனா கெட்டிக்காரர்னு சொல்லுவாங்க வேலைல.''

''பாடி கூட கிடைக்கலையா?''

''இல்லை. சட்டையும் பேண்ட்டும் சலவை பண்ணி கொண்ணாந்து கொடுத்தாங்க.''

''இப்பத்தான் பாகிஸ்தானோட சமாதானமாயிட்டோமே, விவரம் கேட்கலியா?''

''கேட்டோம். அவர் செத்துப் போனதை 'கன்பார்ம்' பண்ணிட்டாங்க.''

''அடடே! வீர... என்ன பட்டயம் மாதிரியா மெடல் காசு?''

''ஆள் போயிட்ட பிறகு காசு என்ன, மெடல் என்ன? உங்கம்மா ஒண்ணும் பேசவேயில்லையே?''

''அவ்வளவுதான். அவுங்க பேசினதே அதிகம். வழக்கமா ஒரு வார்த்தைகூடப் பேசமாட்டாங்க.''

''ஏன்?''

''ஏன்னு எனக்குத் தெரியல. அவங்களா எனக்குச் சொல்லலே. ஆனா எனக்கு ஓர் ஊகம் இதுதான்னு. எங்க அம்மா அப்பாவோட நல்லா வாழ்ந்தவங்க. அப்பா பிள்ளை, அம்மா வந்து...''

''ம்... ம்... ம்... இன்னும் மோசம். அது மேரேஜ்கூட இல்லை. வாழ்க்கைதான். வைப்பாட்டின்னு வெச்சுக் கங்களேன்! அம்மா கோவில்... புரியுதுங்களா?''

இல்லையென்று அகல்யா தலையசைத்தாள்.

''தாசின்னு சொல்வாங்க, அம்பது வருடத்துக்கு முன்னே! ஆக, அம்மா ஆடமாட்டேன்னுட்டாங்க. ரொம்பத் தொந்தரவு வீட்ல. வற்புறுத்திருக்காங்க. அம்மா ஓடிவந்து எங்க அப்பா கால்ல விழுந்து அழுதுதாம்! அப்ப அப்பாக்கு கல்யாணமாகி மூணு பசங்க. வேற வழி தெரியலை. நானே கட்டிக்கிறேன்னு சொல்லிட்டாரு! அப்பாவை யாரும் எதிர்க்க முடியலை. கசமுசன்னு பேசினாங்களாம். தள்ளி வெச்சிடுவோம்னாங்களாம். எல்லாத்தையும் கடைசி வரைக்கும் நின்னு இதே ஊர்ல வீடு வாங்கி அம்மாவை வெச்சி குடித்தனம் நடத்தி நா பொறந்த பிறகுதான் ஒரு மாதிரி சரியாச்சி.''

''ஒரு கேள்வி. இதனாலேதான் விடோ மேரேஜ்ன்னு முடிவெடுத்தீங்களா?''

''இல்லீங்க. இப்படி கேள்வி வரும்ன்னு தெரியும். இந்த ஊர்லேயே பொண் கொடுக்க ஆள் இருந்தது. இன்னமும் இருக்கு. நானும் பெரியம்மா வீட்டுக்குப் போய்விடுவேன். ஒரு கஷ்டமும் இல்லீங்க! எங்கப்பா துணிஞ்சு ஒரு பொண்ணுக்குக் கை கொடுத்த மாதிரி, நானும் செய்ய ஆசைப்பட்டேன். அம்மாகிட்டே கேட்டேன். ''நல்லா செய் சிவசு''ன்னுட்டாங்க. அதான் இப்படி முடிவெடுத்தேன்.''

''ஊர் ஒண்ணும் சொல்லாதா?''

''சொல்லாது. அப்பாவுக்கு இங்க நல்ல பேரு. இந்த ஊர், ஊரா இருக்கறதுக்கும் அப்பாதான் காரணம். நாப்பத்து ஆறுல தன் காசு ஆயிரம் செலவு பண்ணி தன் தோள்ல சிமிண்ட் கம்பம் தூக்கி ஊருக்கு மின்சாரம் கொண்ணாந்தாரு. பொதுக் கிணறு தோண்டினாரு. அந்தக் கோயிலு சுவர் அவர் கட்டினது. சாகற வரைக்கும் ஊர்ல ஒரே ஆம்பிளையா அவர் இருந்தாரு. அப்புறம் எனக்கு இப்ப உறவுன்னா அம்மாதான்! கசமுசன்னு பேச, விழுந்து மறிக்க, ஆள் கிடையாது.''



CPL 665152

665152

''சரி, பொண்ணுக்கு வாழ்வு கொடுக்கறதுன்னா விதவா விவாகம்தானா? ஏழைப் பொண்ணு பார்த்து நல்லபடியா கல்யாணம் பண்ணிக்கக் கூடாதா?'

894.8113
B86

''ஏழைப் பொண்ணுக்குகூட கல்யாணம் ஆயிடுங்க. விதவைக்கு ஆறது இந்தத் தேசத்துல சிரமம் இல்லையா?''

''இந்த விளம்பரம் ஊருக்குத் தெரியலை போலிருக்கே!''

''பேசிட்டுத்தான் கொடுத்தேன். மணியக்காரரு எங்க அப்பாவுக்கு ரொம்ப ஸ்நேகிதம். யோசனை பண்ணு, யோசனை பண்ணுன்னு பலமுறை சொன்னாரு. ஆறு மாசம் கழிச்சு மறுபடி போய் விளம்பரம் பத்தி சொன்னேன்! சரின்னுட்டாரு.''

''ஏன், உங்க பேரு கடைக்கு வைக்கலை. பாரதின்னு வைச்சிருக்கீங்க?''

''சிவநேசன் பிள்ளை எனக்கு மட்டும்தான்! இன்னும் மூணு நாலு பேருக்குத்தான் அப்பா. பாரதி படிச்சிருக் கீங்களா?''

''படிச்சிருக்கேன்.''

''எனக்கு ரொம்ப பைத்தியங்க அவர்மேல. என்னை ரொம்ப மாத்தினவரும் பாரதிதான். அப்புறம்...''

''அப்புறம்?''

''நிறைய ஃபிலாஸஃபி படிச்சேன்.''

''தொழுதூர்லேயே இருந்துட்டா?''

CONNEMARA PUBLIC LIBRARY
5 - FEB

''கிட்டத்துல செங்கல்பட்டு லைப்ரரிக்குப் போவேன். மதுராந்தகம் போவேன். மாசம் ரெண்டு தடவை மெட்றாஸுக்கு எல்லா லைப்ரரியும் போவேன்.''

''சைக்கிள் கடை ஏன்? வேலைக்குப் போகலையா?''

''வேணாம்னு தோணிச்சு. வருமானம் வயல்லேர்ந்து வருது. குத்தகை விட்டிருக்கிறோம். சைக்கிள் கடை வெச்சா ஊருக்கு உபகாரமா இருக்கும்னு பட்டது.''

''உபகாரமே தொழிலா?''

''அப்பா இப்படித்தான் இருந்தாரு! அவரு இப்படி அம்மா பத்தி ஒரு முடிவுக்கு வர, அவர் வருமானம் காரணம். நான்கூட வெறும் குமாஸ்தா வேலைதான் கதின்னு இருந்தா இப்படி முடிவு பண்ணியிருக்க மாட்டேன்.''

''புரட்சிக்கும், வருமானத்துக்கும் சம்பந்தம் உண்டா?''

''கொஞ்சம் உண்டுங்க! மிதமா பணம் இருக்கிறது நல்லது. அது துணிச்சலைக் கொடுக்கும். ஒட்டி வாழற நிர்ப்பந்தம் இல்லாது போகும்.''

''பணம் துணிச்சலைக் கொடுக்கும்னா பெரிய எடத்துல பொண் எடுத்து நிறைய காசு பண்ணி...''

''என்ன செய்யப் போறேன்! கள்ளக் கணக்கு எழுதி கவர்மெண்டை ஏமாத்தி, ராத் தூக்கமில்லாம அலைஞ்சு, சேர்த்ததை எல்லாம் வெங்கடாஜலபதி உண்டில போய் போட்டுடுவேன். பணம் கொண்டவன் ஹிம்சையைக் கண்ணாலப் பார்க்கலையா. காசு அளவோடு இருக்கறது தான் நல்லது. நாகரீகம் கூட.''

''உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை உண்டா?''

''தெரியலீங்க! இப்போதைக்கு அதுபத்தி யோசிக்கலை. முரட்டுத்தனமா எதிர்க்கவும் இல்லை. சாமி சாமின்னு ஆடறதும் இல்லை. கடவுளைவிட மனுஷாளை பிடிச்சிருக்



குங்க. மனுஷா மேல நம்பிக்கை இல்லேன்னா கடவுள் தேவைப்படுமோ என்னமோ!''

''நமக்கு மேல ஒரு சக்தி இருக்கிறது!''

''தெரியுது. என்ன செய்யலாம் அதுக்கு? அந்த சக்தி நம்மோட பேசறது இல்லை. நம்மைக் கேட்டுக்கிட்டு காரியம் செய்யலை. 'அதுவா -' சில சமயம் நமக்கு நடுவுல இறங்குது! சரின்னு மேற்கொண்டு நகர வேண்டியதுதான்.''

''வழிபாடுங்கறது?''

''மனது தைரியத்தைப் பொறுத்தது. ஒருவித பயம் தான் பக்தி. இருட்ல வாசப்படியாண்ட நின்னு வானத்தைப் பார்த்தா இத்தனை நட்சத்திரத்துக்கு யார் சோறு போடறான்னு தோணும். சரட்டுன்னு எதிரே ஒரு நட்சத்திரம் சரியறதைப் பார்த்தா நம்ம தரை என்னைக்கு நழுவும்னு தோணும். நழுவிட்டான்னு ஒரு பயம் வரும். நழுவாம இருக்கணுமேன்னு நெஞ்சுல கைவெச்சுப் பயப்படறமே, அதுதான் வழிபாடு. நம்ம பயம் நடக்க வேண்டியதை இல்லேன்னு ஆக்கிடுமா?''

'ம்ம்மா... எவ்வளவு தெளிவாய் இருக்கிறான். எத்தனை திடமாய் பேசுகிறான். இவ்வளவு தெளிவுள்ளவனோடு குடித்தனம் பண்ணுவது எளிதா? சரஸ்வதி பூஜைன்னு புஸ்தகங்களை அடுக்கி ரவிவர்மா எழுதின படத்தை வைத்து 'யாகுந்தேந்து துஷாரஹாரதவளா' என்று கண்மூடிப் பாட்டுப் பாடுகையில் பின்னால் இவன் கைதட்டிச் சிரித்திருப்பான். 'நீ போய்ட்டு வா. நான் வெளியே பேப்பர் படிச்சுக்கிட்டிருக்கேன்' என்று கோவில் வாசலில் பிரிந்து விடுகிறவனை காதலிக்க முடியுமா? நாத்திகம் என்பது ஆண் விஷயமோ? அதிகமான ஆண்மையோ? கொஞ்சம்கூட பெண்மை கலவாத நெகிழ்வு. வரவே வராத முரட்டு மனதா? இப்படி ஒரு முரட்டு மனசு மற்றவர் மனதை எப்படிப் புரிந்து கொள்ளும்? பிறர் உணர்ச்சியை எப்படி மதிக்கும்?

சகலத்துக்கும் தான் என்கிற கர்வத்தில் மிதக்கிற மனிதன் செவி கொடுத்து பிறர் வார்த்தையை எவ்விதம் கேட்க முடியும்?

## 6

**"ரொ**ம்பப் பேசி பயமுறுத்திட்டேனா?" சற்றே நகர்ந்து கூர்மையாய்ப் பார்த்தபடி கேட்டான்.

"இது பத்தி கேட்டாலொழிய நான் பேசறதில்லீங்க. இது இந்தப் பேச்சு யாருக்கும் பிடிக்காது. திமிருன்னு உடனே தோணும். திமிர் இல்லீங்க இது. வாழ்க்கைங்கறது கஷ்டம் தான்னு ஒத்துக்கிட்ட பிறகு வர தெளிவு இது. கேட்டுட்ட பிறகு மழுப்பாம தெளிவா பதில் சொல்றதுதான் நல்லது."

"ஸாரி! நானும் இன்டர்வியூ மாதிரி கேட்டுட்டேன்."

"நன்றிங்க" சிவசு கைகூப்பினான்.

"எதுக்கு?"

"சட்டுன்னு புரிஞ்சுகிட்டீங்களே!"

"வேற என்ன பேசறதுன்னு தெரியலை."

"வாஸ்தவம். முதல்ல அடிப்படையாதான் கேள்வி கேட்கணும். போகப் போகப் புரிஞ்சிக்கலாம். பேசப் பேச தெளிவாயிடலாம்."

"மேற்கொண்டு பேசலாம்னு சொல்றீங்களா?"

சொடுக்கு நேரம் சிவசு சட்டையின் விளிம்பைப் பிடித்த படி வெட்கப்பட்டான்.

"தைர்யமா இருக்கறவங்களைப் பிடிக்குங்க எனக்கு. நீங்க கூச்சப்பட்டா நானும் கூச்சப்படணும். தயங்கணும். புரியு மோன்னு கவலைப்படணும். புண்படுத்தக் கூடாதுன்னு



ஜாக்ரதையோட இருக்கணும். இப்படியே போச்சன்னா எதுக்கு பேசணும்? வாணாம் போன்னும் தோணும். இது இரண்டு பேருக்குமே நஷ்டங்க."

"இது எங்கப்பா எனக்கு கொடுத்த தைரியம். நல்லதுங்க, நல்ல விஷயம் இது. அதட்டி அதட்டி வளர்க்கறது தப்பாத் தான் முடியுது. பிரயோஜனம் இல்லாமப் போகுது. பிரயோ ஜனம் இல்லாதது பாரம்தாங்க. பொருளோ, மனுஷாளோ எதுவானாலும் சரி."

"நான் கிளம்பட்டுமா?"

"சந்தோஷங்க."

"என் வீட்டுக்கு வர்றீங்களா?"

"நிச்சயம் வரேங்க."

"அம்மாகிட்ட சொல்லிக்கணுமே."

"ஒரு நிமிஷம் கூட்டியாரேன்." சிவசு உள்ளே நகர்ந் தான்.

அகல்யா ஹால் நடுவே இருந்த அந்தப் படத்துக்கு அருகில் போனாள்.

திரு. சிவநேசன் பிள்ளை, தோற்றம், மறைவு எழுதி யிருந்தது. கண்ணில் கனிவு இருந்தது. நெற்றியில் எழுதின மாதிரி விபூதிக் கீற்று இருந்தது. மீசை வளைந்து நிமிர்ந்து உதட்டின் முறுவலாய் இருந்தது. கன்னங்களில் செழுமை இருந்தது. அங்கவஸ்திரம் வெள்ளை மடிப்பில், கலையாத சட்டையில் தாளி வைத்துக்கொள்ளும் சுகம் தெரிந்தது.

"அவுங்களுக்கு சிவபுராணம் முழுக்க அத்துப்படி." பின்னால் கிழவியின் குரல் கேட்டது.

இதென்ன முகம், இதென்ன பார்வை, சட்டையை-புடவையை, சகலத்தையும் உரித்து மேல் தோலைக் கீறி 'நீ யார்?' என்று கேட்கும் பார்வை. பெண்ணைப் பெண்

பார்க்க முடியுமா இப்படி? என்ன சந்தேகம் இந்தக் கிழவிக்கு என் மீது.

கிழவி நிதானமாக நகர்ந்து ஹால் நடுவே வந்து நின்றாள்.

"நான் கால்ல விழுந்து அழுததும், என்கிட்ட சரின்னு சொல்லிட்டு அவுங்க தனியா தவிச்சிருக்காங்க."

"மூத்த சம்சாரத்துக்கிட்ட போய் பிச்சை கேட்ட மாதிரி எனக்கோசரம் கேட்டிருக்காங்க. முதல் குழந்தைக்குப் பிறகு உள்ள போவாதேன்னாங்களாம் மூத்த சம்சாரம். சிவசு பிறந்த பிறகு திண்ணைதான் இடம் இவருக்கு. வீட்ல சாப்ட்டுட்டு வெத்திலை போட இங்க வருவாரு. பிள்ளையக் கொஞ்சுவாரு. மடிலவெச்சி 'தோடுடைய செவியன்'னு... பாடுவாரு. எட்டிக் கதவுத்தெறந்து உள்ள நுழைஞ்சா நானும் மாட்டேன்ன முடியாது. மூத்தாளும் திண்மைதான் கண்ணில் ஆசை காட்டினா வாக்கு முறிச்சுடுவாரேன்னு நானும் நிமிர்ந்து பேசினதில்லை. எதுக்குச் சொல்றேன்னா, எந்த ஆம்பளையும் கெட்டவனில்லை. பொம்பளைக்குப் போறும்னா போறும்தான்."

அகல்யா நடுங்கினாள். காதைப் பொத்திக்கொண்டு ஐயோ என்று உட்கார ஆசைப்பட்டாள்.

துவண்டு துவண்டு நடந்து, கிழவியை நமஸ்கரித்து விட்டு வெகுநேரம் வெறித்தபடி நின்றாள். இரண்டு நிமிடம் கழித்து சிவசுவுடன் சோர்வோடு வெளியே வந்தாள்.

அப்பாவிடம் இதை மெல்ல விவரித்தாள்.

"என் சிவனே!" கிழவர் ஆயாசத்துடன் முகத்தைப் பொத்திக் கொண்டார்.

"உங்களுக்கு ஏதும் தப்பாய் படுதாப்பா?" க்ஷீணமான குரலில் அகல்யா கேட்டாள்.

"தெரியலம்மா! உன்னைப் போன்னு அனுப்பிச்சிட்டனே தவிர, உள்ளே உட்கார்ந்து ரொம்ப வேதனைப்பட்டேம்மா,



நீ மனசு காயப்படாம வரணுமே. இன்னொரு இடத்துக்கு உன்னை இப்படிப் போகச் சொல்லாம முடியணுமேன்னு தவிச்சிட்டேம்மா. என்ன வேதனை போ."

"அப்பா..."

"முடியலம்மா என்னால, உடம்பு ரொம்ப தளர்ந்து போச்சு. தகப்பனாகப்பட்டவன் தன்னுடைய வாலிபமான காலத்துலயும் பொண்ணு கல்யாணம் பேசப்படாது. ரொம்ப வயசானாலும் இந்த மாதிரி காரியம் எடுத்துக்கக் கூடாது. வாலிபத்துல தன் பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணினா தகப்பன் மனசு ரொம்ப சஞ்சலப்படும். ரொம்ப வயசாச்சுன்னா எப்படியோ முடிஞ்சா சரின்னு தோணும். வாலிபம் தாண்டி, முதுமைக்கு நகரப்போதான் செய்யணும். நான் அப்படித்தான் செஞ்சேன், சந்தோஷமா உனக்கு கல்யாணம் செஞ்சேன். முறிஞ்சு போச்சே!"

"உங்களுக்கு என்னப்பா? திடமாதானே இருக்கீங்க!"

"ஒவ்வொரு சமயம் அப்படி இல்லையோன்னு தோணுதம்மா. போகட்டும், பையன் நல்லா இருக்கானா?"

'நல்லவரா தெரியறார் அப்பா."

"வரச் சொன்னியா?"

"வரேன்னு சொல்லியிருக்கார் அப்பா."

"தாயாரைக் கூட்டிக்கிட்டு வருவாரா?"

"தெரியலையே?"

"அகல்யா..."

"அப்பா!"

"உனக்குப் பிடிச்சுருக்காம்மா?"

"தெரியலப்பா!"

"என்ன பதிலம்மா இது?"

"கொஞ்சம் பயம்மா இருக்குப்பா!"

"எதுக்கும்மா?"

"ஒருநாள் இல்லேன்னா ஒருநாள் அருசியா பட்டுடு மோன்னு"

"விளங்கப் பேசும்மா."

"உனக்கு இரண்டாவது ஆம்பிளைதானே நான்னு அருவருப்பு வந்துடுமோன்னு."

"ஈஸ்வரா, பெண்ணைத் திங்கற பண்டமா நினைக் கிறவனுக்குத்தாம்மா ருசியும் அருசியும் தெரியும். உயிர்ப் புள்ள பொருளா நினைச்சா- சிநேகிதம்ன்னு பழகினா இது தெரியாதம்மா. இது தெரிஞ்சவங்க குறைச்சல்தான். ஆனா அகல்யா நான் ஒண்ணு கேட்கறேன்."

"கேளுங்கப்பா?"

"உனக்கு அவன் நினைப்பு வருதா? மாப்பிள்ளை நினைப்பு அதிகமாகுதா?"

"எதுக்குப்பா திடீர்னு?"

"உன்னைப் பெத்தவனாச்சே, கால்தான் கிடையாது அகல்யா, காது கேட்குதே! ராப்பூரா மொட்டை மாடில குறுக்கும் நெடுக்குமா நடக்கிறியே, அறுந்துபோன காத்தா டின்னு இந்திப் பாட்டுப் பாடறியே."

"அது வந்து..."

"மறைச்சுப் பேசாதேம்மா. என்னை உன் தாயாரா நினைச்சுக்கிட்டுப் பேசு."

"கஷ்டமாதாம்பா இருக்கு?"

"என்ன கஷ்டம்மா? செத்துப் போனவனுக்குச் செய்ற துரோகம்னு தோணுதா?"

"இல்லேப்பா! நான் மனசுக்குள்ள அவரோட ஒட்டவேல்லப்பா. அதனாலதான் அது பட்டுன்னு போயிடுச்



சோன்னு தோணுது. செருப்பு கடிச்சுப் புண்ணை தாங்காத ஆளு பீஸ் பீஸாக் கிழிஞ்சு போச்சுன்னு சொன்னாங்களே! எப்படி தாங்குச்சுன்னு வேதனை வருது. நோன்புங்கிறதும், தாலிய ஒத்திக்கிறதும் வெள்ளிக்கிழமை விழுந்து கும்பிடற தும் பண்ணிணதேயில்லப்பா. இதனாலதான் என் புருஷன் போயிடுச்சோன்னு தவிப்பு வருது. அது செத்துப்போனது என் தப்போன்னு கஷ்டமா இருக்கு."

"நல்லாதானேமா வெச்சிக்கிட்டிருந்தான்."

"ரொம்ப நல்லாக் குடித்தனம் செய்தாரு. ஆனா குடித் தனம்ங்கறது காசு பணமில்லப்பா, புடைவை நகையில்லை. நியூஸ் பேப்பருக்கப்புறம் அவருக்கு ஒண்ணும் தெரியாது. ஆறு பொம்பளையை ஒரே ஆளு ரேப் பண்ணியிருக்கான். டோம்பிவிலி போறேன். நீ சாப்ட்டுத் தூங்கிடு. லேட்டாவும் வரேன்னு சொல்வாரு. மறுநா வரச்ச இவளுக்குத் தான் நிறையக் காயம்னு பதிமூணு வயது பொண் போட்டோ காமிச்சாரு. எட்டு காலம் எழுதிட்ட தாச் சொன்னாரு. ஏங்க, அந்தப் பொண்ணுக்கு என்ன ஆச்சுன்னு நாலு நாள் பொறுத்துக் கேட்டேன். எனக்குத் தெரியலை, அந்த ஆறுபேர்ல எவளோ ஒருத்தி தூக்குப் போட்டுக்கிட்டாளாம். இவளா வேற யாராவதா தெரிய லைன்னுட்டாரு."

"ஏங்க, தூக்குப் போட்டுகிட்டது நியூஸ் இல்லையான்னு கேட்டேன்?"

"அதுக்கு வேற ஆளாம். இவருக்குப் போஸ்ட்மார்ட்டம் பற்றி எழுதப் பிடிக்காதாம். பேஜார் வேலையாம்."

"அவன் ரிப்போர்ட்டர்ம்மா. அவன் வேலையை அவன் செஞ்சான்."

"இருபத்திநாலு மணி நேரமும் ரிப்போர்ட்டர் தாம்பா. அதுதான் கஷ்டம்."

''ரொம்பக் கெட்டிக்காரன்னு சொல்வாங்களே!''

''கெட்டிக்காரர்தாம்பா. அதுவும் கஷ்டம். தன்கிட்டே யாருமே பொய்யே சொல்ல முடியாதுங்கற கெட்டிக் காரத்தனம். தானா நினைச்சுக்கிற கெட்டிக்காரத்தனம். ஏ ப்ளஸ் பி ஹோல்ஸ் கொயர்னு கணக்குப் போடற கெட்டிக் காரத்தனம்.''

''புரியலம்மா...''

''என்னால தாயாரா இருக்க முடியலப்பா.'

''அகல்யா?''

''கெட்டிக்கார ஆளோட குடித்தனம் பண்றது கஷ்டம்பா.''

''புரியலை அகல்யா?''

''அஞ்சு நிமிச பேச்சுல மூணுதரம் புரியலையே புரியலை யேன்னு சொல்லிட்டப்பா. அவரு அஞ்சு வருஷ குடித் தனத்துல ஒருதரம் கூடப் புரியலையேன்னு என்னைக் கேட்டது இடையாது. எனக்குப் புரியுது புரியுதுன்னு தானா ஏதாவது ஒண்ணை நினைச்சுச் சொல்வாரு. இதுதானே அர்த்தம்ன்னுவாரு. நானும் சும்மா இருந்துடுவேன்.''

''புரியுதும்மா.''

'இதனாலதான் ஒட்டாமப் போயிடுச்சு.''

''நீ ஆம்பளை வளர்த்த பொண்ணும்மா. உங்கம்மா இருந்தா இவ்வளவு தெரிஞ்சிருக்காது உனக்கு?''

''பொம்பளை புத்திசாலியா இருக்கக்கூடாதுங்கறயா?''

''தேவையில்லையோன்னு தோணுது அம்மா. பெரும் போக்கா போக முடியாதபடி போயிடுத்தேன்னு நினைப்பு வருது.''

''நீச்சல் கத்துக்கிட்ட பிறகு தண்ணில சாக முடியா துப்பா.''



''சாக முடியும்மா. ஆனா அந்தச் சாவு ரொம்பக் கஷ்டம். போராடிப் போராடிச் சாக வேண்டி வரும்.''

''மறுபடியும் தண்ணில குதிக்கச் சொல்றியே.''

''ஈரமில்லாம உலர்ந்து போயிருவியோன்னு நினைச் சேன். தாயே உனக்குப் பிடிக்கலைன்னா விடு. நான் வற்புறுத்தல.''

''இவரு வரேன்னு சொல்லிருக்காரே.''

''வாணாம்னு எழுதிடுறயா?''

''வேதனைப்பட்டிருவாரப்பா. என்ன என்னு அலைக் கழிய வச்ச மாதிரி ஆயிடும். ஒரு ஆளை வலியப்போய் அவமதிச்சாப்போல பட்டுடும்.''

''சரி, வரட்டும், என்னிக்கி வரா மாதிரி?''

''தெரியல. எழுதறேன்னு சொன்னாரு. வாரா வாரம் லைப்ரெரி வருவாராம்.''

''பள்ளிக்கூடம் ஆரம்பிக்கலாம்ன்னு சொன்னியா அகல்யா?''

''இல்லப்பா! பொதுவாப் பேசிட்டு வந்துட்டேன்.''

''தாயாரைத் தனியா விட்டுட்டு வருவானா?''

''அங்க போய் ஆரம்பிக்கறது.''

''இங்க வீடு வாங்கிட்டோமே அகல்யா.''

''அதனால என்னப்பா?''

''குழப்பமா இருக்கு இல்லம்மா.''

''நிறைய யோசிக்கறோம் அப்பா. முடிவு பத்தி மடமடன்னு பேசிடறோம்.''

''ஆசை, ஆசை, எல்லாம் சொடுக்கிற நேரத்தில் முடிச் சிடணும்னு ஆசை. நம்மிஷ்டத்திற்கு சகலமும் வளை யணும்னு ஆசை.''

"ஒரு விஷயம் கவலையா இருக்குப்பா?"

"என்னைப் பத்தியா? நான் தனியா இருப்பேன்மா, கஷ்டமில்லை."

"அதில்ல; வரவர எனக்காக நிறைய கவலைப்பட ஆரம்பிச்சுட்டே நீ. சர்க்கரை ஜாஸ்தியாகிப் படுத்துக்கப் போறேயோன்னு தோணுது. நீ படுத்துட்டே, என்னால தாங்க முடியாது."

"கவலைப்படறது வாஸ்தவம்தாம்மா. உனக்குத் துணை கிடைக்கணும்கறது மட்டுமில்லை; நல்ல துணையா இருக்கணும்ங்கிறது கவலை. இரண்டாம் தரமும் தப்பு பண்ணாம இருக்கணும்ங்கற கவலை."

"நான் பெரிய பாரம்தாம்பா உனக்கு!"

"பொண்ணு பாரம்தான் தாயே தகப்பனுக்கு. நாலாவது வீட்டுப் பொண்ணு ஓடிப்போய்ட்ட பிறகு அவ அப்பன் ராஜகோபாலன் நேரா இங்க வந்தான். ஒரு வாய் மோர் கொடு மீனாட்சி சுந்தரம்னு சொன்னான். குடிச்சுட்டு பஞ்சாங்கம் எடுத்துப் பார்த்தான். நாள் நன்னா இருக்கு மோசமில்லைன்னு சொன்னான், கோளறு பதிகம் பாடுன்னான். பாடப்பாட அழுதான். 'நான் பாவி... நான் பாவி'ன்னு அழுதான்.

"உன்னால முடிஞ்சதை செய்யற கோபாலா, இதுல பாவம் என்னன்னு சொன்னேன். தன் பொண்ணு ஓடிப் போனது நல்ல நட்சத்திரம்தான்னு சந்தோஷப்படற தகப்பன் மனசு உனக்கு புரியுதாம்மா?"

"கல்யாணம் ஏம்பா இவ்வளவு கஷ்டமாச்சு இங்கே?"

"புருஷன் இல்லாத தேசம்மா."

"புருஷன் யாருப்பா?"

"பயமின்றி இருக்கிறவன்."



அகல்யா மௌனமாய் காய்களை நறுக்கினாள். விரைவாகவும், சீராகவும் செயல்பட்டாள்.

'பயமின்றி பெண் இருக்க முடியாதா?' என்று யோசித்தாள். இருந்தால் என்ன என்று கேட்டுக்கொண்டாள். எதுவோனா நடக்கட்டும் என்று இருப்பதுதானே பயமின்மை? எதிலும் தன்னை இழக்காமல் இருந்தால் தானே பயமின்மை? வருவானோ வரமாட்டானோ என்கிற யோசனையற்று இருப்பதுதானே பயமின்மை? நாளை என்பது பற்றி அக்கறையற்று இருப்பதுதானே பயமின்மை? வரட்டும், வந்து போகட்டும். வந்தால் வரவேற்கலாம், வரவில்லையெனில் மறந்து போகலாம். அவ்வளவுதானே இந்தக் காரியம். வரட்டுமே! எந்த விளைவு பற்றியும் அக்கறையின்றி வரட்டுமே! வந்தால் நன்றாய் இருக்கும். கடவுள் நம்பிக்கைப் பற்றிப் பேசமுடியும். பாரதி பற்றிக் கேள்வி கேட்க முடியும். தாசியாய் இருப்பது என்றால் என்ன என்று கேட்கலாம். இது கேட்கலாமா? மரியாதை தானா? மனசு நோகாதா? உபகாரமாய் பிறந்த பிள்ளை. அதனால்தான் சமூக சேவை - பாரதி சைக்கிள் நிலையம் என்று இருக்கிறதா? டொனேஷன் மாதிரிதான் போகாத கோயிலுக்கு விளக்குப் போடுகிறதோ?

"இதைப் போய் டொனேஷன்னு சொல்லலாமா? நம்ம சிவசு தம்பி லைட்டு போட்டுச்சு கோயிலுக்குன்னு ஊர் பேசறப்போ, மறுபடி வேற எங்க லைட்டு போடணும்னு புத்தி போறது உண்டு."

அகல்யா சிரித்தாள். நல்லவனாகத்தான் தெரியுது என்று பேசிக்கொண்டாள்.

வருவானோ என்று யோசித்தாள். வரவேண்டும் என்று விருப்பப்பட்டாள். அந்த மனுஷன் விவரம் தெரியாம நாளைக்கு வந்து நிக்காம இருக்கணுமே என்று கவலைப்பட்டாள்.

மறுநாள் அவன், சிவசு வந்தான். வாசல் கதவை மெல்ல தட்டினான். 'ஐயா' என்று குரல் கொடுத்தான்.

மகா பாவி என்று உள்ளுக்குள் கூவியபடி அகல்யா ஓடி வந்து கதவைத் திறந்தாள்.

அன்று அப்பா பேசாத நாள். மௌன தினம். வானமே இரண்டாகப் பிளந்தாலும் அப்பா வாயைத் திறக்க மாட்டார்!

## 7

"நிஜம் சொல்லட்டுமா? தாங்கிக்குவீங்களா? எனக்கு உங்களைவிட உங்க அப்பாவைப் புடிச்சிருக்கு அகல்யா. நான் ஜோக் அடிக்கலை. ஜோக் அடிக்க புத்திசாலித்தனம் வேணும். எவ்வளவு இக்கட்டான நேரம் அவருக்கு. தன்னோட பெண் எதிர்காலம், அது சம்பந்தப்பட்ட முக்கியமான மனுஷன், அதிக பரிச்சியம் இல்லாத மனுஷன், எதிர்க்க வந்து நின்னபோதும் கடைசி வரைக்கும் பேசாம இருந்தாரே! கொஞ்சம்கூடப் பதட்டப்படாமல் இருந்தாரே! தன் மௌனத்தைக் கலைக்க முயற்சி பண்ணாம இருந்தாரே! ஆச்சர்யமா இருக்குங்க அகல்யா! அப்பா... எவ்வளவு மிருதுவான கை அவருக்கு. அவருக்கு கோபமே வராதுன்னு நினைக்கிறேன். சரியா?"

அகல்யா அவனை வியப்புடன் பார்த்தாள். அவன் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதுபோல் பட்டாலும், அவன் தன்னைத் தாண்டி வெகுதொலைவில் வேறு எதையோ பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்தாள். அப்பாவின் மௌனத்திற்கு இரண்டு முறை



மன்னிப்புக் கேட்டு மூன்றாம் முறையாக மன்னிப்புக் கேட்க ஆரம்பிக்கையில் பளிச்சென்று கையமர்த்தினான்.

"ஒரே விஷயத்திற்கு பலமுறை மன்னிப்புக் கேட்காது எதிரில் உட்கார்ந்திருப்பவனை முட்டாளாக்கிடுது. சுலபமா இருங்க அகல்யா." கொஞ்சம் வேகமாகவே பதில் சொன்னான். அவனுடைய அந்தச் சிறிய கோபம் அகல்யா விற்கு பிடித்துப் போயிற்று.

"அப்பாவுக்குக் கோபம் வருங்க. கோபம் வந்தா பேச மாட்டாரு."

"குட். அதுதான் நிஜமான கோபம். புறக்கணிப்புதான் முழுமையான கோபம். உன்னோடு பேசி பிரயோஜனம் இல்லை என்று ஒதுக்குவதுதான் சரியான பனிஷ்மெண்ட். நிறையப்பேர் உரக்கச் சண்டை போடுவாங்க. கேட்டா கோபம்ன்னுவாங்க. உரக்கச் சண்டை போடக் காரணம் கோபமில்லை. அருவை வேற, கோபம் வேற. கோபம்ங் கறது ரொம்ப உயர்ந்த விஷயம். லவ் மாதிரி உண்மையான விஷயம். மனிதர்கள் மேல் அன்பும், 'உனக்குப் புரிய வில்லையே' என்கிற பரிதாபமும் ஒன்று சேர்ந்து கோபமா வரும். உடனே புறக்கணிக்கத்தான் தோணும். கோபம் ஹிம்சை செய்யாது. புறக்கணிக்கும். உங்களுக்குக் கோபம் வருமா அகல்யா?"

வேறு புடவை மாற்றி செருப்பில் அவசரமாய் கால்களை நுழைத்து சிவசுவை பஸ் ஏற்றிவிடலாம் என்கிற எண்ணத்தில் வாசற்படியில் இறங்கினதும் பளிச்சென்று தயக்கமின்றி கேட்டான்; "எங்கேயாவது நல்ல ஹோட்டலுக்குப் போய் காஃபி சாப்பிடலாமா?" அகல்யா சற்றுத் தயங்கினதும், "காஃபி சாப்ட மட்டுமில்லை. பேசறதுக்கும் கூப்பிடறேன்." வீட்டு எல்லையைத் தாண்டும் முன் விவரித்தான்.

"அப்பாகிட்ட வேணும்னா கேட்டுட்டு வாங்க" அடிக் குரலில் ஆலோசனை சொன்னான். நாலு தெரு தள்ளி சிவசு

இதைக் கேட்டிருந்தால் அகல்யா வேண்டாம் என்று சொல்லியிருப்பாள். வீட்டு வாசலில் வைத்துக் கேட்டதும், வேண்டுமெனில் அனுமதி வாங்கி வா என்றதும் நெகிழ்த்திற்று. "ஓயெஸ் சாப்பிடலாமே! ஆனால் எது நல்ல ஹோட்டல்?" பதிலுக்குக் கேட்டாள். அகல்யா வெட்கத்துடன் அந்தச் சின்ன அறையைச் சுற்றி நோட்டமிட்டாள். கடற்கரையை ஒட்டிய ஹோட்டல். ஹோட்டல் முழுவதும் இந்த மாதிரி சின்னச் சின்னதாய் அறைகள். மெல்ல மரத்தடுப்புச் சுவர். குட்டை மேஜையும் எதிரும் புதிருமாய் நாற்காலிகளும். இரண்டு பேர் மனசு விட்டு வசதியாய் பேசிக் கொள்கிற அறை. இந்த ஹோட்டலுக்கு அழைத்து வந்து சிறிய அறையின் கதவைத் திறந்து, அவளை உட்காரச் சொல்லி காஃபிக்கு ஆர்டர் செய்ததும் ஆச்சர்யப்பட்டாள். 'இந்த மனிதனுக்கு இந்த மாதிரி ஓர் இடம் இருக்கிறது என்று எப்படித் தெரியும்? இவ்வளவு அமைதியாய், அந்தரங்கமாய் பேச ஒரு வசதியுள்ள இடத்தோடு எத்தனை நாள் பழக்கம்? இதற்கு முன்னாலும் வந்ததுண்டா இங்கே?' மனசுள் கேள்வி பொங்க, அவனைப் பார்த்தபோது, சிவசு எங்கோ தொலை தூரம் லயித்திருந்தான். சம்பந்தமின்றி, "நிஜம் சொல்லட்டுமா, தாங்குவீர்களா?" என்று ஆரம்பித்தான். அகல்யாவால் தாங்க முடியாமல் இருந்தது. அந்த அறையின் அந்தரங்கம், ஆணும் பெண்ணுமாய் ஒரு சின்ன அறையில் முழங்கால் உரச அமர்ந்திருந்த நெருக்கம், வெளியில் உட்கார்ந்திருக்கிற யாரும் தப்பாய் எடுத்துக்கொள்ளக் கூடாதே என்கிற முதல் பயம். மேலும் அவன் பேசியதெல்லாம் காதில் பட்டுத் தெறித்ததேயொழிய, மனசு அவன் பேசியதை முழுக்க வாங்கிக் கொள்ளாமல் தவித்தது. வெளியில் போய் உட்கார்ந்து பேசினால் என்ன என்று தோன்றியது.

"நான் கேட்டதுக்கு பதிலே சொல்லலையே நீங்க? கோபப்படுவீங்களா அகல்யா?"



அகல்யா அவனை ஏறிட்டுப் பார்த்தாள். இவன் மனசோ புத்தியோ தனக்குப் பிடிபடவில்லையே என்று பயந்தாள். வரும் என்று சொல்லலாமா? எது சொன்னால் இவனுக்குப் பிடிக்கும் என்று ஆரம்பித்தாள். நிஜத்தைச் சொல்கிறேன் என்று இவன் சுலபமாய் ஆராய்ந்தான். என்னால் சொல்ல முடியுமா? ஓர் ஆண் சட்டென்று நிஜத்தைச் சொல்ல முடியும். பெண் சொல்லமுடியுமா? பெண் புகையிலை மாதிரி என்கிறார்களே, மனம் விரித்துப் பேசமுடியுமா? பெண் புகையிலைதானா? காரம், மணம், குணம் என்கிற வஸ்துவா? நான் நிஜம் சொன்னால் சிவசு தாங்குவானோ? ஆமாம், எது நிஜம்? எனக்கு கோபம் வருமா, வராதா? எனக்குக் கோபம் வரும். வந்தால் என்ன செய்வேன்? சுருக்கென்று முள்ளாய் வார்த்தையைத் தைப்பேன். சொல்லி ஆளைத் தைத்துவிட்டு நொந்து கொள்வேன். அநேகமாய் இதுதான் என் இயல்பு. இதைச் சொல்லிவிடலாமா? அகல்யா குனிந்து கண்ணாடித் தம்பளரில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டாள்.

"ஒரு சின்ன கேள்விக்கு இத்தனை யோசனையா? இல்லை தானா தெரியும்ங்கற மாதிரியா?" சிவசு மறுபடி பேசினான்.

"நீங்க நெறைய பதில் யோசனை பண்ணி வச்சிருக்கீங்க சிவசு. ஒரே கேள்விக்கு நாலைஞ்சு பதில் உங்களால் குடுக்க முடியுமோன்னுகூட தோணுது. ஒருவேளை உங்களைப் போல எனக்கு அதிகம் கேள்வி கேட்டுக்கற பழக்கமில்லீங்க. அப்பப்ப வெளிப்பட்டுருவேன். இத்தனை அமைதியாய் உட்கார்ந்து, எனக்குக் கோபம் வருமான்னு நான் கேட்டதே இல்லீங்க."

"வெரிகுட், ஆனா இதை இப்படி வருத்தப்பட்ற குரல்ல ஏன் பேசறீங்க? உங்க இயல்பு என்னவோ அது மாதிரியே இருங்க. யாருக்காகவும் மாத்திக்கிறபோது குழப்பம்தான்

வரும். மொதல்ல இயல்பை மறைச்சுக்கறதும், பிறகு படிப் படியாய் வெளில காண்பிக்கிறதும் பெரிய அவஸ்தை யாயிடும். தன்னைப் பத்தியே தனக்குத் தெரியாம ஓர் ரெண்டுங்கெட்டான் நிலைமை வந்துடும். உங்களுக்குப் பசிக்குதா? காஃபியோட வேற ஏதாச்சும் கொண்டாறச் சொல்லட்டுமா?''

அகல்யா மீண்டும் சங்கடப்பட்டாள். அவன் உள்முகம் புரியவில்லையே என்று வேதனைப்பட்டாள். அதிகநேரம் இந்த அறையில் உட்கார்ந்து கொள்ளமுடியாது என்பதை உணர்ந்தாள்.

''வேணாங்க. வெளியே போய்டுவோம்.''

''ஏன் அகல்யா?''

''இந்த சின்ன ரூம் கஷ்டப்படுத்துதுங்க.''

''அப்படியா? இந்த இடம் உங்களுக்குப் பிடிக்கலையா?''

அகல்யா நாலுவயசுப் பெண்மாதிரி 'இல்லை' என்று தலையாட்டினாள்.

''நான் இப்படி வந்ததில்லீங்க. யாராவது தெரிஞ்சவங்க பார்த்துட்டா, கொஞ்சம் நெர்வசா இருக்கும்.''

சிவசு வாய்விட்டுச் சிரித்தான்.

''எனக்குப் புரியதுங்க அகல்யா. காஃபி சாப்ட்டு எங்கேயாவது பஸ்ஸ்டாண்ட்ல நின்னு பேசுவோம். பஸ் ஸ்டாண்ட்ல பேசலாமில்லையா?''

''எங்க வீட்டு மாடியிலகூடப் பேசியிருக்கலாம்.''

''அங்கே எனக்கு கொஞ்சம் சங்கடமாய் இருந்தது அகல்யா. அப்பா என்ன நினைச்சுக்குவாரோன்னு தயக்கமா யிருந்தது. அதுதான் இங்க கூட்டிக்கிட்டு வந்தேன்.'' மன்னிப்பு கேட்கிற தொனியில் பேசினான். அகல்யா அவன் சங்கடத்தை உணர்ந்தாள். அவன் சொன்னதை 'சரி' என்கிற மாதிரி சிரித்தாள்.



''வேணாம். இங்கேயே பேசலாம்.''

''எங்கிட்ட ஒண்ணும் பயமில்லையே அகல்யா?''

''சே... சே... அதெல்லாம் இல்லீங்க.''

''உங்களைப் பிடிச்சிருக்கு அகல்யா. நீங்க நேரா வந்து பேசினது ரொம்பப் பிடிச்சுப் போச்சு. நீங்களா வந்து உங்க விஷயத்தை பேசினதில் ஒரு கம்பீரம் இருந்தது. இன்னிக்கு உங்க அப்பாவைப் பார்த்ததும் எனக்குள்ள இன்னும் சந்தோஷம் வந்தது. நாம் கல்யாணம் செய்துகிட்டா நல்லா இருப்போம்ன்னு படுது. வீட்டோட இருக்கிற பொண்ணு எனக்கு வேண்டாம். வெளியுலக விவகாரம் தெரிஞ்ச பொண்தான் சரின்னு படுது என் மனதுக்கு. இங்க ஏதாவது உருப்படியா பண்ணணும்னு தோணுதுங்க. உங்களுக்கு அப்படி ஏதாவது தோணுதா? சமூக சேவை மாதிரி ஏதாவது செய்யறதுல விருப்பம் உண்டா?''

அகல்யா அவனை ஊடுருவி நோக்கினாள். நிஜமாகவே அவள் தேடிய புருஷன் கிடைத்து விட்டானா என்று ஆச்சரியப்பட்டாள். 'அப்பா, அவர் பேச்சை ஆரம்பிச்சாரு. நான் பள்ளிக்கூடம் பத்தி சொல்லிட்டேன்' என்று உள்ளுக் குள் கூவினாள். சந்தோஷ மிகுதியால் தலையை குலுக்கிக் கொண்டாள்.

சிவசு 'என்ன' என்றான்.

''சின்னதா ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்கணும்னு ஆசை யிருக்குங்க.''

''பள்ளிக்கூடமா? முடியுமா நம்மால.''

''நான் பி.ஏ. பி.டிங்க.''

''அது ஞாபகம் இருக்கு அகல்யா. காசு நெறைய செலவாகாதா? கட்டடம் வேணாமா?''

''சின்னதா மாண்டிஸோரி மாதிரி வீட்டு மாடியிலேயே ஆரம்பிக்கலாங்க.''

''கவர்மெண்ட் ஒன்றும் சொல்லாதா? பசங்க வருமா?''

''பசங்க வர்றது சிரமம்தான். ஆனா கவர்மெண்ட் ஒண்ணும் சொல்லாது. ஆரம்பத்துல கொஞ்சம் கஷ்டப் படணும். நஷ்டப்படணும். சுத்தி சுத்தி அதே நினைப்பு இருந்தா நல்லப்படியா கொண்டுவந்துடலாங்க. எனக்கு நம்பிக்கையிருக்கு.''

''நிஜமாவா?''

''உங்களுக்கும் பள்ளிக்கூடம் பிடிக்குமா?''

''எனக்குத் தெரிஞ்சு பள்ளிக்கூடம் ஒரு கசப்பான விஷயம் அகல்யா, பசங்களை பயமுறுத்தாத பள்ளிக் கூடமாயிருந்தா பிடிக்கும்!''

''அதுக்குப் பேர்தாங்க மாண்டிஸோரி.''

''வாஸ்தவம். மாண்டிஸோரி மாண்டிஸோரியா இருக்கணுமில்லையா?''

''என் மனசுக்குள் இருக்கறது அப்படித்தாங்க.''

''வெரிகுட்.''

''என்னங்க?''

''ஆரம்பிச்சுருவோம்.''

''எப்போ?''

''இந்த காஃபி சாப்ட்ட உடனே!''

அகல்யா அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''தாங்க்யூ.''

மேஜைமேல் பதிந்திருந்த அகல்யாவின் கைகளை சிவசு வலக்கையால் பொத்தினான்.



''தாங்க்யூ எல்லாம் வேணாம் அகல்யா. நாம ஸ்நேகமா இருக்க ஆரம்பிச்சிட்டோம். நடுவுல வார்த்தைகள் எதுக்கு? மொதல்ல ஒரு மாண்டிஸோரிக்குக் கூட்டிட்டுப் போய் காண்பிக்கிறீங்களா?''

''ஓ யெஸ்! ரெண்டு மூணு மாண்டிஸோரி தெரியுங்க. இப்பவே போகலாமா?'' அகல்யா எழுந்தாள்.

சிவசு, ''காஃபி சாப்ட்டுட்டுப் போகலாமே'' என்றான்.

அகல்யா லேசான வெட்கத்துடன் உட்கார்ந்தாள். சுற்றி அந்த சிறிய அறையை நோட்டமிட்டாள். இப்பொழுது அந்த அறை அவளுக்குக் கொஞ்சம் பிடித்திருந்தது.

## 8

'இனிய சிவசு,

உங்களுக்கு என்ன எழுதுவது என்றே தெரியவில்லை. தினமும் ஒரு கடிதம் எழுதுவதாய் சொல்லி விட்டேனே தவிர, எழுத உட்காரும்போது சுற்றுப்புறம் முழுவதும் வெள்ளையாய், கனவு இடமாய் போய்விடுகிறது. நலம்; நலமறிய அவா என்று எழுதலாம். தினமும் எழுத முடியுமா?

சிவசு ஊர் திரும்பின நேரம் வரை மனசு கிறங்கி கிறங்கித் தவித்தது. வீட்டுப் படியேறி அப்பாவிடம் பேசியபோது இறக்கம் கொஞ்சம் மட்டுப்பட்டது. காய்கறியும் உளுந்தும் பரிசாய் கொடுத்தீர்கள் என்று அப்பாவிடம் சொன்னதும் சிரித்துவிட்டார்.

''ரொம்ப எளிமையான பையன் அம்மா! வெட்கப் படாம தெளிவா இருக்கான். எனக்கே எப்ப அவனைத் திரும்பப் பார்ப்போம்னு ஆசை வருது, வரச்சொல்லேன்'' என்றார்.

சிவசு, நான் மறுபடி இறங்கிப் போனேன். பேப்பரைப் பிரித்து உளுந்தைப் பையிலிருந்து கொட்டி ரொம்ப நேரம் அளந்து கொண்டிருந்தேன். எடுத்து டப்பாவில் கொட்ட மனசே வரவில்லை. உளுந்து மொத்தமும் தலையில் கொட்டிக்கனும்னு ஆசையா இருந்தது. வாரி வாரி முகம் முழுக்க அப்பிக்கொள்ள ஆசையாய் இருந்தது. கோபுரமாய் குவிச்சு வச்சு முகத்தைப் பொத்திக் கொண்டேன். ரொம்ப நேரம் கழித்து டப்பாவில் போட்டேன். மறுபடி திறந்து உளுந்து அதில் இருக்கிறதா என்று பார்த்தேன். இரண்டு பருப்பு எடுத்து வாயில் போட்டுக்கொண்டேன்.

பிச்சி என்கிறீர்களா? பிச்சிதான். அப்பா ஒரு குறுந்தொகை சொல்வார்.. 'என் பிரிவு நோய் அறியாது இந்த ஊர் கவலையின்றி தூங்குகிறது. ஓவென்று கூச்சலிட்டுச் சுவரில் முட்டி இந்த ஊரை உலுக்கி எழுப்பினால் என்ன' என்று தலைவி தவிப்பாள்.

சரியான லூஸு என்று முதலில் அவளைப் பற்றிக் கேட்டபோது சொன்னேன். இன்று சிநேகமானேன். 'என் சொல்வேன், என் நிலையறியாது துஞ்சும் இவ்வூர்க்கே' என்று அடிக்கடி முணுமுணுக்கிறேன்.

சிவசு, பிரிவுத் துயர் பெண்களுக்கு மட்டும்தானா? ஆண் இவ்விதம் தவித்ததாய் செய்தி உண்டா? எதையும் தாங்க முடியாத ஜன்மமாய் பெண் இருக்கிறாளா? இது உண்மை இயல்பா? இல்லை அதீத கற்பனையா? அடிக்கடி நிலை நிறுத்திக் கொண்டாலும் சமயத்திலும் மனசு அரற்றத்தான் செய்கிறது சிவசு!

கொஞ்சம் சந்தோஷ அரற்றல் இது. சுகம் இருக்கிறது இதில்.

நீங்கள் எவ்விதம் இருக்கிறீர்கள் சிவசு? 'நோ, நோ! நத்திங் லைக் தட்' என்று சொல்வீர்களா? உண்மையாகவா? உண்மையெனில் ஆச்சர்யம்தான். எனக்கு உங்கள் நிலையை



வெட்கமின்றி எழுதுவீர்களோ சிவசு? ஒருவேளை பெண்ணைக் காட்டிலும் பரந்த உலகமாய் இருப்பதால் ஆணுக்குப் பிரிவு பற்றி துயரப்பட நேரமிருக்காதோ, ஒன்று மாற்றி ஒன்று வேலைகள் வரும்போது பிரிவு மறந்து போகுமோ?

இங்கும் வேலைகள் இருக்கின்றன. காலையில் பெயிண்டர் வந்தான். மூவாயிரம் ரூபாய்க்கு எஸ்டிமேட் கொடுத்தான். 'சரி' என்று சொல்லிவிட்டோம். உடனே சுவர்களைச் சுரண்டித் தேய்க்கும் வேலை ஆரம்பித்து விட்டார்கள். ஓலைக் கூரை வேண்டுமா சிவசு? ஆஸ்பெஸ்டாஸ் எழுப்பி விடலாமா? வெப்பம் தாங்குமா குழந்தைகள்! ஆஸ்பெஸ்டாஸ் போட்டு கீழே தட்டி கொடுக்கலாம் என்கிறார் அப்பா. பின்பக்கம் நீங்கள் சொன்னபடி மரங்களைச் சாய்க்காமல் மணல் மட்டும் கொட்டுகிறேன். வாழைகள் வேண்டாம் என்கிறார் அப்பா. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

மாடிப்படியில் ஜன்னல் வைத்து வெளிச்சமாக்குகிறேன். வேண்டாமோ என்று தோன்றிற்று ஒரு க்ஷணம். குளிர்ச்சியாய், இருட்டாய் இருக்கும் இடம் அது. நீங்கள் நின்று முதன்முதலாய் என்னைத் தொட்ட இடத்தில் சற்று நேரம் உட்கார்ந்து கொண்டேன். இதையெல்லாம் அப்பாவுக்குத் தெரியாமல் செய்ய வேண்டியிருக்கிறது. அப்பா ரொம்ப சூட்சுமம், அவரை ஏமாற்றுவது கடினம்.

சிவசு, அடுத்த வாரம் வாருங்கள், பரவாயில்லை. ஹோட்டல் சாப்பாடு என்றாலும் பரவாயில்லை. வாருங்கள் பேசுவோம், சிவசு. நீங்கள், நான், அப்பா மூவரும் பேசுவோம். மாண்டிஸோரி பற்றி, இலக்கியம் பற்றி, வாழ்க்கைப் பற்றி, கடவுள் பற்றி பேசுவோம். மேலும் மேலும் தெரிந்து கொள்ளுவோம். எப்போது வருகிறீர்கள் சிவசு?

அப்புறம்... அப்புறம், ராத்திரி பாட்டுக் கேட்டேன். சிவாஜியுமில்லை, எம்ஜியாரும் இல்லை. சிட்டுக்குருவி பாடுது தன் பெட்டைத் துணையைத் தேடுது. அந்தப் பாட்டுக்கப்புறம் ரேடியோவை அணைத்துவிட்டேன்! தனிமையை, மனசு கனவோடு அலைவதை இதைவிட வேறு பாட்டுச் சொல்ல முடியுமா? சிவசு, அப்போ என்ன நினைத்தீர்கள்? நான் அந்தப் படம் பார்த்ததில்லை சிவசு. ஆனால் தளும் என்று விழும் அருவிக் கரையும், பெரிய பரப்பும் கண்ணுள் வந்தன.

சிவசு, நான் கல்யாணமானவள். ஆனாலும் இதுவரை நான் யாரையும் காதலித்ததில்லை. ஆனால், கடவுளே? இன்று ஐந்து நிமிடத்திற்கு ஒருமுறை மனசு அனல் மெழுகாய் உருகித் துவண்டு போகிறது.

அம்மாவுக்கு என் நமஸ்காரத்தைச் சொல்லுங்கள்.

மணியக்காரரை விசாரித்ததாய்ச் சொல்லுங்கள்.

அடுத்த வாரம் நிச்சயம் வாருங்கள் சிவசு.

ஆமாம். முதல் கடிதம் கிடைத்ததா? பதிலே இல்லையே? சிவசு என்று கடிதம் மொத்தமும் எழுதினது கோபமா? பதிலுக்கு அகல்யா, அகல்யா என்று எழுதக்கூடாதா?

எழுதுங்கள் சிவசு! அன்புடன் உங்கள் அகல்யா.'

சிவசு கடிதத்தை மடித்து நெஞ்சருகே வைத்துக் கொண்டான். தெருவில் புழுதி தனியே விளையாடிக் கொண்டிருந்தது. வெயில் மின்னிற்று. மெல்ல மேஜையைத் திறந்து பேனாவை எடுத்தான். வேண்டாம், இப்போது பதில் எழுத வேண்டாம். நாலு மணிநேரம் கழித்து எழுதுவோம். நாலு மணிநேரம் கழித்துக்கூட வேண்டாம், நாளை விடிகாலை இதற்குப் பதில் எழுதுவோம். இரவில் அகல்யாவுக்கு பதில் எழுதினால் கிறக்கமாய், அவள் மாதிரியே உருகிக் கடிதம்



எழுதும்படி நேரிடும். பகலில் பதில் எழுதினால் சுருக்கமாய், தெளிவாய் எழுதலாம், இப்போது வேண்டாம்.

சிவசு மறுபடி கடிதத்தைப் பிரித்து படிக்கலாமா என்று நினைத்தான். வேண்டாம் என்று தீர்மானித்துக் கொண்டான். ஆனால் ஏதாவது எழுத வேண்டும்போல் தோன்றிற்று. வெறுமே ஒரு பேப்பரில் கிறுக்கிக் கொண்டிருப்பது சுகமாக இருக்கும் என்று பட்டது. மேஜையைத் திறந்து, பேனாவைப் பிரித்து லெட்டர் பேடில் மெல்லிய கோடுகளை இழுத்தான். 'அகல்யா' என்று எழுதினான். இரண்டு கண்கள் வரைந்து நடுவே பொட்டு வைத்து, வரைந்ததை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். மனசுக்குள் ஒரு பெரிய புல்வெளி தெரிந்தது. புல்வெளியின் மேடான பகுதியில் ஒரு குதிரை நிதானமாய் பிடரி சிலும்ப நடந்து கொண்டிருந்தது. யார் உத்தரவும் எதிர்பாராமல் தானே நடையை விரைவாக்கிற்று. சின்ன ஓட்டமாய் துவங்கியது. சரட்டென்று மிரண்டதுபோல, பற்கள் தெரிய உதடுகளைப் பிரித்துக் குனிந்து பாய்ச்சல் காட்டிற்று. பிடரி பறக்க, வால் உயர்த்திக் குளம்பதிர வேகம், வேகம் என்று நெஞ்சை முன்னுக்குத் தள்ளி, பின்னங்காலை விரைவாய், வேகமாய் உதைத்து, ஆத்திரம் தீர ஓடிற்று. பிறகு தானாய் சமனப்பட்டுப் பாய்ச்சலை ஓட்டமாக்கி, ஓட்டத்தை நடையாகி, மெல்ல நின்று மூச்சிரைத்தது. யாருமில்லாத அந்தப் பெரிய புல்வெளியைச் சுற்றி ஒருமுறை பார்த்தது. சிவசு நாற்காலியை விட்டு எழுந்தான். கடைக்கு வெளியே வந்து நின்றான். ஒருமுறை திடமாய் சோம்பல் முறித்தான். மறுபடி கடைக்குள் வந்து உட்கார்ந்து கொண்டான்.

பேனாவைத் திறந்து ஒரு குதிரைப் படம் வரைந்தான். பிடரி வழிய நடை போட்டுக் கொண்டிருக்கும் குதிரை முகத்தை பின்பக்கமாய் திருப்பிக் கொண்டிருந்தது. குதிரை மீது சவாரி செய்வதாய், நிர்வாணமாய் ஒரு பெண் படம்

வரைந்தான். விரிந்த தலையும் கட்டுடலுமாய் ஒரு பெண், ஒரு கையால் குதிரையின் கழுத்தை நீவி, மறுகையால் அதன் முகத்தைத் தடவியபடி குதிரையின் முகத்துக்கு நேரே இதழ் குவித்து உட்கார்ந்திருந்தாள்.

*'காதல் என்பதில் காமம் இருப்பினும்,*
*காமம் என்பதில் காதலேயில்லை.'*

எங்கோ படித்த கவிதை வரிகள் நினைவுக்கு வந்தன.

''இது விரகம்தான். இந்த நேரம் எனக்குள் துள்ளுவதும் விரகம்தான். காதல் என்கிற அனுமதிக்குக் காத்திருந்த விரகம். பரஸ்பரம் மதிக்கிறோம் என்று தெரிந்த பிறகு அனுமதிக்கப்படும் விரகம்.''

## 9

**''ப**ள்ளிக்கூடத்துக்கு சரவிளக்கா? எதுக்குங்க சிவசு? விலை வேற அநியாயமாச் சொல்வாங்க. இதுக்கு உருப்படியா வேற ஏதாவது வாங்கலாம்.''

''விலைக்கோசரம்தான் வேணாங்கிறியா?''

''நை, விலைக்கோசரம் இல்லை. பள்ளிக்கூடம், சர விளக்கு இரண்டும் ஒத்துவருமா? கண்ணாடிச் சாமானைப் பசங்க உடைச்சிடுச்சுன்னா? எங்கேயாவது பெரிய ஹோட்டல், அரண்மனைக்குச் சரிவரும். நமக்கு எதுக்கு?''

''ஹோட்டல்ல ஏன் சரவிளக்குப் போடறான் அகல்யா?''

''அட்ராக்டிவ்வா இருக்க.''

''அப்பப் பள்ளிக்கூடம் அட்ராக்டிவா இருக்கக்கூடாதா?''

''இப்படியா அட்ராக்ட் பண்ணணும்?''



''பண்ணலாம் அகல்யா! நீ மாண்டிஸோரி ஆரம்பிக்கப் போறே. ஹைஸ்கூல் இல்லை. எங்க பள்ளிக் கூடத்திலே இவ்வளோ பெரிய சரவிளக்கு இருக்குன்னு குழந்தை போய் வீட்டுல பேசணும். ராத்திரி தூங்கற போது இதைப்பத்தி நினைச்சுக்கணும். 'உங்க ஸ்கூல்ல இருக்கா, எங்க ஸ்கூல்ல இருக்குன்னு' பெருமை பேசணும். மறுபடி காலைல வந்து கண்ணு விரிய இதைப் பார்க்கணும். கைஎட்டாத தூரத்தில் இது தொங்கும் அகல்யா. நல்வா இருக்கும்னு படுது. வாங்கலாமே?''

''ஐயோ! இங்க விலை போட்டிருக்கு சிவசு. இரண்டாயிரம் ரூபாயாம். விட்டிருங்க போலாம். வாங்கின வரைக்கும் பில் போடுப்பா.''

''எட்டு ட்யூப்லைட், இரண்டு டேபிள் லேம்ப், மூனு விசிறி, ஒரு வாட்டர் ஹீட்டர். டிஸ்கவுண்ட் உண்டா?'' அகல்யா கூட்டிப் பெருக்கிக் கழித்துக் கடைக்காரனுடன் வாதாடி, பர்ஸைப் பிரித்துப் பணத்தை எண்ணினாள். இன்னும் என்ன வேணும் என்று மறுபடி கடையை யோசனையுடன் சுற்றினாள். ''ஹாங், எலக்ட்ரிக் பெல், சிவசு பள்ளிக்கூடத்துக்கு மணி வேணாம்?'' அகல்யா திரும்பிப் பார்த்தாள். சிவசு சாண்ட்லீயர் அருகேயே நின்றிருந்தான்.

''சிவசு, பெல் வேணாம் பள்ளிக்கூடத்துக்கு?''

''நான் வாங்கிடப் போறேன் அகல்யா.''

''என்னது?''

''இது, இந்த சரவிளக்கு.''

''சிவசு...''

'என்னோட பரிசா இருக்கட்டும் அகல்யா.''

''தயவுசெய்து சொல்ற பேச்சைக் கேளுங்களேன்.''

''மாட்டேன்.''

''பள்ளிக்கூடம் நல்லபடியா வரட்டும். உங்க ஊர் கோயிலுக்கு வாங்கிப் போடலாம்.''

''நா கோயிலுக்கு விளக்குப் போட்டிருக்கேன். பள்ளிக் கூடத்துக்குப் போட்டதில்லை. இது சான்ஸ். போட்டுறப் போறேன்.''

''கண்ணாடி ஜாயிண்ட் - குழந்தைங்க இருக்கிற இடம்...''

''பரவாயில்லை அகல்யா, நல்லா இருக்கும். ஆபத்து ஒண்ணும் இல்லை. ஹால்ல மாட்டலாம் அகல்யா.''

''தாசி வீடு மாதிரி இருக்கும். சம்பந்தா சம்பந்த மில்லாமே...''

சரட்டென்று சிவசு, அகல்யாவை நோக்கித் திரும்பினான்; வெறித்தான்.

அகல்யா நாக்கைக் கடித்துக் கொண்டாள். வலித்த நாக்கைப் பொத்திக் கொண்டாள். 'ச்சே... அபத்தமாய் பேசி விட்டேன். கடவுளே... எவ்வளவு மேகம் மழை... கடவுளே, ஐயம் சாரி. மெல்லியதாய் சிவசுவின் முகத்தில் கவலை பிரிந்து, கண்ணில் முட்டி கனத்து, இமைகள் தாழ, அவன் கைகளைப் பிடித்துக் கொண்டாள். ''மன்னிச்சுடுங்க சிவசு ப்ளீஸ். மன்னிச்சுடுங்க. இனி இப்படிப் பேசமாட்டேன். நிச்சயமாய் பேசமாட்டேன். தெரியாம நினைப்பில்லாம பேசிட்டேன். தயவுசெய்து மன்னிச்சுடுங்க.'' கெஞ்சினாள்.

அவன் இமைகள் நிமிர்ந்தன. கண்ணில் ரசம் பளபளத்தது. கடல் அளவு வேதனை மண்டிக் கிடந்தது. அகல்யா அவன் புஜத்தில் தலையைச் சாய்த்து மறுபடி ''சாரி'' என்றாள்.

''போகட்டும். போகலாம் வா.''

''சரவிளக்கு வாங்கிக்கலாம் சிவசு.''



''வேணாம், நீ சொல்றதும் சரிதான். கொஞ்சம் கம்பீரம் குறைவுதான் இதில். சிருங்காரமாத்தான் இருக்கிற மாதிரி படுது இப்ப.''

''இல்ல சிவசு!''

''இருக்கு அகல்யா.''

''மிஸ்டர் பில் போடாதீங்க. இந்த சாண்ட்லியர் வேணும். எப்படி பாக் பண்ணுவீங்க? நீங்க மாட்டிக் கொடுப்பீங்களா?'' அகல்யா துள்ளி நகர்ந்து கடைக்காரனுடன் பேச ஆரம்பித்தாள்.

சிவசு அங்கேயே பள்ளிக்கூட ஹாலில் மானசிகமாய் விளக்கைப் பொருத்தி எரியவிட்டு அம்மாவின் நினைவாக நின்றான். தாம் தி தாம் தை தி தை நெற்றிச்சுட்டியும் புல்லாக்கும், வங்கி வளையலுமாய் பதிமூன்று வயசுப் பெண் போலிப் புன்னகையுடன் அதற்குத் தேம நடனமாடிக் கொண்டிருந்தாள்.

அம்மா தலையை விரித்துக் கொண்டு பேசினது நினைவில் ஓடிற்று. ''விளக்கு வச்சா எல்லா ஊட்டுக் குழந்தைகளும் பாடம் படிக்கும். வாய்ப்பாடு சொல்லும். நான் டான்ஸ் ஆடிக்கிட்டு இருப்பேன். ரொம்பக் கஷ்டமா இருக்கும். நட்டுவனார் குரல் கேட்டா வயிறு நடுங்கும். பயமும் வேதனையுமாய் பின்பக்கம் போய் கால் அலம்பிக்கிட்டு வருவேன். அழுமூஞ்சி, இராப்பிடைன்னு அம்மா திட்டு வாங்க. படிக்கணும், ஸ்கூல் போவணும்னு ரொம்ப ஆசை தம்பி. எனக்கு கல்யாணத்துக்குப்புறம் ஐயா சொல்லிக் கொடுத்தாரு எழுதப் படிக்க. ஐயா எனக்குப் புருஷன் மட்டுமல்ல தம்பி. குரு, சிநேகிதம், தெய்வம். 'அவனருளால் அவன் தாள் வணங்கி' ஒரு ரா முழுக்க இதுக்கு அர்த்தம் சொன்னாரு. ஐயாவை விழுந்து கும்பிடற போதெல்லாம் இந்த வரிதான் எனக்குள்ளார ஓடும். நா எதுக்குக் கோயிலுக்குப் போவணும்? பள்ளிக்கூடம் போவ

லையேன்னு குறை உண்டே தவிர, கோயில் குளமெல்லாம் விட்டே போச்சுது எனக்கு.'' அதற்குப் பிறகு சிவசும் கோயிலுக்குப் போனதில்லை; சாமி கும்பிட்டதில்லை; அதில் விருப்பமும் இல்லை. வெறுப்பும் வரவில்லை.

''யப்பா... ஹால் பளீர்ன்னு ஆயிடுச்சு சிவசு. எனக்கே திரும்பித் திரும்பி இதைப் பார்க்கணும்போல இருக்கு. குழந்தைங்க நிச்சயம் சந்தோஷப்படும். ச்சே... என்ன துக்கிரி வார்த்தை பேசினேன். சரட்ன்னு நாக்கில சூடு இழுத்துக் கிட்டிருக்கணும், ச்சே...''

''மறந்து போ அகல்யா.'' சிவசு சாண்ட்லியரை நிறைவுடன் பார்த்தான். சின்னச் சின்ன விரல் நீள ஸ்படிக சரங்களுடன் அந்தப் பெரிய சரவிளக்கு ஹாலில் மிக மெல்லிய ஒலிகளை எழுப்பிக் கொண்டிருந்தது.

ரசமான ஒலிகள். ஏதோ ஒரு தாளத்திற்கே உட்பட்ட சப்தம் கிளுகிளுப்பாய், சில சமயம் பெண்ணின் சிரிப்பாய், சில சமயம் ஜலதரங்கமாய், வீடு திரும்பும் கறவைக் கூட்டத்தின் கழுத்துமணி சப்தமாய், விடியலில் புதரிலிருந்து குப்பென்று சந்தோஷத்துடன் பறக்கும் வலியன் கூட்டமாய், இரை கிடைத்த சந்தோஷத்தில் கூவலிடும் கழுகின் குரலாய், புணர்ச்சிக்குப் பிறகு பிரியமுள்ள பெண் பின்புறம் நடந்து போகும் கொலுசின் ஓசையாய், சாண்ட்லியரை மாட்டின ஒரு நிமிஷத்தில் சிவசுவின் மனசில் பல படிமங்கள் வந்து போயின.

அந்த சாண்ட்லியருக்கு நேர் கீழே உட்கார்ந்து துரிதமாய் வீணை வாசிக்க வேண்டும்போல் சிவசுக்குப் பட்டது. அவனுக்கு வீணை வாசிக்கத் தெரியாது. அதன் சூட்சமங்கள் பிடிபட்டதேயில்லை. ஆனாலும், அந்த வாத்தியம் பற்றி சகலமும் தெரிந்தவனாய் அமர்ந்து மீட்ட வேண்டும் போல் தோன்றிற்று. ரொம்ப சந்தோஷமான நேரங்களில் இப்படித் தோன்றும். இவ்விதம் மட்டுமே தோன்றும். சில சமயம் ஒரு



முரட்டுக் குதிரையில் ஆரோகணித்து நளினமாய் விரட்டிக் கொண்டு போவதும் தோன்றும். அதுவும் ஒரு சந்தோஷம். வீணை வாசிப்பது போல் சந்தோஷம். ஆனால் அதுவரை குதிரையும் ஓட்டியதில்லை. இது ஏன்? தன்னைத் தானே சிரிப்புடன் சிவசு சில சமயங்களில் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறான். ஆளுமையில் உள்ள ஆசை என்று புத்தி பதில் சொல்லிற்று. வலிமைமிக்க ஒன்று தனக்கு கீழ்ப்படிந்து நடக்கிறது என்கிற லேசான திமிரின் சாயல் என்று பதில் வந்தது. இதற்காக நேரடியாய் வீணை வாசிக்கிற சுகத்தையும், குதிரை ஏறுகிற வேதனையையும் கைக்கொள்ளத் தேவையில்லை. இதற்கு இணையாய் உள்ள காரியங்களைச் செய்தால் போதும். வழங்குதல் இதற்கு இணையான காரியம். ஒரு நிறைவைத் தருகிற விஷயம். நிறைவுக்கப்பால் ஏற்படும் சந்தோஷம் பரம சுகம். வெகுநாளைக்குப் பிறகு இப்படி ஒரு நிறைவு ஏற்பட்டிருக்கிறது. கோயிலுக்கு விளக்குப் போட்டபோது இந்த நிறைவு வரவில்லை. அதை முன்பின் தெரியாத அகல்யாவிடம் என் செலவு என்று பரிமாறிக் கொண்டபோது நிறைவு வந்தது. 'வேறு எங்கு விளக்குப் போடணும்னு என் புத்தி அலையும்' என்று அவளிடம் உண்மையைச் சொன்னபோது அதிகரித்தது. வெட்கமின்றி இருத்தலும் ஒரு சந்தோஷம். நிஜம் சொல்வது பரம சுகம். சந்தித்து சில நாட்களிலேயே இரண்டாவது முறையாக அகல்யாவின் மூலம் இந்த சந்தோஷம் ஏற்பட்டு விட்டது. இந்த சரவிளக்கு சந்தோஷத்திற்குத் தான் மட்டும் காரணமில்லை; அகல்யாவும் காரணம். சட்டென்று அகல்யா தூக்கி எறிந்ததும், தூக்கியெறிந்த வேகத்திலேயே வாரியணைத்துக் கொண்டதும், வெகுநாள் பசுமையாக இருக்கும்.

தாசி வீடு என்று சொன்னது ஆரம்பத்தில் சிரமமாகத் தான் இருந்தது. தோளில் சாய்ந்து மன்னிப்புக் கேட்டதும்

குறைந்துவிட்டது. சாண்ட்லியருக்கு ஓடிப்போய் காசு கொடுத்ததும் மறைந்துவிட்டது. இரண்டாயிரம் ரூபாய் செலவு அதிகம்தான். அகல்யாவுக்குப் பாரம்தான். என் காசாய் இருக்கட்டும் என்று உடனே சொன்னால், பிரித்துப் பேசுவதாய் போகும். அகல்யாவின் மனசு வேதனைப்படும். உறவில் குழப்பம் தலையெடுக்கும். ஆனால், இந்தச் செலவு என்னுடையதாய் இருப்பதுதான் உத்தமம். என் செலவில் அகல்யாவுக்கு இந்த சந்தோஷம் புரிபட, அப்போது மறுபடியும் எனக்குக் கர்வம் பொங்கும். வீணை வாசிக்கிற சந்தோஷம் வரும். துள்ளி, சாண்ட்லியருக்காகக் கடைக்காரனிடம் ஓடிய அகல்யாவின் பின்பக்கம் சிவசுவின் மனசுள் ஓடிற்று. நல்லவேளை, அகல்யாவைக் கோபித்துக் கொள்ளவில்லை. கோபமூட்டுகிற துக்கிரித்தனந்தான் அது. ஆனால், எதன் பொருட்டோ கோபம் உச்சிக்குப் போக வில்லை. கோபத்திற்குப் பதில் வருத்தம் கவிழ்ந்துவிட்டது. 'நீயுமா புருட்டஸ்?' என்கிறதாய் வந்துவிட்டது. மகத்தான சொல் அது.

வேதனைப் படுத்தியவர்கள் மீதுள்ள அன்பையும், பரிவையும் வேதனைப்படுத்திய பிறகும் அகற்ற முடியாமல் தவிக்கிற நிலை அது. சற்று ஆழமான காதல். அகல்யாவின் மீது அப்படி ஒரு பிடிப்பு விழுந்துவிட்டது. அகல்யாவும் என்னை இவ்விதமே உணர்ந்திருக்க வேண்டும். அதனால் தான் உடனே மன்னிப்புக் கேட்க முடிந்தது போலும்! தவறுக்குக் காரணம் தேடாமல் தவறைத் தவறு என்று உடனே ஒத்துக்கொள்ள முடிந்தது போலும்! அகல்யா இனிமையானவள். சற்று முரட்டு இனிமை, அசுர தித்திப்பு. அவள் பதட்டத்திற்கும், பரபரப்பிற்கும் அவளின் அதீத சக்தி காரணம். தன் புத்தி பலத்தை, உடல் பலத்தை செலவழிக்க முடியாமல் போன பெண் இவள். சரியாய் செலவழிக்கப் போகிறோம் என்கிற மகிழ்ச்சி சிலசமயம் இவளுக்கு



சறுக்கலைக் கொடுக்கலாம். சறுக்கும்போது சரிபண்ண வேண்டும். அணைத்து அமைதிப்படுத்த வேண்டும்! வலிமை மிக்க ஒரு பெண் துணைவியாய் கிடைத்தது அதிர்ஷ்டம் தான். இணையான வலிமையுடன் துணை இருக்கிறது என்பதே கர்வம்தான். அம்மா சொல்லுகிற பெண்ணுக்குத் தாலி கட்டி, அவள் அறியாமைக்கு அசந்துபோய் உட்காரு கிற சோகம் நல்லவேளை எனக்கு வரவில்லை. வாழ்நாள் முழுவதும் ஒரு பெண்ணுக்குத் திரும்பத் திரும்ப அரிச்சுவடியை சொல்லிக் கொண்டிருக்கும் சோகம் நல்லவேளை எனக்கு ஏற்படவில்லை. இவள் எனக்கு இணையாக வருவாள்; என்னை மீறியும் போவாள் என்கிற நினைப்பு வரும்போது என்னுள் மீண்டும் புதிதாக ஒரு வேகம் பிறக்கிறது. ஒரு முரட்டுக் குதிரையில் ஏறி அமர்ந்து தலைதெறிக்கத் துரத்துகிற வேகம். 'ஓஹோய்' என்று கூச்சலுடன் வாளைச் சுழற்றியபடி தாக்குதல் நடத்துகிற வேகம். உரமுள்ள எல்லா மனிதர்களுக்கும் உள்ளுக்குள் இருக்கிற போர்க் குணம்.

யுத்தம் என்பது இன்று அபூர்வமானாலும், இன்னும் போர்க்குணம் மறையவில்லை. வெவ்வேறு விதங்களில் வெளிப்பட்டுக் கொண்டுதானிருக்கிறது. இடையை வளைத்துக் குதிரையிலேற்றிப் பெண்ணைக் கடத்திக் கொண்டு போகும் குணம், எல்லா ஆண்களுக்கும் இருக்கத் தான் செய்யும் என்று தோன்றுகிறது. தெரியாத பெண்ணை மட்டுமல்ல; நன்கு தெரிந்த பெண்ணைக்கூட இன்று இப்படி கடத்திக்கொண்டு போக முடியாது. இப்படிப்பட்ட வலிவுடன் இருப்பது சட்டப்படி குற்றம். இது அநாகரிகம். ஆனால் புத்தி மட்டும் இப்போர்க் குணத்தோடயே இருக்கும்.

அகல்யா சேலைத் தலைப்பை இழுத்து சொருகிக் கொண்டு சிவசுவின் எதிரே வந்து, ''என்ன யோசனை?'' என்றாள்.

''ரெண்டு பல்பு மாட்டணும், ஹெல்ப் பண்றீங்களா?'' குழந்தை மாதிரி தலையை ஆட்டிக்கொண்டே கேட்டாள். மலர்ந்தாள். மலர்ந்த கண்கள், வளைந்த இதழ்கள், கூர்மையான நாசி, கழுத்திலிருந்து சரட்டென்று வழுக்கி இறங்கும் தோள்கள், இழுத்துச் செருகின புடவைக்கு நடுவே இடுப்பின் இடைவெளி, திமிருகின்ற மார்புகள்! சிவசு குதிரையில் ஏறியமர்ந்தான். கடிவாளத்தை இறுகப் பிடித்துக் கொண்டு பல்லைக் கடித்தபடி, குதிகாலால் குதிரையின் வயிற்றில் உதைத்தான். லகானியின் நுனியால் குதிரையின் பிருஷ்டத்தைச் சுளீரென்று தாக்கினான். குதிரை பறந்தது. மீண்டும் தாக்கினான். பேயாய் பறந்தது. மீண்டும் தாக்கினான். ஒலியும், ஒளியும் சிதறிவிட்டன.

சிவசுவின் காதுகளில் இரத்தம் பாய்ந்தது. தாடைகளில் வலுவேறிற்று. புஜங்கள் திண்மை பெற்றன. கழுத்து வளைவில் தசைகள் முறுக்கேறின. முதுகு தசைகள் ஏறி இறங்கின. வயிற்றில் குதிரையின் குளம்புகள் பதிந்தது. மெல்லிய ஏணியில் அகல்யா பல்ப்போடு ஏறினாள். சிவசு ஏணியைப் பிடித்தபடி நின்றுகொண்டிருந்தான். அகல்யா கைநீட்டி பல்பைப் பொருத்தினாள். சிவசு கண்களை மூடிக் கொண்டான். ஏணி வளையக் கீழே இறங்கினாள். பிடித்துக் கொண்டிருந்த சிவசுவின் கைகளுக்கு நடுவே வந்து நின்றாள். மெல்ல புஜத்தை அசைத்து, 'நகருங்க' என்கிற விதமாய் உணர்த்தினாள். சிவசு அசையாமல் நின்றிருந்தான். 'என்ன' என்கிற மாதிரி அவனை அவள் ஏறிட்டுப் பார்த்தாள். அவன் கண்களில் கனமாய் ஒரு போதை இருந்தது. இப்படி இமைக்காமல் அவன் பார்ப்பது அதிசயமாயிருந்தது. இடக்



கையை அவன் தோளில் வைத்து, ''என்ன ஆச்சு?'' மெல்லிய குரலில் கேட்டாள்.

''ஐ லவ் யூ அகல்யா!'' சிவசு பதில் சொன்னான். இது வேறுவித லவ் யூ. வேறு அர்த்தம் காட்டுகிற சொல். இந்த லவ்யூவுக்கு அனுமதி கொடு என்கிற அர்த்தம். கொடுக்காமல் போனால் பிடுங்குவேன் என்று பொருள். ஆனால், இவ்வளவு சீக்கிரம் இந்த லவ் யூவா? அதுவும் சிவசுவா? ''என்னாச்சு?'' அகல்யா மறுபடியும் கேட்டாள். தன் குரலைத் தானே நடுக்கமாய் உணர்ந்தாள்.

''ஐ லவ் யூ அகல்யா'' சிவசு அதே பதிலைச் சொன்னான். காயப்பட்டு விட்டானோ? காயத்திற்கு உடனே மருந்து போட்டுவிட்டதால் மலர்ந்து விட்டானோ! மலர்ச்சியை வெளிப்படுத்தத் தவிக்கிறானோ! இது மன்னிப்புக் கேட்ட மகிழ்ச்சியா? இல்லை சரவிளக்கு தந்த சந்தோஷமா? ஆனால் இந்தப் பகல் வேளையில், வெயில் புழுக்கத்தில் வீட்டுக்கு நடுவே இந்த லவ் யூ எதற்கு? வேண்டாமெனில் விடுவானா? எதற்கு வேண்டாமென்று சொல்ல வேண்டும்? சிவசுவை வேதனைப் படுத்திவிட்டு விலக்கி வைப்பது எதற்கு? அப்படி என்ன செய்துவிடப் போகிறாய்? உலகத்தில் நடக்காத காரியம் எதை நடத்திவிடப் போகிறாய்? உனக்கு நான் வேண்டும் இப்போது, அவ்வளவுதானே! வா. வந்து எடுத்துக் கொள்.

ஆனால் அதை வாயைத் திறந்து எப்படிச் சொல்வது! வாயைத் திறக்காமல் எப்படிப் புரிய வைப்பது?

அகல்யா அவன் தலையைக் கோதிவிட்டாள்.

''நம்ம ரூமுக்கும் ஒரு சாண்ட்லியர் வாங்கலாமா? இதைவிடப் பெரிசா... ரூம் முழுக்க நிறைஞ்சிருக்கும் படியா இன்னொன்று வாங்கலாமா?''

சிவசு வாய்விட்டுச் சிரித்தான். வலக்கையால் அவள் இடுப்பைத் தொட்டான். வளைத்து இழுத்தான். குனிந்து அவள் காதோரம் முத்தமிட்டான். பிடரிப் பக்கம் பல்பதியக் கடித்தான். மற்றொரு கை அவள் முதுகில் பரவ, இன்னும் இறுக்கினான். அவன் கடித்த வேதனையில் அகல்யா நெகிழ்ந்தாள். கைகளைப் பின்பக்கமாய் கொண்டுபோய் புஜங்களைப் பற்றி அவன் தோள் வளைவில் முகத்தைச் சாய்த்துக் கொண்டு 'இன்னும் கடி' என்பதாய் கழுத்தைக் காட்டினாள்.

'முருகீச் சிவந்த கழுநீரும்
முதிரா இளைஞர் ஆருயிரும்
திருகிச் செருகும் குழல் மடவீர்
அம்பொற் கபாடம் திறமினோ.'

சிவசுவின் மனசு பரணி பாடிற்று.

## 10

**மு**திரா இளைஞன். அடொலஸெண்ட் யார்? நானா? ஆமாம்! நான்தான். இத்தனை படிப்புக்குப் பிறகும், அப்பா சொல்லிக் கொடுத்த நிதானத்துக்குப் பிறகும், பிரித்துப் பிரித்துப் பார்க்க அம்மா கற்றுக் கொடுத்த பிறகும், இப்படி தாடையும் புஜமும் தவிக்கிறதே! உருகி இவள் கடிதம் எழுதின பிறகு, உள்ளே குதிரை அதிர்ந்து ஓடுகிறதே, ஒரு பெண்ணின் இடுப்பு வளைவும், கழுத்துப் பக்கமும், பிருஷ்டமும் பரவசப்படுத்துகிறதே! முதிர்ந்தவன் இவ்விதம் அவஸ்தைப்படுவானா? பெண்ணை நெருங்கி 'லவ் யூ' என்பானா? அவளைப் பலவீனப்படுத்தி வளைத்துக் கொள்வானா?



'திருகிச் செருகும் குழல் மடவீர்' என்று பெண்மையை மெல்ல குற்றம் சொல்லுவதும், 'பூவைப் பறிப்பதுபோல என் உயிரைப் பறித்தாய்' என்று உவமை காட்டுவதும் நியாயம்தானா? ஏன் பூவாய் இருக்கிறாய், புதராய் இரேன், மூங்கில் புதராய், கற்றாழைச் செடியாய், காரையாய் இரேன். வெட்ட முடியாதபடி அடர்த்தியாய் நில்லேன்.

முடியவில்லை.

காதல் என்று பஸ் ஏறி பட்டணம் வந்துவிட்டு இடுப்பை வருடி குறுக்கிக் கொள்கிறாய்.

இழுத்த பிறகும் அகல்யா பேசாமல், மௌனமாய் இருக்கிறாள். சரி என்று சும்மா இருக்கிறாள். விட்டுக் கொடுக்கிறாள். வேதனைப்படுத்தியதை மனதில் வைத்து, 'போனால் போகிறது' என்று வளைந்து கொடுக்கிறாள்.

காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே சரி, இவன் கருத்து என்ன?

''சாண்ட்லியர் சிருங்காரம்தான். படுக்கையறை சிங்காரிப்புதான். நம் அறைக்குப் பெரிசா வாங்குவமா சிவசு'' என்றாள். 'அகல்யா, என் அகல்யா, என் இந்த அத்துமீறலுக்கு அனுமதி கொடுத்ததற்கு நன்றி பெண்ணே! என்னால் இதைத் தவிர்க்க முடியவில்லை. எனக்குள்ளும் அதீத சக்தி பொங்குகிறது. உடம்பு மட்டுமல்லாமல், மனசும் பதட்டமாய் அலைகிறது. மடங்கி சிறிதுநேரம் மயக்கத்தில் சும்மா இருக்க விரும்புகிறது. மனசு தூங்க விரும்புகிறது. அலைவுகள் அடங்கி அமைதிப்பட விரும்புகிறது. ஆழமாய் கடலுள் இறங்கி கல்லென இருக்க விரும்புகிறது. பிரிவின் பதட்டத்தை எனக்குப் போக்க வழி தெரியவில்லை அகல்யா.

புத்தியைக் கூர்மையாக்கி, கடிவாளமிட்டு இறுக்கி, 'அடங்கு' என்று சொல்லலாம். ஆனால், உள்ளே குதிரை

தனிக்கும். கால் பிறாண்டி தடுமாறும். நுரை தளும்ப, கண்ணில் நீர் கோத்து அவஸ்தைப்படும்.

'மேலும், என் சந்தோஷத்தை எப்படிச் சொல்ல உனக்கு கடிதத்தில் எழுதி மாளவில்லை அகல்யா.'

'கவிதையோ, சித்திரமோ சொல்லப் போதுமானதாய் இல்லை. பாஷைக்கு வலுவேயில்லை. பாதிகூட மனதை சொல்வதில்லை.' சிவசு நடுங்கினான். அகல்யாவின் அப்பா உட்காரும் நாற்காலியின் பிடியில் அமர்ந்து கொண்டான். அகல்யாவின் இடுப்பில் முகத்தைப் பதித்துக் கொண்டான்.

உடனே பயம் வந்துவிட்டதா? இது தப்பு என்று நினைத்து விட்டாயா? என்னை மடக்கிக் கடித்துத் தின்ன முயற்சித்து, வேண்டாம் என்று நினைத்து விட்டாயா? எனக்குத் தொந்தரவு என்று நினைத்து விட்டாயா? சிவசு மைடியர் மேன். கெட்டிக்காரனாய் இருப்பதில் பெரிய சிரமம் இதுதான் நண்பனே! நல்லவனாய் இருப்பதின் கஷ்டம் இதுதான் ஸ்நேகிதா! பாடவோ, பேசவோ, சோறு தின்னவோ யார் அனுமதியும் வேண்டாம். இந்த முயற்சிக்கு இன்னொரு உயிரின், நபரின் அனுமதி வேண்டும். முழுவது மாய் சம்மதம் என்று சொல்லவேண்டும். அடுத்தவர் மனநிலை தெரிய வேண்டும். அலை அலையாய் இவ் விஷயம் போனதற்கு இதுதான் காரணம். உன் அவஸ்தை புரிகிறது சிவசு. கொஞ்சம் காத்திருப்போமே இதற்கு. இயல்பாய் கிளறட்டுமே இது. நடுப்பகலில் பள்ளிக்கூட ஹாலில் தேவைதானா? அவசியம் வேண்டுமெனில், 'மாட்டேன்' என்று ஒதுக்கமாட்டேன். அமைதியாய் இரு. கிணற்று ஜலத்தை வெள்ளமா... வா. வேண்டாமென்றா கிணறு சொல்லும். வெளி உலகம் வேறு உலகம். அதற்கு தெரிய வருமே! வா... திசைமாறின ஆறு மாதிரி இங்கேயே தங்கிவிடு. ஆற்று நடுவே உறை கிணறாய் நானும் இருக்



கிறேன், சுழல் தெரிய சிரிக்கிறேன். ஆனால், அந்த வெயிலின் நடுக்கூடத்தில்... என் மனம் புரிகிறதா சிவசு?

அகல்யாவை நிமிர்ந்து பார்க்க சிவசு வெட்கப்பட்டான். அவள் அமைதியாய் அவன் தலையைக் கோதிக் கொண் டிருந்தாள்.

அகல்யா மறுத்திருப்பின் மனசு புழுங்கியிருக்கும். மலர்ந்தால் தப்போ என்று குன்றிப்போகும். இரண்டுக்கும் இடைப்பட்டு இவள் நின்றது உயர்வாயிற்று. மறுக்க மாட்டேன் என்பதே மயங்க வைத்துவிட்டது. வழங்கத் தயாரானதே பெரிய நிறைவாய் நின்றுவிட்டது. இதுதான் சூட்சுமம். உறவின் பலம். மயங்குவதும், மயங்காததும் முக்கியமில்லை; எந்த முன்னேற்பாடும் இன்றி தொட்டதே சுகம். இதுவே கருணை, காதல்.

'அன்னபூர்ணே... வி...சாலாட்சி' சிவசுக்கு தன் அப்பா இரவில் திண்ணையில் பாடுவது நினைவுக்கு வந்தது. யார் அந்த அன்னபூரணி? சிலையா? கோயில் சிற்பமா? இல்லை அது அம்மா. இதமளித்த பெண். பதட்டங்கள் குறைந்து அமைதிப்படுத்திய பெண். திண்ணை தாண்டி உள்ளுக்கு இழுக்காமல், திண்ணையை விட்டு வெளியே விரட்டாமல் வெற்றிலை போட மட்டும் வீட்டுக்கு வந்தாலும் இதமளித்த பெண்.'

'அன்னபூர்ணே...' சிவசு தலையை அழுத்திக் கொண்டான். 'வி...சா...லாட்சி' மெல்லப் பாடினான்.

''அட, என் செல்ல ராஜப்பாவே...'' அகல்யா அவன் பாடியதும் இறுக்கிக் கொண்டாள். 'என் குழந்தை யில்லையா நீ? என் செல்வமில்லையா நீ? நானிருக்கிறேன் ஐயா! சகல நேரமும் உன்னோடு... உன்னுள் உனக்காய்... எதற்கு இத்தனை குழைவு உன் குரலில்? ஏன் இத்தனை நெகிழ்வு உன் பாட்டில்? உன் சகல காரியத்திலும் நான் உண்டு. இந்த அகல்யா உன் துணை. உன் பலம். எழுந்திரு

சிவசு. உரமுடன் நில்! தெரு முழுக்க சாண்ட்லியர் வேணுமா? வா போடுவோம். இனி மறந்தும் உன்னை ஹிம்சிக்க மாட்டேன் சிவசு. நான் உன்னவள். உன் அகல்யா.'

அகல்யா அவன் முகத்தை நிமிர்த்தினாள். இரண்டு கன்னங்களிலும் முத்தமிட்டாள்.

'அம்மா' சிவசு அயர்ந்தான். பெண் போகமா! வெறும் போகமா? இல்லை அதன் ஊடே ஏதோ ஒரு தனி விஷயமும் இருக்கிறது. ஆணுக்கு மிகப் பாதுகாப்பான இடம் என்று இப்போது படுகிறது. கடவுளைவிட மிக நெருக்கமான உறவு என்பதாய் தெரிகிறது. மர நிழல் மாதிரி... குளிர் மாதிரி... ஏணை மாதிரி சுகம்.

அம்மாவின் இன்னொரு முகம்தான் மனைவி. ஆறு வயசுக்குப் பிறகு அம்மா விலகி நிற்க ஒரு பாழ்வெளிக் காலம்? உடம்பு மலர்ந்ததும், உரமேறி நின்றதும் மறுபடியும் ஆறு வயது குணம் திரும்பிவிடுகிறது. ஒடுங்கிக் கொள்ள ஆசை வருகிறது. ஆறு வயசில் வெட்கமில்லை, கள்ள மில்லை; இன்று சொல்லிக்கொடுத்த வெட்கமும், காலம் கொடுத்த கள்ளமும் ஒடுங்கிக் கொள்ளும் ஆசை 'ச்சீச்சீ' என்று இழித்துப் பேசுகின்றன. இது தப்போ என்று கேள்வி கேட்க வைக்கின்றன.

நான் இனி வெட்கப்படப் போவதில்லை.

## 11

ஆனால் ஒரு பெண்ணை எத்தனை நேரம் இவ்விதம் கட்டிக்கொண்டு இருக்க முடியும்? முகம் பதித்துக் கொண்டதில் அகல்யாவின் இடுப்பு இப்போதே கசகசக்க ஆரம்பித்துவிட்டது. சுற்றிக்கொண்டிருக்கும் இடது கை



'போதும் வேறு நிலைக்கு போ' என்கிறது; விடுபடு என்கிறது. இங்கு எதுவும் எந்த சந்தோஷமும் நிரந்தரமில்லை.

ஆனால் இது செங்கல்பட்டில் பஸ் ஏறும்போது தெரிய வில்லை. பட்டணத்தில் பரபரத்து நடக்கும்போது தோன்ற வில்லை. ஏணியில் ஏறின அகல்யாவைக் கண்டு வெப்ப பெருமூச்சு விட்டபோது வரவில்லை.

புல்வெளியில் ஓடிக்கொண்டிருக்கும் குதிரை இடுதிப் பென்று ஓடையை கடப்பது மாதிரிதான் இது. குளிர்வும், பயமும், சந்தோஷமும் தோன்றும் சின்ன அனுபவம்! மறுபடி புல்வெளி மணல்... சிவசு நகர்ந்தான்.

அகல்யா சிவசுவின் முகத்தை நிமிர்த்தினாள்.

"போர்டு போட்டுடலாமா? அது மட்டும்தான் பாக்கி. அதை முடிச்சுட்டா பள்ளிக்கூடம் தயார்."

"அப்பா எங்கே அகல்யா?"

"நாலு தெரு தள்ளி ஒரு சில்ரன் கார்டன் பள்ளிக்கூடம் இருக்கு. நடத்த முடியலையாம். பசங்களை இங்க மாத்த முடியுமான்னு கேட்கப் போயிருக்காரு. எடுத்தவுடனே மூணு க்ளாஸ் ஆரம்பிச்சிடலாம். டீச்சர்ஸ்லோட அப்ஸர்ப் பண்ணிக்கச் சொல்றாங்களாம். பேசப் போயிருக்கிறார்."

"குட்! இது நல்ல விஷயம். பசங்க நிறைஞ்சுதுன்னா நமக்கும் உற்சாகமா இருக்கும்."

"காம்பன்ஸேஷன் கேட்டாங்க போலிருக்கு!"

"நியாயமானா கொடுத்திடலாம்."

"நானும் அதுதான் சொன்னேன். பசங்களை நம்ம மெத்தடுக்கு மாத்தணும். அதுதான் சிரமம்."

"பசங்களை மாத்தலாம் அகல்யா. டீச்சர்ங்க விஷயத்திலே ஜாக்கிரதையா இருக்கணும், முரட்டுத்தனமே காட்டக்

கூடாது. மறந்துபோய் கூட குரல் உயர்த்தக் கூடாது. அங்க இப்படிதான்னு அவங்க சொல்லக்கூடாது.''

''யோசிக்கணும் சிவசு. மூணு கிளாஸ்னா இன்னும் கொஞ்சம் சாமான்கள் வேணும். பின்பக்கம் தனியா லாவெட்ரிக் கட்டணும்.''

''கட்டலாம் அகல்யா. என்னிக்கிருந்தாலும் செய்யணும். இன்னிக்கே செய்துட்டா போச்சு.''

சிவசு வெளியே வந்து, சுவர் அகலம் பார்த்து, பென்சில் கோடு வரைந்து, துல்லியமாய் ஆணி அடித்து, கம்பிகள் வளைத்து போர்டு மாட்டினான். ஈரத் துணியால் துடைத்து சுத்தம் செய்தான். இறங்கி ஹாலுக்குள் வந்து சட்டையைக் கழற்றித் துண்டால் உடம்பைத் துடைத்துக் கொண்டான்.

''சாப்பாடு போடட்டுமா?''

'அப்பா வரட்டுமே!''

''அப்பா காலைல சாப்பிட்டாச்சு. இனிமே வந்து மோர்தான் சாப்பிடுவாரு.''

''நீ...?''

''இன்னும் இல்லை.''

''ரெண்டுபேரும் சாப்பிடலாம்.''

இலையில் சோறு விழுந்த பிறகு சாப்பிட முடியவில்லை. பசியில்லை இரண்டு பேருக்கும்! மூன்றாவது கவளத்திற்கு மேல் உள்ளே இறங்கவில்லை.

''சாப்பிடேன் அகல்யா.''

''நீங்க முடிங்க!''

அகல்யா ஒரு கவளம் சாப்பிட்டு தண்ணீர் குடித்தாள். சரக்கென்று ஒரு பருக்கை உள்ளே இடம் மாறிற்று. புரையேறிற்று. மூக்கில் காரம் ஏற, தலையில் தட்டிக் கொண்டாள்.



''யாரு நினைக்கிறாங்களோ?'' அகல்யா சிரித்துக் கொண்டே இன்னுமொரு வாய் ஜலம் குடித்தாள்.

''உங்க அப்பா பேசி முடிச்சிருப்பாரு.''

''ம்... ம்ஹூம்! அப்பா இல்லை. உங்க அம்மா சிவசுக்கு இந்தப் பொண்ணு சோறு போடுதோ இல்லையோன்னு நினைச்சிருப்பாங்க...''

''எங்க அம்மாவா? இருக்காது அகல்யா! வேற யாராவது இருக்கும்!''

''வேற யாரும் எனக்கு உறவு, நினைவூட்டும்படியா? அப்பா! இப்ப உங்க அம்மா!''

''அவருக்கு யாரும் சொந்தக்காரங்க இல்லையா!''

''யாருக்கு?''

''செத்துப் போனாரே, அவருக்கு அப்பா, அம்மா இல்லையா? கூடப் பொறந்தவங்க உண்டா?''

அகல்யாவின் நெஞ்சில் பந்து உருண்டது. பம்பாயில் இவள் வீட்டுக் கூடமும், சமையலறையும் மனசுள் ஓடின. அவன் சட்டைகள் நினைவுக்கு வந்தன. பேனாவும், தினமும் துடைக்கிற பூட்சும் நினைவில் மின்னிற்று. ப்ரீப்கேஸ் ஞாபகம் வந்தது! மலர்வளையமும், பட்டயமும் ஓடின. சுவரைப் பார்த்து உரக்கக் கத்தியபடி டெலிபோனில் பேசுபவன் முதுகு ஞாபகத்துக்கு வந்தது. முகம்? முகம்? முகம்? பாஸ்போர்ட் சைஸ் முகம்! போரில் வீரச்செயல் புரிந்து இறந்து போனதாய் சொல்லும் போட்டோவுடன் கூடிய கடிதம், ப்யூகல் ஓசை. உயர எழுந்து மெல்ல தலைகீழாகி நிற்கும் துப்பாக்கிகள். டரடரடரடர என்று ட்ரம் ஓசை வெறுமை. புறங்கையைப் பற்றி அழுத்தி ஆறுதல் சொன்ன பிரதமர் முகம் உடைந்து கேவினபோது தோளில் அணைத்துக் கொள்ள முகத்தில் உறுத்தின. பிரதமரின் நூல் புடவை மனசுள் தெரிந்தது.

எவ்வளவு ஹிம்ஸையான காலங்கள் அவை? வெறுமை தலைவிரித்து ஆடிய நேரங்கள் அவை. வேண்டாம் சிவசு வேண்டாம். மறுபடி அது வேண்டாம்.

''அகல்யா!''

அவள் கண்களில் லேசாய் நீர் துளிர்த்தது.

''ஏய்... என்ன?''

''ஒண்ணுமில்லே. ஒரு சின்ன உதவி செய்றீங்களா?''

''சொல்லு பொண்ணே?'

''அவர் பேச்சு எடுக்க வேணாம்.''

''ஏன் அகல்யா?''

''இன்னொரு நாள் நானே விவரமா அவரைப் பத்திச் சொல்றேன்! அதுவரைக்கும் ப்ளீஸ் சிவசு.''

''ஓகே! ஐயாம் ஸாரி! ஓகே... நா...''

''கொஞ்சம் குழம்பு வேணுமா?''

''பசியில்லை அகல்யா.''

''நிஜமாவா?''

''ஆமா...''

''எனக்கும் பசிக்கல சிவசு.''

''எழுந்துடுவோம்! பசிச்சா மறுபடி சாப்பிடறது.''

''சிவசு...''

''என்ன?''

''தாங்க்யூ.''

'ச்சீ போ.... பிரிச்சுப் பேசாதேன்னு எத்தனை தரம் சொல்றது?''

வாசற்கதவு ஓசைப்பட்டது.

''அப்பா'' என்றபடி அகல்யா வாசலுக்கு ஓடினாள்.



கிழவர் நாற்காலியில் சரிந்து கட்டைகளை சுவரில் சாய்த்து, ''ஈஸ்வரா என் சிவனே'' என்றார்.

''மோர் எடுத்தா அகல்யா'' சிவசு சமையலறையைப் பார்த்துக் கூவினான்.

''அட, நா இது மோர் சாப்பிடறது நேரம்னு எப்படித் தெரிந்தது?''

''அகல்யா சொல்லிச்சு.''

''உட்கார்ந்து என்னைப்பத்திப் பேசினீங்களா இரண்டு பேரும்? நல்லது. சாப்பாடு ஆச்சா? குழம்பு சாதம் அப்படியே இருக்குது தட்டுல'' முற்றத்தைச் சுட்டிக் காட்டினார். பாதி சாதத்தோடு பக்கத்து பக்கத்தில் தட்டுகள் கிடந்தன.

''பசியில்லை.''

''நிறையப் பேசினா பசி அடிபட்டுப் போகும். பேசாம உட்கார்ந்திருந்தாலும் பசி மந்திச்சிடும். நிறையப் பேசினீங்களோ?''

''ஆமா! பள்ளிக்கூடம் பற்றி.''

''அடடே அப்படியா'' கிழவர் மெல்லச் சிரித்தார்.

இந்தக் கிழவர் குசும்பான ஆள், சின்ன வயதில் நிறையப் பேரை கண்ணில் விரல்விட்டு ஆட்டியிருப்பார். இடது, வலது, மேல், கீழ் எல்லாம் தெரிந்து ஆட்களை அசர அடித்திருப்பார். இன்னும் மேலே பார்க்கவில்லையே! லஸ்தர் தெரியவில்லையே! தெரிந்து சும்மா இருக்கிறாரா?

''அந்தப் பள்ளிக்கூடம் பார்த்தேன் அகல்யா. குழந்தைகள் பத்தி விசாரிச்சேன். எல்லாம் இந்தப் பக்கத்து குழந்தைங்கதான். நாப்பது பேர் சுலபமா தேறும். சந்து வீட்ல பள்ளிக்கூடம். ஓட்டுக்கூரை. ஜன்னல் காத்து எதுவும் இல்லை. ஆயிரம் ரூபா கேட்டாங்க. சரின்னுட்டேன். மூணு டீச்சரை அப்ஸார்ப் பண்ணச் சொன்னாங்க. இரண்டு பேரு

சின்னப் பொண்ணா இருக்கு. ஒருத்தவங்க கொஞ்ச நடு வயசு. அந்த அம்மா பி.டி.யாம். பொண்ணுங்க சூடிகையா இருக்குது. வரச்சொன்னேன். அடுத்த வாரம் வருவாங்க. காபிக்கு பால் இருக்கா அகல்யா? எனக்கும் ஒரு டம்ளர் எடுத்தா, மோர் வாணாம்.''

''பார்க்கிறேம்பா?''

''சிவசு தம்பி.'' அகல்யாவின் அப்பா முன்னால் குனிந்தார். ''பதினைந்து நாள்ல பள்ளிக்கூடம் திறக்கனும். அதுக்கு முன்னாடி கல்யாணம் வைச்சுடலாமா? அம்மா கிட்ட கேட்கறீங்களா?''

''அப்படியா? நா... சரிங்க.''

''வற்புறுத்தல தம்பி; அம்மாகிட்ட கேட்டுக்கங்க. இடம், நாள், விசாரிங்க.''

''நாள், இடம் நீங்க சொல்லிடுங்க ஐயா.''

''இங்க நம்ம வீட்டுல வெச்சிடலாமா? அம்மா வருவாங்களா?''

''வரமாட்டாங்க ஐயா. இங்க கல்யாணம் முடிச்சிட்டு அம்மாகிட்ட போய் வந்துடறோம்.''

''ரிஜிஸ்டர் பண்ணலாமா தம்பி?''

''செய்யலாங்க.''

''எப்படி தாலி கட்டறீங்க? மோதிரமா, கையெழுத்து மட்டும் போதுமா?''

''அகல்யாவைக் கேட்டுக்கலாம் ஐயா. தாலி கட்டினா தான் அதுக்குக் கம்பீரமில்லையா! வெளி வாசல்ல போணுமே.''

கிழவர் கையை நீட்டி சிவசுவைத் தொட்டார். 'என் சிவனே' என்றார்.



'அம்மாடி' என்று உள்ளே பார்த்து அகல்யாவைக் கூப்பிட்டார். ''சிவசு தம்பி, கல்யாணத்துக்கு சரின்னுடுச்சு. அடுத்த வாரம் நம்ம வீட்டிலேயே வச்சிக்குவமா? நீ சொல்லு?'' பால் கின்னத்துடன் நீர் பிடிக்க குழாய்க்கு வந்தவள், சட்டென்று நின்றாள். முகம் செம்மையாயிற்று. அந்தச் செம்மை சிவசுவை வெட்கப்படுத்திற்று. வேறு திக்கைப் பார்க்க வைத்தது. பெண் என்பவள் எவ்வளவு அழகு? அகல்யா அசையாமல் இருந்தாள்.

கல்யாணம். எனக்கு மறுபடி கல்யாணம். நிஜமாகவே கல்யாணம். இரண்டாம் கல்யாணம்... இன்னொரு புருஷன்... சற்று நேரம் முன்பு இவனை மார்பில் அணைத்து 'என் ஸ்நேகிதனே' என்று தடவினேன். இனி இவன் புருஷன். கணவன் உடமையாள். நிஜம்தான் இது இவ்வளவு சுலபமாய் ஏற்படும் இந்த உறவு. முதல் கல்யாணத்துக்கே பாபம் என்கிற தேசம் இது. எங்கே? எங்கே? என்று புருஷனைத் தேடும் பெண்கள் அதிகமுண்டு. எனக்கு எப்படி இவ்வளவு சுலபமாய்... இது கடவுள் செயலா? அப்பாவின் கூர்மையா? சிவசுவின் மனசா? ஜாதகமா? அதிர்ஷ்டமா? ஊர் கூடி, மேளங்கொட்டி, அட்சதை பொழிந்து, பூ சுமந்து, மெட்டி ஒலிக்க, புடவை சரசரக்க, விழுந்து வணங்கி, விழுந்து வணங்கி மறுபடியுமா? மறுபடியுமா? வேண்டாமே! ஜனங்களுக்கு மத்தியில் மறுபடி மேடையேற வேண்டாமே!

''மஞ்சச் சரடு வாங்கி பொட்டுத் தங்கம் வச்சிக் கட்டிடலாம்னு யோசனை அகல்யா. நீ எப்படின்னு சொல்லு.''

''நான் என்ன சொல்ல? எப்படி சொல்ல? யார் யாரை கூப்பிடப் போறீங்க அப்பா?'' மெல்லிய குரலில் கேட்டாள்.

''யாரும் வேணாம் அகல்யா. அப்பா போதும். தாலி கூட உனக்குச் சம்மதமானா'' சிவசு தயங்கித் தயங்கிப் பேசினான்.

''கரெக்ட் தம்பி. இது நமக்குள்ளாற ஒரு டிக்ளரேஷன் தான். இன்னிக்கு ரிஜிஸ்டர் ஆபீஸுக்குச் சொல்லிடறேன். பின்னாலே ரிஜிஸ்டர் பண்ணிப்போம். சரியா?''

''சரிங்க.''

''அகல்யா நீ?''

''சரி.''

''இந்த வார்த்தைகள் போறும் தம்பி. மற்றதெல்லாம் சம்பிரதாயம்தான். இனி அகல்யா உன் சொத்து. எங்கயாவது வெளிய வாசல்ல கூட்டிகிட்டு போ. சந்தோஷமா இரு. அம்மா, இங்க வா. இப்படி உட்காரு. யாரோ பிடிச்சுத் தள்ளின மாதிரிதான் இந்தப் பிள்ளை கிடைச்சிருக்கான் உனக்கு. குரல் உயர்த்திடாதே அகல்யா. கோடி காட்டறா மாதிரியும் பேசாதே. வேணும் வேணாங்கறத பச்சைப் புள்ளை மாதிரி சொல்லு. குடித்தனம் நிச்சயமா நல்லா இருக்கும். கடவுளே! எவ்வளவோ பெரிய பாரம் இறங் கிடுச்சு எனக்கு.''

''செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன், பிறவான் இறவான்,
'சும்மா இரு சொல் அற' வென்றலுமே
அம்மா பொருளொன்றும் அறிந்திலனே.''

கிழவர் பாடினார். பின்னுக்குச் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டார்.

வெளியே எங்கும் போகவில்லை. ஒரு பிரமிப்புத் தட்டி, வியப்பு மலர்ந்து, வெறுமே வீட்டோடு இருக்கும் அமைதி படர்ந்துவிட்டது.

மேல்மாடியில் நட்சத்திரங்களைப் பார்த்துத் தனியே நிற்கையில், அகல்யா பின்னே மெல்ல வந்து சிவசுவின் முதுகைத் தொட்டாள்.

''மேலே பார் அகல்யா. அது பேர் தெரியுமா உனக்கு?''



கிழக்கே மிளிரும் இரண்டு சுடர்களைக் காண்பித்தான். ''பிரகாசமா இருக்கே. அது குரு. வியாழன். பக்கத்திலே சின்னதா தெரியுதே. அது சனிக்கிரகம். அப்படியே மேலவா, அரிவாள் மாதிரி தெரியுதே ஆறு நட்சத்திரம். கீழே ஒரு முக்கோணம், அது மொத்தமும் லியோ. இன்னும் உயர வா. பளீர்னு தெரியுதே அது ஸீரியஸ் அல்லது சிவபெருமான். தெற்குப் பக்கம் பார். ரொம்பப் பிரகாசமா இருக்கிறது அகஸ்தியர். இப்ப மேற்கு பக்கம் போ.

ஒரு மூன்று நட்சத்திரம். அதுக்கு வலது பக்கம் இரண்டு, இடது பக்கம் இரண்டு. இ. ண்டு நட்சத்திரமா தெரியுதே. அது ஓரையன் கூட்டம். மூணு நட்சத்திரங்களுக்கு மேல் வடக்கா இருக்கிறது ஆருத்தரா. கீழே இருக்கிறது கபாளா ஓரீஸ், தெற்கு பக்கம் மேல ரீகல். கீழே ப்ளு ஸ்டார். ஆருத்தரா மாதிரி சிகப்புக் கலர்ல இன்னும் மேற்கு பார். அது ரோஹிணி. அதுக்கு அப்புறம் பூங்கொத்து மாதிரி கார்த்தி கைப் பெண்கள். இப்ப மேல் நோக்கி வடக்கா வா, அது ரெண்டும் ஜெமினி. இப்ப வடக்கா கேள்விக்குறி மாதிரி, பெரிய கேள்விக்குறி மாதிரி தெரியுதே. அதுதான் சப்தரிஷி மண்டலம்.

அந்தக் கேள்வி வளைவுல உச்சில தெரியுதே, அதுதான் வசிஷ்டர். அதுக்கு நெருக்கமா, ரொம்ப நெருக்கமா உத்துப் பாரு தெரியும், அதுதான் அருந்ததி.''

பதிவிரதையாயும், அதே சமயம் புருஷனுக்குப் பிரிய முள்ளவளாயும், பணிவிடைக்குக் கோணாதவளாயும், பிள்ளை பெறும் ஆசையோடும் உள்ளவளே! உன்னை நீ புருஷனுடன் இருக்கையில் வணங்குகிறேன்.

அகல்யா சுடரை நமஸ்கரித்தாள். திரும்பி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டாள். தோளில் முகம் சாய்த்துக் கொண்டாள்.

''இன்னும் சில நட்சத்திரம் காமிக்கிறேன் அகல்யா.''

"வாணாம்."

"ஏண்டா?"

"அதுபாட்டுக்கு தேமேன்னு சிரிச்சிக்கிட்டு இருக்கு. அதுக்குப் போய் பேர் வெச்சி, ஜாதகம் பார்த்து வுட்டுருங்க."

"விவரம் தெரிஞ்சுக்க வேணாமா?"

"தெரிஞ்சுக்கிட்டா பிரமிப்பு போய்டும்."

"எதை?"

"எதையுமே."

'இவளாய் இவள் புருஷனைப் பத்திப் பேசுகிற வரையில் நாம் கேட்கக்கூடாது' என்று சிவசு நினைத்துக் கொண்டான்.




"இந்த வார்த்தைகள் போதும் தம்பி. மற்றதெல்லாம் சம்பிரதாயம்தான். இனி அகல்யா உன் சொத்து. எங்கயாவது வெளிய வாசல்ல கூட்டிக்கிட்டுப் போ. சந்தோஷமா இரு."

கிழவர் தெரிந்துதான் அனுமதி கொடுத்திருக்கிறாரா? நான் பறக்க ஆரம்பித்து விட்டேன் என்று தெரிந்து விட்டதா? பிடிப்பு விழட்டும் என்று தும்பை அறுத்தெறிந்து விட்டாரா?

*கீழ்வானம் வெள்ளென்று*
*எருமைச் சிறுவீடு*

வெகுநாள் இந்தத் தமிழுக்கு அர்த்தம் தெரியாமல் இருந்தது. 'எருமைச் சிறுவீடு' என்றால் என்ன என்று புரியாமல் இருந்தது. விடியலில் பசித்திருக்கும் கறவையை அவிழ்த்து விட்டதும் வீட்டோரம் வளர்ந்திருக்கும் புற்களை உடனே அவசரம் அவசரமாய் மேய ஆரம்பித்து விடுமாம்.



வயல்கள் தாண்டி மேய்ச்சல் நிலம் போகும்வரை கறவையால் தாக்குப் பிடிக்க முடியாதாம். அவிழ்த்தவுடன் மேய்வது சிறுவீட்டு மேய்ச்சல்! பிறகு வயல்கள் தாண்டி புல்வெளியில் பெருவீட்டு மேய்ச்சல்.

எருமைச் சிறுவீடு-

அகல்யா கழுத்தைக் கட்டிக் கொண்டதும் பசித்த கறவையின் புத்தி கிளர்ந்துவிட்டது. இப்போது அகல்யா அருகே புல்வெளி மாதிரிக் கிடக்கிறாள் இந்த இருட்டில் தெளிவாய்த் தெரிகிறாள்.

*'உந்திச் சுழியில் முளைத்தெழுந்த*
*உரோமப் பசுந்தாள் ஒன்றில் இரண்*
*டந்திக் கமலம் கொடு வருவீர்*
*அம்பொற்படாம் திறமினோ'*

இது கலவியில்லை, கலவிவரை போகவில்லை. அதன் ஆரம்பம்தான் இது. அதுவே சோர்வாகிவிட்டது. சோர்வு என்றுகூடச் சொல்ல முடியாது. போதுமென்ற திருப்தி. அகல்யா அசையாது படுத்திருந்ததுக்கும் அந்தத் திருப்தி காரணமா?

வெட்கம் என்ற பாரம் இறங்கின பெருமூச்சு. நாம் இனி வெவ்வேறு ஆட்கள் இல்லை என்று உணர்ந்தபின் வரும் நினைவு.

சுடர்கள் அத்தனையும் சாட்சியாகச் செய்து கொண்ட கடிமணம். எருமைச் சிறு வீடு. சற்றுமுன் செய்த காரியங்கள் அத்தனையும் யோசித்து பார்த்தபோது சிரிப்பாய் இருந்தது. இப்போ விலகிப் பார்க்கிற புத்தி அப்போது வரவில்லையே! ஏன்? ஒரு அரை மயக்கத்தில் அரைமணி நகர்ந்ததேனோ எவ்விதம்? தெளிவாய் இருந்தால் செய்திருக்க முடியாதோ! மூளை முழுவதும் ஒரு மயக்கப் போர்வையில் மூடிய பிறகுதான் இயங்க முடியுமோ?

...PUBLIC LIBRARY

அகல்யா விழிகளைத் திறந்து உட்கார்ந்திருந்தவனைப் பார்த்தாள். எழுந்து தானும் உட்கார்ந்து கொண்டாள். தலை பரக்க லேசாய் கலைந்த கோலம் மாதிரி இருந்தாள். அகல் யாவை அப்படியே உட்கார வைத்து தொலைவில் போய் மடமடவென்று படம் வரைய வேண்டும் என்று பட்டது சிவசுக்கு.

இருட்டில் அகல்யா முழங்காலிட்டு நிமிர்ந்தாள். வில்லாய் சோம்பல் முறித்தாள். 'அப்பா' என்று சிவசு அதிர்ந்தான். திருப்பதியில் கிருஷ்ணதேவராயர் பக்கத்தில் பார்த்தப் பெண் செப்புச் சிலை திடுமென நினைவுக்கு வந்தது. லியனார்டோ டாவின்ஸ்கியின் சிலைகள் மனதில் முட்டின. எல்லாக் காலத்திலேயும் மனிதனை நெகிழ்த்தின அழகு இதுதான். அவன் பிரமித்துப்போன இயற்கை இதுதான். இந்தப் பிரமிப்பு சிலசமயம் ஆசையாகவும், சில சமயம் பயமாகவும் போய்விட்டது. ஊத்தைக் குழியில் பிறந்த ஊத்தைக் குழி என்றும் சொல்லிவிட்டது. ஆணின் பலமான தாக்கம் பெண்தான்.

"என்ன கன்னத்தில் கை வெச்சிட்டிங்க. கவிதை ஓடுதா உள்ள?"

அகல்யா சிவசுவின் மார்பில் குத்தினாள்.

"இல்லை அகல்யா, ஒரு மாதிரி அதிசயம் தட்டிடுச்சு."

"அடுத்தது பொயட்ரிதானே?"

"ரொம்ப ஜாஸ்தி தட்டினா பொயட்ரி வராது. அப்படியே போய்விடும்."

"ஏங்க, எனக்கு ஒரு சந்தேகம்?"

"கேளு அகல்யா."

"ஒரு டீச்சர் இப்படி இருக்கலாமா?"

"எப்படி?"



"புருஷன்கூட சந்தோஷமா, கொஞ்சம் ராத்திரி அசிங்கமா இருக்கலாமா? இது டீச்சருக்கு நல்லதா? ராத்திரி திமிர் பகல்ல ஒட்டாதா? கன்யாஸ்திரியாவோ, கல்யாணம் பண்ணிக்காத பெண்ணாவோ இருக்கறது தான் நல்லதா?"

"ஏன் கேக்கிற இப்படி?"

"எனக்குத் தெரிஞ்ச நிறைய டீச்சர் அப்படித்தான் இருக் காங்க. நாலைஞ்சு பெத்துக்கிட்டு டீச்சராகவும் இருக்கறது சிரமம் இல்லையா."

"இல்ல அகல்யா."

"எப்படி ராக்கொட்டம் அடிச்சுட்டு பகல்ல சின்னக் குழந்தைகளை சீராட்டற வேலை முடியுமா?"

"கொட்டம் அடிச்சா சீராட்டற வேலை மட்டுமா? பத்து தேக்கறதும் மாவாட்டறதும்கூடத்தான் கஷ்டம்."

"பொறுமை இல்லாமப் போய்டுதோன்னு பயமா இருக்குங்க."

"ஏண்டா கல்யாணத்துக்கு சரின்னு சொன்னோம்னு இப்பவே தோணிடுச்சா?"

"கடவுளே, உடனே மடக்கி இடிக்கணுமா! கன்யா ஸ்திரீக்கும் டீச்சரா இருக்கறதும்தான் ஒத்துப் போவுமான்னு யோசிச்சேன்."

"இல்லைன்னு தோணுது அகல்யா."

"ஏன்?"

"வாழ்ந்தவ, டீச்சரா இருக்கிறது நல்லது. இறுக்கிக்கிட்டா மத்தவங்க மனசு புரியாது போய்விடும். தான் இறுக்கிக் கிட்டா மாதிரி மத்தவங்களுக்கு சட்டம் போடத்தோணும். பிரம்மச்சாரியும் பிரம்மசாரியும்தான் சிநேகமா இருக்க முடியும். கல்யாணம் ஆன பிறகு ஒரு பையன் தன்னோட சிநேகிதங்களை விட்டு மெல்ல நகர்ந்துடறது உண்டு. கூட

இருக்கிற பையனுக்குக் கல்யாணம் ஆன பிறகுதான் மறுபடி அந்தச் சிநேகம் துளிர்க்கும்.''

''நாம் டீல் பண்ணப்போறது குழந்தைங்க மட்டுமில்லை அகல்யா? அந்தக் குழந்தைகளோட அப்பா, அம்மாவும் நமக்கு முக்கியம். அவங்க வாழ்க்கை, அவங்க குணம் குழந்தைங்க மூலமா நம்மைத் தாக்கும். அப்போ அதுபத்தி நமக்கும் நல்லா புரியணும்.''

''அப்ப டீச்சர்ஸ்ஸ எப்படி செலக்ட் பண்றது?''

''செலக்ட் பண்றது நமக்கு இல்லையே! அப்ஸர்ப் பண்ணிக்கணும்னு மூணு பேரு இருக்காங்களே? அதுக்கு மேலயா ஆள் வேணும்? அறுபது குழந்தைகளுக்கு உன்னை யும் சேர்த்து நாலு டீச்சர்ஸ் போதாதா?''

''அதில இரண்டு பெண்கள் கல்யாணமாகாத சிறு பெண்கள்ன்னு அப்பா சொன்னாரே.''

''அது பரவாயில்லை அகல்யா? நாளைக்குக் கல்யாணம் ஆகும்ன்னு நம்பிக்கையோட, இது டெம்பரரின்னு எண்ணத்தோட இருந்தாங்கன்னா நல்லது. நம்பிக்கை செத்துப்போன பெண்தான் கஷ்டம். அதுவும் இந்த வேலைல சிரமம்!''

''நாளைக்கு வராங்க மூணுபேரும்.''

''பேசிப் பார்ப்போம்.''

''உங்களை பள்ளிக்கூடத்தோடு உட்கார வச்சிட்டது சிரமமாயிருக்குதா?''

''மிரட்சியா இருக்குது. எனக்கு இந்த வேலை தெரியு மான்னு சந்தேகமா இருக்கு, நீ இருக்கேங்கிற தைரியம், உனக்குப் பின்னால நிக்கலாம்ங்கற எண்ணம்.''

''ஐயோ, நீங்க இருக்கீங்கன்னு நான் காரியம் செய்யறேன். சகலத்தையும் என் தலையில தூக்கிவச்சா?''



''இரண்டு பேரும் சுமப்போம். என்ன விதமா ப்ராப்ளம் வரும்னு தெரியலையே!''

''இன்னொரு கேள்வி கேட்கணும்.''

''கேளு.''

''நமக்குக் குழந்தைங்க வேணும்னா...''

''கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போம். அவசரப்பட வேணாம்.''

''எப்படி அது?''

''பள்ளிக்கூடத்துல புத்தி போய்டுச்சுனா நமக்கு அதுபத்தி ஜாக்கிரதை வந்துரும்.''

''அந்த ஜாக்கிரதைதான் எழுந்து உங்களை உட்கார வச்சிருச்சா?''

''ஏன் அகல்யா நான் உட்கார்ந்தது பிடிக்கலையா உனக்கு.''

''ஆச்சரியமா இருந்தது, இந்த ஆம்பளை இப்ப என்ன யோசிக்கிறார்னு கேள்வி வந்தது.''

''மெய் மறுக்கிறது எனக்கு முடியலை அகல்யா.''

''குட். எனக்கும் முடியலைங்க.''

''தெரியாம செஞ்சுட்டேன்னு எதையும் சொல்ல முடியலை.''

''கரெக்ட், செய்யறபோதே இது என்ன ஏன்னு புத்தி போறதில்ல.''

''கொஞ்ச கெட்ட குணம்தான் இது.''

''ரெண்டு புத்தியா அலையுது இல்லியா!''

''புத்தி பரபரன்னு இருக்கிறவங்களுக்கு உண்டான சிரமம்.''

''மக்கா இருந்திட்டா நல்லதோ!''

"இனிமே முடியாது."

"என்ன செய்யலாம் இதுக்கு?"

"உத்தேசமா, பேசாம வெளிப்படையா பேசிடலாம்."

"எப்படி?"

"உங்க அப்பா சொன்னாரே, வேணும் வேணான்றதை வாயைத் திறந்து பச்சைப் புள்ளையா கேளு, கோடி காட்டாதேன்னு. அதுதான் செய்யணும்."

"அப்பா இதையா, இதுபத்தியா சொன்னாரு?"

"ஆமான்னு படுது இப்ப. உங்கப்பா பெரிய ஜீவன் அகல்யா! வழக்கமா ராத்திரி ஏதாவது பாடிக்கிட்டு இருப்பாருன்னு சொல்லியே, இன்னிக்குக் குரல் காணோம் பாத்தியா! குரல் கேட்டா நம்ம சந்தோஷம் கலைஞ் சுடும்ன்னு அமைதியா இருக்காரு."

"எனக்கு அதிர்ஷ்டம்தாங்க."

"என்னா?"

"கெட்டிக்கார அப்பாவும், தன்மையான புருஷனும் கிடைச்சது."

"எனக்கும் இந்த இடம் ரொம்ப சௌகர்யமா இருக்கு அகல்யா. இதை உபயோகப்படுத்திக்கிட்டு மடமடன்னு நிறையக் காரியம் பெரிசு பெரிசா செய்துடணும். ஜனங் களுக்கு உபயோகமா, பிரமாண்டமா செய்துடணும், பள்ளிக்கூடம் ஒரு ஆரம்பம்."

"செய்திடலாம் சிவசு."

"இப்ப என்ன செய்யலாம், சொல்லு!"

"எதுங்க?"

"கீழ போய்டலாமா, இல்லை..."

அகல்யா வெட்கப்பட்டாள்.



"வேணும் வேணாங்கறதை வாயைத் திறந்து கேளு அவ்வளவு சுலபமா இது."

"நீங்க எப்படி சொல்றீங்களோ அப்படி."

"பாரத்தை ஒரு ஆள் தலையில போடாத அகல்யா."

"இல்லைங்க, எனக்காக நீங்க முடிவு எடுங்களேன்."

"உம்ம்... இதுவரை நல்லா இருந்தது இல்லையா? மிச்சம் பிறகு பார்த்துக்குவோம். என்ன அவசரம்?"

"யப்பப்பா."

"ஏன், பிடிக்கலையா?"

"எவ்வளவு திடமாப் பேசறீங்க."

"எப்ப வேணாலும் கேட்கலாம்ற இடம்."

"அப்படியா!"

"ஏன், மாட்டேன்னு சொல்லியோ!"

"எப்பக் கேட்கப் போறீங்களோன்னு இப்பவே அடிச்சுக்க ஆரம்பிச்சுடுச்சு."

சிவசு சிரித்தான்.

"சுலபமா இரு அகல்யா."

"கீழே போலாம் சிவசு."

சிவசு எழுந்திருந்தான். நின்றபடி அகல்யாவை இழுத்து முத்தமிட்டான்.

"போய் நல்லா தூங்கு. நான் நாளைக்கு சாய்ந்தரமே ஊருக்குக் கிளம்பிப் போய் அம்மாவைப் பார்த்துட்டு வந்திடறேன். கல்யாணம் முடிஞ்ச பிறகு இரண்டு பேரும் போய் வருவோம்."

"தயவு செய்து உங்களை அறிமுகப்படுத்திக் கொள் ளுங்கள்." அகல்யா நிதானமாகப் ஆங்கிலத்தில் பேசினாள்.

''நான் சாருமதி, எஸ்.எஸ்.எல்.ஸி. நானூற்று முப்பது மார்க். மூன்று வருட அனுபவம். வசிப்பது இதே பகுதியில். என் தந்தை ரயில்வேயில் ரிடையர்ட் ஆன குமாஸ்தா. போஸ்டலில் பி.ஏ. படித்துக் கொண்டிருக்கிறேன்.

நான் வத்ஸலா. பி.எஸ்ஸி. தாவரவியல் இரண்டாம் வகுப்பு. ஒரு வருட அனுபவம். வசிப்பது இரண்டு மைல் தள்ளி, மாம்பலத்தில். எனக்குத் தந்தையில்லை. தாயாரும் மூன்று சகோதரிகளும் உண்டு. தாயார் ஒரு வீட்டில் சமையல் வேலை செய்கிறாள். தந்தை இரண்டு வருடம் முன்பு இறந்து போனார். நல்ல வேலைக்கு மனுப்போட்டு வருகிறேன்.''

''எம் பேரு கே.சொர்ணம். பி.ஏ. பி.டி.யை வெலிங்டன்ல முடிச்சேன். எங்க வீட்டில் அவரு ஆர்டிஸ்டா இருக்காரு. நிறைய சினிமா போஸ்டர் வரைவாரு. பத்திரிகைல படம் போடுவாரு.''

''தயவு செய்து ஆங்கிலத்தில் பேசுங்கள்.''

''தமிழில் பேசி பழக்கமாயிடுச்சுங்க, சட்டென்று வரமாட்டேங்குது.''

அகல்யா நிமிர்ந்து சிவசுவைப் பார்த்தாள்.

சிவசு கவலையோடு காணப்பட்டான்.

## 13

**வ**த்சலா அமைதியாக நின்றுகொண்டிருந்தாள். சற்று நேரம் உட்காரச் சொல்ல மாட்டார்களா என்று எண்ணினாள். நடந்தால்கூட நன்றாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டாள். இப்படி அசையாமல் கைகட்டி நிற்பது கஷ்டமாக இருந்தது. காலையில் சாதம் சாப்பிட்டிருந்தால்



இப்போது நிற்பது சிரமமாக இருக்காது. வெறும் கோதுமைக் கஞ்சி. வீட்டை விட்டுக் கிளம்பின இரண்டு மணி நேரத்தில் காணாமல் போய்விட்டதே. வயிற்றுக்குள் காற்று புகுந்து கேலி செய்கிறது. உட்காரேன், சுருண்டு தூங்கேன் என்று கெஞ்சுகிறது. இந்தக் கோதுமைக் கஞ்சிக்கும் கேடு வந்து விட்டதே என்று பயந்தபோது இந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து கூப்பிட்டு விட்டார்கள்.

இருநூற்று ஐம்பது ரூபாய் சம்பளத்தை நானூறு ரூபாய் வாங்குவதாகப் பொய் சொல்லியாகிவிட்டது. இப்படி பொய் சொல்ல வெட்கமாக இருந்தது. நாளைக்கு நிஜம் தெரிந்து போனால் என்கிற கவலை இப்போதே வந்துவிட்டது. ''பொய் சொல்ற டீச்சர்ஸ் வேண்டாம். வெளியே போங்க'' -விரட்டி அடிக்கிற குரல் இப்போதே கேட்டது.

''தயவு செய்து மன்னிச்சுக்குங்க மேடம். எனக்கு இந்த வேலைய விட்டால் வேறு கதி இல்லை மேடம். என்னை நம்பி நாலு பேர் இருக்காங்க மேடம்.'' நினைக்கும்போதே சமாதானங்கள் உருவாகின. கொஞ்சலும் கேவலும் இப்போதே புறப்பட்டன. காலையில் சாதம் சாப்பிட்டிருந்தால் இவ்வளவு சோர்வு இருந்திருக்காது. இவ்வளவு பயம் வராது. வெறும் கோதுமைக் கஞ்சி குடித்தது. போதவில்லை. பொய் சொல்லும் பலம் வரவில்லை சொர்ணத்தம்மாள் கவலை இல்லாமல் இருக்கிறாள். அவள் சாதம் சாப்பிட்டிருப்பாள். இந்த ஒன்பது மணி காலையில் குழம்பு, ரசம், மோர் என்று சாப்பிட்டிருப்பாள். தொட்டுக் கொள்ள ஏதாவது கறியுடன் கொஞ்சம் கையிலும் சாதம் எடுத்து வந்திருப்பாள். மத்தியானம் வரை பசியை எப்படித் தாங்கப் போகிறோம் என்று தெரியவில்லை. முதல் நாளே வெறும் ஜலத்தைக் குடித்துவிட்டு வேலை செய்யும் வேதனை எனக்கு மட்டும் தானா புரியவில்லை! சாருமதியும் தெளிவாக நிற்கிறாள். அவளும் காலையில் சாதம் சாப்பிட்டிருக்கலாம்! வெறும்

மோர் சாதமாவது சாப்பிட்டிருக்கலாம். "இப்படி நானூறு ரூபாய் என்று பொய் சொன்னேமே, தப்பு இல்லையா சாரு?" கேள்வி கேட்டபோது சாருமதியும் யோசனை செய்தாள். சாருமதி சிறிது யோசனைக்குப் பிறகு "தப்புத் தான். தெரிஞ்சா அசிங்கம் தான். ஒரு ரிஸ்க் எடுத்துச் சொல்லிப் பார்ப்போம். கிடைச்சா நானூறு ரூபாய். இல்லைன்னா வேலை போகும். சொர்ணத்தம்மாள் சொல்லச் சொல்லி இருக்காங்க; அவங்களை மீறி நாம் என்ன செய்யமுடியும்? எத்தனை நாளுக்கு இருநூற்று ஐம்பது ரூபாய் வேலை செய்ய முடியும்?" என்றாள்.

நானூறு ரூபாய்க்கு இவர்கள் சரி என்று சொன்னால் நன்றாக இருக்கும். காலையில் மோர் சாதமாவது சாப்பிட முடியும். பத்து ரூபாய் வாடகை அதிகம் கேட்கிற வீட்டுக்காரனுக்கு சரி என்று சொல்லிவிடலாம். இன்னொரு வாயில் புடவை வாங்கலாம்! இந்தத் தடவை புடவை வாங்கினால் மஜந்தா கலரில் வாங்கவேண்டும். மஜந்தா கலரில் இதுவரை எதுவுமே கட்டிக்கொண்டதில்லை. கை அகலத்தில் ஒரு மஜந்தா கைக்குட்டைதான் இருக்கிறது. அதை வெறுந்தோளில் பரப்பிவைத்துப் பார்த்தபோது மஜந்தா கலர் தனக்கு எடுப்பாக இருக்கும் என்று தோன்றிற்று. நானூறு ரூபாய் சம்பளத்துக்கு இவர்கள் சரி என்று சொல்லவேண்டும். கடைசிவரை இந்தப் பொய் தெரியாமல் இருக்கவேண்டும். அவமானப்படாமல் இருக்க வேண்டும். அவமானப்பட்டாலும் படலாம். வேலை போகாமல் இருக்கவேண்டும். அந்த முருகன்தான் காப்பாற்ற வேண்டும்.

இந்த சொர்ணத்தம்மாள் அனாவசியமாக அறுக்கிறாள். புதிய இடத்தில் அதிகம் பேசுகிறாள். வழக்கம்போல் அடக்கமின்றி இருக்கிறாள். அலட்டிக்கொள்கிறாள். இது அலட்டிக் கொள்ளும் இடமில்லை. எதிரே இருக்கிற



இரண்டு பேரும் கூர்மையாய் சொர்ணத்தைப் பார்த்துக் கொண்டிருப்பது பயமாய் இருக்கிறதே! இவர்களிடம் பொய் பேசி தப்பிக்க முடியுமா என்று கவலையாக இருக்கிறது. சொர்ணத்தம்மாளுக்கு இந்தக் கவலையில்லை. அவள் புருஷன் அதிகம் சம்பாதிக்கிறான். சொந்தமாய் வீடும், தோட்டமும் வைத்திருக்கிறாள். எட்டு பவுன் நகை எப்போதும் போட்டிருக்கிறாள். என்னிடம் ஒரு பொட்டுக் கூட தங்கம் இல்லை. சம்பாதிக்க வேறு ஆள் இல்லை. புருஷன் இல்லை. நானே சம்பாதிக்க வேண்டும்! நானே புருஷனாய் நின்று வீட்டை நடத்த வேண்டும்.

எத்தனை நாள் இப்படி புருஷனாய் சம்பாதிக்க போகிறோம் என்று தெரியவில்லை - எனக்கு என்று ஒரு புருஷன் எப்போது வரப்போகிறான். புரியவே இல்லை - இப்படி ஒரு புருஷனை கனவில் மெனக்கிட்டு கற்பனை கூட பண்ண முடியவில்லை. மெனக்கெட்டு கற்பனை பண்ணினாலும் மூன்று நிமிஷத்துக்கு மேலே தாங்க முடியவில்லை. புருஷர்களைப் பற்றி கற்பனை பண்ணவே பயமாய் இருக்கிறது. தாலி கட்டிய பிறகு தலைமயிரைப் பிடித்துத் தரதர என்று அறைக்குள் இழுத்துப் போகிற புருஷன்தான் ஞாபகம் வருகிறது. இதற்குக் காரணம், செத்துப்போன அப்பாவாக இருக்கலாம். மென்மையாய் ஒரு வார்த்தை சொல்லக்கூடத் தெரியாத அப்பாவாக இருக்கலாம். செருப்பாலும் விளக்குமாறாலும் அம்மாவை அடித்துத் தீர்த்த அப்பாவின் பிரதிதான் என்னுள்ளும் புருஷனாய் வந்து நிற்கிறது! நல்ல அப்பா இல்லாதது தன்னை அதிகம் சீரழித்து விட்டது. தொட்டதெற்கெல்லாம் பயத்தையும், கலக்கத்தையும் கொடுத்துவிட்டது. சாருமதிக்கு அப்பா இருக்கிறார். நல்ல அப்பாவாக இருக்கிறார். அதனால்தான் அவள் சௌக்கியமாக இருக்கிறாளோ என்று தோன்றுகிறது. சாருமதிக்கு அம்மாவும் இருக்கிறாள்- ஒரு தம்பி

இருக்கிறான்- நான்கு பேரும் ஒற்றுமையாய் இருக்கிறார்கள். குறைவான வருமானத்திலும் சந்தோஷமாக இருக்கிறார்கள். எனக்குத்தான் வருமானமும் இல்லை. சந்தோஷமும் இல்லை. இங்கு நானூறு ரூபாய் கிடைத்தால் கொஞ்சம் அதிக வருமானம் வரும்! ஒருவேளை சந்தோஷமும் வரலாம்.

சாரு திடமாய் நின்றிருந்தாள். நானூறு ரூபாய் சம்பளம் என்று பொய் சொன்னது மகா பாவமாய்ப் பட்டது. உண்மையைச் சொல்லிகூட ஐம்பது ரூபாய் கேட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. இந்த சொர்ணத்தம்மாள் தான் பொய் சொல்லச் சொன்னாள். பழைய பள்ளிக்கூடத்திலேயும் சொல்லிட்டேன், நானூறு ரூபாய் குடுத்துக் கொண்டிருந்தோம்னு சொல்லச் சொல்லி. அப்படியே தெரிஞ்சா என்ன, தலையா சீவிடுவாங்க. இந்த மடம் இல்லைன்னா சந்தைமடம்! தன்னால் சந்தை மடத்துக்கெல்லாம் வேலை செய்யப் போக முடியாது.

''மனுஷா நல்லவளா இருக்காளா பார்த்துக்கோ!'' அம்மா காலையில் இப்படித்தான் சொல்லி அனுப்பினாள். நல்ல மனிதர்களாய்த்தான் தெரிகிறது. முதற் பார்வையிலேயே ஒரு கம்பீரம் புலப்பட்டு விட்டது. குறிப்பாய் அந்த மனிதர் பெயரென்ன? சிவசுப்பிரமணியன். அந்த மனிதன் முகத்தில் ஓர் அமைதி தெரிகிறது. கண்களில் ஒரு கனிவு இருக்கிறது. முகத்தில் ஒரு முதிர்ந்த கவலை இருக்கிறது. இப்படிச் சற்றுக் கவலையோடு இருக்கும் ஆண்களை மிகவும் பிடிக்கிறது. பாரம் சுமக்கிறவர்கள் கவலையோடுதான் இருப்பார்கள். அப்பாவின் முகத்தில் இப்படியொரு கவலை இருந்து கொண்டே இருக்கும்.

''உனக்கு ஒண்ணும் பண்ணாம இருக்கேனேடா!'' தன் தலையைத் தடவி அவர் பேசுவது நினைவுக்கு வந்தது. ''நீ எதுக்கும் கவலைப்படாதே அப்பா! சுவாமி இருக்கார்''



என்று அவர் நெஞ்சுவலிக்கு நீவிவிட்ட போது அவர் கவலை தனக்கு வந்துவிட்டது. தன் தம்பி இடத்திலும் தொத்திக் கொண்டது. ''புது இடத்துக்கும் தனியா போறயே அக்கா, நான் வேணும்னா துணைக்கு வரட்டுமா?'' பதினெட்டு வயசுப் பையன் இன்று காலையில் கவலைப்பட்டபோது சந்தோஷமாயிருந்தது. இந்தக் கவலை, இந்த அக்கறை, விசேஷ உன்னதம். அப்பா ரிடையராகி வருமானம் குறைந்து இரண்டு வருடங்களாயிற்று. இன்னும் குடும்பத்தில் ஒற்றுமை குறையாமல் இருப்பதற்கு இந்தக் கவலைதான் காரணம்! அடுத்தவர்களைப் பற்றி அக்கறையோடு இருப்பவர்களுக்கு இந்தக் கவலை வரும். சற்றுக் கவலையோடு இருப்பது நல்ல குணம். நிதானம் தரும்! சொர்ணத்தம்மாள் அல்பத்திற்கெல்லாம் அதிகம் சிரிப்பாள். அல்பத்திற்கெல்லாம் சண்டையும் போடுவாள். கவலையற்ற வாழ்க்கை இதற்குக் காரணமாய் இருக்கலாம்.

இந்த ஹெட்மிஸ்ட்ரஸ் முகத்தில் கவலை தெரியவில்லை. ஆனால் கம்பீரம் இருக்கிறது. லேசாய் ஒரு பதட்டம் தெரிகிறது. தங்கள் பதிலுக்கெல்லாம் சிவசுப்ரமணியத்தை ஏறிட்டுப் பார்க்கும்போது ஒரு காதல் தெரிகிறது. சமீபமாய் கல்யாணம் ஆனவர்களாம். ஜோடிப் பொருத்தம் நன்றாய் இருக்கிறது. கண்ணுக்கு நிறைவாய் இருக்கிறது. சூழ்நிலையில் கெட்டிக்காரத்தனமும், துப்புரவும் தெரிகின்றன.

இந்த ஹெட்மிஸ்ட்ரஸ் எட்டு ப்ளீட் வைத்து புடவை கட்டிக்கொண்டு இருக்கிறாள். மடிப்பை நறுவிசாய் நீவி இருக்கிறாள். பாம்பே டையிங் போலிருக்கிறது. ஆறு கெஜம் புடவையில்தான் எட்டு மடிப்பு வைத்துக்கொள்ள முடியும். இத்தனை நீண்ட தலைப்பு விட்டு, எட்டு மடிப்பு வைத்துக் கொள்ள வேண்டுமென்றால் அது பாம்பே டையிங் ஆகத்தான் இருக்கவேண்டும். நான்கு ஐந்து நாட்களுக்குப் பிறகு இது என்ன புடவை என்று அவர்களிடம் கேட்க

வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாய் காசு சேர்த்து இந்த மாதிரி ஒன்று வாங்கவேண்டும். இரண்டு வருடம் போனால் தம்பி படிப்பை முடித்துவிடுவான். அவனுக்கு ஒரு வேலை கிடைத்து சம்பாதிக்க ஆரம்பித்தால் நிறைய புடவைகள் வாங்கலாம். நல்ல புடவைகளாய் வாங்கலாம்! தலை நரைத்து சாவதற்குள் நூறு புடவையாவது வாங்கவேண்டும். பீரோவைத் திறந்தால் அடுக்கடுக்காய் புடவை இருக்க வேண்டும். என்னிடம் ஆறு புடவைகள்தான் இருகின்றன.

வத்சலா இன்று காலையில் பழைய புடவை இருக்குமா என்று கேட்டாள். தங்கைக்கு தாவணி தைக்கவேண்டும் என்றாள். அவள் கேட்டது கஷ்டமாக இருந்தது. 'பழசு என்னடி, புதுசே தரேன்' என்று சொல்லத் தோன்றிற்று. ஆனால் புதுசாய்க் கொடுக்க தனக்கு மனசு ஆகாது. தன்னிடம் நூறு புடவைகள் இருந்தால் ஒன்றென்ன, இரண்டு புடவைகள் கொடுத்து விடலாம். தட்டில் வெற்றிலை பாக்கு வைத்து, புடவையும் ரவிக்கையும் ஒரு பெண்ணுக்குக் கொடுக்கும் சந்தோஷம் அற்புதமானது. இவர்கள் நானூறு ரூபாய்க்கு சரி என்று சொன்னால் வத்சலாவின் தங்கைக்கு ஒரு புது தாவணியாவது வாங்கிக் கொடுக்கவேண்டும் - 'பெரிய பாளையத்தம்மா! எனக்கு இந்த நானூறு ரூபாய் வேலை கிடைக்கட்டும், உன் பெயரைச் சொல்லி நான் ஒரு பெண்ணிற்கு புதுப் புடவை தருகிறேன்.' நானூறு ரூபாய்க்கு இவர்கள் சரி என்று சொல்வார்களா? தெரியவில்லை.

''தமிழிலேயே பேசிப் பழக்கமாயிடுச்சிங்க, சட்டுனு வர மாட்டேங்குது. பெரும் பள்ளிக்கூடத்திலே வேலை செய்தா இங்கிலீஷ்ல பேசணும். பச்சைப் புள்ளைங்க இருக்கிற இடத்திலே எப்படி இங்கிலீஷ் பேசறது - அதுக கூடப் பேசிப் பேசி வேற பாஷையே வரமாட்டேங்குது.'' இந்த சனியன் பிடித்த சொர்ணத்தம்மாள் அதிகம் நீட்டி முழக்குகிறாள்! அநேகமாய், அடி வாங்கப் போகிறாள். இந்த ஹெட்



மிஸ்ட்ரஸ்... பெயரென்ன அகல்யா? அவர்கள் முகத்தில் சுருக்கென்று கோபம் வந்துவிட்டது தெரிகிறது. சொர்ணத்தம்மாள் வேண்டாம் என்று சொன்னாலும் நான் இங்கேயே சேர்ந்துடப் போகிறேன். இந்தப் பெரிய ஹாலும், லஸ்தர் விளக்கும், கம்பீரமான மனிதர்களும் எனக்குப் பிடித்திருக்கின்றன. இவர்களைப் பார்த்தால் அல்பமாய்த் தெரியவில்லை'. சொர்ணத்தம்மாள்தான் அல்பம்.

''சற்று நேரம் உட்காருங்கள். இதோ ஐந்து நிமிடத்தில் வந்துவிடுகிறேன்.'' அகல்யா மூவருக்கும் நாற்காலிகளைக் காண்பித்தாள்!

வத்சலாவிற்கு 'அப்பாடா' என்றிருந்தது! சாருமதிக்கு அநேகமாய் இந்த இடம் கிடைத்துவிடும் என்று தோன்றியது! சொர்ணத்தம்மாள் நாற்காலிப் பிடியில் பையை மாட்டிவிட்டு, இந்த இரண்டு பெண்களுக்குக் கொடுப்பதை விட தனக்கு நூறு ரூபாய் அதிகம் கொடுக்க வேண்டும் என்று கேட்கத் தீர்மானித்தாள். அதுகூட இல்லை என்றால் தன் 'பி.டி'க்கு என்ன மதிப்பு என்று நினைத்துக் கொண்டாள். அப்போதுதான் இந்த இரண்டு பெண்களுக்கும் தன் மீது மரியாதை வரும் என்று எண்ணிக் கொண்டாள். 'அஸிஸ்டெண்ட் ஹெட்மிஸ்ட்ரஸ்' என்று தனக்கு 'டெஸிக்னேஷன்' தரவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள். நாற்காலியில் உட்கார்ந்து தொடைகளை ஆட்டியபடி 'இதை எப்போது கேட்கலாம்?' என்று தீவிரமாய் யோசித்தாள்.

''என்ன சிவசு?'' அறைக்குள் புகுந்ததும் அகல்யா கேட்டாள். ''மூணுல ரெண்டு ஜெம். அகல்யா'' சிவசு பதில் சொன்னான். நெற்றியில் விரல்களைப் பதித்துக் கொண்டு பேசினான்.

''இன்னொன்று சொத்தையா?''

''ஆமாம்னு தோணுது அகல்யா.''

''ஒதுக்கிட முடியுமா?''

''முடியாதுன்னு படுது.''

''லீகல் ஆக்ஷன் எடுக்க முடியாதே?''

''அது சரி! ஆனா ஒரு 'ஜெண்டில்மன் அக்ரிமெண்ட்' போட்டிருக்கமே!''

''சரிப்படுத்த முடியாது?''

''ட்ரை பண்ணிப் பார்ப்போம்.''

''நானூறு ரூபாய் ஜாஸ்தி இல்லையா?''

''பொய் சொல்றாங்கன்னுதான் படுது.''

''முதல் பெண்ணை மடக்கிக் கேட்டா நிஜம் சொல் விடாது சிவசு?''

'கேட்க வேணாம் அகல்யா! நானூறு நமக்குக் கட்டுப்படி ஆகுமான்னு யோசனை பண்ணு.''

''இன்ஷியலா நஷ்டம்தாங்க. ஆனா உற்சாகமா வேலை செய்வாங்க இல்லையா?''

''அது கரெக்ட். இவங்க சரியா வேலை செய்யலைனா பள்ளிக்கூடத்துப் பேர் கெட்டுப்போகும்! நஷ்டத்தோடு கெட்ட பேரும் வரும். கெட்டபேர் வாங்கவே கூடாது, நிச்சயம் ஒரு பள்ளிக்கூடம் கெட்டபேர் வாங்கக் கூடாது.''

''நானூறு சரின்னுடலாம்.''

''மூணு பேருக்கும் நானூறுதானே? ஒரே மாதிரி தானே!''

''யெஸ், யெஸ். நோ பார்ஷியாலிடி.''

''சொர்ணத்தம்மாள் பி.டி. யாச்சே?''

''நமக்கு பி.டி. தேவையில்லை.''

''அதக் காமிச்சு அதிகம் கேட்டாங்கன்னா?''



''முடியாதுன்னு சொல்லு அகல்யா. இன்னொரு விஷயம்! அந்தப் பெண் வத்சலா ஜாக்கெட் இழிஞ்சிருக்கு பாத்தியா?''

''கவனிச்சேன். நீங்க கவனிக்கிறதையும் கவனிச்சேன்.''

''அது கவலையோடு இருக்கு அகல்யா. டீச்சர் இழிசல் உடுத்திக்கக் கூடாது.''

''இதை அவளுக்கு எப்படிச் சொல்றது சிவசு?''

''அது கேர்லெஸ்னெஸா? வறுமையினாலா?''

''கேர்லெஸா தெரியலை சிவசு.''

''வறுமைன்னா கொஞ்சம் ஹெல்ப் பண்ணுவோம். அட்வான்ஸ் மாதிரி குடுப்போம். தனியாப் பேசு அகல்யா! நடுவிலே சொல்விடப் போற.''

''நான் பார்த்துக்கிறேங்க. அப்ப நானூறுக்கு ஒத்துக் கிறோம்.''

''அகல்யா அந்தப் பள்ளிக்கூடத்தில் பசங்களை இங்க திருப்பறதுக்கு ஹெல்ப் பண்ணனும்னு கேளு. பேரெண்ட்ஸை போய்ப் பார்க்கச் சொல். நாமும் போயிட்டு வருவோம். முடிஞ்சா இவங்க மூணு பேருக்கும் ரவிக்கைத் துண்டு வச்சிக் கொடு.''

''எதுக்குங்க சிவசு?''

''ஒரு ஸ்நேகத்துக்காகத்தான். சந்தோஷமா நம்பிக்கை யோடு வீட்டுக்குப் போகட்டும். எட்டு ரூபாய் ரவிக்கைத் துண்டு உண்மையா இருக்க வைக்கும்!''

''ஐ திங் யூ ஆர் எ வுமனைஸர்.''

''சீ, என்ன இது? திடீர்னு.''

''ஒரு வுமனைஸருக்குத்தான் வுமன் ஸைகாலஜி நல்லாத் தெரியும். இந்த ரவிக்கைத் துண்டு விஷயம் எனக்குத் தோணவே தோணாதுங்க.''

"ஏய், இங்கே வா."

"என்ன?"

"ஒரு ரெண்டு நிமிஷம் வுமனைஸராக இருக்கேன், தாங்குவியா!"

சரி என்று சொல்லலாம். சொன்னால் ஆசையைப் பாரு என்று, திடமாய் தன்னைத் திரும்பி வெளியே அனுப்பிடு வான்.

"இப்ப வேணாங்க."

"எப்ப வேணும்?"

"சீ..."

"அகல்யா, வத்சலா ஜாக்கெட் பற்றி நாளைக்குப் பேசு. இன்னிக்கு வேண்டாம். அது குறுகிப்போய்டும், இப்பவே சொல்லிட்டா! சொல்ற பேச்சைக் கேளேன்."



## 14

வத்சலாவுக்கு ரவிக்கை வாங்கிக் கொள்ளும்போது கண்ணில் ஜலம் கட்டிக்கொண்டது. சாருமதிக்கு சந்தோஷ மாய் இருந்தது. சொர்ணத்தம்மாள், 'அடிடா சக்கை' என்று நினைத்துக் கொண்டாள். நாளைக்கு நிச்சயம் நூறு ரூபாய் அதிகம் கேட்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண் டாள்.

"வரும் திங்களன்று பள்ளி திறக்கணும். குறைந்தபட்சம் இருபது குழந்தைகளாவது இங்கு இருக்கவேண்டும்."

அகல்யா சொன்னதும் மூவரும் அதை ஆமோதித்தனர். முழு ஒத்துழைப்பும் தருவதாக வாக்களித்தனர். அகல்யாவும் சிவசுவும் மூன்று முறை அந்தப் பகுதியைச் சுற்றி வந்தார்கள்.



'அகல்யா மாண்டிஸோரி' என்று பெரிய போஸ்டர்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் ஒட்டப்பட்டன. சந்தித்த குழந்தைகளுக்கெல்லாம் அகல்யா சாக்லெட் கொடுத்தாள். இரண்டு கிலோ சாக்லேட் செலவாயிற்று. முதல்நாளில் இருபத்தேழு குழந்தைகள் பதிவாயினர். அகர வரிசைப்படி அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டர் எழுத வேண்டி, குழந்தைகள் பெயர் கேட்க, அகல்யா ஒரு குழந்தையின் பெயர் கேட்கை யில் அது அழகாய் பதில் சொல்லிற்று.

"உன் பெயர் என்னம்மா?"

"அகல்யா!"

அகல்யா பரவசமும், நம்பிக்கையும் தோன்ற சிவசுவை ஏறிடப் பார்த்தாள். சிவசுவும் சந்தோஷம் அடைந்தான். அழுகின்ற குழந்தைகளை சமாதானம் செய்யவும், பெற் றோர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் வண்ணம் பேசவுமே அன்றைய பொழுது சரியாக இருந்தது.

அகல்யா வத்சலாவுக்கு நூற்று ஐம்பது ரூபாய் ரகசியமாய் அட்வான்ஸ் கொடுத்தாள்.

"யூ ஆர் எ பார்ன் டீச்சர், கீப் இட் அப்" என்றாள். வத்சலா விசும்ப முற்படுகையில், "ஹூம்" என்று அதட் டினாள். அகல்யாவுக்கு சாருமதியைத்தான் அதிகம் பிடித்தது.

"எவ்வளவு நாள் டீச்சர் வேலை செய்யறதா ஒரு ஐடியா சாரு?"

"கல்யாணமாறவரைக்கும்" பளிச்சென்று பதில் வந்தது.

"ஷீ ஈஸ் நாட் எ பார்ன் டீச்சர்' என்று நினைத்துக் கொண்டாள். சிரிப்பு வந்தது.

இப்பொழுதுள்ள ஒரே கவலை சொர்ணத்தம்மாள் தான். மிருதுவாய் பேச அவருக்கு எப்படிச் சொல்லிக் கொடுப்பது என்பதுதான். சொர்ணத்தம்மாள் ஒரு 'சைகோ' கேஸ். என்

பிரிய 'வுமனைஸரிடம்' இதுபற்றி இன்று ஆலோசனை கேட்கவேண்டும். அந்த இனிய 'வுமனைஸர் இப்பொழுதெல்லாம் அதிகம் பேசுவதில்லை! பாட்டுபாட ஆரம்பித்து விடுகிறான். இல்லையெனில் பேச முடியாதபடி வாயை அடைத்து விடுகிறான்.

ரொம்ப சந்தோஷமாய் இருக்கிறான். இல்லையெனில் நட்ட நடுநிசியில் மடியில் படுத்து 'வானம் எங்கும் பரிதியின் ஜோதி' என்று யாராவது பாடுவார்களா? ''இப்பப் போய் இந்தப் பாட்டு என்னத்துக்கு சிவசு?'' கிறங்கிக் கிடந்தவனை வருடிக் கேட்கையில், ''வயிற்றுக்குள்ள சூரியன் உதிச்ச மாதிரி சந்தோஷமா இருக்கு அகல்யா'' என்றான்.

''கண்ணை மூடிக்கிட்டா ஓர் ஒளிப்பிழம்பு தெரிகிறது. தகதக என்று ஆரஞ்சும், மஞ்சளும், நீலமுமா- இது ஒரு நிறைவு அகல்யா.''

''எனக்கு வரலையே!''

''சரியா ஈடுபடலை''

''ச்சீசீ'' அதற்குப் பிறகு அகல்யாவுக்கும் வந்தது.

'நாற்பது ரூபாயா? நாப்பது ரூபாயா பீஸு? ரொம்ப ஜாஸ்தி, ரொம்ப ஜாஸ்தி. அங்க ரெண்டு மாசம் இவா அண்ணாவுக்கு அந்தப் பள்ளிக்கூடத்தில் சம்பளமே வாங்கலை. வெறுமே போய்ட்டு வந்தான். இரண்டு குழந்தைகளுக்கு எண்பது ரூபா பீஸாகுமே அப்போ.''

'சேர்க்கும்போது தான் ரூபா கொடுக்கணும் அம்மா, மாசா மாசம் பத்து ரூபாதான்.''

''ம்ம்ஹூம். எங்களால அவ்வளவு கொடுக்க முடியாது! என்ன பெரிய கான்வெண்டா? கூரைப் பள்ளிக்கூடம் தானே, கொஞ்சம் குறைச்சுக்கோங்கோ.''

''இல்லம்மா. நாப்பது ரூபாய் கட்டித்தான் ஆகணும். இன்னிக்கில்லேன்னா நாளைக்கு எடுத்துட்டு வாங்க.''



''நாளைக்கு மட்டும் காசு எங்கேர்ந்து வரும்? நாளைக்கு கொண்டுவர யோக்கியதை இருந்தா இன்னிக்கு விட்டுட்டுப் போகமாட்டேனே!''

'இன்னிக்கு விட்டுட்டுப் போங்க. நாளைக்கு நாற்பதும் நாற்பதும்!''

''ஒரு நாற்பதுதான் தருவேன். இருபது ரூபா போறும்.''

அகல்யாவுக்கு சிரிப்பு வந்தது. மேற்கொண்டு பேச முடியாமல் போயிற்று.

''இந்த இருவதே வீட்ல அவருக்குத் தெரியாம கொண்டு வந்து கொடுக்கணும். அல்பத்துக்கெல்லாம் சண்டை நடக்கிறது. தெரிஞ்சா கொலையே விழும். இருபது போறுமா? குறைக்கவே மாட்டேங்களா?''

''முடியாதும்மா!''

''இரண்டு நாள் பொறுத்துத் தரட்டுமா?''

''சரி.''

வந்தவள், இடுப்பிலிருந்து குழந்தையை இறக்கிவிட்டாள்.

''இந்தக் குழந்தை நிறைய படிச்சு, காசு சம்பாதிச்சு, நம்மை வச்சு சோறு போடும்ன்னு இப்படி அல்லல் படறோம்! எனக்கு இவன் சோறு போடப் போறானோ, மாட்டானோ?''

அகல்யா வியப்புடன் அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''எங்கப்பா ஆசை ஆசையா எனக்குக் கல்யாணம் பண்ணினார். இரண்டணா வெத்தலை பாக்கு பழம் அவருக்கு வாங்கிக் கொடுக்க எனக்கு முடியலை. உதவியா ஒரு வார்த்தை, ஒரு காரியம் செய்ய முடியலை! இந்தப் பாவம் சும்மா விடுமா? புள்ளையாப் பொறந்து என்னைப் பழி வாங்கப் போறது. டேய் ரமணா! டீச்சருக்கு நமஸ்காரம்

பண்ணு.'' மூன்று வயசு குழந்தை தடேரென்று காலில் விழுந்தான். அகல்யா பதறிபோய் குழந்தையை வாரிக் கொண்டாள்.

''பரவாயில்லை, பண்ணட்டும்.''

''வேண்டாம்மா, குழந்தைகள் இப்படி பண்ண வேண்டாம். என் கூட இவன் ஸ்நேகமா இருக்கணும். அதுதான் முக்கியம்! ஹலோ ரமணா.''

குழந்தை வாயில் விரலைப் போட்டுக்கொண்டு அகல்யாவைப் பார்த்துச் சிரித்தான்.

வத்சலா அருகில் வந்து குழந்தையை கை நீட்டினாள்.

''ரமணா, ஹலோ சொல்லு டீச்சருக்கு, ஹலோ மிஸ் சொல்லு!''

''இங்க இங்கிலீஷ்காரனா மாத்தறீங்க! வீட்ல கிராமத்துப் பையனா வளர்க்கறா! மாமனாரும் மாமியாரும் குழந்தையைத் தோப்புக்கரணம் போடுங்கறா! இதுவும் காதைப் பிடிச்சுப் போடறது. பார்க்கறப்ப வேதனையா இருக்கு. கூடாதுன்னு சொல்ல முடியலை.''

''உங்க பேர் என்னம்மா?''

''சகுந்தலா.''

''வீட்ல அவருக்கு என்ன வேலை?''

''பிரஸ்ல வேலை பண்றார். காலைல போனா ஆஞ்சு ஒஞ்சு ராத்திரிதான் வரார்.''

''நீங்களும் குழந்தைக்கு ஹலோன்னு காலைல சொல்லுங்க. குட்மார்னிங்ன்னு சொல்லி எழுப்புங்க. குழந்தையை தோப்புக்கரணம் போடச் சொல்லக் கூடாது.''

''உடம்புக்கு வலுவுங்கறார் மாமனார்!''

''மனசு கோழையாயிடும்! தண்டனை மாதிரி படும் குழந்தைக்கு. குழந்தைகள் பயப்படக் கூடாது மிஸஸ்



சகுந்தலா?''

''வெறும் சகுந்தலான்னே கூப்பிடுங்க போதும்.''

''மிஸஸ் சகுந்தலான்னுதான் கூப்பிடணும்! அதுதான் மரியாதை.''

''எனக்கென்னமோ, புதுசா இருக்கு. என்னை இப்படி யாரும் கூப்பிட்டதில்லை.''

''அதனாலென்ன? நான் கூப்பிடறேன்.''

''நீங்க ரொம்ப நல்லவளா தெரியறேள். பக்கத்து வீட்டு ரேவதிகூட அதுதான் சொன்னா! நீங்க மூக்குல போட்டுட்டுருக்கிறது வைரமா, டாலடிக்கிறது.''

''நாளன்னிக்கு நாப்பது ரூபா கொடுத்துடணும். குழந்தை எங்ககிட்ட பாத்திரமா இருப்பான்; மூணு மணிக்கு கூட்டிட்டுப் போங்க.''

'நிச்சயமா கொடுத்துடறேன். ரொம்ப தேங்ஸ், நீங்க நல்லவளா தெரியறேள்! ரேவதிகூட சொன்னா மூக்கில் போட்டிருக்கிறது.''

''ரமணா! அம்மாவுக்கு டாட்டா சொல்லு! இந்த அப்ளிகேஷன்ல குழந்தையோட அப்பா கையெழுத்து வாங்கிட்டு வாங்க.''

''அய்யோ! இதுல நாப்பதும் நாப்பதும் எண்பதுன்னு போட்டுருக்கா.''

''இல்லை, ப்ளாங்கா இருக்கு, கையெழுத்து மட்டும் வாங்கிட்டு வாங்க. நான் பூர்த்தி பண்ணிக்கிறேன்! ரமணா, அம்மாவுக்கு டாட்டா சொல்லு.''

வந்தவள் நின்று, தயங்கி, குழந்தையை வருடிக் கொடுத்துவிட்டு அப்ளிகேஷனுடன் போனாள்.

சிவசு ''வெரிகுட்'' என்றான்.

''என்ன வெரிகுட்?''

"நல்லா சமாளிச்சே."

"இதுதான் டயர்டா இருக்கு சிவசு. குழந்தைகளாலே ப்ராப்ளம் இல்லை."

"போகப் போக பழகிப் போய்விடும்."

"கொடிது கொடிது வறுமை கொடிது. அதனினும் கொடிது இளமையில் வறுமை, இல்லியா?" அகல்யா கன்னத்தில் கைவைத்தபடி பேசினாள்.

"மிஸஸ் சகுந்தலாவைப் பார்த்தா பாவமா இருக்கா?"

"இல்லியா பின்ன?"

"குழந்தை தினமும் தோப்புக்கரணம் போடறான்ன உடனேதான் கஷ்டமா போயிடுச்சு அகல்யா எனக்கு. குழந்தைகளை அவமானப்படுத்தற மாதிரி விஷயம் அது. அவமானப்படுத்தினா ஆங்காரம் வந்துடும்னு நிறையப் பேருக்குத் தெரியலை. இந்தப் பையனை தனியா கவனிச்சுக்கிட்டு வா. கொஞ்சம் வயலன்ஸ் இவன்கிட்ட இருக்கலாம். வத்சலாகிட்ட சொல்லு. முடிஞ்சா இந்தப் பையன் வீட்டுக்கு நாம இரண்டு பேரும் போவோம்."

"போகலாம். ஆனா எங்கே போனாலும் நீங்க பேசாம இருக்கீங்களே!"

"இரண்டு பேரும் பேசவாணாம்ன்னுதான்! நீ பேசணும்னுதான்."

"பத்து நாளாச்சு. இந்த டீச்சர்ஸ்கிட்ட கூட பேசலே."

"ஒரு பயம் இருக்கட்டும்ன்னுதான்."

"பேசாம இருந்தா பயம் வருமோ?"

"ஆள் குணம் தெரியாதபோது பயம் வரத்தான் செய்யும்."

"நான் ரொம்ப டாமினேட் பண்றேனோன்னு தோணுது சிவசு."



"சேசே. எல்லா இடத்திலேயும் நான் முன்னாடி நின்னா உனக்கு மரியாதை இருக்காது அகல்யா."

"நீங்க ரொம்ப தனியா நிக்கிறீங்களோன்னு படுது."

"அது என் இயல்பு அகல்யா."

"உங்க அம்மா குணமா?"

"இருக்கும்."

"இரண்டே வார்த்தைதான் பேசினாங்க இல்லை! உள்ளே வா, நல்லா இரு."

"அது போறாதா அகல்யா?"

"உங்கக்கிட்ட ஏதாவது சொன்னாங்களா என்னைப் பத்தி?"

"இல்லியே?"

"வேறெதும் பேசினாங்களா?"

"ம்ஹூம்."

"நெஜம்மாவா?"

சிவசு ஒருகணம் தயங்கினான். தன்னையே ஊடுருவும் அகல்யாவை நிமிர்ந்து பார்த்தான். "தனியா என்கிட்ட பேச என்ன இருக்கு அகல்யா?"

"அப்ப சரி. என்னவோ பேசின மாதிரி மனசுக்குப் பட்டது."

"ஒண்ணுமில்லை."

"வத்சலா, கே. ரமணா ஹைட், வெயிட் எடுத்துடு. அவங்கக்கிட்ட கொஞ்சம் பேசிப்பாரு. ஸீரியல் நம்பர் போட்டு புக் ஓபன் பண்ணு." பேசிக்கொண்டே ஹாலை விட்டு நகர்ந்து குழந்தைகளுடன் கலந்துகொண்டாள்.

முதல் பொய், அகல்யாவிடம் பேசின முதல் பொய். அகல்யா பின்பக்கம் போயிருக்கையில், அம்மா தன்

தலையைத் தடவி பேசத்தான் பேசினாள். "பள்ளிக்கூடத்தில்தான் குழந்தைங்க இருக்கேன்னு வயித்தை அடைச்சுக்க போறா சிவசு. ரோடு முழுக்க மரம் நின்னாலும், வீட்டு மரம் ஆவுமா? என்னைத் தூக்கிட்டு போற போது நெய் பந்தம் காட்டணும்டா. இரண்டு நா முன்னாடி ஐயா திண்ணையில் உட்கார்ந்து 'ஏன் உள்ளேயே இருக்க, வெளிய வா காத்தாட'ன்னாரு. கண்ணு முழிச்சப்போ வயிறு கலங்கிப் போச்சு. ரொம்ப நா தாங்கமாட்டேண்டா சிவசு."

சிவசு மெல்ல தாயை அணைத்துக் கொண்டான்.

"எனக்குன்னு இல்லை துரை. உனக்கு அப்பத்தான் பிடிமானம் வரும். பொண்டாட்டியை ஒரு வருஷம் கொஞ்சலாம். இரண்டு வருஷம் கொஞ்சலாம். அப்புறம் வெறும் எச்சலா பட்டுறும்! எச்சலா போறதுக்கு முன்ன குழந்தைங்க வேணும். நான் சொல்றது மனசுல வுழுதா துரை?"

"சரிம்மா."

"பின் மாலையா தூங்கப் போய்டு சிவசு. ரொம்பக் கண்ணு முழிக்காத. வந்து இரண்டு மூணு கொட்டாவி வுட்டுட்டே."

சிவசு சிரித்தான்.

"இரண்டு பேரும் இப்படிக் கொட்டாவி விட்டா பள்ளிக்கூடம் என்னாவும்? பார்த்து பத்திரமா பழகு சிவசு! போதுமான்னு கேட்கப்படாது. போதும்னு ஆள்றவன் தான் சொல்லணும். இரண்டு பெத்து இடுப்பு வலுவும், மார் திணவும் இறங்கினாதான் பொம்பளைக்கு அலுப்பு வரும். வெறும் வெண்ணெயில்லாம கடைஞ்சிக்கிட்டு இருந்தா?"

அம்மா என்னவெல்லாம் பேசுகிறாள். சிவசு மிரண்டான்; கவலையுடன் நிமிர்ந்தான்.

"ஐயா இருந்தா அத்தனையும் அழகா சொல்லிக் கொடுத்திருப்பாங்க. நீயா தெரிஞ்சுக்கும்படியா ஆச்சு! என்னமோ



நல்லா இரு. அகல்யா கால் கழுவிடுச்சு. ராட்டின சத்தம் கேட்குது. ஒரு ராத்திரி இங்கே தங்கி விட்டுப் போ."

அகல்யாவுக்கு ஆயிரத்தொரு ரூபாயும், பட்டும், காசு மாலையும், ராக்கொடியும் தட்டில் வைத்துக் கொடுத்தாள்.

"ஐயா, புள்ளைகளை கவனிச்சுக்க" என்று அப்பாவின் படத்தின் முன்பு நிறுத்தி அழுதாள்.

இரவு காசு மாலையும், அம்மாவின் பட்டும், ராக்கொடியும் அணிந்து நின்ற அகல்யாவைக் கண்டு சிவசு கண்களை மூடிக்கொண்டான். ஒரு சிறு பெண் உள்ளே நடனமாடக் கண்டான்.

ஆனால் அம்மா பேசினதை அகல்யாவிடம் சொல்லவில்லை.

## 15

அம்மா வேறு உலகம். அகல்யா வேறு உலகம். உடனே குழந்தை பெற்றுக் கொள்ளுதல் முடியாத காரியம். குழந்தை பெறுதல் மட்டுமே வாழ்க்கையெனில், இப்படி விளம்பரமும் விதவா விவகாரமும் அனாவஸ்யம். அம்மாவின் விருப்பம் சொன்னால் அகல்யா குழம்பக் கூடும். இது குழம்பும் நேரமில்லை. இந்தப் பொய் பாதகமில்லை.

பின்பக்கம் 'எக்ஸ்க்யூஸ்மி' குரல் கேட்டது.

'யெஸ்' என்று அனிச்சையாய் திரும்ப, வத்சலா புடவையின் கால் விளிம்பை உயரத் தூக்கியபடி நின்றாள்.

"ஒரு குழந்தைக்கு லூஸ்மோஷன் ஆறது. என் புடவையில பட்டுடுச்சு. உங்க லாவ் யூஸ் பண்ணிக்கட்டுமா?"

''ஷுர்'' பின்பக்கம் போய் கதவைத் திறந்து குழாயைத் திருப்பி, பக்கெட்டை நகர்த்தி, வத்சலாவுக்கு வழிவிட்டு நின்றான். அவன் உள்ளே வந்ததும் ஹால் வழியே வந்து எந்தக் குழந்தை என்று பார்க்க முதல் அறைக்குப் போனான். வத்சலாவுக்கு வாஷிங் சோப் வேண்டியிருக்குமோ? மறுபடி பின் விரைகையில் வத்சலா பாதிக் கதவைத் திறந்து வைத்து, வெளிச்சத்தில் புடவையைச் சுத்தமாய் பிரித்து அசிங்கம் ஆராய்ந்து கொண்டிருந்தாள். வெறும் புடவையும் ஜாக்கெட்டுமாய் நின்றாள். இவன் நிழல் அசைய, புடவை மொத்தமும் நெஞ்சில் வாரி ''ஐயோ'' என்றாள்.

சிவசு மறுபடி ஹாலுக்கு வந்தான், வியர்த்தது. லாந்தருக்கு நடுவே நிற்பவனைப் பார்த்து அகல்யா, ''என்ன?'' என்றாள். சிவசு ''ஒன்றுமில்லை'' என்று பதில் அளித்தான்.

இது இரண்டாவது பொய்.

**வெ**ட்கமும், சிரிப்பும் உடம்பை, மனதை கௌவிக் கொண்டன. மறுபடி அந்தச் சம்பவத்தை நினைக்கிற போதெல்லாம் கிளர்ந்து மலர வைக்கின்றன. 'என்னடி சிரிச்சுண்டே சோறு திங்கற?' அம்மா முகத்தைப் பார்த்துக் கேட்டுவிட்டாள். ஒன்றுமில்லை என்று மறைக்க மிகவும் சிரமமாகிவிட்டது. தலைப்பைப் போர்த்திக் கொண்டு இடுப்புப் பக்கம் அவிழ்த்து அலசியிருக்கலாம். இடுப்புப் பக்கம் அலசிவிட்டு பிறகு தலைப்பைத் துவைத்துக் கொண்டிருக்கலாம். யாரும் வரமாட்டார்கள் என்று மொத்தமும் அவிழ்த்து அலசி மாட்டிக்கொண்டு விட்டோம். 'ஐயோ' என்று நெஞ்சில் கைவைத்துக் கூவினதும், எப்படி மிரண்டு போனான். எத்தனை வேகமாய் பின்னடைந்தான்? அகல்யா மேடமிடம் சொல்லியிருப்பானோ? சனியன் என்று மனதுக்குள் வைதிருப்பானோ? சொன்னதாய் தெரியவில்லை. கோபமுற்றதாய் மனதுக்குப் படவில்லை. அதற்குப்



பிறகு சந்திக்க நேர்ந்த போதெல்லாம் அவன் தலையைக் குனிந்து கொள்வது கண்டால், வேதனைப்படுகிறானோ என்று தோன்றுகிறது. குற்ற உணர்வில் வெட்கத்தோடு சிரமப்படுகிறானோ என்று தோன்றுகிறது. ஒரு ஆண் தன்னைக் கண்டு வெட்கப்படுவது சந்தோஷமாய் இருக்கிறது. மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தன் பொருட்டு வேதனையுறுவது ஆனந்தமாய் இருக்கிறது.

'ச்சீ! இதுக்குப் போய் கஷ்டப்படுவாங்களா? கலப்மா இருங்க சிவசு. வேணும்ட்டா செய்தீங்க? ஒரு விபத்து மாதிரிதானே. ஈஸி, ஈஸி சிவசு' என்று சொல்ல ஆசையாய் இருக்கிறது. தன்னால் சொல்ல முடியாது.

இப்படி நேர்ந்ததை இதற்குப் பிறகு அவன் தவிப்பதை, அவன் தவிப்பு குறைய தனக்கு ஆசை வருவதை யாரிடமாவது சொல்ல வேண்டும்போல் இருக்கிறது. யாரிடம் சொல்வது? வீட்டுக் கொல்லைப்புறத்தில் உள்ள துளசிச் செடியிடம் சொல்லியாகிவிட்டது. வெறுமே துவண்டு தொங்குகிறது. என்னடி பண்ணலாம் என்று மானசிகமாய் ஒரு சிநேகிதியைக் கற்பனை பண்ணி யோசனை கேட்டாகிவிட்டது. அதுவும் வெறுமே பல் தெரியச் சிரிக்கிறது.

சாருவிடம் சொல்லலாமா? வத்சலா சாருவிடம் இடைவேளையின்போது சொன்னாள். 'ஐயோ' அவளும் வாயைப் பொத்திக் கொண்டு கத்தினாள். ''அகல்யா மேடத்துக்கு தெரிஞ்சா கஷ்டம் வத்சலா! அறிவு இருக்கான்னு நிச்சயம் கேட்பாங்க. பைத்தியக்காரி நீ! மொத்த புடவையுமா அவுப்பே! பாவாடையாவது நல்லபடியா இருந்ததா?'' என்று கேட்கையில் அழுகை வந்துவிட்டது. அந்த அழுகையின் நடுவேகூட ஒரு வெட்கம் மின்னிற்று. சிரிப்பு ஓடிற்று.

''சரி சரி, அழாதே! பேசாமலிரு.''

''மன்னிப்புக் கேட்கணும் சாரு.''

"எதுனாலடி?"

"வேதனைப்படறாரேன்னு தோணுது சாரு."

"உனக்குப் பதிலா நான் கேட்கட்டுமா?"

ம்ம்... ஆசை தோசை அப்பளம் வடை. உள்ளுக்குள் கோபம் பொங்கிற்று. "வேண்டாம். நானே கேட்டுக்கிறேன்" என்று கட் பண்ண வைத்தது. எப்படிக் கேட்பது? எவ்விதம் பேச்சைத் துவங்குவது?

"எனக்கு இப்படி நடந்தா நான் என்ன பண்ணுவேன்னு யோசனை பண்ணினேன் வத்சலா."

"அடிப்பாவி" உள்ளே ஆத்திரம் கதறிற்று.

"மன்னிப்பு கேட்கறதுதான் பெட்டர். திரும்பி சகஜமா பேச இது உதவும் கேட்டுடு. நீயா கேளு."

"எப்படி சாரு?"

"ஒரு சின்ன லெட்டர் எழுதிடேன்."

"ஐயோ வேணாம், அகல்யா மேடம் பார்த்தாங்கன்னா ஏன் என்கிட்ட சொல்லலேன்னு திட்டுவாங்க."

"மேடம் இல்லாதபோது கேளேன்."

"நீ கூட வரயா?"

"அவஸ்யம் வரணுமா?"

"பயமாயிருக்குடீ சாரு."

"என்ன பயம், சிவசு ஒரு ஜென்டில்மேன்."

"அதாண்டி பயம். பேசி மறுபடி குழப்பிட்டா?"

"பாட்டா பாடிடேன்."

"என்னது?"

"மன்னிக்க வேண்டுகிறேன். ஒரு சினிமா பாட்டு இருக்கில்ல, அதை காது கேட்கப் பாடிடேன். தானா புரிஞ்சுக்கட்டும்."



"ச்சீ! அசிங்கம், தப்பா பட்டுடும்."

"என்ன அசிங்கம்?"

"அதுக்கு அடுத்த வரி உன் ஆசையைத் தூண்டுகிறேன்னு வருது."

"ஆமாண்டி. அது வேணாம். வேற என்ன செய்யறது. நானா இருந்தா என்ன செய்வேன்..." சாரு புருவத்தை நீவிக்கொண்டு யோசித்தாள். சிவசுவின் எதிரே சாரு புடவையில்லாமல் இருப்பதுபோல் ஒரு காட்சி வத்சலாவுக்கு ஓடிற்று.

"விட்டுடுவோம் சாரு."

"எதுக்கு விடறது? நானா இருந்தா?"

"சரியான வெட்கம் கெட்டவடி நீ."

"வெட்கம் கெட்டது நானா, நீயா? அவுத்துப் போட்டு தின்னுட்டு என்மேல பாயறே."

"உதவி செய்டின்னா, என்னமோ...."

"அதான் யோசிக்கிறேன்."

"நீ வேற என்னன்னமோ யோசிக்கிற, எனக்குப் பிடிக்கலை, நானா இருந்தா... நானா இருந்தாங்கற."

"பொறாமையா?"

"உனக்குத்தான் பொறாமை? அலையறே."

"வத்சலா, மேலே பேசினா அப்படியே ரத்தம் வர வெடுக்குன்னு கிள்ளிடுவேன்."

"சத்தியமா சொல்லு, உனக்கு பொறாமையில்லைன்னு."

"சொல்லமாட்டேன்."

"ஏன்?"

"ஐ லைக் ஹிம்."

"லவ்வா?"

"சனியனே, குரலை அடக்கிப் பேசு. மேடம் காதுல விழுந்தா செருப்புப் பிஞ்சிபோய்டும்."

"உனக்கு இந்தப் பள்ளிக்கூடம் பிடிச்சிருக்கா சாரு?"

"ரொம்பப் பிடிச்சிருக்கு."

"எது, பள்ளிக்கூடமா?"

'ஏண்டி என் வயத்தெரிச்சலை கொட்டிக்கிறே."

"நீ கொட்டிக்கிலையோ?"

"சரி, விடு. நாம சண்டை போட்டு என்ன பிரயோஜனம்? வெறும் கனாதான் அத்தனையும்."

"ஆனா சந்தோஷமா இருக்கு சாரு."

"அடிசக்கை, ராத்திரி முழுக்க கனாதானா? என்னென்ன கனா, வெட்கமில்லாம சொல்லு. லவ் பண்றா மாதிரியா? இல்ல, மனசுக்குள்ள குடித்தனம் வெச்சிட்டியா?"

வத்சலா முகத்தைப் பொத்திக் கொண்டாள். விசும்பினாள். இது கிடைக்கப் போவதில்லை, ஒரு நாளும் கிடைக்கப் போவதில்லை. நனவாய் வரப்போவதில்லை. முழுவதும் இப்படி குழந்தைகளுடன் கதறிக் கதறி வாழ்க்கை விரயமாகப் போகப் போகிறதே தவிர, எதுவும் நனவாய் மலரப் போவதில்லை. சாருவுக்குள்கூட ஒரு சின்ன நம்பிக்கை இருக்கலாம். எனக்கு சாதகமாய் எந்த நம்பிக்கையும் இல்லை. விடுதலையில்லை. சிவசு மாதிரி கம்பீரமாய் ஒரு ஆண் தன் வாழ்க்கையில் வரப்போவதில்லை.

குலுங்கி அழும் வத்சலாவின் தலையை சாரு கோதி விட்டாள். முதுகைத் தடவிவிட்டாள். அவளும் டேபிளில் முகவாயை வைத்து கண்களை மூடிக்கொண்டாள். மெல்லப் பாட்டுப் பாடினாள்.

'உன்னை நான் சந்தித்தேன்
நீ ஆயிரத்தில் ஒருவன்



என்னை நான் கொடுத்தேன் - என்
ஆலயத்தின் இறைவன்.'

பாவம். இவளுக்குள்ளும் கனவுகள் உண்டோ? இவளும் இனிய ஆண்மகனுக்கு ஏங்குபவளோ? ஏன் ஏங்கக்கூடாது? என் மாதிரிதானே இவளும்? என் வயது தானே இவளும்? இவளிடம் சண்டையென்ன? சண்டையிட்டுப் பயன் என்ன? இவளுக்கும் சிவசுவைப் பிடிக்கிறது. இதை யார் தடுக்க முடியும்?

"ஸாரி சாரு. உன்னையும் கஷ்டப்படுத்திட்டேன்."

"பரவாயில்லை வத்சலா! நம்ம ரெண்டு பேர் புத்தியும் தெரிஞ்சு போச்சு."

"என்னடி பண்றது இப்போ?"

"அழுத்தி மூடி உள்ளுக்குள்ளே அடுத்த ஆளுக்குத் தெரியாம புதைச்சு வை. வெளியே தெரிஞ்சா வெட்டிப் போட்டுடுவாங்க. தேவடியாச் சிறுக்கின்னு சொல்வாங்க."

"அது இல்லை சாரு. மன்னிப்புக் கேட்கறது!"

"என்ன வேணா பண்ணு. எனக்கு இதுக்குமேல யோசிக்க முடியலை. உடம்பு அசந்து போறது."

"ப்ளீஸ் சாரு."

"விடு வத்சலா, நாம யோசிக்கறது தப்பு. இது துரோகம். சான்ஸ் கிடைச்சா மன்னிப்புக் கேளு. இல்ல சும்மா இரு."

"ஏண்டிம்மா, சாப்ட்டாச்சா வாங்களேன். அத்தனையும் கட்டிக்கிட்டு நான் ஒருத்தியா லோல் படறேன். சட்டுனு வாங்க." அறைக்கு வெளியே சொர்ணத்தம்மாள் குரல் கேட்டது. சாரு விருட்டென்று எழுந்தாள். வத்சலா முகம் துடைத்துக் கொண்டாள். ஹாலுக்கு வந்தபோது சிவசு யாருடனோ உள்ளே வந்தான்.

''மிஸ் சாருமதி, இவங்க டாக்டர் ஜானகி நடராஜன். குழந்தைகளை செக் பண்ண வந்திருங்காங்க, எவ்வெரி ஸெகண்ட் மண்டே வருவாங்க. ஹெல்ப் ஹெர்.''

''யெஸ் ஸார்.''

''மிஸ் வத்சலா, ரோனியோ ஷீட் வாங்கி வந்திருக்கேன். டைப்பிங் தெரியுமில்லையா உங்களுக்கு. மெடிகல் ரிப்போர்ட்ன்னு ஒரு மன்த்லி ஸ்டேட்மெண்ட் மாதிரி செய்யணும். சைக்ளோ ஸ்டைல் எடுக்கணும். ஆபீஸுக்கு வாங்க சொல்லித் தரேன்.

''டாக்டர், இது மிஸ் சாருமதி. இவங்க மிஸ் வத்சலா. எங்க ஸ்கூல் எமினண்ட் அஸிஸ்டென்ஸ். கம் வி வில் ஹாவ் சம் டிரிங்ஸ். ஆயாவை விட்டு கூல்டிரிங்ஸ் நாலு வாங்கிவரச் சொல்லுங்க, மிஸஸ் சொர்ணம், அகல்யா பாங்க் போயிருக்காங்க. கொஞ்சம் நீங்க தனியா பசங்களைப் பார்த்துக்கிடணும், ஸாரி.''

விறுவிறுவென்று நடந்து உள்ளே டாக்டருடன் போனான். நால்வரும் ஆபீஸ் அறையில் உட்கார்ந்து டாக்டரிடம் குழந்தைகள் பற்றி விவாதித்தார்கள்.

வெளியே சொர்ணத்தம்மாள் ஒண்ணுக்குப் போக கை நீட்டின பையனை தலையில் அழுத்தி உட்கார வைத்தாள். ஸ்கேலை எடுத்து மேஜையில் படீல் படீல் என்று தட்டினாள். கூடம் அமைதியாயிற்று. சிவசு ஒரு கணம் அந்த அமைதியைக் கவனித்துவிட்டு மேலே பேசத் துவங்கினான்.

சாருமதி மெடிகல் ஸ்டேட்மெண்டை கையிலெடுத்து அதுபற்றி பேசுவதுபோல் வத்சலாவிடம் குனிந்து, ''டைப் பண்றபோது, மன்னிப்பு கேட்டுடு. கேட்டுட்டு வந்து என்ன ஆச்சுன்னு சொல்லு'' என்றாள்.

வத்சலா மெல்லிய குரலில் ''பார்க்கலாம்'' என்று பதில் சொன்னாள்.



டாக்டரும், சாருவும் வெளியே போக, ஆபீஸ் அறைக்குள் தனியாய் இருந்தபோது சிவசு தானாய் வத்சலாவிடம் மன்னிப்புக் கேட்டான். வத்சலா அதனால் பரவாயில்லை என்று ஒரே வரியில் பதில் சொன்னாள். துல்லியமாய் டைப் அடித்தாள்.

வீட்டிற்குப் போகையில், இதை சாருவிடம் சொன்னபோது, ''நல்ல சான்ஸ், விட்டுட்டே வத்சலா'' என்றாள்.

''எதுக்குடி?''

''மேற்கொண்டு பேசறதுக்கு. இம்ப்ரெஸ் பண்றதுக்கு.''

''ஐயோ, செருப்படி படுவேன்னு நீதானே சொன்னே?''

''வெறுமே பேசறதுக்கெல்லாம் செருப்புல அடிச்சுடுவாங்களா?''

''நீயா இருந்தா என்ன பேசியிருப்ப?''

''ஆங்... அப்படி வா வழிக்கு! சண்டை போட்டியே மத்தியானம் பெரிசா...?''

''இனிமே போடலடி.''

''அப்ப ஒரு செகண்ட் இரு. யூ லவ் தட் மேன் இல்லியா? அதுமாதிரி நானும் லவ் பண்றேன். லவ் என்ன லவ்? பிடிச்சிருக்கு அவ்வளவுதான்! இதுக்கு நாம அடிச்சுப்பானேன்? நாம எப்பவும் ப்ரெண்ட்ஸ். ஏன்னா நமக்கு நம்ம ஆசை நிறைவேறப் போவதில்லை. வி போத் லவ் தட் மேன். இனிமே நமக்குள்ள வெட்கப்படறதுக்கு ஒன்றுமில்லை. நாம இரண்டு பேரும் பக்கி, பறக்கா வெட்டின்னு புரிஞ்சு போச்சு. ஒளிச்சுப்பானேன். நமக்குள்ளே பேசிப்போம்.''

''நீ என்ன பண்ணப்போற சாரு?''

''பேசிப் பார்க்கப் போறேன்.''

''எப்போ?''

''சான்ஸ் கிடைச்சப்போ.''

''பேசினா முழுக்க வந்து சொல்லு.''

''சொல்றேன்.''

''சத்தியமா?''

''சத்தியமா.''

''தேங்க்யூ சாரு.'' இருவரும் தெருமுனையில் பிரிந்தார்கள். ஒரு புழுதிக்காற்று தரையிலிருந்து கிளம்பி உயரே எழும்பி தெருவில் போகும் ஜனங்களை முகம் பொத்த வைத்தது.

## 16

''பாங்க்ல இன்னிக்கு படா ரிசப்ஷன் சிவசு. இரண்டு மூணு பேர் எழுந்து வந்து கவுண்டரைத் திறந்து உள்ளே மானேஜர் ரூம் வரைக்கும் கூட்டிக்கிட்டுப் போயிட்டாங்க! சின்னப் பள்ளிக்கூடம்தானே, யாருக்குத் தெரியும்னு நினைச்சேன். நிறையப் பேருக்கு தெரிஞ்சிருக்கு சிவசு.''

''பசங்க பெரிய பப்ளிசிடி அகல்யா நமக்கு. ஒரு குழந்தைக்குப் பின்னால நாலு பெரியவங்க இருப்பாங்க. நாலு பெரியவங்களுக்கு நாலு சிநேகிதம் இருக்கும். பரவிப் போய்டும்.''

''வேற ஏதாவது செய்யணும் சிவசு புதுசா.''

''பப்ளிசிடிக்கா?''

''ஆமாம்.''

''சோப்பு, சீப்புக்கு விளம்பர போஸ் கொடுக்கலாம்.''

''ச்சீ, திமிரைப் பாரு.''

''ஏன் கொடுக்கக்கூடாதா? நீ அழகாகத் தானே இருக்க அகல்யா?''



''ராத்திரி பேச்சா? தலையணை மயக்கமா?''

''காலைல உலுக்கி எழுப்பிட்டுக் கேளு. இதையே சொல்றேன்.''

''என்னன்னு?''

''எங்கள் அகல்யா தினமும் உபயோகிப்பது யானை மார்க் சோப்புகளே.''

''யம்மா, முதுகு நோவுது விடுங்க.''

''நேத்தும் விடுன்னு சொன்னே, இன்னிக்கும் வேணாங்கறே.''

''முடியலை சிவசு.''

''ஏன் அகல்யா?''

''இப்படி வெறும் மடில படுத்துக்கிட்டு இருக்கேனே!''

''ம்ம்ம்... சரி.''

''என்ன இழுத்தாப்போல சொல்றீங்க.''

''எனக்கு முடியலை அகல்யா.''

''என்னாது!''

''முதன்முதல்ல உன்னைப் பார்த்தப்போ வெறும் மடில போட்டுக்கிட்டு இருப்போம்னு தோணிச்சு. இப்ப வெறும இருக்க முடியலை.''

''ஏன் அப்படி?''

''ஆம்பளைப் புத்தி. தினி ருசி தெரிஞ்சவுடனே சும்மா இருக்க முடியாது.''

''சும்மாதான் இருக்கணும்னா?''

''கொஞ்சம் தள்ளி உட்காரணும். இவ்வளவு உரசிக்கிட்டு இருக்க முடியாது. தனியா இருந்தா, வேணாம்னு படுத்துட முடியும். தாழ்ப்பாளைப் போட்டுவிட்டு உள்ள இருந்தா கஷ்டப்படுத்தும்.''

''கதவைத் தொறந்துவிட்டு வெளியே போகப் போறீங்களா?''

''வேணாமா?''

''வேணாம் சிவசு? அப்பா என்னான்னு கேட்பாரு.''

''சரி.''

''கோவமாடா?''

''இல்லை அகல்யா!''

''இட்ட வாங்களேன்.''

''வாணாம் பொண்ணே.''

''வேணும்.''

''என்ன ஆச்சு உனக்கு?''

''சும்மா அலைக்கழிச்சுப் பார்த்தேன்! என்ன செய்யறீங்கன்னு பார்க்க ஆசையா இருந்துச்சு.''

''எரும்ம மாடு.''

''நீங்கதான். எரும்... ஐயோ முதுகு நோவுது.''

''நிஜம்மாவே நோவுதா. பொய் சொல்றியா?''

''முதுகும் நோவுது. வேணும் மாதிரியும் இருக்கு...''

''எழுந்திரு.''

''முடியாது.''

''எழுந்திரு சொல்றேன், எழுந்து தள்ளிப்படு.''

''முடியாது.''

''அப்படியே கடிச்சுக் குதறிடுவேன்.''

''கடிங்க பார்க்கலாம்.''

''சனியனே...''

''அப்போவ். இங்க பாருப்பா. சிவசு திட்டுது.''



''கஷ்டம்! இதுவே ஒரு நர்ஸரி; இது நடத்துற நர்ஸரி எப்படி இருக்கும்? பாங்குல கூப்ட்டு மாலை போட்டாங்களாம். பெருமை வேற, நாளைக்கு கவுன் மாட்டி நடுக்கூடத்துலே குழந்தையோட குழந்தையா உட்கார வைக்கணும்.''

''சிவசு, நான் இரண்டு நைட்டி வாங்கிட்டுமா? நைட்டி போட்டுக்கணும்னு ரொம்ப நாள் ஆசை சிவசு.''

''வாங்கிக்கடா.''

''நீங்க நீள கவுன் வாங்கிக்கிறீங்களா?''

''வேணாம்மா, நமக்கு வேஷ்டிதான் சௌகர்யம், சகலத்துக்கும்.''

''ச்சீ. ச்சீ. பள்ளிக்கூடத்து மேனேஜர் பேசற பேச்சா இது? அசிங்கம், உங்களை நம்பி அறுபது குழந்தை இருக்கு. இரண்டு பொண்ணுக வேலை செய்யுது. பேச்சை பாரு பேச்சை.''

சிவசுக்கு திக்கென்றது. என்ன சொல்கிறாள் என்ற கவலை வந்தது.

''நான் யார்கிட்டேயும் ஜாஸ்தி பேசறதில்லையே அகல்யா.''

''உடனே அரண்டுடணுமா? சும்மா கலாட்டா பண்ணினேன், உங்களைத் தெரியாதா சிவசு?''

''சரி. நகர்ந்து குப்புறப் படு.''

''வேணாம்.''

''படுன்னு சொல்றேன், குப்புறப் படு அகல்யா. எங்க நோவுது. நடு முதுகுலையா?''

''இடுப்புக்கு மேல. அங்கதான், அங்கதான். ஐயோ, அம்மா, கடவுளே, ஈஸ்வரா போறும் சிவசு.''

''வலி குறைஞ்சுதா அகல்யா?''

''கிட்டே வாங்களேன்.''

''எதுக்கு?''

''வாங்களேன் கிட்டே.''

''என்ன அகல்யா?''

''ஐ லவ் யூ சிவசு.''

''என்ன திடீர்னு...''

''இப்படி புருஷன் பொம்மனாட்டி சிநேகிதமா இருக்கிறது ஒரு கொடுப்பனை சிவசு.''

''பொம்மனாட்டி சிநேகிதமான்னா புரியலையே?''

''புருஷன் வேணுங்கறபோது புருஷனாகவும், சில சமயம் பெண் சிநேகிதி மாதிரியும் இருக்கறது.''

''அதுதான் வாழ்க்கை அகல்யா.''

''எனக்கு இப்பதாங்க புரியுது.''

''தூங்குடா...''

''இன்னும் கிட்ட வாங்க!''

''தூங்கும்மா, நாழியாச்சுல்ல.'' சிவசு அணைத்துக் கொண்டு அகல்யாவின் தலையை வருடி அயரும் நேரம், யாரோ கதவைத் தட்டினார்கள். அகல்யா விலுக்கென்று எழுந்தாள்.

''என்னங்க, அது நம்ம கதவா?''

''ஆம்... நீ இரு, நான் போய் பார்த்துட்டு வரேன்.''

''நானும் வரேன் இருங்க. ச்சு, கதவை இப்போ திறக்க வேணாம், இருங்க.''

அகல்யாவும், சிவசும் கதவைத் திறந்தபோது வெளியே அரையிருட்டில் யாரோ சட்டையும் வேட்டியுமாய் நிற்பது தெரிந்தது.

''ஹெட்மிஸ்ட்ரஸ் அம்மா யாரு?''



''எஸ். என்ன வேணும்?'' சிவசு கதவை அடைத்துக் கொண்டு நின்றான்.

''நான் உங்க பள்ளிக்கூடத்துல படிக்கிற ரமணாவோட அப்பா.''

''எஸ், என்ன ப்ராப்ளம்?''

''நீங்கதான் ப்ராப்ளம்.''

''நாங்களா, என்ன சமாச்சாரம்?''

''இப்போ மணி பதினொன்னே முக்கால். எங்க வீட்ல ஒருத்தரும் தூங்கல. தூங்க முடியலை. நாயா உழைச்சுட்டு வீட்டுக்கு வரேன். ஒரே கலாட்டா.''

''என்ன ஆச்சு சார்? என்ன ப்ராப்ளம்?''

''நீங்கதான் சார் ப்ராப்ளம். உங்க பள்ளிக்கூடம் ப்ராப்ளம். குழந்தையை ஏபிஸிடி சொல்லிக் கொடுக்கத் தான் அனுப்பிச்சேன். கிட்ட இருக்கும் பள்ளிக்கூடம் போயிட்டு வரட்டும்னு சொன்னேன். அவனுக்கு நாளைக்கு உங்க பள்ளிக்கூடத்தில் பர்த்டே பார்ட்டியாமே?''

''ஆமா! எல்லாக் குழந்தைக்கும் பர்த்டே ஸ்கூல் கொண்டாடும். கேக் வெட்டும். மாலை போடும். சந்தோஷப்படுத்தும்.''

''உங்களை யார் கொண்டாடச் சொன்னா என் குழந்தைக்கு பர்த்டே?''

''இதுல என்ன தவறு சார். இதுக்கு பத்து ரூபா முதல்லயே ஸ்கூல் சேர்ந்த அன்னிக்கே கலெக்ட் பண்ணிட்டமே.''

''யாரைக் கேட்டு கலெக்ட் பண்ணினீங்க?''

''இதுக்கு யாரைக் கேட்கணும்? நீங்க உங்க குழந்தை பர்த்டேயை மறந்தாலும் ஸ்கூல் மறக்காது. ஜஸ்ட்டு என்கரேஜ்.''

''ஒரு எழவும் வேண்டாம். எதுக்கு கேக் வெட்றது? மாலை போடறது? யாரையும் கேட்காம பத்து ரூபா வாங்கறது. காசு பிடுங்க இது ஒரு வழியா?''

''மிஸ்டர் உங்க பேர் என்ன?''

''கே. குப்புசாமி.''

அகல்யா பின்னாலிருந்து பேசினாள்.

''மிஸ்டர் குப்புசாமி. பத்து ரூபா பெற்றோர்கள் கொடுக்கறாங்க. பத்து ரூபா பள்ளிக்கூடம் போடறது. இது காசு பிடுங்கற வேலையில்லை. உண்மையிலேயே எங்களுக்கு எக்ஸ்ட்ரா செலவு. ஜஸ்ட்டு என்கரேஜ்.''

''வேண்டாம் சார். படிப்பு சொல்லிக் கொடுங்கோ போறும். வீட்ல வைச்சுப் படுக்க முடியலை. ஒரே ரகளை. நாளைக்கு பார்ட்டி, நாளைக்கு பார்ட்டின்னு அழுகை. எதுக்கு இந்த அதிகப்பிரசங்கித்தனம்? கேக்கு வெட்றதும், மாலை போடறதும் சகிக்க முடியல என்னால. நானே உழைச்சுட்டு வரேன்.''

''இப்ப உங்க இம்மீடியட் ப்ராப்ளம் என்ன?''

''தூங்கணும். நாலு மணி காலமாவது நிம்மதியா தூங்கணும். அடிச்சாலும் படியமாட்டேங்கறது! கத்தினாலும் கேட்கமாட்டேங்கறது? நாளைக்கு வேலைக்குப் போக வேண்டாம் நான்? இப்படி இடம் கொடுத்து குட்டிச்சுவர் பண்ணவா பள்ளிக்கூடம் அனுப்பறோம்? சேர்றதுக்கு முன்னாடி சமர்த்தா இருந்தான் புள்ளை. இங்க சேர்ந்தது லேர்ந்து குட்டிச்சுவர் பண்ணிட்டேள். அப்பா அம்மான்னா ஒரு பயம் இருக்கணும் குழந்தைக்கு.''

''சரி, உங்க வீடு எங்க?''

''அடுத்த தெரு.''

''அகல்யா, அப்பாகிட்ட சொல்லிட்டு வா. கதவைப் பூட்டி சாவி எடுத்துக்க. வாங்க சார் போகலாம்.''



''எங்க?''

''உங்க வீட்டுக்கு.''

''எதுக்கு?''

''நாலு மணி நேரம் நீங்க நிம்மதியா தூங்க. நாளைக்கு வேலைக்குப் போக. வா அகல்யா.''

''அதுக்கில்ல சார்.''

''நோ, ரமணாவை நான் பார்க்கணும்.'' சரக்கென்று சீறியபடி அகல்யா கதவைப் பூட்டி, இழுத்துப் பார்த்து விட்டு சிவசுவுடன் நடந்தான்.

## 17

ஓவென்று அழுகையோடு வாசல் குறட்டில் ரமணா அகல்யாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டான். கேவிக்கேவி அழுதான். அகல்யாவுக்கு கண்ணில் அழுகை முட்டிற்று. முதுகைத் தடவி, தலையை வருடி, குழந்தையைச் சமாதானம் செய்தாள்.

தோளில் போட்டு முதுகில் தட்டினாள். கேவல் சின்னச் சின்னதாய் வெளிப்பட்டு அடங்கியது.

''மிஸ்டர் குப்புசாமி, குழந்தை இன்னிக்கு எங்களோட இருக்கட்டுமே?'' சிவசு பேசினான்.

''எதுக்கு, வேண்டாமே?'' ரமணாவின் அம்மா ஓடிவந்தாள்.

''இல்லை மிஸஸ் சகுந்தலா, மறுபடி முழிச்சுக் கலாட்டா பண்ணினா, காலையில கொண்டுவந்து விட்டுடறோம்.'' அகல்யா குழைவாய் அனுமதி கேட்டாள்.

''எனக்கும் உடம்பு சரியில்லை, மாமனாருக்கும் ஜுரம்.''

''அதான் நான் எடுத்துக்கிட்டுப் போறேன். காலைல கொண்டுவந்து விடறேன். இங்கதானே வீடு?''

குழந்தை தோளை விட்டுப் பிரிந்து சிவசுவிடம் மாறிய போது, மீண்டும் தலைதூக்கி கத்தினான். சிவசுவின் முகம் பார்த்துவிட்டு தோளில் அழுந்திக் கொண்டான்.

''விடுடி, எங்கயாவது போய்த் தூங்கட்டும்.''

''எதுக்குன்னா அவாளுக்குச் சிரமம்?''

''பத்து ரூபா வாங்கினாளோன்னா, படட்டும்.''

''சிவசு, அதிகமா பேசறாரு இவரு.''

''சும்மா இரு அகல்யா, வேற ஏதோ கோபம் அவருக்கு.''

குழந்தையைப் படுக்கைக்கு நடுவே போட்டுவிட்டு இருவரும் படுத்துக் கொண்டார்கள். சிவசு ரமணாவின் நெற்றியில் முத்தமிட்டான். அகல்யா அவனையும் குழந்தையையும் சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

''அடேயப்பா, என்ன கோவம் மனுஷனுக்கு.''

''ச்சு, பேசாதே அகல்யா! குழந்தை முழிச்சுக்கப் போறான். தூங்கு பேசாம.''

விடியும் பொழுதில் வாசலுக்கு வந்து புடவையை நீவி செருகிக்கொண்டு கொட்டாவியுடன் வாசலைத் திறக்கையில் படியில் குப்புசாமி. திறந்த கதவைச் சட்டென்று மூடி சிவசுவை எழுப்பினாள்.

சிவசு கதவைத் திறந்து, ''வணக்கம் மிஸ்டர் குப்புசாமி.'' என்றான்.

''மன்னிக்கணும்! நேத்து ராத்திரி...''

''வணக்கம்.''

''மன்னிக்கணும், வணக்கம். எனக்கு அலுவலக வேலை அதிகம். அலைச்சல். அப்பாவுக்கு ஜுரம். வீடே ரகளை. மன்னிக்கணும். அப்புறம் தூங்க முடியலை, தூக்கமே



போய்டுத்து. என்னமோ கோவம். ஆபீஸ்ல இருந்த கோவம், வீட்ல நிம்மதியாத் தூங்க முடியாத கோவம்! தூங்கத்தான் முடியலை, குழந்தையை அனுப்பிச்சுட்டுப் புரண்டு புரண்டு படுத்தும் தூக்கம் வரலை. எவ்வளவு பெரிய மடத்தனம்னு அப்புறம்தான் புரிந்தது. மன்னிக்கணும். இப்படியெல்லாம் நாங்க வளரலை. யாரையும் வளர்க்கலை! பிறந்தநாள் கேக்கெல்லாம் புதுசு எங்களுக்கு. முக்கியமாப் படலை அது. அரையணா சாக்லெட், இதுக்குப் பத்து ரூபாயான்னு கோவம். உங்களுக்கு என்ன தலையெழுத்து? என்னுடைய பத்து ரூபால என்ன கேக். மாலை வாங்க முடியும்னு அப்புறம்தான் உறைச்சது. நாளும் கிழமையுமா குழந்தையை அடிச்சது வருத்தமாப் போயிடுத்து. தூங்க முடியலை. குழந்தை எழுந்து அப்பா எங்கேன்னு கேட்பானோன்னு ஆசை. ஏழு மணிக்கு ஆபீஸ் எனக்கு. ஆபீஸ் போறதுக்குள்ள பிறந்தநாள் வாழ்த்து...'' கண்ணில் கவலையுடன் தூக்கத்துடன் கூப்பிய கரங்களுடன் இருக்கும் மனிதனை சிவசு பார்த்தான்.

தேடிச் சோறு நிதம் தின்று
பல சின்னஞ்சிறு கதைகள் பேசி
வாடிமிக உழன்று பிறர்
வாடப் பல செய்கை செய்து

பாரதியின் பாட்டு ஓடிற்று மனசுக்குள்.

''வாங்கோ குப்புசாமி.'' சிவசு அவரை உள்ளே அழைத்து வந்தான். ஹால் நடுவே அகல்யா கைகூப்பி 'வணக்கம்' என்றாள்.

''ரொம்ப வருத்தப்படறார், ஆபீஸ் போறதுக்குள்ள வாழ்த்து சொல்லிட்டுப் போகலாம்னு.''

''நியாயமா நீங்கதான் முதல்ல சொல்லணும். உள்ள வாங்க.''

"உங்க ரூம்லயே படுக்க வச்சிட்டேளா? இப்படி ஹால்லயே போடப்படாதா அவனை? அம்பி ரமணா அப்பா வந்திருக்கேன் பார்."

குழந்தை நெளிந்து புரண்டு கண்விழித்து மிரட்சியாகி விசுக்கென்று எழுந்திருந்தான். "ரமணா வா, அப்பாகிட்ட வா."

நேற்று அடிவாங்கின துக்கம் மறுபடி நினைவு வர, ஓவென்று அழுதபடி தந்தையைக் கட்டிக் கொண்டான். குழந்தையைத் தோளில் சார்த்தி குப்புசாமி மெல்லக் குலுங்கினார்.

அகல்யா சின்ன ஸ்டூலில் வட்ட கேக் வைத்து, மெழுகு வர்த்திகள் ஏற்றி, குழந்தையை அருகே நிற்கவைத்தாள். சிவசு குப்புசாமியிடம் ரோஜா மாலை கொடுத்தான். மாலை அணிந்து வெட்கமும் சிரிப்புமாய் பையன் ஊதி மெழுகு வர்த்திகள் அணைத்ததும் மூவரும் கை தட்டினார்கள். சிவசு கத்தியால் நறுக்கின கேக்கைப் பையன் எடுத்து முகர்ந்து பார்த்துவிட்டு, "வாசனை இருக்குப்பா" என்று குப்பு சாமிக்கு ஊட்டியதும் அவருக்குத் தொண்டையில் கேக் சிக்கிக்கொண்டது. மகிழ்ச்சி பொங்க தன் பிள்ளையை அணைத்து, உச்சி முகர்ந்து வாழ்த்துகையில் மூவருக்கும் நெகிழ்ச்சி பரவிற்று. அகல்யா சுவர் ஓரம் போய் சாய்ந்து கொண்டாள்.

இடது கையில் மாலை அணிந்த பிள்ளையும், வலது கையில் கேக் தட்டுமாய் நின்றபடி, "உங்களுக்கு பிரிண்டிங் சம்பந்தமா என்ன உதவி வேணுமோ கேளுங்கோ, நான் செய்யறேன்" என்று சொல்லிவிட்டு தங்தங்கென்று நடந்து போனவரைப் பார்க்கையில் நிறைவு பொங்கிற்று.

இத்தனை நிறைவுக்கு இவன் காரணம்! இந்த சிவசு காரணம்! சொடுக்கு நொடியில் மனிதர்களின் குணம் அறிந்து சமாளிக்கும் இவன் திறன் காரணம். இவன் பலம்



ஆயிரம் யானை பலம்! இவன் பலம் தெய்வ பலம்! சிவசு சிவசு சிவசு.

அகல்யா படுக்கையறைக்குள் நுழைந்து "சிவசு" என்றாள்.

"என்ன அகல்யா?"

"வாங்க இங்க!"

"என்னம்மா?"

"நான் அதற்கு ஈடு செய்யணும்."

"எதுக்கு அகல்யா?"

"நான் அதைக் கொண்டாடணும்."

"எதுடா?"

"கேள்வி... கேள்வி... கேள்வி... எதுக்கெடுத்தாலும் கேள்வி?"

"டேய்... டேய்... விடு. என்னதிது இன்னும் பல்லுகூட விளக்கலை."

"கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடலாம். பல்லு விளக்காம பெட் காபி சாப்பிடப் படாதா?"

"வாணாம்மா... நான் ரொம்ப ஆசாரம்."

"என்ன ஆசாரம். பட்டப்பகல்ல ஏணிப்படியோட இறங்கினதும் மறந்து போச்சா?"

"அது காதல்!"

"இப்ப செய்யறது?"

"என்ன செய்யறது?"

"இதுவும் காதல்?"

"கொழுப்பு... கொழுப்பு... அசாத்தியக் கொழுப்பு?"

காதலினால் உயிர் தோன்றும் இங்கு
காதலினால் உயிர் வீரத்தில் ஏறும்
காதலினால் அறிவெய்தும் இங்கு

காதல் கவிதைப் பயிரை வளர்க்கும்
ஆதலினால் இவள் கையைப் பற்றி
அற்புதம் என்று இரு கண்ணிடை ஒற்றி
வேதனையின்றி இருந்தேன் அவள்
வீணைக்குரலில் ஓர் பாட்டிசைத் திட்டாள்.

சிவசு குதூகலத்துடன் அகல்யாவைத் தழுவிக் கொண்டான்.

ஆனால் வேதனையே இல்லாமல் மனிதர்கள் இருந்துவிட முடியுமோ? எனக்கு, எனக்கு, எனக்கே எனக்கு என்று இறுகித் தழுவிக்கொண்டால் பிரிவே, பிளவே இல்லாது போகுமோ?

"அகல்யா, மணி ஆறரை ஆகப்போவுது. எழுந்திரு! போய் குளி."

சிவசுதான் முதலில் எழுந்திருந்தான். துண்டால் மார்பை முதுகைத் துடைத்துக் கொண்டான். நெற்றியில் ஒற்றிக் கொண்டான்.

அகல்யா சுருண்டு படுத்திருந்தாள். லேசாய்த் தோளை உலுக்கினபோது, "என்னை எழுப்பாதீங்க" என்றாள்.

"ஏன் அகல்யா?"

"நான் இன்னிக்கு வகுப்புக்கு வரல. கொஞ்சம் தூங்கப் போறேன். சாருகிட்ட சொல்லிடுங்க. முடிஞ்சா மத்யானம் வரேன். நடுவுல அவசியமானாக் கூப்பிடுங்க."

"என்ன திடும்ன்னு?"

"தெரியலை..."

"சும்மா இருந்திருக்கலாமில்ல. முதுகு நோவுது. முதுகு நோவுதுன்னு கத்திக்கிட்டு... காலங்காலைல..."

"இதுக்கும் அதுக்கும் சம்பந்தமில்லை."

"டாக்டரை கூட்டிக்கிட்டு வரட்டுமா?"



"வாணாம்."

"ஏன்?"

"தூங்கினா சரியாப் போயிடும்."

"எது?"

"மனசு, உடம்பு இரண்டும்."

"மனசா? என்ன அகல்யா பேசறே நீ?"

"கொஞ்சம் தூங்கறனே."

சிவசு வெறித்து அவளைப் பார்த்தபடி மௌனமாய் உட்கார்ந்திருந்தான். ஒருமுறை கண்ணைத் திறந்து, அசைவற்று அவன் உட்கார்ந்த கவலையைக் கவனித்து விட்டு அவள் எழுந்தாள். மறுபடி புடவை சரிய, அவன் மடியில் விழுந்தாள்.

"என்னடா தவிக்கிற?"

"இரண்டு நாளா இப்படித்தான் சிவசு."

"என்னன்னு சொல்லு."

"வயத்தை பிசையுது சிவசு, கெட்ட கனவா வருது. பேய் பிசாசு பார்த்தா மாதிரி நடுக்கமா இருக்கு சிவசு."

'ச்சீ, என்ன விஷயம்? பூரா சொல்லு, என்ன கனா?"

"யாரோ அழுதுக்கிட்டிருக்காங்க, வீட்டு வாசல்ல. தலையில துண்டு மூடிகிட்டு என்னை விட்டுட்டியே... என்னை விட்டுட்டியேன்னு. அவர் குரலா இருக்கு சிவசு. நா பயந்து அடிச்சுக்கிட்டு வீட்டுக்குள்ளாற ஓடறேன். அப்பா கூடத்துல நிக்கறாரு. வாசல்ல அவரு நிக்கறாரு. ஐயோ செத்தே போயிட்டேன் சிவசு! வேற யாரோ உதவிக்கு வருவாங்களே! வேற யாரோ நமக்கு உதவிக்கு வருவாங்களே, அது யாரு அவங்க, எங்கேன்னு அலை மோதறேன். உங்க பேரு மறந்து போச்சு சிவசு கனால, எழுந்தவுடனே 'ஓ'ன்னு அழுதுட்டேன்."

''என்னிக்கு அகல்யா?''

'முந்தா நாள்.''

''அகல்யா...''

''சொல்லுங்க.''

''மனசுக்குள் பூட்டிப் பூட்டி வச்சுக்கிறதினாலதான் இத்தனை சிரமம். எழுந்திரு. கண்ணைத் துடை! முந்தா நாள் கனவுக்கு இன்னிக்கு அழுவாங்களா?''

''நேத்தும் கனா சிவசு. இது இல்லை வேறெதோ. அவரு எங்கோ அலையற மாதிரி.''

''கிட்டவா... கிட்டவான்னு பயந்து போய்த்தானா?''

''ம்ம்ம்...''

''என்கிட்ட முழுக்கச் சொல்லிடு அவர் பத்தி. பாதி பாரம் குறையும்.''

''வேணாங்க...''

''தோ பார்! வெட்கம், அவமானம் அனாவசியமாப் படாதே! என்கிட்ட என்ன வெட்கம்? சகலமும் பேசு அகல்யா. பொம்மனாட்டி சிநேகிதம்னியே அகல்யா, அது மாதிரி நினைச்சுக்கோ! ஏன் அவர் நினைப்பு வருது உனக்கு? ரொம்ப ஒப்பிட்டுப் பாக்கிறாயா மனசுக்குள்ள! என்னையும் அந்த ஆளையும் வச்சு எடை போடறயா?''

''இல்லை சிவசு. உங்க எடை தாங்காது அது.''

'பின்ன, ஏன் பழசு உறுத்தலாயிடுச்சு உனக்கு?''

''தெரியலையே தெரியல்லையே!''

''துரோகம்ன்னு தோணுதா? விதவையாகவே இருந்திருக்கணும்னு யாராவது சொல்லிட்டாங்களா?''

''இல்லை சிவசு...''

''நான் ஒட்டலையா மனசுக்குள்ள?''



''ஐயோ. இல்லப்பா...''

''அப்ப, நான் சொல்றதைக் கேளு! அவரைப் பத்தி என்கிட்ட சகலமும் நீயா சொல்லு. இல்ல கேள்வி கேட்கக் கேட்கச் சொல்றியா? வெளிப்பட்டா உனக்கே தெளிவு வரும்.''

''ஆயா கூட்ட வந்துட்டாபோல இருக்கு. சத்தம் கேட்குதே.''

''சரி... நீ கொஞ்சம் தூங்கு. நான் பள்ளிக்கூடம் ஆரம்பிச்சதும் வரேன்.''

''சாருகிட்ட சொல்லிடுங்க.'' சிவசு எழுந்திருந்தான். சட்டை அணிந்து கொண்டான். சாருமதி ''குட்மார்னிங்'' என்றதும் பதிலுக்கு வணங்கிவிட்டு அவளிடம் அகல்யாவின் சுகவீனம் பற்றிச் சொன்னான். ''நானும் இரண்டு மணி நேரம் பள்ளிக்கூடத்துப் பக்கம் வரமாட்டேன்! அப்பா இருப்பாரு.''

''ரமணாவுக்கு இன்னிக்குப் பிறந்த நாள் சிவசு.''

''எஸ். காலைல அவங்க அப்பா வந்து கேக் வெட்டினார். இப்பவும் கேக் வெட்ட பையன் ஆசைப்படலாம்! இன்னொரு கேக், மாலை வாங்குங்க. இந்தாங்க காசு.''

''உங்க பிறந்த நாள் எப்போ சிவசு?''

''எதுக்கு சாரு கேக்கறீங்க?''

''அன்னிக்கு நான், வத்சலா, சொர்ணம் கேக் வாங்கப் போறோம்.''

சிவசு நிதானமாய் சிரித்தான். ''சொல்றேன், இப்ப அதுக்கு அவசரமில்லை. கொஞ்சம் ஜாக்கிரதையா பார்த்துக்குங்க.''

''கண்டிப்பாச் சொல்லணும்.''

''சரி...''

அவன் நகர்ந்து, கூடத்தைத் தாண்டி பின்பக்கம் போனதும், சாரு, "பிறந்தநாள் வாழ்த்துக்கள்" என்றாள்.

"யாருக்குடி?" வத்சலா நெருங்கி வந்தாள்.

"பேசிட்டேனே..."

"என்ன பேசினே?"

"உங்க பிறந்த நாள் எப்போ? அன்னிக்கு நான், சொர்ணம் கேக் வாங்கப் போறோம்னேன்."

"என்கிட்ட சொல்லவேயில்லையே கேக் பத்தி."

"சும்மா ஒரு ரீல் விட்டேன்."

"சொர்ணத்திடம் கேக் வாங்கக் காசு கேக்கப் போறியா?"

"போடி பைத்தியம்."

"நாம ரெண்டுபேர் மட்டும்னா ஆறு ரூபா ஆகாது!"

"வேணாம். நான் மட்டுமே வாங்கறேன்!"

"நானும்."

"சரி, நீயும் நல்லா வந்து சேர்ந்தப்பா எனக்கு!"

"என்னை ஒதுக்கற பார்த்தியா?" சாரு பதில் சொல்லாது உள்ளே நகர்ந்து கைகளைக் கட்டி, "கடவுள் வணக்கம்" என்றாள்.

"கோபாலா கோபாலா, கோகுல நந்தன கோபாலா. யசோதா பாலா கோபாலா. யதுகுல திலகா கோபாலா." சாருவின் குரல் குழந்தைகளுக்கு நடுவே தனியே கேட்டது.

"சொல்லு அகல்யா, இப்ப சொல்லு."

"நீங்க கேளுங்க சிவசு!"

"அவரு எப்படி இருப்பார் பார்க்க?"

அகல்யாவின் கண்கள் வெறுமைக்குத் தாவின.

"எப்படி இருப்பான்?"

## 18

"மல்லிகைப் பூவைக் கழட்டி வச்சுடேன்! குறுகுறுங்குது வாசனை." விளக்கை அணைத்த பிறகு அதட்டுவான்.

"சுவாமிக்கு வச்சது."

"எனக்குப் பிடிக்கலைன்னு சொன்னேனில்ல!"

"உங்களுக்கு எதுதான் பிடிச்சுது?"

"இதுதான்!"

வைக்கக்கூடாத இடத்தில் கை வைக்க, "ச்சே, என்ன ஆபாசம்!"

காற்று பட்டதும் பொப்பென்று சிறகு உதறி எழுந்து மல்லாக்க விழும் தென்னை மரத்து வண்டாய்.

"போறும், போறும்! நகர்ந்து படு கசகசங்குது! கழுத்து விடேன். சும்மா எச்சில் பண்ணாதே பிடிக்காது. எனக்கு."

இரண்டே நிமிடம். உலகம் முழுக்கப் பிறகு எரிச்சலாகி விடும் அவனுக்கு. இல்லாத அருவருப்பு கவிழ்ந்துவிடும் உடம்பில்.

"அவசரம் அவசரம். சகலமும் அவசரம். நிருபர்னா என்ன... விளையாட்டா? எட்டுக் காலம் மேட்டர் டைப் பண்ணி வினோல ஏத்தி ப்ரூப் பார்த்து, ப்ளேட்டை மாத்தி, ப்ளேட் ப்ரூப் பார்த்து விடிகாத்தால இரண்டரை மணிக்கு முதல் பேப்பர் படிச்சு முடிச்சதும் ஒரு தூக்கம் வரும்பாரு, அடாடா அது சுகம், என்ன சொல்ற அகல்யா? பெட்டியைத் தலைக்கு வச்சிட்டு வெறும் பெஞ்சில் படுத்துடுவேன். ஏழு மணிக்குப் பெரியவரு மேட்டர் படிச்சு போன் போட்டு மேட்டர் நல்லா இருக்குதுன்னா சரட்டுன்னு சந்தோஷத்தி லேயே இன்னொரு தூக்கம் வரும். மறுபடி பெட்டி, பெஞ்சி. பத்து மணிக்கு டைப்பிஸ்ட் வந்து எழுப்புவான். நேரா வூட்டுக்கு வந்துடுவேன் எப்படி?"

அவன் சுகமெல்லாம் மர பெஞ்சும் மேட்டரும் வினோ ப்ரூப்பும், பெரியவர் போனும்தான். வீடும் மனைவியும் உடுத்திக் கொள்வதும், உண்பதும் இரண்டாம் பட்சம்; மூன்றாம் பட்சம்.

''அப்படி வளர்ந்திட்டேன். என்ன பண்றது? இதே பம்பாய் அப்படி மாத்திடுச்சி என்னை. எனக்கு இங்கிலீஷ் கற்றுக்கொடுத்து, வேலை சொல்லிக்கொடுத்து, இன்னிக்கு நிபுணனா மாத்திடுச்சு பம்பாய். அந்த அவசரம் என்னன்டை இல்லாத போகுமா? மோரு வேணும், டம்ளர்ல கொடு. பம்பாய்க்கு வரபோது ஒண்ணும் தெரியாது எனக்கு. பயங்கொள்ளி வேற. இன்னிக்கு எப்படி பிரபல நிருபர்ன்னு பேரு வந்ததுக்கு காரணம் இது... இது... இது'' மேஜையில் இருந்த செய்திப் பத்திரிகையை இடது கையில் பிரித்து தோளில் போட்டுக் கொள்வான்.

நினைக்க நினைக்க கடுமை படர்ந்தது அகல்யாவிற்கு.

''அடடா, இதுக்கு கோவிச்சுக்கலாமா அகல்யா. அஞ்சு விரலும் ஒண்ணா இருக்கா?'' அவளிடம் இதைச் சொன்ன பிறகு தலையை உலுக்கியபடி சிவசு பேசினான்.

''மேல் பார்வைக்கு நிறைய பேர் முரடா இருப்பாங்க அகல்யா. காயம்பட்டா அழுது துவண்டுடுவாங்க.''

''பெண்ணை மதிக்கத் தெரியல சிவசு.''

''எப்படித் தெரியும்? தெரிய எங்க சந்தர்ப்பம்? விலகி விலகி வச்சு... ஒரு நாள் கார்த்தால தாலி கட்டி, இவளை என்னவேணா செய்யலாம்னு விட்டா, அவனுக்கு அதட்டற தைத் தவிர, வேற என்ன தெரியும்? எல்லாப் பொம்பளை களும் சொல்ற குத்தம் இது அகல்யா. உன்கிட்ட தப்பே யில்லையா? ஆம்பிள்ளைன்னா மிரட்சி பயம், நடுங்குகிற சுபாவம் பெண்களுக்கு இல்லையா?''

''உங்களுக்குத் தெரியுதே எப்படி?''



''அமைஞ்சது! வாழ்க்கை அப்படி அமைஞ்சது. எங்க அம்மாவோட குணம்! தனிமை எனக்கும் புடிச்சது. அவளும் நாலு பேருக்குப் பயந்து நடுங்கி, அசிங்கப்பட்டு வந்தா. அவ கோபம், அவ ஆத்திரம், அவளுடைய வேதனை எனக்கும் வந்திட்டிருக்கும். நான் கேக்கறது, ஏன் இடும்னு அவர் நினைப்பு?''

''நல்லா இருக்கோம்னு சந்தோஷப்படறப்பவே அந்தப் பழைய நினைப்பும் வருது.''

''நல்லது. இப்போ ரொம்ப நல்லா இருக்கியா? இதுவும் ஒருநாள் அலுத்துப் போகாதா? மாறுதலுடைய ஆரம்பம் பெரிய மகிழ்ச்சிதான் அகல்யா. அது நிரந்தரமில்லை. அப்படி மாறுதல் சந்தோஷமா வரும்போது அமைதியா இருக் கணும்... கொஞ்சம் கவனமா இருக்கணும்... புருஷன் கிடைச்ச சந்தோஷம், பள்ளிக்கூடம் நல்லா நடக்கிற சந்தோஷம் ஆளைத் தின்னுடப்படாது. நாளைக்குப் பள்ளிக்கூடம் சரியா இல்லாது போயிட்டா பொசுக்குனு கவிழ்ந்திடலாம்.''

''சிவசு.'' அகல்யா பதறி அவன் வாயைப் பொத்தினாள்.

''தெரியும் அகல்யா, நீ என்னைவிட இந்தப் பள்ளிக் கூடத்தை முக்கியமா நினைக்கிறேங்கறது தெரியும். நெருப் புன்னா வாய் வெந்திடுமா? சகலத்துக்கும் சகல நேரமும் தயாரா இரு அகல்யா. இன்னிக்கு இந்தக் காரணம் எது விஷயம்ன்னு பாரு. நேத்து சமாச்சாரமோ நாளைக் கனாவோ வேணாம்.

''இப்ப எது சந்தோஷம், இப்போ எது நிலைமை, அதைப் பாரு அகல்யா, 'ஹியர் அண்ட் நௌ'ன்னு ஒரு வாக்கியம் கேள்விப்பட்டிருக்கியா? இன்னிக்கு சந்தோஷத்தை நேத்து வேதனையிலோ, நாளைக்கு உண்டான கனவிலேயோ விட்டுடாதே. இப்போ எது முக்கியம்? பள்ளிக்கூடம். இன்னிக்கு வகுப்பு, பாடம் இது முக்கியமில்லையா?''

"புரியுது சிவசு."

"வெரிகுட், புரிஞ்சதுக்கு அடையாளம்?"

"எழுந்து குளிச்சு வகுப்புக்குப் போறதுதான்."

"வெரிகுட்."

"ஆனா சிவசு?"

"சொல்லு கண்ணம்மா."

"உள்ளுக்குள்ள ஒரு வேதனை இருக்கே. இப்படி ஒரு கனா வருதே, இதுக்கு என்ன அர்த்தம்? அர்த்தம்ன்னு ஏதாவது உண்டா? அது கற்பனைதானா? என் புத்தி பிசகுதானா அது?"

"தெரியலை அகல்யா. உள்ளுணர்வுங்கறதை உடனே தெளிவாத் தெரிஞ்சுக்கறது முடியாது. ஆனா எதுக்கும் தயாரா இருப்போம்ன்னு திடம் வந்திட்டா கனா அதிகம் வராது. பயந்த ஆளுக்கு, விடாம இறுக்கிப் பிடிச்சிக்கிற ஆளுக்குக் கனா வரும்."

"உங்களுக்குக் கனா வந்ததுண்டா?"

சிவசு மௌனமானான். இன்று வெள்ளைக் குதிரையில் பெண்ணை ஏற்றிக்கொண்டு ஓடுவதுபோலக் கனவு வந்தது. குதிரை இவனை அயோக்கியன் என்று வேண்டா வெறுப்பாய் திட்டிக்கொண்டே ஓடுகிறது. சரிபோ... உன்னை யார் கேட்டா என்று பதில் சொல்கிறான்! ஓடினது போதும் என்று வெள்ளை குதிரையை நிறுத்திய போது குதிரையிலிருந்து சாரு குதித்தாள். பாவாடை ஜாக்கெட்டுமாய் நின்றாள். விழிப்பு வந்துவிட்டது.

ஆச்சரியத்துடன் பல் தேய்க்கையில் உன்மனசு தெரிந்து போயிற்று. வத்சலா பாவாடையும் ஜாக்கெட்டுமாய் நின்றது போல சாரும் வத்சலாவும் வெறும் பெண்கள் என்றுதான் உள்ளே பட்டிருக்கிறது. அவர்களின் சோகமோ குடும்ப சூழ்நிலையோ தெரியாமல் உடம்பு வளர்த்தி மட்டும் தொடர்ந்து



உறைத்து வந்திருக்கிறது. அவர்களை முற்றிலும் தெரிந்து கொள்ள இந்தக் கனா விட்டுப் போகும். சிநேகிதம் வர, குதிரையில் எடுத்துப் போவது நின்றுபோகும். ஹலோ என்று மனசார சொல்லாதது தவறு இது. இனி சொல்ல வேண்டும்.

"எனக்கும் கனா வரும் அகல்யா. ஆனா பயப்படற தில்லை கனாவுக்கு. இது உள்புத்தின்னு தெரிஞ்சு பிறகு கொஞ்சம் யோசனை பண்ணி சரி செய்துக்குவேன்."

"எதிர்காலத்தை கனா சொல்லும்பாங்களே?"

"சொல்லலாம். தெரிஞ்சிக்கிட்டா என்ன செய்யப் போறோம்? வரது வரட்டும்ன்னு திடமா நிற்க வேண்டியது தான். கஷ்டத்துக்கு முன்னாடியே தயாராகி அதை உடைக்க முயற்சி பண்ணி விடாம தொடர்ந்து சந்தோஷத்தை ஏற்க வைச்சுட வேண்டியதுதான்."

"நன்றி சிவசு."

"இதனாலதான் பேர் மறந்து போச்சு."

"எதனால்?"

"பிரிச்சுவச்சு நன்றி சொல்றதினால."

"சொல்லாம இருக்க முடியல சிவசு."

"சரி சொல்லு."

அகல்யா எழுந்து பின்பக்கம் நகர்ந்தாள். சிவசு மெல்லக் கட்டிலில் உட்கார்ந்தான். உள்ளுணர்வு கனவாகத்தான் வரவேண்டுமா? இந்தக் கனவை தன்னிடம் சொன்னபோது தனக்குள்ளும் ஒரு பயம், வேதனை படர்ந்தது. யாருக்கோ பிரியமான அகல்யாவை தான் கவர்ந்து கொண்டு விட்டோமோ என்று தோன்றுகிறது. குதிரையில் கடத்தியது அகல்யாவை இல்லை; அது சாரு. பல் தெரியச் சிரிக்கிற சாருமதி. அந்தப் பெண்ணைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். அவளைப் பற்றி தெளிவு வரவேண்டும். ஒரு

பெண் இருக்க மறுபெண்ணைப் பற்றி கனவு காணுவது சரியா? தடுத்து நிறுத்த முடியுமா? யோசிக்க வேண்டும். மனசு குழம்பாமல் நிறுத்த வேண்டும்.

இன்னொரு விஷயம்? அகல்யா கணவனைப் பற்றி ஏன் இவ்வளவு பயப்படுகிறாள்?

இத்தனை வெறுப்பு ஏன்? கெட்டிக்கார ரிப்போர்ட்டர் என்று அகல்யாவின் அப்பா சொன்னாரே, கெட்டிக்காரர்களைச் சந்தித்து நாளாயிற்று. கூர்மையாய் வாக்குவாதம் பண்ணி நாளாயிற்று. புத்தி கொள்முதலாய் பேசி வெகு காலமாயிற்று. சைக்கிள் கடையில் நிறையப் பேர் வருவார்கள். பேச்சாய் நிறைய நேரம் போகும். இப்போது பேச முடிவதில்லை. பேச ஆட்கள் இல்லை. நிருபருடன், ஒரு பெரிய பத்திரிகை நிருபருடன் பேசினால் எப்படி இருக்கும்? சிவசுவும் மெல்ல பின்பக்கம் நகர்ந்தான்.

சைரன்கள் அலறின. பெரிய முட்கம்பி கதவுகள் தடேலென்று அடைக்கப்பட்டன. மரத்தில் கட்டப்பட்ட அறைகளுக்கு உள்ளே நின்றவர்கள், அடித்து வெளியே இழுத்து வரப்பட்டார்கள். லான்ஸ் கார்ப்ரல் சர்தார் ஜெய்சிங் பளீரென்று அறை வாங்கினான்.

## 19

''சின்னசாமி எங்கே?''

''எனக்குத் தெரியாது சாஹேப்.''

''ஏ 38285 சின்னசாமி காணவில்லை எங்கே?''

''நான் எதுவும் அறியாதவன் சாஹேப்.''

''அத்தனை நாய்களையும் வெயிலில் படுக்க வை.''

''வரிசை, வரிசை, வரிசை.''

''ஏ32168 லான்ஸ் கார்ப்ரல் ஜெய்சிங் ஆஜர் ஸாப்.''



''ஏ2168 கார்ப்ரல் மஞ்சுநாத் ஆஜர் சார்!''

''சி 18236 சார்ஜெண்ட் மேஜர் நந்தா ஆஜர் சார்!''

அறுபது குரல்கள், அறுபது அடையாளங்கள்.

சின்னசாமி இல்லை.

''ஏ38285 சின்னசாமி இல்லை?''

''என்றையிலிருந்து இல்லை?''

''தெரியவில்லை ஸாப்!''

''கைதிகளை அடித்து என்ன பயன், உங்களை நிற்க வைத்துச் சுடவேண்டும். எல்லைகளுக்குச் செய்தி கொடு. வலை பரப்பு!''

''ஸாப், இவர்களை என்ன செய்வது?''

''வெயிலில் ஓடவிடு, சாகட்டும்.''

''ஐயா, ஐக்கிய நாடுகள் ஒப்பந்தப் பிரகாரம் கைதிகளைத் துன்புறுத்துவது'' ஜெய்சிங் முன்னேறி விரைப்பாகப் பேச, மறுபடி தாக்கப்பட்டார்.

''பன்றிகள்'' முணுமுணுத்தார்.

''என்ன சொன்னாய்?''

மறுபடி தாக்கப்பட்டார்.

முகத்தில் விழுந்த ரத்தத்தைத் துடைத்துக் கொண்டு கேட்டார்.

''முட்டாளே, காணாமற் போனது ஏ38285 சின்னசாமி என்பது உனக்குத் தெரியுமா?''

''தெரியாம என்ன? ஏதோ ஒரு நாய், இந்திய நாய்! என் கணக்கு ஒரு இந்திய நாய்.''

''உனக்கு கடைசிவரை ஏ38285 கிடைக்காது.''

''ஏன்?''

''அவன் செத்துப்போனான். விலா கிழிந்துவிட்டது.''

"பின் தப்பித்தது யார்?"

"தெரியாது."

"சரி சும்மாயிரு."

அவன் தலையிலிருந்து தோள் வரை போர்த்திய துணியில் அரேபியன்போல கப்பலிலிருந்து இறங்கிச் சுங்கக் கட்டிடத்துக்குள் நுழைந்தான்.

சுங்க அதிகாரி முன்வேறி-

"ஸலாம் ஆலைக்கும்" என்றார்.

"ஆலைக்கும் ஸலாம்" உச்சரிப்பு மாறி புதிதாய் நின்றது.

"மறுபடி சொல்."

"அலைக்கும் ஸலாம்."

தபதபவென்று நாலு காவலர்கள் முன்னேறி அவனை சுவரோடு நிறுத்தினார்கள்.

அவன் நெற்றியைத் தடவினார்கள். சுத்தமாய் உரித்தார்கள். தவறு நேர்ந்து விட்டது. மறுபடி சொல் என்றபோது 'ஸலாம் அலைக்கும்' என்று ஆரம்பித்திருக்க வேண்டும்.

"ஓ... என்ன, உன் கழுத்தில் ரத்தக் காயமா?"

"தெரியலையே, என்ன என் கழுத்தில்?"

"டாக்டரிடம் அனுப்பு இவனை."

"இது என்ன தேசம்?"

"ஸௌதி அரேபியா!"

"நீ எங்கிருந்து வருகிறாய்?"

"இந்தியாவிலிருந்து."

"பாஸ்போர்ட்?"

"இல்லை."



"எதற்கு வந்தாய்?"

"வறுமை. பிழைப்புத் தேடி."

அடிக்கக் கை ஓங்கியபோது, குனிந்து கொண்டான்.

அடிக்க முனைந்தவனை மற்றவன் தடுத்தான்.

"வறுமை என்கிறவனை அடித்து என்ன பயன்? மேலும் இவனை நீ தொட வேண்டாம்."

"ஏன்?"

அவர்கள் இதை ரகசியமாய் பேசிக் கொண்டார்கள். அவனை விநோதமாய் பார்த்தார்கள். அவனுக்கும் அந்த சந்தேகம் இருந்தது. டாக்டர் தெளிவாய் சொல்லி விட்டார். "தனியாய் அடைத்து வையுங்கள். இவன் குஷ்டரோகி."

அவன் அழுதான். அகல்யா, அகல்யா, அகல்யா என்றான்.

இரவு தண்ணென்றிருந்தது. சின்னதாய் மேகங்கள் அலைந்தன. கொல்லைப்புறம் பவழமல்லி கட்டவிழ்ந்தது. வத்சலா சமையலறையில் விளக்குப் போட்டு ஜன்னலோரம் உட்கார்ந்தாள். தாழ்வான ஜன்னல், உட்கார்ந்தபடி பார்த்தால் கொல்லைப்புறம் தெரியும்; வானம் தெரியும்; மேகம் தெரியும். சில சமயம் நிலவும் வரும்.

மணைப்பலகையை மடியில் வைத்துக் கொண்டு தடவிக்கொடுத்தாள். அதை நிமிர்த்திச் சுருதி பெட்டி போல் பாவனை செய்து சப்தமெழாமல் மனசுக்குள் சுருதி சேர்த்தாள்.

"நீங்க பாடுவீங்களா வத்சலா?"

"ம்ம்ஹூம், தெரியாது."

ஆனால் வத்சலாவுக்குப் பாட ரொம்ப ஆசை. ஊர் மொத்தமும் மயங்கிப் போகும் குரலாய் தனக்கு வர வேண்டும் என்று ஆசை. ஆனால் போலிக் குரலில் தான் பாட்டுப்பாட முடிகிறது. பளீரென்று கனமாய் உரக்கப்

பாட நினைத்தால் பிசிறு தட்டுகிறது. சுருதி பிறழுகிறது. பொய்க்குரல் பாட்டு தனக்கு மட்டும்தான் பாடிக்கொள்ள முடிகிறது. அவள் பொய்க்குரல் பாட்டை ரசிக்க வேண்டு மெனில் ஓர் ஆள் நெருக்கமாய் உட்கார வேண்டும். தோளில் முகம் சாய்த்துப் பாடும்போதுதான் நல்லபடி பாட முடியும். அவ்வளவு நெருக்கத்தில் யாருக்கும் பாடியதில்லை. சாருவிடம் பாடியபோது, ''சரி செமை கிக்குல இருக்கா போல இருக்கு அம்மா, தாங்காதுடி தாயே வெடிச்சுடப் போறே'' என்றாள். அவள் பேசியது சிரிப்பையும், வேதனை யையும் சேர்த்துக் கிளறியது.

''அடுத்த வருஷம் பாட்டுத் தெரிஞ்ச டீச்சர்கிட்ட சேர்த்துடணும். சுருதிப் பெட்டியும், வீணையுமா, குழந்தை களுக்குப் பாட்டு சொல்லித் தரணும்.''

''இரைச்சலா இல்லாம, மெல்ல மிருதுவாப் பாட்டுச் சொல்லித் தரணும். இந்த சம்மர் லீவுல நீங்க வேணா பாட்டுக் கத்துக்க ஆரம்பிங்களேன்.''

''நா என்னிக்கு கத்துக்கிட்டு என்னிக்கு சொல்லித்தரது?''

''உங்களுக்கே நம்பிக்கையில்லைன்னா வேணாம்.''

''சரி, கத்துக்கிறேன்.''

''நான் சொல்றதுக்காகவா?''

வத்சலா நிமிர்ந்து பார்த்தாள், எங்கிருந்தோ சின்ன தைரியம் சட்டென்று மனசுள் ஒட்டிக்கொண்டது.

''ஆமாம்'' என்றாள்.

''அடேடே, விருப்பமில்லாம செய்யறீங்க?''

''விருப்பத்தை வரவழைச்சுக்கப் போறேன்!''

''வெரிகுட், எவ்வளவோ செலவாகும்னு கேட்டுக்கங்க. ஸ்கூல் கொடுத்துடும்.''



''எவ்வளவோ தூரம் இருக்கு. பாட்டுக் கத்துக்க தினம் போறீங்களா?''

''வர்ணம் ஆரம்பிச்சேன், இன்னிக்கு?''

''பாடுங்க கேட்கலாம். என்ன ராகம்?''

''மோகனம். இப்படி சட்டுன்னு பாடமுடியும்னு தோணலை. நாளாகும் அதுக்கு.''

''வீட்ல பாடறீங்களா?''

''ம்ம்ம்!''

''வெரிகுட், என்னிக்கு உங்களுக்கு நம்பிக்கை வருதோ அன்னிக்குப் பாடுங்க போதும்.''

உடனே நெஞ்சுக்குள் பாட்டுக் கிளம்பிற்று ''சுகுமாரா! என் தாபம் தனை நீ அறியாயோ மாரா...'' பாட முடியவில்லை.

''சாருமதி பேரண்ட்ஸ் டே வருது. என்ன செய்யலாம்?''

''ட்ராமா போடலாம். குரூப் ஸாங்ஸ் பாட வைக்கலாம் சிவசு சார்.''

''புதுசா ஏதாவது?''

''மாறுவேஷப் போட்டி வேண்டாங்க. நிறையக் குழந்தைங்க குறவன் குறத்தியாவே வந்திடும்.''

வத்சலா வாய்விட்டுச் சிரித்துவிட்டாள். சிவசு திரும்பி வத்சலாவின் சிரிப்பை ஆமோதித்தான். வத்சலா சட்டென்று அடங்கினாள். பளிச்சென்று ஒரு யோசனை மின்னப் பேசினாள்.

''எல்லாக் குழந்தைகளும் ஒரே வேஷம் போடச் சொல் வோம். பாரதியார் வேஷம் போட்டு ஒரே பாட்டை எல்லாக் குழந்தைகளும் பாட வைப்போம். நல்லா இருக்குமா?''

''தேர் யூ ஆர். இப்பத்தான் டீச்சரா வறீங்க. வெரிகுட் வெரிகுட். என்ன பாட்டு பாடச் சொல்லப் போறீங்க?''

''வெள்ளை நிறத்தொரு பூனை.''

''வேணாம். ஜாதி சமாச்சாரம். முன்ன மாதிரி அவ்வளவு மோசமா இல்லை.''

''பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால். குழந்தைகளுக்குச் சிரமம் இருக்காது.''

''பாருக்குள்ளே நல்ல நாடு'' சாரு இடையே புகுந்தாள்.

''புதுசாச் சொல்லுங்க.''

''எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி...'' வத்சலா நினைப்பூட்டினாள்.

''செய்யலாம்.''

''இது மட்டும் கஷ்டமில்லையா? சாரு'' இடைமறித்தாள்.

''கஷ்டம்தான். சாரு நீங்க பாடிடுங்க. பசங்க பாரதியார் ஆக்ஷன் செய்யட்டும். பாட அவசியமில்லை. பாடினாலும் பாதகமில்லை.''

இருபது குழந்தைகளுக்கு வத்சலாவும், சாருவும் அகல்யாவும் பாரதி வேஷம் போட்டார்கள்.

திரை தூக்க, முண்டாசும் மீசையுமாய் குங்குமப் பொட்டோடு மேல் கோட்டும் வேஷ்டியுமாய் இருபது குழந்தைகள் கைகூப்பி மேடையில் நிற்க, சிவசு அதிர்ந்து போனான். தூணை இறுகப் பிடித்துக்கொண்டான்.

வத்சலா குரல் இழையப் பாடினாள்.

*''இதை வந்தனை கூறி மனதில் இருத்தி*
*என் வாயுற வாழ்த்தேனோ - இதை*
*வந்தே மாதரம் வந்தே மாதரம்*
*என்று வணங்கேனோ''*

என்று முடித்தாள்.



திரை விழ, கூட்டம் கை தட்டிற்று. ஒரு பாரதி திரையை விலக்கி 'அம்மா' என்று கூட்டத்தை நோக்கிப் பெரிய விழிகளால் தேடிற்று. ''நான் பாடினேன் பார்த்தியா?'' என்று கேட்டது. பாட்டை விட அந்தக் குஞ்சு பாரதி திரை விலக்கித் தன் அம்மாவை தேடியதும், சிவசு நெகிழ்ந்து போனான். உடைந்து போனான்.

உள்ளே ஓடிக் கொத்தாய் கைக்கு நாலு குழந்தைகளை அணைத்துக் கொண்டான்.

''ஐயா, ஐயா... பாரதி, பாரதி'' என்று சந்தோஷமும், துக்கமும் வேதனையும் விதிர்ப்புமாய் ஒரு சின்ன குலுங்கலோடு குழந்தைகளை முத்தமிட்டான்.

''சிவசு, சிவசு! என்ன இது?''

''ரொம்ப கஷ்டமாயிடுச்சு அகல்யா, பாரதி எப்பேர்ப்பட்ட ஆள், நாம் கவனிக்காம வுட்டுட்டோம்.''

''சிவசு, குழந்தைகளை விடுங்க.''

''அத்தனையும் அணைச்சுக்கத் தோணுது அகல்யா.''

''குழந்தைகள் பயந்துரும் சிவசு.''

''சரி...'' முகத்தை துடைத்துக் கொண்டு பின் மாடியேறி திறந்தவெளிக்கு வந்தான்.

அடுத்து அடுத்துக் குழந்தைகள் வேறெதோ பாடின! கைதட்டலும் கூச்சலும் கேட்டன.

வத்சலா இருட்டில் மெல்ல நகர்ந்து படியேறி மாடிக்கு வந்தாள்.

வானத்தை வெறித்து கை கட்டியபடி நிற்கும் சிவசுவிடம் நெருங்கினாள்.

''அந்த ப்ரோக்ராம் நல்லா இருந்திச்சா?'' என்றாள்.

சிவசு பட்டென்று திரும்பினான். ''ரொம்ப நல்லா இருந்திச்சு வத்சலா, ரொம்ப நல்லா இருந்திச்சு. உங்க கையை

கொண்டாங்க இப்படி, ப்ளீஸ்'' இரண்டு கைகளால் அவள் கையைப் பற்றிக் கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

''உங்க ஐடியா இது வத்சலா. கிழிஞ்சு நார் நாராயிடுச்சு மனசு. என்னென்னவோ தோணிடுச்சு. உங்களுக்குத் தோணலை இப்படி?''

''உங்களுக்கு உங்க அப்பா, அம்மாவை ரொம்பப் பிடிக்குமா சிவசு சார்?''

''யெஸ்!''

''எனக்குப் பிடிக்காது சிவசு சார்?''

''புரியுது வத்சலா''

''நான் முதன்முதலா நிம்மதி அனுபவிச்ச இடம் இந்த இடம் தான். நம்ம பள்ளிக்கூடம்தான், இவ்வளவு சிநேகமா, பிரியமா கண்ணில் ஒத்திக்கிற மாதிரி யாரும் என்கிட்டே இருந்ததில்லை சிவசு சார்!''

''புரியுதும்மா.''

''நீங்க இன்னிக்குக் குழந்தைகளைக் கட்டிக் குலுங் கினதும் நான் அழுதுட்டேன். இத்தனை அன்பா? இத்தனை பெரிய மனசான்னு தவிச்சுட்டேன்!''

''ம்ம்ம்...!''

''ஐ லவ் யூ சிவசு.''

சிவசு இந்த நிமிடத்திற்குத் தயாராய் இருந்தவன்போல முகத்தைப் பொத்திக் கொண்டான். கன்னத்தில் கையூன்றித் தரையை வெறித்தான்.

''நான் பேசினது தப்பாய் இருக்கலாம். ஆனா இதை அடக்கி வச்சிக்க முடியலை. உங்க மனசு வருத்தப்படலாம். இருந்தாலும் மறைக்க முடியலை. பொய்யா திரியறதைவிட நிஜம் சொல்றது நல்லதில்லையா? நான் எதையும் எதிர் பார்க்கலை சிவசு சார்! பதிலுக்கு நீங்க சொல்லணும்னு கூட



எதிர்பார்க்கலை. எனக்குத் தோணினதைச் சொன்னேன். மறுபடி சொல்றேன். 'ஐ லவ் யூ சிவசு, ஐ லவ் யூ'' மெல்ல குனிந்து நிலம் தொட்டு அவனை வணங்கினாள். இரும்பி நடந்து படிகளில் இறங்கி மறைந்தாள்.

''பேயவள் காண் எங்கள் அன்னை - பெரும்
பித்துடையாள் எங்கள் அன்னை,
காய்தழல் ஏந்திய பித்தன் தனைக்
காதலிப்பாள் எங்கள் அன்னை
வேதங்கள் பாடுவாள் காணீர் - உண்மை
வேல் கையிற் பற்றிக் குதிப்பாள்.
ஓதருஞ் சாத்திரம் கோடி - உணர்ந்து
ஓதி உலகெங்கும் விதைப்பாள்.
பாரதப் போரெனில் எளிதோ?''

சிவசு அயர்ச்சியுடன் கண்களை மூடிக்கொண்டான்.

''பாரதப் போரெனில் எளிதோ!'' மறுபடிச் சொன்னான். இம்சைப்படப் போகிறாய் பெண்ணே. அடிபட்டு நசுங்கப் போகிறாய். இலக்கு இன்றி எங்கோ விழுந்த அம்புபோல போய்விடப் போகிறாய்.

நாணிட்டு நல்லறிவிழந்த காமம்
வில்லுமிழ் கணைபோல சேட்படவே.

காமம்தான் இது. மெல்லிய காதல் போர்வையில் போர்த்திக் கொண்டு வருகிறது.

பாரதப் போரெனில் எளிதோ?

சரிந்து சுவரோரம் சற்றுநேரம் உட்கார்ந்தான். கீழே இறங்கி ஜனங்களுடன் கலந்துகொண்டான். கலங்கிய கண்களும் சோர்வு தட்டிய முகமுமாய் இருக்கும் அவனை அகல்யா வியப்புடன் பார்த்தாள்.

வத்சலா வீட்டுக்குப்போய் சாப்பிட்டு விட்டு எல்லோரும் தூங்கியதும் சமையலறை விளக்கைப் போட்டு ஜன்னலோரம் உட்கார்ந்தாள்.

## 20

"என்ன சாயந்திரம் இப்படிச் செய்துட்டீங்க!" அகல்யா இரவு வியப்புடன் பேசினாள். "அப்புறம் பார்க்காம போயிட்டீங்களே! கூட்டம் கலைஞ்சு ரிக்ஷாலையும், ஸ்கூட்டர்லையும், சைக்கிள் கேரியர்லையும் அம்மா மடியிலுமாய் பாரதியார் முண்டாசு அவுக்காத குழந்தைங்க போறதைப் பார்க்கறப்ப எனக்கும் என்னவோ ஆயிடுச்சு. அப்படித் திரும்பினா ஒரு பாரதி, இப்படித் திரும்பினா ஒரு பாரதி. மேடையில் பாடுறதைவிடக் காலைச் சுத்திப் பத்து பாரதி நிற்கறப்ப எனக்கும் கைக்கூப்பத் தோணிச்சு. ஆனா நீங்க உணர்ச்சி வசப்படுவீங்கன்னு நினைக்கவேயில்லை. நிஜம்மாவே கலங்கிட்டீங்களா சிவசு. யம்மா! எனக்கு என்ன தெரியுமா உடனே ஞாபகம் வந்திச்சு. இந்த ஆள் நாஸ்திகம் பேசறானே, சாமி இல்லைன்னானே, இவனைக் கல்யாணம் பண்ணிக்கலாமா! கடுமையான ஆளா இருந்துடப் போவுதேன்னு உங்க வீட்டுக்கு வந்த மறுநாள் குழம்பினேன். அது பட்டுன்னு மனசுக்குள்ள வந்துச்சு ஐயோ. சிவசு கூட அழுவுதேன்னு. இப்ப ஆச்சர்யமாய் போயிடுச்சு. நா உங்களைக் கொஞ்சம் அதட்டிட்டேன் இல்லை, குழந்தைங்க பயந்துடும்ன்னுதான். சிவசு! மாடிக்குப் போய் ரொம்ப அழுதிட்டீங்களா!" சிவசு கண்களை மூடிக்கொண்டு கட்டிலில் அசையாமல் உட்கார்ந்திருந்தான்.

"அழுகைன்னா என்ன அகல்யா!"



"கண்கலங்கிடறது"

"அவசியமில்லை. அது ஒரு வெளிப்பாடுதான். கண்ணு கலங்காம கூட அழமுடியும்."

"சரி, எதுக்கு அழணும்? அதுவும் திடும்னு பாரதியை நினைச்சுக்கிட்டு. என்னிக்குமில்லாம இன்னிக்கு குலுங்கணும்?"

"இந்த உலகத்துல இருக்கிற சூட்சுமமான வேதனையை அனுபவிச்சவன் பாரதி. அந்த வேதனை படறவனெல்லாம் பாரதியை நினைச்சா அழத்தான் முடியும். அழுகைனா கண்ணால ஜலம் விடறது இல்லை. ஒரு பதற்றம், வேதனை. எதுவுமே சரியில்லையே இங்கேன்னு ஒரு பெரிய கவலை."

"புரியலீங்க சிவசு."

"சொல்லி முடியாது அகல்யா. இது ரொம்ப ஆழமா உள்ளே இருக்கிற உணர்ச்சி. வாடின பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்ங்கற மாதிரி ஒரு விஷயம்."

"நீங்க சந்தோஷமாயில்லையா சிவசு?"

"உள்ளுக்குள்ள இல்லை அகல்யா. நிரந்தரமா ஒரு திகைப்பும், வேதனையும் இருக்கு எனக்குள்ள. ஒருத்தர் முகத்துலேயும் முழுமையில்லாம ஒரு குறை தெரியுது. மனுஷங்க சண்டை போடறது, அலுத்துக்கறது, சரின்றது தப்புன்றது எல்லாம் பார்க்கப் பார்க்க வேதனை வருது. 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்'கிற வரியைக் கேட்கறப்போ இது இன்னும் அதிகமாவுது."

"அதுதான் சுதந்திரம் கிடைச்சிருக்கே."

சிவசு சிரித்தான். "பாரதி பாடினது தேச விடுதலையா? எனக்கு அப்படித் தோணலை, அகல்யா! சகல துன்பங்களிலிருந்தும் விடுதலை வேணும். கட்டுப்பட்டு நிற்கிறதே வாழ்க்கையாப் போயிடுச்சு நமக்கு. ஒரு கட்டு, உடைச்சு இன்னொரு கட்டு. அதை உடைக்க வேறவிதம். இதுதவிர,

பசி ஒரு கட்டு, நோய் ஒரு கட்டு, முதுமை ஒரு கட்டு. ஞானமே மனுஷனுக்கு வராதுங்கற போது வர கவலை பெரிய கவலை அகல்யா. என்னென்னவோ கிடைக்கும் மனுஷனுக்கு மேன்மை கிடைக்கவேயில்லையே?''

''கேட்க நல்லா இருக்கு சிவசு. இதுக்கு என்ன செய்யறது?''

''தெரியலையே? தெரிஞ்சாக் கவலை போயிடுமே. என்ன வழின்னு தெரியாமத்தானே தவிக்கிறோம்.''

''என்கிட்ட நீங்க ரொம்ப சந்தோஷமா இருக்கீங்கன்னு நினைச்சேன்.''

''அடடே, அதுவேற, இது வேற அகல்யா.''

''எப்படிங்க மனைவி, குழந்தைங்க உறவு? கொஞ்சம் சம்பாத்தியம் இது போறாதா சந்தோஷத்துக்கு?''

''போறாது அகல்யா.''

''வேறென்ன வேண்டும்?''

''அமைதி வேணும், நான் மட்டுமில்லை. என் கண்ணெதிரே யாரும் கஷ்டப்படாம இருக்கணும். எல்லாரும் எப்பவும் சந்தோஷமா இருக்கணும். மனுஷன் பிறந்து இத்தனை வருஷத்துக்கப்புறமும் இது கண்டுபிடிக்க முடியலையே?''

''வெறும் சந்தோஷம் மட்டுமேன்னா, அலுத்துப் போயிடாது?''

''இதுக்குத்தான் அடிமைத்தனம்னு பேரு. கஷ்டத்துக்கும், சோகத்துக்கும் விம்பி அடிமையாறது, தானா விலங்கு பூட்டிக்கிறது, நிரந்தர சந்தோஷம் உண்டுன்னே தெரியாது போயிடற கஷ்டம். இதைச் சொல்லித்தான் பாரதி தலையில் அடிச்சுக்கிட்டு அழறான்.''



''அன்னை கை விலங்குகள் போகும்கிறது பாரதத் தாய் பத்தித்தானே?''

''பெண்களைப் பத்தி, உன்னைப் பத்தி, சாருவைப் பத்தி, வத்சலாவைப் பத்தி.''

''நம்ம வத்சலாவைப் பாராட்டினீங்களா? அவ நிகழ்ச்சி தானே இது?''

''செய்துட்டேன் மாடியிலே.''

''எங்க?''

சிவசு சட்டென விழித்தான். நிதானித்தான். பிறகு மெல்ல மறுபடி ''மாடியிலேயே'' என்றான்.

''உங்க பின்னாடியே மாடிக்கு வந்துச்சா அது?''

''ஆமாம்.''

''என்ன சொல்லிச்சு?''

''நிகழ்ச்சி பத்திக் கேட்டுது. நல்லா இருக்குதுன்னேன்?''

''அப்புறம்?''

''அப்புறம் ஒண்ணுமில்லை.''

''ஆய், ஏதோ மறைக்கிறீங்க?''

''ஒண்ணுமில்ல அகல்யா.''

''அது எதிர்க்கயும் அழுதீங்களா.''

''கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுட்டேன் அகல்யா! அது கையை எடுத்துக் கண்ணுல ஒத்திக்கிட்டேன். அந்தப் பெண்ணுக்குத் தோணின ஐடியா தான் இந்த பாரதி வேஷம். சட்டுன்னு எப்படித் தோணிச்சோ அதுக்கு, இருபது பாரதியை எதிர்பார்க்கணும்னு.''

''ஐயோ, என்ன இது?''

''தப்புதான் அகல்யா! இந்த இடத்தில் இது தப்பு தான்.''

''அப்புறம்?''

''ஒண்ணுமில்லை அகல்யா?''

''சிவசு!'' அகல்யா குரலை உயர்த்தினாள்.

''என்னவோ மறைக்கிறீங்க. உங்க முகம் நல்லாவே யில்லை இறங்கி வந்தபோது. அப்புறம் என்ன சொல்லுங்க?''

சிவசு மௌனமாயிருந்தான்.

''சொல்லுங்க சிவசு.''

''ஐ லவ் யூ சிவசுன்னு சொல்லிட்டு வத்சலா இறங்கிப் போயிடுச்சு.''

அகல்யா வயிற்றில் ஒரு வேதனையை உணர்ந்தாள். அதுதானா? அதுதானா? அதுதானா? என்று மனசுக்குள் அலறினாள்! வெறித்தாள்.

''நீங்க என்ன சொன்னீங்க?''

''ஒன்றும் சொல்லலை.''

''செவிட்லே ஓர் அறை விடப்படாது.''

''ச்சு...''

''என்ன ச்சு? தேவிடியா...''

''என்னங்க இது? யாரைப் பார்த்து யார் காதலிக்கிறது.''

''எல்லாரையும் பார்த்து எல்லோரும் சொல்ற லவ்யூ தான் அகல்யா.''

''கூடத்துல சொல்றது, என் எதிரில் சொல்றது. மாடி இருட்ல கையைப் பிடிச்சுகிட்டுச் சொல்லணுமா. பீடை...''

''அகல்யா கைப்பிடிச்சு ஒத்துக்கிட்டது நான்.''

''அது என் தப்புங்க.''

''என்ன அகல்யா?''

''வயசுப் பெண்களை வேலைக்குச் சேர்த்திருக்கக் கூடாது.''



''அல்பத்தனமா பேசாதே அகல்யா.''

''அல்பத்தனமா... நான் பேசறதா... நான் கைமாத்தி, புருஷன் மாத்தி படுத்தவதான் சிவசு. ஆனா அடுத்தவ புருஷன்மேல் மனசு வச்சது இல்லை. இருக்கட்டும், நாளைக்கு ஒழிச்சிக் கட்றேன் அதை.''

''அகல்யா, முரட்டுத்தனமா நடக்காதே.''

''முன்னெச்சரிக்கையா நடந்துக்கறேன். சோத்துக்கு இல்லாத பொண்ணார்சேன்னு பார்த்தா, என் குடித்தனத்தையே உருட்டுதே... வா நாளைக்கு.''

''அகல்யா'' சிவசு அவளை அருகே இழுத்தான். ''வாயைத் திறக்கக்கூடாது நாளைக்கு.''

''ஏங்க, உங்களுக்கு ஆசையா?''

''ஆமா அகல்யா! வத்சலாமேல, சாருமேல, உன் மேல, உலகத்துப் பெண்கள் அத்தனை பேர் மேலயும் ஆசை. வர்ஜா வர்ஜமில்லாத ஆசை. எல்லார் கையையும் கண்ணில் ஒத்திக் கிட்டு, தோள்ள கைபோட்டு, முதுகைத் தடவி 'அழாதே'ன்னு சொல்ல ஆசை.''

''மறுபடி சொல்றேங்க. நீங்க பேசறது கேட்க நல்லா இருந்தாலும் இது தப்பு.''

''இங்க தப்பு அகல்யா! இங்க எல்லாம் தப்பு'' சிவசு வேதனையுடன் முகத்தைப் பொத்திக் கொண்டான்.

''இதுல காமம் இல்லையா? கட்டுமஸ்தான உடம்பு காரணமில்லையா? ஒரு பொண்ணு பல்லும் பனங்காயுமா இருந்தா இது வருமா?''

''இஞ்ச் டேப் வெச்சிக்கிட்டு காதலிக்க முடியாது அகல்யா!''

''முதநா லவ்யூன்னுவா... அப்புறம் கண்ணால சிரிப்பா. தன்னுள் ஒத்திக்கக் கை கொடுப்பா, கட்டிக்கோன்னு

இடுப்புக் கொடுப்பா; தின்னுட முடியுமா? ஒரு ஆம்பளை இங்கேயே எல்லாம் பண்ணிட்டு இஞ்ச் டேப் இல்லாத காதல்னு சொல்ல முடியுமா? உடம்பு அவஸ்தைங்க இது.''

''யாருக்கு?''

''எல்லோர்க்கும் தான்'' அகல்யா வெறுப்புடன் பேசினாள்.

ஆனால் இது நிஜம். எங்கோ ஒரு குறை ஊடே மின்னி ஓடுகிற நிஜம். கனவில் சாருவை ஜாக்கெட் பாவாடையுடன் கடத்திக் கொண்டு போகும் நிஜம். காமம் தவறோ? தவறெனில் ஏன் இயற்கையாயிற்று. இன்னாருக்கு இன்னார் என்பதற்கு மீறி ஏன் கிளறுகிறது! இது இயற்கையெனில் இதோடு சண்டை போடுவது எங்ஙனம்! அன்பின் உத்வேகத்திற்கு காமம் காரணமா? அல்லது காதல் கிளர்ந்தபின் அதன் வெளிப்பாடாய் தெரிவது காமமா? வேதனையின் வெளிப்பாடு அழுகை என்பது போல், கண்ணீல் நீர் வழிவதுபோல் தெரியவில்லையே! யாரும் சொல்லித் தரவில்லையே! இதுவரை சொன்னவைகள் சரியென்று தோன்றவில்லையே! இவனும் மோகத்தை இழிவு என்றுதானே சொல்கிறான். மூச்சை நிறுத்திவிடு என்கிறான். செத்தவுடலாக்கு என்று சபிக்கிறான். தேகத்தைச் சாய்த்துவிடு என்று அழுகிறான். என்னுள்ளும் இருப்பது காமம் தானா? புத்தி வேறா! உடல் வேறா! இரண்டும் வெவ்வேறு இல்லை? இல்லை ஒன்றா? ஒன்றாகிக் குழம்புகிறதா?

அகல்யா தரையை வெறித்துக் கொண்டிருந்தாள்.

மெல்ல அவன் தோளைத் தொட்டபோது, அவன் தோளில் கவிழ்ந்து அழுதாள்.

''என்ன அகல்யா இது?''

''எனக்குப் பயமா இருக்குங்க.''



ஒரு ஆணின் மிகக் கேவலமான நேரம் இதுதான் என்பதாய் சிவசு உணர்ந்தான். அயர்ச்சியுடன் படுக்கையில் சாய்ந்தான். தூக்கமின்றிப் புரண்டான். காலையில் எல்லாம் சரியாய்ப் போகுமென்று வெறும் ஒரு நினைவு தோன்றிற்று.

எதுவும் சரியாகவில்லை. வத்சலா ஐந்து நிமிடம் தாமதமாக வந்ததற்கு கடுமையாய் கோபித்துக் கொண்டாள். ''ஒழுங்கா இருக்கிறதா இருந்தா இருங்க, இல்ல ஓடிப் போயிடுங்க'' என்றாள். வத்சலா வேதனையுடன் வியப்புடன் சிவசுவைத் திரும்பிப் பார்த்தான்.

சிவசு முகத்தில் கோடிக் கவலைகள் கப்பிக் கொண்டிருந்தன.

''பரவாயில்லை. நீங்க வகுப்புக்குப் போகலாம் வத்சலா'' என்று அவளை அனுப்பிவிட்டு, அகல்யாவை ஆழமாய் உற்றுப் பார்த்தாள்.

''பிடிக்கலைன்னா நிறுத்திடு அகல்யா. வார்த்தையால் போட்டுக் கொல்லாதே.''

''உப்பை வச்சு சுடணுங்க.''

''அப்ப, என்னை என்னா செய்யணும்?''

''ச்சே, எனக்கு வெட்கமா இருக்கு.''

''நன்றி.'' சிவசு நகர்ந்து பின்புறம் படியேறி மாடியறைக்குள் நுழைந்தான்.

ஆறு நபர்கள் பம்பாய் துறைமுகத்தில் இறக்கப்பட்டார்கள். மகாராஷ்டிரப் போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்கள். ஒரு மத்திய புலனாய்வுத் துறை அதிகாரியும் இருந்தார். காகிதங்கள் கையெழுத்திடப்பட்டன. மாற்றிக் கொள்ளப்பட்டன. ஆறு நபர்களின் அங்க அடையாளம் எடுக்கையில் கடைசி அடையாளம் குஷ்டரோகி என்பதாய் மட்டும் இருந்தது.

அவனுக்கு வலது கண்ணில் அதிக நீர் வழிந்தது. துடைக்கத் துடைக்க பார்வை வெளிறிற்று. மூட்டுகளில் நிற்க முடியாமல் வலி தெறித்தது.

பத்து நாட்கள் கழித்துக் கோர்ட்டில் நிற்கமுடியாமல் உட்கார அனுமதி கேட்டான். மராத்தியில் பேசினான்.

''பிள்ளை என்று பெயர் கொடுத்திருக்கிறீர்கள். எந்த ஊர் மலையாளி நீ?'' ஆறு பேரில் நாலு பேர் மலையாளிகள். விசா இல்லாமல் அரேபியாவுக்குப் பிழைக்கப் போனவர்கள், அங்கே கடத்தல் கப்பலில் இறங்கினவர்கள்.

அவன் குரல் வந்த திக்கை வெறித்துப் பார்த்தான். சோர்வோடு இருந்தான்.

''நான் கேட்பது காதில் விழவில்லை?''

இல்லையென்று தலையசைத்தான். செவியில் சதா ஓர் ஓசை கேட்கத் துவங்கிவிட்டது. காதும், கழுத்தும், விரலும் ரணமாகி விட்டன.

''இந்த உடம்போடு எந்தத் தேசம் போகமுடியும் உன்னால்? ச்சே, நமது நாட்டிற்கே பெரிய அவமானம், நீ ஆறுமாதக் கடுங்காவல். அடுத்த ஆள்.. ம்ம்... அடுத்த ஆள். நீயும் மலையாளியா?''

'சுஜலாம் சுபலாம். ஜனராஜ நீ யு பலாம்' விடியல் நேரத்து ரேடியோ மாதிரி காதில் ஒரு தம்பூர் சுருதி சதா கேட்டுக் கொண்டிருந்தது.

'இது என் தேசம். ஆறு வருடம் கழித்து நான் தொடும் தரை என் தேசம்' அவன் குனிந்து கோர்ட் தரையைத் தொட்டு தலையில் வைத்துக்கொண்டான். சிரித்தான்.

போலீஸ்காரனிடம் கெஞ்சி இரண்டு கார்டுகள் வாங்கி ஒன்றைப் பத்திரிகைக்கு எழுதினான். இன்னொன்றில் 'அகல்யா' என்று பம்பாய் விலாசம் எழுதினான்.



மறுநாள் பத்திரிகைகளிலிருந்து ஒரு ஆள் வந்தார். உற்றுப் பார்த்துவிட்டுப் போனார். அடுத்த ஒரு மணியில் பத்திரிகை அதிகாரிகள் இரண்டு பேர் வந்தார்கள். அவனுக்குத் தெரிந்தவர்கள். அவன் அழுதான்.

அவர் குனிந்து அவனிடம், ''சற்றுப் பொறுத்திரு. ஆட்சி மாறிவிட்டது. இப்போது அம்மையார் இல்லை. உன் விஷயம் சிக்கலானது. பத்திரிக்கைக்கு ஆபத்து வரக்கூடியது. யோசித்துவிட்டு உடனே வருகிறோம்'' என்றார்.

## 21

''சரி சரி, அழாதே! ஆரம்பத்திலிருந்து சொல்.''

''ஏன் இவ்வளவு கடுமையாய் மாறிவிட்டீர்கள்?''

''உயிர் வாழ்தலுக்காக ஒவ்வொரு நிமிடமும் பத்திரிகை மூடலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். நிறைய எதிரிகளைச் சம்பாதித்துக் கொண்டு விட்டோம்.''

''நம்முடையது மிகப்பெரிய பத்திரிகையில்லையா?''

''மிகப் பெரியது எது? பத்திரிகையா? முன்னாள் பிரதமரைக் கைது செய்து அழைத்துப் போகும் காலம் இன்று. பத்திரிகை எந்த மூலை?''

''யாருக்கு இப்படிப் பயப்படுகிறீர்கள்?''

''யாருக்கும் பயப்படவில்லை. நேற்று முளைத்த எம்.எல்.ஏ.வுக்கு, அவன் மைத்துனனுக்கு, மைத்துனன் வைப்பாட்டிக்கு. அரசியல் பழிவாங்கும் நாடகமாகி விட்டது. நான் ஜெயித்தவுடன் உன்னை வெட்டுவேன். நீ ஜெயித்தவுடன் என்னை வெட்டுவாய்?''

''எதிரியிடமிருந்து நான் தப்பித்தது வீரமில்லையா?''

''நீ ஸோல்ஜராக இருந்தால் வீரம்தான். நீ பத்திரிகை நிருபர். இன்று வேண்டாத பத்திரிகையின் நிருபர். அரசு உன்னை வேவு ஆள் என்று கைது செய்யும். பத்திரிகை மூடப்படும்.''

''இடையே இத்தனை வருடம் நான் பட்ட சிரமங்கள் தெரியுமா உங்களுக்கு?''

''எனக்குத் தெரியும். நீ சொன்னவை அனைத்தும் புரிகிறது. பாகிஸ்தானிடம் மாட்டிக் கொண்டு பொய்யான பெயரில் கைதாகி, அங்கிருந்து தப்பி, அரேபிய நாட்டிற்குப் போய், வேறு பெயரில் இறங்கி, மறுபடி கைதாகி, விசா இல்லாமல் ஓடியவனாய் தண்டிக்கப் பட்டிருக்கிறாய். ஏன் பாகிஸ்தானில் வேறு பெயர் கொடுத்தாய்?''

''என் அடையாளக் கார்டுகள், கழுத்துப்பட்டி தொலைந்து விட்டன. யாருடைய கழுத்துப் பட்டியையோ என் கழுத்தில் கட்டி ஒரு சர்தார்ஜி என்னை காயங்களிலிருந்து காப்பாற்றினார். பல நாட்கள் சுய நினைவின்றி இருந்தேன்.''

''எப்படி உடம்பு கோரப்பட்டது?''

''சிறை கொடுத்த சீதனம்?''

''மருந்துகள் கிடைக்கின்றனவா?''

''உம்?''

''இன்று விடுதலை. என் மனைவி பற்றி தெரிந்ததா?''

''சென்னைக்குச் செய்தி சொல்லியிருக்கிறோம். விவரம் நிச்சயம் கிடைக்கும்.''

''விடுதலைக்குப் பிறகு என் கதி? நான் நல்ல நிருபர் இல்லையா? இந்தப் பத்திரிகைக்கு நாயாய் உழைக்க வில்லையா?''



''வாஸ்தவம். உழைத்தாய். ஒன்று சொல்கிறேன் கேள். உன் விவரம் தெரிந்தால் நிச்சயம் பத்திரிகை மூடப்பட்டு பலபேர் தெருவில் நிற்க நேரிடும். நீ இறந்தவனாகவே இரு. உனக்குக் கிடைத்த புதிய பெயரோடு வெளியே வா.''

''முடியாது! சகலமும் சொல்வேன்.''

''முட்டாள்! அதற்கு நேரம் வரும். மறுபடி ஆட்சி மாறும். அன்று வாழ்க்கை சரிதமே எழுதலாம். சம்பாதிக்கலாம்.''

''அதுவரை?''

''பெரியவரிடம் பேசினோம். முதலாளி பத்தாயிரம் கொடுத்திருக்கிறார். சென்னைக்குப் போ. சௌகரியமாய் இரு. மேலும் தேவையானால் கேள். ஒரு விஷயம்! பெரியவர் அழுது பார்த்ததில்லை என் வாழ்நாளில். உன் கதை கேட்டுத் துடித்துப் போனார். அந்த இரக்கத்தைப் பயன்படுத்திக் கொள். எதிர்த்து மடியாதே.''

''கொலையே செய்வீங்களா?''

''பத்திரிகை மிக முக்கியம். கொலை என்பது உடலை சாய்ப்பது மட்டும் இல்லை; உன்னைப் பற்றி பத்திரிகை அலுவலகத்தில் உள்ள சகல காகிதங்களும் அழிக்கப்பட்டு விட்டன. நீ பத்திரிகையைப் பொறுத்த வரை இறந்தவன்.''

''கடவுளே! கடவுளே!''

''நானும் பிரார்த்திக்கிறேன். பயத்தோடு பிரார்த்திக்கிறேன். தோஸ்த் மேரா தோஸ்த். உனக்கென்று ஒரு நாள் வரும்! காத்திரு. பொறுமையாய் இரு. வெளிவரும்போது, நான் உன்னை மறுபடியும் பணத்தோடு சந்திப்பேன். சென்னைக்கு டிக்கெட், உடைகள், பெட்டி, விலையுயர்ந்த மருந்துகள் சகலமும் எடுத்து வருவேன். காட்டிக் கொடுக்காதே, தோஸ்த். வாழ்க்கை சிரமமானது. மேலும் சிரமமாக்காதே. கண் பார்வை எப்படி இருக்கிறது?''

''அப்படியே தான்.''

தெருமுனையில் வந்து ஆட்டோவில் இறங்கினான். கைப்பையை தோளில் போட்டு போர்வையில் உடலைச் சுற்றிக்கொண்டான். தெருப் பெயரை விசாரித்து உறுதிப் படுத்திக்கொண்டான். மெல்ல தடி ஊன்றி நகர்ந்தான்.

''அகல்யா... அகல்யா அகல்யா!'' கைத்தடி தரையில் தட்டின போதெல்லாம் அவள் பெயரை மனசு உச்சரித்தது.

''அகல்யா மாண்டிஸோரி.''

''இதுதானா... இதுதானா?''

**அ**கல்யா மாடியிலிருந்து வெட்டவெளியை வெறித்துக் கொண்டிருந்தாள். சிவசுவை, வத்சலாவை, சம்பந்தமின்றி சாருவை கோபித்தது போக, மிச்சம் அவள் நின்று கொண்டிருந்தது. ஏன் இப்படிக் கோபப்படுகிறேன்? யார் மீது? எதற்காக? பயமா? சிவசுமீது பயமா?

''நான் அவ்விதம் இல்லை அகல்யா.''

''சரி, ஆனால் இந்தப் பெண்கள்... முதிர்ந்து முற்றி சகலத்துக்கும் துணிந்த இந்தப் பெண்கள்?''

''வத்சலா ஒரு குழந்தை அகல்யா.''

''மார்பும் தொடையும் பெருத்த குழந்தை? ச்சே! பெண்கள் ஏன் இவ்விதம் நாணமற்றுப் போனார்கள்? எப்படி இம்மாதிரி சகலத்துக்கும் துணிகிறார்கள்?''

''எத்தனை காலம் அடக்கி அடக்கி வைக்கமுடியும் அவர்களை? ஒரு விழிப்பு வந்துவிட்டது அகல்யா! தான், தன் வாழ்க்கை, தன் சுகம் என்று ஒரு சமயம் புரிந்துவிட்டது. அவர்களுக்கு நாணமென்ற பெயரால் விலங்கு போட முடியாது இனி.''

''நாணம் கெட்டுப்போய் ஆளைச் சாய்க்க நீங்கள் தானா கிடைத்தீர்கள்?''

''வெட்கமாயில்லை?''



''யாருக்கு?''

''அவளுக்கு இவ்வளவு பரிந்து பேசுகிறீர்களே? உங்களைச் சந்தேகிக்கத் தோன்றுகிறது.''

''உனக்கு இது புரியாது அகல்யா. புருஷனை சொத்து என்று நினைக்கிற பெண் நீ. ஒரு உயிரின் உள்மனசின் தவிப்பு புரியவில்லையா உனக்கு. என்னை ஏன் இப்படி கற்பழிக்கிற வில்லனாய்ப் பார்க்கிறாய்?''

''பெரிய்ய்ய ஹீரோ.''

''இல்லை... சாதாரணன். சகல உயிர்களையும் நேசிக் கிறவன்.''

''எங்கயோ அவளை உற்சாகமூட்டி விட்டீர்கள். இதற்கு... இந்த வார்த்தைக்கு.''

''இயல்பாய் பேசினேன்!''

''செருப்பால் அடித்திருக்க வேண்டும்.''

''நேசிக்கிறேன் என்பதற்குப் பதில் காரியமாகவா?''

''அவள் காதல் உடம்பில் துணியில்லாதது!''

''இருந்துவிட்டுப் போகட்டும். அது அவளுடைய காதல்... அவள் விரும்பின விதம்! யார் தடை சொல்லமுடியும்?''

''ஒழியட்டும்.''

''உனக்கென்ன ஆயிற்று அகல்யா? ஏன் பதறுகிறாய் இப்படி! உள்மனசில் என்ன கோபம் உனக்கு? யாரிடம் பயம்?''

'தன்னிடம், தன் உள்மனத்திடம், இரவில் கனவுகளில் வரும் உருவத்திடம், அதன் அழுகையிடம் பயம், பெரிய பயம்.'

யாரோ தெருவில் கோல் தட்டிக்கொண்டு போனார்கள். பெயர்ப் பலகையை நிமிர்ந்து பார்த்தார்கள்.

அகல்யா ''ஐயோ'' என்று கத்தினாள். ''அப்பா! அப்பா!'' என்று கூவிக்கொண்டு கீழே ஓடினாள். சட்டென்று ஹாலின் நடுவே நின்றாள்.

## 22

சகலமும் சிதறும்.

சகலமும் சிதறும்.

சகலமும் சிதறும்.

இந்தப் பள்ளிக்கூடம், தன் பெயர், தன் வாழ்க்கை, தன் மதிப்பு, தன் புருஷன் அத்தனையும் சிதறும்.

''சொர்ணத்தம்மா இங்க வாங்க; வாசல்ல யாரோ என்னை கேட்கறாங்க. நான் இங்க இல்லை, என் பெயர்ல யாரும் இல்லைன்னு சொல்லுங்க, ப்ளீஸ். இங்க வாங்க. அங்க அந்த ஆள்தான். உடனே திடமா இல்லேன்னு சொல்லுங்க.''

சொர்ணத்தம்மா அவன் கேள்விகளை மறுத்துக் கொண்டேயிருந்தாள்.

அகல்யா வராந்தா நிழல் ஓரம் சரிந்து அமர்ந்தாள்.

கனவுகள் அத்தனையும் சரி, அத்தனை கனவுகளும் சரி. அவன் சாகவில்லை, சாகவில்லை. எப்படி வந்தான்? எவ்விதம் பிழைத்தான்! ஏன் இப்படி ஆயிற்று உடம்பு... சிவசு! சிவசு! சிவசு.

''அனுப்பிட்டேம்மா, கண்ணு சரியா தெரியல. உடம்பு வேற நல்ல உடம்பில்லை.''



''சொர்ணத்தம்மா, இன்னொரு காரியம் செய்யறியா? தெரு தாண்டினதும் பேசி எங்கியாவது ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போறீங்களா அந்த ஆளை?''

''யாரும்மா அது?''

''சொல்றேனே! தெரு தாண்டிடப் போவுதே?''

''என்னண்ட பத்து ரூபாதான் இருக்கு.'' அகல்யா உள்ளே ஓடிப்போய் பீரோவை திறந்து எல்லா காசையும் எடுத்து வந்து சொர்ணத்தம்மாளிடம் கொடுத்தாள்.

''இந்த உடம்புக்கு தனி ஆஸ்பத்திரி இருக்குமா!''

''எங்க?''

''செங்கல்பட்டாண்ட.''

''சேர்த்துடுங்க.''

''என்னை யார்ன்னு கேட்டா?''

''சமூக சேவகின்னு சொல்லுங்க.''

'யாரும்மா அது?''

''சொல்றேன்.''

*சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து*
*வானாளத் தருவரோர்க்கும்*
*மங்குவார் அவர் சடைக் கலந்தார்*
*மாதேவர்க்கு அல்லராகில்*
*அங்கமெல்லாம் தொழுது அழுது தொழு*
*உழலும் புலையனேன் எனக்கு.*

அகல்யா கதறி நடு ஹாலில் அழுதாள். அழுது முடிந்து நெடுநேரம் வரை வெறித்தாள்.

''அகல்யா இருட்ல என்னடா பண்றே? இன்னும் கோவமா?''

''இல்லீங்க சிவசு.''

''சரியாயிடுச்சா மனசு?''

''இல்லீங்க. கோயிலுக்குப் போயிட்டு வரலாமா?''

''சரி.''

''உள்ள வருவீங்களா?''

''வரச் சொன்னா வரேன்.''

''வாங்களேன்!''

''என்னடா கோயில்ல அப்படி விசும்பிட்டே? என்ன வேதனை சொல்லு?''

''உங்களைப் பிடுங்கி எடுத்துப்போய்டப் போறதா யார் யாரையோ சந்தேகப்பட்டுட்டேன். தப்புங்க அது!''

''அப்பாடி!''

''இப்பதாங்க உண்மை தெரிஞ்சது.''

''பரம சந்தோஷம். வத்சலாவை வரச்சொல்லிக் கார்டு போட்டுடலாம்.''

''நோ.''

''ஏன் அகல்யா?''

''மறுபடி வத்சலா வாணாம்.''

''கௌரவப் பிரச்சனையா?''

''சாருவுக்கு வேணா கார்டு போடலாம்.''

''கஷ்டப்படுத்திக்கிறே அகல்யா!''

''இருக்கட்டும். காசு இருக்கா உங்க பர்ஸ்ல?''

''இருக்கு எவ்வளவு வேணும்?''

''அவ்வளவும்.''

''எதுக்கு?''

''கோயில் வாசல்ல பிச்சை போட...''



''அகல்யா, அகல்யா, எல்லா காசும் கவிழ்த்துட்டா எப்படி? பஸ்ஸுக்கு சில்லறை வேணாம்?''

''ஏன், நடந்து போகமாட்டீர்களோ? இது உங்க காசா? என் காசும் தானே! நான் இஷ்டப்படி போடலா மில்லையா?''

''அறிவிருக்கா?''

''ஆமா, இல்லை, நான் அறிவில்லாதவதான்.''

''பைத்தியம் அகல்யா நீ.''

''அது ஒன்னுதாங்க குறைச்சல். பிடிச்சுட்டா நிம்மதி. சிரிச்சுட்டே இருந்துடலாம். சோறு போடமாட்டீங்களா ஒருவேளை?''

''என்ன ஆச்சும்மா உனக்கு?''

''அதுதான் சொன்னீங்களே பைத்தியம்னு. பைத்தி யம்னா யாரு? நல்லதுக்கும், கெட்டதுக்கும் நடுவுல மாட்டிக்கிட்டவங்க. நல்லதும் பண்ண முடியாம, கெட்டதும் செய்ய முடியாம இரண்டுக்கும் நடுவில் சிக்கித் தவிக்கிறவங்க பைத்தியம்தான். நான் பைத்தியம் தான்.''

''அகல்யா?''

''வாங்க போகலாம். இப்ப சரியாயிடுச்சு வாங்க.''

''இந்தத் தீ விபத்து எப்படி நடந்தது சிவசுப்ரமணியம்?'' இன்ஸ்பெக்டர் கருகின ஓலைகளுக்கிடையே நடந்தபடியே கேட்டார். முற்றிலும் புகை அடங்கிவிட்ட போதிலும் தரையில் வெப்பம் குறையவில்லை.

''குழந்தைகளுக்கு மத்தாப்புகள் வாங்கிக் கொடுத்தோம், பண்டிகை வருகிறது என்று.''

''இவைகள் அனாதைகளா? பள்ளிக்கூடம்தானே இது?''

''பள்ளிக்கூடம்தான். ஆனால் ஒரு படி மேலே போய் இவர்களை அணைத்துக் கொள்ளும் ஆசை எங்களுக்கும் உண்டு. சட்டைத் துணியும், பட்சணமும் வீட்டில் தருகிறார்கள். பட்டாசுகள் கிடைப்பதில்லையென்று குழந்தைகள் வருந்தின. தனித் தனிப் பொட்டலமாய்த் தான் கொடுத்தோம். யாரோ ஒரு குழந்தை பிரித்து விட்டிருக்கிறான். பொட்டலத்தைப் பிரித்து மத்தாப்பைக் கிழித்திருக்கிறான். அது சீறின சூடு தாங்காமல் கையை உதறியிருக்கிறான். மத்தாப்பு கூரைமீது விழுந்து விட்டது.''

''இதை நீங்கள் நேரில் பார்த்தீர்களா?''

''இல்லை. சொர்ணத்தம்மாள் என்பவர்...''

''சொர்ணத்தம்மாள் வேறு கதையும் சொல்கிறாரே, உங்களுக்கும், உங்கள் மனைவிக்கும் தகராறு என்கிறாரே?''

''அது கணவன்-மனைவி சண்டை. அதுக்கும் தீ விபத்துக்கும் சம்பந்தம் இல்லை.''

''நடுக்கூரைக்குக் கீழ் உங்கள் மனைவி மாட்டிக் கொள்ளக் காரணமென்ன?''

''தீ பரவியது தெரியாமல் ஒரு குழந்தை பின்பக்கம் போயிருந்தது. நான் தெருவைச் சுற்றி ஓடிப்போய் பின் சுவர் வழியாக ஏறி குழந்தையை எடுத்துக் கொண்டு தெருவைச் சுற்றி, மறுபடியும் வாசலுக்கு வந்துவிட்டேன். நான் குழந்தையை மீட்டது தெரியாமல் அகல்யா குழந்தையை வீடு முழுக்கத் தேடியிருக்கிறாள்.''

''ஆனால் அவர்கள் வாக்குமூலம் சரியா இல்லை, சிவசுப்பிரமணியம். 'எனக்கு இது வேண்டும்' 'எனக்கு இது வேண்டும்' என்று அவர்கள் ஏன் புலம்புகிறார்கள்? அவர்கள் தெளிவாக வாக்குமூலம் கொடுக்கறவரை நீங்கள் நகரத்தை விட்டுப் போகலாகாது.''



''இந்த நிலையில் நான் என் மனைவியை விட்டு எங்கு போகமுடியும் இன்ஸ்பெக்டர்?''

''அந்த நம்பிக்கையில்தான் நான் யாரையும் கைது செய்யாமல் விட்டிருக்கிறேன். குழந்தைகள் தப்பித்தது ஆச்சர்யமான விஷயம். எதற்கும் உதவியில்லாது மூன்று நான்கு கிழவிகளை வைத்தா பள்ளிக்கூடம் நடத்துகிறார்கள்? கால் முடமான அந்த நபர் யார்? தீ விபத்தின் போது எங்கிருந்தார்?''

''அகல்யாவின் தகப்பனார், வழக்கம்போல் வாசலில் உட்கார்ந்திருந்தார்.''

''வயதான மூன்று டீச்சர்கள். கால் முடமான தகப்பனார். எழுபது குழந்தைகள், சே? என்ன பள்ளிக்கூடம்?''

சிவசு வத்சலாவையும், சாருவையும் நினைத்துக் கொண்டான். கூர்மையான புத்தியும் சலிப்பற்ற உழைப்பும் கொண்ட அந்தப் பெண்களை நினைத்துக் கொண்டான்.

வத்சலாதான் முதலில் ஆஸ்பத்திரிக்கு ஓடி வந்தாள். 'மேடம் மேடம்' என்று கதறினாள். கூரை சரிந்து அகல்யா மேல் உட்கார்ந்ததில் தலை ரோமம் போயிற்று. புருவமும், தோளும், மார்பும், கைவிரல்களும், இடுப்பும் கசாப்புக் கடையில் தொங்கும் உரித்த மாமிசமாய் இருந்தன.

மெல்லிய ஒற்றைத் துணி போர்த்து அரை மயக்கத்தில் இருக்கும் அகல்யா, ஆஸ்பத்திரியில் காட்சிப் பொருளாகிப் போனாள். ஆட்கள் தொடர்ந்து வந்து வாய்ப்பொத்தி பரிதாபப்பட, சிவசு உள்ளுக்குள் உறைந்து போனான். சொடுக்கும் நேரத்தில் தன் வாழ்க்கை கவிழ்ந்து போனதை உணர்ந்தான். தொடர்ந்து அங்குலமாய்ப் போராடி வெளியே வந்துவிட முடியும் என நம்பினான்.

அகல்யாவிற்கு நினைவு வந்ததும் அவள் கைகள் எரிச்சல் தாங்காமல் தலையைத் தடவிக் கொண்டன. தலையில்

ரோமமில்லாதிருப்பதைக் கண்டதும் அகல்யா ஆவேசமாய் எழுந்தாள். 'கண்ணாடி கொண்டு வா' எனக் கதறினாள். ஜுரம் வேகத்தில் அதிகம் பிதற்றினாள். வலி தாங்காமல் ஏதேதோ சொல்லிக் கதறினாள்.

சிவசுக்கு முதலில் ஏதும் புரியவில்லை. மெல்ல விசிறியபடி விவரம் கேட்கையில் சொர்ணத்தம்மாளை விட்டுத் தன் புருஷனை துரத்தியதும், அவனுக்கு உண்டான நோயையும், எட்டு மாதமாய் அவன் செங்கற்பட்டு மருத்துவமனையில் இருப்பதையும், அவனுக்கு தான் பணம் அனுப்புவதாகவும் சொன்னாள்.

சிவசு அதிர்ந்தான். ''என்னிடம் இதை ஏன் சொல்லவில்லை அகல்யா?'' என்றான்.

''உடனே அதைக் கொண்டாந்து இங்க வச்சிடுவீங்களே! என்னை விட்டு நகர்ந்துடுவீங்களே! நான், இந்தப் பள்ளிக்கூடம், இந்தப் பள்ளிக்கூடத்துக் கட்டுக்கோப்பு. இதை எல்லாம் விட, அந்த மனுஷன் மனசு முக்கியமா பட்டுடுமே உங்களுக்கு! அவர் வந்தாச்சு நான் விலகிக்கிறேன்னு சொல்லிவிடத் தோணுமே, உங்களுக்கு. உங்களை விட முடியாது சிவசு. என்னால் இந்தப் பள்ளிக்கூடத்தைக் கீழே போட முடியாது. ஆனால் என்னால் பள்ளிக்கூடம் கீழே போயிடுச்சே! கரித்துளாய்ப் போயிடுச்சே! இது வேணும். எனக்கு வேணும், அந்த ஆளை விரட்டினதற்கு எனக்கு தண்டனை இது. இப்படித்தாங்க இருந்தது, அந்த ஆளு உடம்பு. விரல் தேஞ்சுபோய், கழுத்தெல்லாம் புண்ணாய். எனக்கும் அந்த மாதிரியே ஆயிடுச்சுங்க. ஒரு கண்ணாடி கொண்டாங்களேன். அவர் முகம் மாதிரி என் முகமும் இருக்குமில்லே. ஒரு கண்ணாடி கொண்டாங்களேன்.''

சிவசு அவளை அமைதியாக்கினான். டாக்டர் பெதடின் போட்டார்.



சிவசு வெளியே வந்து சொர்ணத்தம்மாளிடம் விவரம் கேட்டான். எட்டு மாதம் மறைத்ததற்கு கடிந்து கொண்டான். இன்னும் அதிகமாய் உடைந்து போனான்.

அகல்யாவின் அறைக்குள் மறுபடியும் சப்தம் கேட்டது. அகல்யாவின் மனக் கொந்தளிப்பை பெதடின் ஊசியால் அடக்க முடியவில்லை. அரை மயக்கத்தில் எழுந்து நின்றுவிட்டாள். 'கண்ணாடி கொடு', 'கண்ணாடி கொடு' என்று அலற ஆரம்பித்துவிட்டாள். தொட்டுப் படுக்கையில் சாய்க்க முடியாத தேகம், உடம்பின் வலுவை மிஞ்சின மனசின் வேதனை. இன்னொரு பெதடின் எடுப்பதற்குள் அறை முழுவதும் நடக்க ஆரம்பித்து விட்டாள். துணியின்றி நடக்கும் பெண்ணை யாரும் பார்ப்பதற்கு முன்னால் ஆஸ்பத்திரி ஆயா அறைக் கதவை சாத்தினாள். கண்ணாடிக் கதவிற்கு அப்பால் இருக்கும் திரையை இழுத்துவிட்டாள். திரையை இழுத்தது தப்பாயிற்று. திரையை இழுத்ததும் அறைக்குள் இருப்பவரின் பிம்பம் வெள்ளைக் கண்ணாடியில் மங்கலாய்த் தெரிந்தது. அகல்யா தன் முகத்தின் கோரத்தை, சுத்தமாய் பொசுங்கிப் போன தலையைக் கண்ணாடியில் பார்க்க நேர்ந்தது. அலறலுடன் சரிந்தவளை படுக்கையில் தூக்கிப் போட்டார்கள். ஜன்னி வந்துவிட்டது.

மறுபடி பெதடின் போடும்போது டாக்டர் சொன்னார், ''நோயாளியின் உதவியில்லாமல் இதற்கு வைத்தியம் செய்வது சிரமம். இவர்களுக்கு உடம்பு வேதனையைவிட மன வேதனை அதிகம். நான் மட்டும் போராடி பிரயோஜனமில்லை சிவசுப்பிரமணியன். உயிர் வாழ இந்த நோயாளியும் போராட வேண்டும். எல்லா வேதனைக்கு அப்பாலும் உயிரோடிருக்க இவர்கள் ஆசைப்பட வேண்டும்.'' ஜுரம் பொறி பறந்தது. டாக்டர் மறுபடியும் பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்கினார். ''இவர்கள் ஒத்துழைக்க மறுக்கிறார்கள். நான் செய்வதற்கு ஒன்றுமில்லை. தன்னை

குணப்படுத்திக் கொள்ள இவர்களுக்குத் தோன்றவே யில்லை. மறுபடியும் அவர்கள் எழுந்து நின்றுவிடக் கூடாது. நீங்கள் அருகிலேயே இருங்கள்.''

அகல்யா மறுபடியும் கண் விழித்தபோது, சிவசு அவளை ஆதரவுடன் பார்த்தான். ''நான் உன்னை விட்டு எங்கும் போகமாட்டேன். என்ன வந்தாலும் போகமாட்டேன் அகல்யா!'' என்றான்.

''நான் போறேங்க சிவசு. சந்தோஷமாய் போறேன். கோடை விடுமுறைக்கு ஊருக்குப் போயிட்டு வர மாதிரி. உங்களோட கொஞ்ச நாள் சந்தோஷமாயிருந்தேன். மறுபடி இரண்டுங்கெட்டானாக ஆக என்னால் முடியாது. உயிரோடு இருக்கிறபோது உங்களோடு சிரிக்க முடியாது. எட்டு மாதமாய் எரிஞ்சு எரிஞ்சு விழுந்திட்டேனில்லே. என்ன பண்றதுன்னு தெரியாமல் உங்களை குதறிட்டே னில்லே, மன்னிச்சுடுங்க சிவசு. அந்த வீடு, என் காசு நகைகள் அத்தனையும் உங்களுக்குத்தான். முடிஞ்சா இஷ்டப்பட்டா அந்த மனுஷன் வைத்தியத்திற்கு காசு அனுப்புங்க. பிடிக்க லைன்னா வேண்டாம். அப்பா, நீங்க காசிக்குப் போகணும்ன்னு சொன்னீங்கல்ல! நானும் வரேம்பா. நீங்க சொன்னபடி நாம ரெண்டுபேரும் மட்டும் இருந்திருக்க லாம். சிவசுவை எங்கிருந்தோ தேடி கூட்டியாந்து, எவ்வளவு கஷ்டம் பாருங்க. சைக்கிள் கடையும் பயிர்த் தொழிலுமா நிம்மதியா இருந்திருக்கும், இதன் முகத்தில் எத்தனை கவலை பாருங்க அப்பா! காசிக்குப் போகலாம்பா.'' மறுபடியும் மயங்கிப் போனாள்.

சிவசு அசையாது உட்கார்ந்தான். இன்னமும் இறுகிப் போனான். இவள் பிழைக்க மாட்டாள் என்று நிச்சயமாய் தெரிந்து போயிற்று. மரணத்தை விரும்பி இறுக்கிக் கொள்கிற வளிடம் இனி பேசிப் புண்ணியமில்லை. ஏன் சாக ஆசைப் பட்டாய் அகல்யா? ஏன் வெறுத்துப் போனாய் இப்படி?



சட்டென்று என் உறவை முறித்துக் கொண்டாயே கண்ணம்மா! என்னை ஏன் தண்டிக்க விரும்பினாய் இப்படி?

சிவசு வெகுநேரம் அவளருகே உட்கார்ந்திருந்தான். என்னைப் பிரிகிறாயே என்று கவலைப்படவில்லை அகல்யா. உன்னை வெறுக்கிறாயே! என்று கவலைப்படு கிறேன். தண்டித்துக் கொள்கிறாயே அது கூடாது என் கிறேன். அதற்கு ஆயிரம் காரணம் கூறினாயே, அது அபத்தம் என்கிறேன். அகல்யா, நான் சொல்வது உன் காதுக்குக் கேட்கிறதா? நகத்தால் பிளந்த மாதுளம் பழக்கீற்று போல, அகல்யாவின் கண்கள் சிவக்கப் பிரிந்தன. இவளுக்கு இனி மரணம் நிச்சயம் என அறிவித்தது. உயிர் கூட்டைவிட்டு இற்றுவிட்டதை உணர்த்திற்று. அகல்யா பாடச் சொன்னாள்.

சிவசு கையிலிருந்த புத்தகத்தைப் பிரித்துப் பாடினான்.

*''கை கான் கூப்பித் தொழீர்*
*கடிமா மலர்த் தூவி நின்று''*

என்று பாடினான்.

அவள் தொண்டைக்குழி வளைத்து, அழிந்து, அதிர்ந்து உயிர் வெளியேறியது. போர்வையை இழுத்து, அவள் முகத்தை மூடினான்.

*ஈலோக கோளத்தில் ஒரு சிரா சந்தையில்*
*இன்னும் ஒரிக்க நாம் கண்டு முட்டி*

மறுபடியும் வேறு ஏதாவது கோளத்தில் சந்திப்போம் போய் வா அகல்யா. ஆல் த பெஸ்ட்.

எனக்கு அழுகை வரவில்லை. அகல்யா இறந்த போதும் அவளை எரித்துவிட்டு வந்தபோதும், எரிந்துபோன பள்ளியை விற்றபோதும், அகல்யாவின் தகப்பனாருக்குப் பெரிய தொகை கொடுத்து காசிக்கு அனுப்பிய போதும், சின்ன தோல் பையில் என் துணிகளுடன் பட்டணம் விட்டுப்

P 192 5/2/09

புறப்பட்ட போதும், பழையபடி ஊர் மண்ணை மிதித்து துக்க விசாரிப்புகளுக்கு தலைகுனிந்து நின்றபோதும் அழுகை வரவில்லை. அழுகை என்பது என்ன? சோகத்தின் வெளிப்பாடா? சோகம் என்பது என்ன? தன் சுகம் பறிபோகுதே என்ற விளைவா? இதுதான் சுகம் என்று என்னால் இனம் பிரித்துப் பார்க்க முடியவில்லை. இது சோகம் என்று பயப்படவும் முடியவில்லை. பிரித்துப் பிரித்துப் பார்க்கிறபோது தான் இருட்டு, வெளிச்சம் என்ற வித்தியாசங்கள் வந்துவிடுகின்றன. உள்ளே மனசு கண்ணை மூடி ஒரு நீலத்தில் அமிழ்ந்து விட, நல்லது கெட்டது என்று ஏதுமில்லை. தேடலும் போராட்டமும் நிறைந்ததுதான் வாழ்க்கை என்பது ஒரு மேலோட்டமான சிந்தனை. எதைத் தேட? எதற்குப் போராட்டம்? போராடிக் கிடைத்ததும் கைவிட்டுப் போகுமெனில், தேடியது கிடைத்த பிறகு தேடியது இதுவோ என்ற சந்தேகம் வருமெனில், போராட்டமும் தேடலும் எதற்காக? என்னோடு இருந்ததைக் கோடை விடுமுறை மாதிரி என்றாள் அகல்யா. என் மொத்த வாழ்க்கையும் விடுமுறைக்கு வந்த மாதிரிதான் எனக்குப் படுகிறது. ஜனனமும் மரணமும் பற்றிப் புரியாமல் இடைப்பட்ட வாழ்க்கைக்கு அர்த்தம் கற்பிப்பது அனாவசியம் என எனக்குப் படுகிறது. இதில் நல்லது கெட்டது எனப் பிரிப்பது நியாயமற்றுப் போகிறது. இனி நான் என்ன செய்ய வேண்டும்? வெறுமே வாழ வேண்டும். இது புரியாமல் புலம்புகிறவர்களை அமைதிப்படுத்த வேண்டும். இடைப்பட்ட நேரத்தில் ஏகப்பட்ட விதிகளுடனும், மனம் புழுங்குவதிலிருந்து அமைதிப்படுத்த வேண்டும். இதை எவரிடமிருந்து தொடங்கலாம்? எங்கே ஆரம்பிக்கலாம்? சிவசு பையைத் தோளில் மாட்டிக் கொண்டு அந்தத் தொழுநோய் மருத்துவமனை வாசலில் நின்றான்.

முற்றும்

NEMARA PUBL...